
சேகுத்தன் பாடல்கள்



வளவை வளவன்

தேசத்தின் பாடல்கள்

வளவைவளவன்



வளலாய் அச்சுவேலி
2002

பொருளடக்கம்

1.	ஒரு அரசின்சரிவு	1
2.	அரங்கேற்றம்	14
3.	உணர்வுகள்	22
4.	மானுடம் சாகவில்லை	29
5.	தேசத்தின் பாடல் இது	39
6.	வாக்குமூலங்கள்	48
7.	இமயங்கள்	54
8.	ஈகையின் மறுபக்கம்	77
9.	தேசத்தின் கொடி	85
10.	சவுக்காரம்	93
11.	பசி	102
12.	மரணித்த மானுடம்	109
13.	போராளிகள்	125
14.	நான் வரமாட்டன்	130
15.	இந்த மண்ணில்தான் இதுகளும்	136
16.	அவள் ஏன் ஓடுகிறாள்	143
17.	நிழல் தேடும் நெஞ்சங்கள்	150
18.	சங்கமம்	156
19.	ஒரு விதவை மலர் சூடுகிறாள்	163
20.	பன்னீர்த்துளிகள்	170
21.	வேதனைப் புயல்	177

தேசத்தின் பாடல்கள் (சிறுகதைகள்)

வளவை வளவன் (தா.மா. செல்லத்தம்பி)

முதற்பதிப்பு : கார்த்திகை 24 - 2002

வெளியீடு : நீதிவளவன் வெளியீடு

முகப்போவியம் : திரு. ஆ. இராசையா

கணனி அச்சுப்பதிப்பு : திருச்செல்வி அச்சகம் மானிப்பாய்

அட்டைப்பதிப்பு : பிள்ளையார் அச்சகம் நல்லூர்

உரிமை ஆசிரியருக்கே

விலை 150/=

THESATHIN PADALKAL (ACOLLECTION OF SHORT STORIES)

VALAVAI VALAVAN (T. M. CHELLATHAMBY)

FIRST EDITION NOVEMBER 24th 2002

NEETHYVALAVAN VELIYEEDU

COVER DESIGNED BY Mr. A. RASAIAH

PRINTED AT THIRUCHELVI PRINTERS MANIPAY

COVER PRINTED AT PILLAIYAR PRESS NALLUR

COPY WRITE BY AUTHOR

PRIZE 150/=

முகமறியாத ஒரு வாசகப் பார்வை

திரு.வளவை வளவன் அவர்கட்கு!

இலங்கையில் விரல்விட்டு எண்ணக்கூடிய எழுத்தாளர்களில் ஒருவர் தாங்கள் என்பதனை மிக அண்மையில்தான் அறிந்துகொண்டேன். அதாவது எழுத்தாளர் என்பது முன்பே தெரியும். பல தடங்களைப் பதித்தவர் என்ற விடயம் தினக்குரல் வாயிலாகவே தெரிந்து கொண்டேன்.

தங்களது சிறு கதைகளில் சிலவற்றை வாசித்தேன் அதற்கு விமர்சனம் எழுதும் அளவிற்கு எனது எழுதுகோல் அத்தனை சிறந்தது அல்ல. பேனை என்பது பெரிய விடயம் அல்ல, பேனை யாரிடம் உள்ளது என்பது தான் பெரிய விடயம். அந்த வகையில் தங்கள் கைக்கு கிடைக்கும் பேனாக்கள் திருப்தியான வாழ்க்கையினை வாழ்ந்து முடித்து விடுகின்றன என்பது சத்தியமான உண்மை.

ஏழ்மையை எடுத்து எளிமையாய் கதை நகர்த்திச் செல்லும் பாங்கு மறுமலர்ச்சிக்கான ஏக்கம், புரிதலைப் புரிந்தும் புரியாதவர்கள் போலுள்ளவர்க்கு போதனையென எல்லாச் சிறுகதைகளிலுமே சாரம் தொனிக்க எழுதப்பட்டுள்ளது நன்று. சகுனம் என்பதனை நடைமுறையில் சாத்தியப்படாவிடத்தும் துணிந்து கதைகளில் சேர்த்திருப்பதில் என்கு உடன்பாடில்லை என்றபோதிலும்கூட மக்களுக்காக எழுதப்பட்டவற்றில் மக்களின் வாழ்க்கை முறையினை ஒத்த நிலையியற் செயற்பாடுகளை கையாள்வதில் தவறில்லை.

இந்த மண்ணைவிட்டு ஓடி இந்த மண்ணைப்பற்றி எழுதித் தள்ளுகிறார்கள். வயிறுமுட்டத் தின்றுவிட்டு வன்னியின் பட்டினிபற்றி பதறுவர். அத்தனைபேரினின்றும் விலகி இந்த மண்ணிலே நின்று அவலங்களுக்கு முகங்கொடுத்து நின்றுபிடித்து எழுதும் தங்களைப் போன்றவர்களை, இந்த மண் மறந்து விடாது. தொடர்ந்தும் எழுதியபடியே தங்கள் கரங்கள் இருக்கட்டும். தங்களின் நீடுவாழ் வாழ்விற்கு இறைவனைப் பிரார்த்தித்து முடிக்கின்றேன்.

கனகராயன்குளம்.

இவ்வண்ணம்
கே. இளங்கோவன்

வங்கக்கடலாய் –
வளவை வளவன்
வரிகளை எழுதியதால்
வாசகன் யான்கண்டேன்!
வரிகளை வாங்கிய வெள்ளைத்
தாள்கள் சில சிக்கின என்னில்

சிக்கிய எல்லாம் சிறந்தவையே
முத்துக்களான சொற்கள் அவை
விதவையின் விழிநீர் கழுவும்
விதமாய் ஒரு கதை
கொடுவிடம் இனம் தந்த
சுடு வடு பெற்ற பிஞ்சின் கதை – இப்படியே
இடருற்ற தமிழன் நிலை
வளவையின் வரிகளாயின !!

வற்றாமல் நின்பேனா ஊறட்டும்
மலர்வதற்காய் உள்ள மொட்டாக
கட்டிய கருவெல்லாம் – பேனை
மையாலே பிறக்கட்டும்
நெடிதுயர்ந்த தரு போல
தந்துதவு தமிழதற்கு
ஊரினிலே நின்று ஊர்வலம்
சொல்லும் நின் கை வாழ்வுக்காய்
ஏங்கும் பேனைகள் பலவுண்டு
தாள் பணியும் தூள்களுமுண்டு
வற்றாத கங்கையாய் வளவன் எழுதிவர
வாழ்விழந்த தமிழன் கதையை
வரலாறு மாற்றட்டும்
தடம் பதித்த நின் கைகள்
தமிழனை உயர்த்தட்டும்
நன்றி நீ வாழி.

இவண்
இளவரசு

முன்னறிந்த தெய்வங்களாயான
எந்தையும் தாயும்



திரு. தா. மாரிமுத்து,
திருமதி அம்மிணிப்பிள்ளை மாரிமுத்து
அவர்கட்கும்
1986ல் நிகழ்ந்த Operation Liberation நிகழ்வில் முற்றாக
அழிக்கப்பட்டுவிட்ட, நான் பிறந்த அந்த மண் வளலாய்
கிராமத்திற்கும்

இது படையல்

என்னுரை

குமுறிப்புகையும் எரிமலை வாயிலில் நின்ற ஒருதேசம் திக்கெட்டும் தீப்பிழம்பாக ஓயாது வீசிக் கொண்டிருந்த புயல் ஓய்ந்து அமைதி நாடி நிற்கும் வேளை உங்கள் கைகளில் இத் "தேசத்தின் பாடல்கள்" ஆம் இவை ஒரு தேசத்தின் பாடல்கள். புயலின் சுவடுகள் மாறாத ஒரு தேசத்தின் பாடல்கள் தான்.

இத் தேசத்தின் பாடல்கள் இந்தத் தேசத்திற்கு மட்டும் தானா? இல்லை! உலகஅரங்கில் விடுதலை வேண்டிப் போராடும் அனைத்து தேசங்களினதும் பாடல்கள் எனக் கொள்ளலாம். பொருந்தும்.

இந்தத் தேசப்புயலின் மாறாத சுவடுகள் போலவே மனிதவாழ்வின் மாறாத சுவடுகளாக உலகமெங்கும் காணப்படும் பிரச்சினைகளைத் தன்னகத்தே கொண்டு உணர்த்தும் 21 சிறுகதைகளை இந்தத் தேசத்தின் பாடல்களில் தரிசிக்கலாம். இவை இனம், மொழி, மதம், சாதி, சிறுவர் பிரச்சினை, சீதணம், சுதந்திரம், சுயநிர்ணயம், விதவைமணம், மானுடம், கலை, காதல், உளப்பிறள்வுஉணர்வுகள், பசி, பாலியல் வக்கிரங்கள், உறுதி (துணிவு) வறுமை போன்ற மனித இடர்ப்பாடுகளையே உள்ளீடாகக் கொண்டுள்ளன.

கதைகள் பற்றிய எந்தவிதமான கருத்துக்களையும் நான் சொல்ல விரும்பவில்லை. ஏனெனில் அந்த உன்னதமான பணியை காலமும், காலத்தோடொத்த வாசக விமர்சனப் பார்வையுமே செய்ய வேண்டும். அத்தகைய ஒரு தேவையைத்தான் எமது இலக்கிய உலகம் வேண்டி நிற்கின்றது. ஒழிப்பு, மறைப்பற்ற – காய்தல், உவத்தலற்ற நிலையை அந்நிலையின் தேவையை எமது இலக்கிய உலகம் மறந்துவிட்டது. அல்லது மறக்கப்பட்டு விட்டது போல; அண்மைக் கால இலக்கியப் "பதிவுகள்" எழுதிய சிலர் உண்மைக்குப்புறம்பானவற்றையே பதிவுகளாகத் தந்ததையும் நுண்மான் நுழை புலமறிந்தோர் அறிவர். மறந்திருக்கவும் மாட்டார்கள். இனிமேலாவது உண்மையை அவர்கள் எழுதக்கற்றுக் கொள்ள வேண்டுமென்பதற்கான ஒரு குறிப்பு அன்றி வேறன்று இது.

இலக்கிய உலகம் என்பது பளிங்கு நீரோடை போன்று தெளிந்ததாக இருக்க வேண்டும். அப்போது வாசகனே இலக்கியத்தில் உள்ள அழுக்குகளை இனங்கண்டு நீக்கிவிட்டு தனக்கானதைத் தேர்ந்தெடுக்கக் கற்றுக் கொள்வான். நன்னீர்த் தடாகத்து பாசிகளை அங்கு வாழும் மீன் உணவாக்கிக் கொண்டு தடாகத்து நீரைச் சுத்திகரிப்பது போல வாசகர்களே அந்த அழுக்குகளை ஒதுக்கித்தள்ளி விடுவார்கள். இந்த நிலையை தடுக்க எந்தக் கொம்பனாலும் முடியாது என்பதை எல்லோரும் புரிந்து கொள்வது இலக்கிய உலகத்தின் எதிர் காலத்திற்கு நன்மை பயக்கும்.

இந்தத் தேசத்தின் பாடல்களில் உள்ள படைப்புக்கள் சர்வதேசப் பரிசு உட்பட ஐந்து சிறுகதைகள் காத்திரமான பரிசுகளைப் பெற்றவை பல கதைகள் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்தவை. இருசிறுகதைகள் வெளிநாட்டுப் பத்திரிகைகளின் சிறுகதைப் போட்டிக்கு அனுப்பப்பட்டு முடிவறியாதவை – அதனால் பத்திரிகை வெளிச்சத்திற்கு இதுவரை வராதவை. சில சிறுகதைகள் புலிகளின் குரல் தமிழீழ வானொலி ஆகிய வானொலிகளில் ஒலிபரப்பானவை. இப்படியான இருபத்தொரு சிறுகதைகள் இந்தத் தேசத்தின் யதார்த்தத்தை காலவாரியாக – எடுத்துரைக்கும், உங்களோடு பேசும்.

இலக்கிய உலகில் சிறுகதைகள் பற்றிப் பலதரப்பட்ட கருத்துக்கள் உண்டு. எனினும் சிறுகதைகளை மூன்று வகையாகப் பகுத்துக் காட்டியவர் போ (Edgarallen Poe) என்ற அமெரிக்க அறிஞர் – (இவர்தான் சிறுகதையின் வடிவத்தை முதன்முதலில் வகுத்து எழுதியவர் – இவரைத்தொடர்ந்து ஹென்றி மாப்பசான் – அன்டன் செகோ – போன்றவர்கள் சிறுகதையில் பலபரிமாணங்களைக் காட்டியவர்கள்) போ சிறுகதைகள் பற்றிக் கூறிய கருத்துக்கள் மனங் கொள்ளத்தக்கவை சிறுகதைகளை.

கருவின் சிறப்பால் அமையும் சிறுகதை
ஒருவரின் பண்பின் சிறப்பால் அமையும் சிறுகதை

உள்ளத்தில் பதியும் உணர்வின் சிறப்பால் அமையும் சிறுகதை என மூன்று வகையாகப் பகுத்த போ உணர்வின் சிறப்பை ஒட்டிய சிறுகதையே சிறந்த சிறுகதை என்று சொல்கிறார். ஆம் உள்ளத்தில் பதியும் தாக்கத்தைக் கொண்ட வலுவான மன வெளிப்பாடே சிறந்த சிறுகதை எனலாம்.

II

இத்தகைய சிறந்த சிறுகதைகள் பலவற்றை இடப்பெயர்வு காரணமாக இழந்து போன தமிழ் எழுத்தாளர் சிலரில் நானும் ஒருவன் எனது இடப்பெயர்வால் பல இலட்சம் பெறுமதியான இலக்கியச் சொத்துக்களை இழந்து போனேன். இது ஒரு தேசந்தழுவிய இழப்பு. ஆனால் எனது முதல் சிறுகதைத் தொகுதியின் இழப்பு மனதை நெருடிக் கொண்டே இருக்கும் ஒரு இழப்பாகி உள்ளது. இறுதிக்கதை அச்சிடும் நிலையில் இருந்த – 12 சிறுகதைகளின் தொகுப்பு (பல பரிசுக்கதைகளுட்பட) 1987ல் யாழில் நிகழ்ந்த மௌனப் புரட்சியின் போது – அவர்களால் கையகப்படுத்தப்பட்டது. மூலங்களுட்பட இழந்து போனதான அந்த இழப்பு வேறு எந்த ஒரு எழுத்தாளனும் சந்திக்காத ஒரு அநியாய இழப்புத்தான். இப்படியாக நான் இழந்து போனவை தவிர வன்னியில் புதிதாகப் படைக்கப்பட்ட படைப்புக்கள் சிலவும், யாழ் / பல்கலைக்கழக நூலகத்தில் தேடி எடுத்த பழைய ஆக்கங்கள் சிலவுமாக ஆண்டுவாக்கில் 1974 முதல் 2000 ம் வரையான 26ஆண்டு காலத்தை உங்கள் முன் கொண்டு வந்துள்ளேன்.

இவை கற்பனைக் கதைகளும் அல்ல சிந்தனைச் சித்திரங்களுமல்ல இத் தேசப்பரப்பில் மானிடச் சிக்கல்களில் தோய்ந்தவர் – வாழ்ந்தவர் என்னோடு வாழ்ந்து கொண்டிருப்பவர் என்று பல விதத்திலும் நான் சந்தித்த கதை மாந்தரின் உண்மைச் சம்பவங்களே. இவை யாவும் கற்பனையே எனச் சொல்லிவைக்க முடியாத உண்மைகள். ஆதலால் இப்படைப்புகள் பற்றிய தரத்தினை காலம் தீர்மானிக்கும். அந்த முடிவை அத்தகைய காலத்தை வென்று நிற்கத்தகுந்த சிறுகதைகளும் இத் தொகுப்பில் உண்டு என்பதையும் ஆணித்தரமாகக் கூறுவேன்.

நன்றிக்குரியவர்கள்

வீரகேசரி
ஈழநாடு
தினகரன்
ஈழமுரசு
ஈழநாதம்
தினக்குரல் – ஆகிய பத்திரிகைகட்கும்
சுடர் (இது இப்போது இல்லை)

THIRD EYE – ஆகிய சஞ்சிகைகட்கும்
புலிகளின் குரல்
தமிழீழ வானொலி } ஆகிய வானொலிகட்கும்

வானொலிக் கதைகளிற்கு குரல் தந்த சுபா – காயத்திரி ஆகியோர்க்கும் யாழ் / பல்கலைக் கழக நூலகர் அவர்கட்கும் நூலகப் பணியாளர் திரு காளிங்கராசா அவர்கட்கு தினக்குரலில் வெளி வந்த [redacted] தேசத்தின் பாடல் இது சிறுகதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த S.இராஜசிங்கம் அவர்கட்கும், கணனிப் பொறியில் அச்சிட்டு தந்த திருச்செல்வி அச்சக உரிமையாளர் திரு கந்தசாமி அவர்களுக்கும் அவரது மகன் ஜெனா மற்றும் திரு வே. யோகராசா அவர்கட்கும் அட்டைப்படத்தை பலத்த நெருக்கடிகளுக்கு மத்தியிலும் வரைந்துதவிய ஒளியியல் படிம ஓவியதுறையின் முதல்வர் பிரபல ஓவியர் திரு. ஆ. இராசையா ஆசிரியர் அவர்கட்கும் அட்டையை அழகுற அச்சிட்டு தந்த நல்லூர் பிள்ளையார் அச்சகத்தினருக்கும் இத் தொகுப்பு அழகான ஒரு தொகுப்பாக வர பல வழிகளிலும் ஒத்துழைத்த இனிய நண்பன் சிறீதர் (நோபிள் பதிப்பக உரிமையாளர்) அவர்களுக்கும் முகமறியா வாசகர், ஆசியர் திரு. கே. இளங்கோவன் (கனகராயன்குளம்) அவர்கட்கும் இதயார்த்தமான நன்றிகள் இத்தொகுப்பிற்கு ஒரு வாசகரின் கடிதத்தையே முகவுரையாகத் தருவதில் நிறைவடைகின்றேன்.

வளளாய் அச்சுவேலி
2002-11-24

அன்புடன்
வளவைவளவன்

த. மு. பதிப்பக வளாகம் – மல்லாவி

ஒரு அரசின் சரிவு

9-10-2000

தூக்கம் கலைந்து போனாலும் ஏக்கம் நிறைந்து வழிந்த விழிகளை ஒரு தடவை அந்த குடிசைக்குள் மேயவிட்டுக் கொண்டிருந்தான் சுதா. வெளிறிய கருமை விடியலைப் புலப்படுத்தி இருக்க வேண்டும். மெல்ல வெளியே வந்து வானத்தைப் பார்த்தான், தேய்பிறை கீழ் வானில் சூழ்ந்தெடுத்த தேங்காய்ச் சொட்டுப் போல துலக்கமின்றித் தெரிந்தது. நாலுமணிவரும் போல இருக்குது..... "வளக்கமாக நேரத்தோடை எழும்பிற அம்மா இண்டைக்கு இன்னும் எழும்பாமல் கிடக்கிறா. பாவம் அவவுக்கு எங்களால எவ்வளவு கரைச்சல். பட்டினி கிடந்து கிடந்து ஆளே உருமாறிப் போனா. கிடக்கட்டும்" என்று எண்ணியவாறு குளாயடிக்கு சனம் வந்துதென்றால் குளிக்கவும் ஏலாது என்று நினைத்தவாறு கரிக்கட்டி ஒன்றை வாயில் போட்டவாறு வாழியும் கையுமாக குழாய்க்கிணற்றை நோக்கி சுதா நடந்து கொண்டிருந்தான். வீதியாரும் மற்ற அநாதை போலக்கிடந்தது. ரீப்புக்காறங்கள் வந்தால் பெரும் கரைச்சலாகி குளிக்க ஏலாமல் போயிடும்..... எத்தனை நாட்கள் இப்படிப்பட்ட தொந்தரவுகளாலை குளிக்காமகளுவிப்போட்டு போயிருந்தான்

கரியால் பல்லை தீட்டிவிட்டு குளாயை அடித்து வாழியை நிரப்பிய போது பாண் நிறைந்த பெட்டிகளோடு சைக்கிள்காரர் ஒருவர்பின் ஒருவராக ..... சே..... நான் இண்டைக்கு நேரத்தோடதான் வந்திட்டன் என்றவாறு குளித்துக்கொண்டிருந்தான் சுதா. வன்னிக் குளிருக்கு குளாய் கிணற்று நீர் எத்தனை இதமானது! சே..... சுகமான ஒரு குளியல்தான்.

வன்னியில் கிணறுகளில் தண்ணியில்லாமல் வந்தால் குளத்திற்கு தான் குளிக்க போக வேண்டும். குளத்திற்கு கிட்ட இருந்தால் அந்தக் கரைச்சலும் இருந்திருக்காது. கோடை பிறந்த வேளை கிணறுகளில் நீர் வறண்டு குளாய்க் கிணறுகளே தஞ்சமென்று ஆனபோது வேறுவழியென்ன? இனிக்கார்த்திகை வரைக்கும் இந்தக்கரைச்சல் நீளத்தான் செய்யும். சிறுவர் தினக் கொண்டாட்டாங்களோடு இரண்டு மூன்று நாட்கள் குதூகலமாகவே போய்விட்டன. இண்டைக்கு பள்ளிக்கூடம் வடிவா நடக்கும். அம்மா விதானையார் வீட்டை போகவேணும் எண்டவா..... மீளாய்வுக்கு பிறகு தான் நிவாரணத்துண்டு அதுக்குப் பிறகு சங்கக்கடைக்காரன் எப்ப அரிசி குடுக்க நினைக்கிறானோ அண்டைக்குதான் எங்களைப்போல ஆட்களுக்கு நெஞ்சு நிறையும். அதுவும் முந்தியப்போல இப்ப இல்லை. தாறகொஞ்சத்தையும் அரைவாசி ஆக்கிப்போட்டாங்கள். பள்ளிக்கூடத்தை விட்டுப்போட்டு எங்கினையேன் கூலி வேலிக்கு போகலாமெண்டால் அம்மாவுக்கு விருப்பமில்லை. எப்படியும் படிக்க வேண்டுமென்று சும்மா கத்திக் கொண்டிருக்கிறா. பள்ளிக்கூடத்திலை எல்லோருமே கைக்கிள் வைச்சிருக்கிறாங்கள். எனக்கு ஒரு சைக்கிள் கூடஇல்ல.....தூ.....வாயில் நிறைந்த நீரைக் கொப்பளித்து விட்டு குளித்து முடித்து அந்த பிளாஸ்டிக் வாளிகளில் நீரை நிரப்பிக் கொண்டு வீட்டிற்கு வந்த போது கடைசித் தம்பி தேவன் அழுதுகொள்வது கேட்கிறது.

"அம்மா..... பசிக்குது..... தலைய சுத்துது"..... கண்ணிலிருந்து கண்ணீர் வாய்க்காலில் பாய்ந்த நீரைப்போல பாய்ந்து கொண்டிருக்கின்றது, தேவனுக்கு மட்டுமல்ல தாய் கனகத்திற்கும் தான்.

"அப்பு..... கொஞ்ச நேரம் படுத்திரன். கிடக்கிற அரிசியை கஞ்சி காய்ச்சித்தாறன்..... நீ ராத்திரி ஒண்டும் தின்னாமல்

கிடந்ததால தான் தலையை சுத்துதாக்கும்" என்றவாறு பழந் துணியொன்றை நீரில் நனைத்துப்போட்டு தேவனின் முகத்தை துடைத்துவிட்டுக் கொண்டிருந்தாள். கனகம் ராத்திரி ஒண்டும் தின்னாம கிடந்திட்டா என்று சொல்ல முடிந்ததே யொளிய ராத்திரி மற்றப்பிள்ளைக்கும் ஒண்டும் கொடுக்க அவளிடம் ஏதும் இருக்கவில்லையென்பது அவளுக்கு தானே தெரியும். ஆ.....பஞ்சப்பட்டாளங்களா உங்கள வைச்சு சீரழியட்டும் என்று தானே அந்த மனிசனை இடையில கொண்டு போனவங்கள். இந்த தாலியறுப்பாளின்ரை ஆட்சியிலை எத்தனை பேருக்கு இப்படிச் செய்து தாலியறுத்துப்போட்டாள். பொம்மர் குண்டு வீச்சில் தான் அவளின் புருஷன் செத்துப் போனான்.

அம்மாவின் புறுபுறுப்புக்களுக்கு ஆயிரம் அர்த்தங்கள் இருப்பது சுதாவுக்கு தெரிந்து தான் இருந்தது. என்ன செய்யிறது ஏழைகள் வாழ்வு எப்பொழுதும் கண்ணீரில்தான். பேச்சிலை மட்டும் "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்று பேசுவார்கள். ஆனால் ஏழைகளின் வாழ்க்கை எப்படிப்போகிறது என்று மட்டும் யாரும் தெரிந்து கொள்வதாக இல்லை. 2000 ஆண்டில் அனைவருக்கும் வீடு என்று ஆளவந்தார் ஒருவர். நாங்கள் அவர் ஆட்சியில தான் வீடுவாசலையும் இழந்தனாங்கள் என்று அம்மா அடிக்கடி சொல்லுவா. இப்ப அம்மாவின்ர ஆட்சி வந்தாலும் வந்தது வீடுவாசலை இழந்தோம் ..... இருப்பிடம் விட்டு காடு காடாய் அலையிறதையோ யாரும் எண்ணிப்பார்ப்பதாக இல்லை. சொன்னவரும் போய்ச் சேர்ந்திட்டார். நாங்கள் தான் நிவாரண பிச்சைக்காக இருப்பது போல வாழ்ந்து கொண்டிருக்கிறோம். என்று மனதிற்குள் குமைந்தவாறு சுதா தனது பள்ளிக்கூட அடுக்குகளில் மூழ்கிப்போனான். இப்படி அடிக்கடி சுதாவின் மனதில் பெரும் பூகம்பப் பெரு நினைவுகள் வரும்போதெல்லாம் தாயும் சகோதரர்களும் எதையோ இழப்பது போல தோன்றிக் கொண்டிருப்பார்கள். அந்த நினைவுகளே அவனை உருக்குலைந்த ஓவியம் போல மாற்றிவிடும் போது..... நெடு மூச்சொன்றை பதிலாக்கிவிட்டு திருப்திப்படுவான். அதுதான் ஏழைகளின் சஞ்சீவினிபோலும்.

நேற்று விதானையார் வீட்டில குடும்ப அட்டைகள் அடுக்கப்பட்டிருக்கும். இனி இந்த அடுக்கணிகள் பிள்ளை குட்டிகளின் பாடுபறப்பெல்லாம் பார்த்துக் கொண்டு நான் போறதுக்கு இடையில

மிச்சம் மீதியென்றிருந்த சனங்களும் வந்து அடுக்கிப்போட்டு அரட்டையடித்துக் கொண்டிருக்குங்கள் நான் என்ன செய்ய இண்டைக்கு வந்தபாடுதான். கனகம் புறுபுறுத்தவாறு காய்ச்சிய கஞ்சியை சட்டியில் ஊற்றியாற்றி வருதற்கிடையில் தேவன் அழத்தொடங்கிவிட்டான். ராணியும் தேவகியும் முற்றம் கூட்டுவதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அது அவர்களுக்கு பெரும் வேலை என்ற நினைப்பும் திருப்தியும் தான்.

சுதாவின் நினைவெல்லாம் சிவசம்பு மாஸ்ரரோடு சங்கமிக்க தொடங்கின. இண்டைக்கு வகுப்பில எத்தினை நக்கல்வைத்து, நளினமாகப்பேசி ஆக்களை அறுத்துக்கொண்டிருப்பான் பாவி. நேற்று இந்த சனங்கள் கைதட்டி ஆரவாரித்த போதே சிவசம்பர் கவனித்துக்கொண்டிருப்பார். பொட்டையளுக்கை எழுப்பிவிட்டுப்போட்டு தலைவர் சிந்தனையாளர், அறிஞர்..... இப்படி எத்தனை அடைமொழியளை வைத்து அறுக்கப்போறான். நான் இந்த அறுப்பானுக்காகத்தனே மாட்டன் மாட்டன் என்று சொல்லச்சொல்ல அந்த மனிசன் கேட்டுதே. மாணவர்களை மட்டம்தட்டி அவர்களை சுயமான சிந்தனைக்கு திரை போடுவதில் சிவசம்பர் மட்டுமல்ல இன்னும் இப்படி எத்தனையோ ஆசிரியர்மார் இருக்கவே செய்கின்றனர். ஆனாலும் யாரும் இப்படியான ஆசிரியர்களைப்பற்றி அதிகம் அலட்டிக்கொள்ளாததால் தான் சிவசம்பரும் அவரைப்போன்றவர்களும் அந்த வசைப்புலவர் மகாத்மியத்தை வளர்த்துக்கொண்டே இருக்கின்றனர்.கந்தையா சேர் மாதிரி ஒருசிலர் இருப்பதால் தான் நாங்களும் எங்களின்ரை திறமைகளை வெளிக்காட்டக் கூடியதாகவும் உருப்படவும் முடியிது. மாணவர்களைத் தூக்கிவிடும் ஆசிரியர்கள் தான் இந்த உலகிற்கு எந்தக்காலத்திலும் உதவுபவர்களாக இருக்கும் போது இந்த வசை பாடும் கூட்டங்கள் என்னத்தை சாதிக்கப்போயினம். தங்களைத் தாங்களாகவே தரம் கெட்டவர்களாக பறை சாற்றி சமூகத்தின் இழிந்த பிறப்புக்களாக போவதன்றி வேறென்னத்தை காணப் போகிறார்கள். அதிபர் இவர்களையெல்லாம் சேப்பண்ணிக் கொண்டு போகிறார் தான் எண்டாலும் சம்பளத்திற்காக ஆசிரியர் வேலை பார்ப்பதிலும் வேறு வேலைக்கு போகலாம் தானே? ஆசிரியத் தொழிலின் மகத்துவங்களையெல்லாம் மண்ணாக்கி ஆசிரிய உலகின் தற்குறிகளாக நின்று உண்மையான ஆசிரியர்களுக்கெல்லாம் இவர்கள் களங்கத்தை வாரி இறைக்கின்றார்களே.....சுதாவின்

மனதில் ஆயிரம் ஆயிரம் நினைவுகள் எழுந்து கொள்ள கனகம் வாத்துவைத்த கஞ்சியை குடித்துவிட்டு நடக்கத் தொடங்கினான்.

இரண்டு மைல் தூரம் நடந்துதான் அவன் பள்ளிக்கூடம் சென்றாக வேண்டும்.தகப்பன் சுந்தரம் கொண்டு திரிந்த பளைய கைக்கிள் அவற்றை செத்தவீட்டு செலவுக்காகப் பெற்ற கடனுக்காக விலைப்பட்டுப்போனதாலை சுதா பள்ளிக்கூடம் நடக்க தொடங்கிய நடைப்படலம் இன்று வரைஎன்ன என்றுவரை நீளப்போகிறதோ யாருக்கு வெளிக்கும்?

கனகம் காலைக் கஞ்சியோடை பிள்ளைகளை திருப்தி படுத்திவிட்டு குடும்பக் காட்டோடு அந்த வயல்வெளிக்குள் இறங்கி நடக்கத் தொடங்கினாள். விதானையின் வீடு சிவபுரத்தின் ஊர்க்கோடியில் இருந்ததால் அவர் தனது காரியாலயத்தையும் அங்கு தான் வைத்திருந்தார். வயல்வெளியெல்லாம் காலபோக வேலைகள் இன்னும் ஆரம்பிக்காது இருப்பதை காட்டுவது போல மந்தை கூட்டத்தால் நிறைந்திருந்தது.

இன்று மீளாய்வோடு நிவாரணத்துண்டையும் தந்திட்டாங்கள் எண்டால் நல்லதாய் போகும்..... போன கிழமை பிள்ளைகள் ஒண்டும் ஒழுங்காக சாப்பிடேல்லை இண்டைக்காவது ஒருசோறு ஆக்கிக் கொடுத்தால் அதுகளுக்கு எப்பன் தெண்பாயிருக்கும். எனக்குமெப்பன் நிம்மதியாய்ப் போகும், என்ன செய்து துலைப்பாங்களோ. ஆருக்கு தெரியும். கனகத்தின் மனதில் நிவாரணத்துண்டின் பலம் சுடராகி விரிந்து கொண்டிருந்தது.

வயல் வேலையைத் துவங்கி விட்டால் நாத்து நட களை பிடுங்க என்று ஏதாவது வேலையும் செய்யலாம். அதுவும் குறுக்கால போன மழையால ஒண்டும் சீருக்கு வாறபாடய்த் தெரியவில்லை. இந்தக்கஞ்சனுகளோட என்ன செய்து எப்படிக் காலம் தள்ளுறது என்றவாறு முகத்திலிலரும்பிய வியர்வைத்துளிகளை முந்தானைச் சேலையை உதறித்துடைத்துக் கொண்டே விதானையார் வீட்டுக்கு சென்று விட்டாள் கனகம்.

அந்தவளவு கொள்ளாத சனம் கூட்டமாக நிற்பது தெரிந்தபோது கனகத்திற்கு நெஞ்செரிந்து தான் போனது. அரசாங்க

அதிபர் கந்தோரிலிருந்து வரவேண்டியவர்கள் இன்னும் வரேல்லையாம்.....அவை வந்தால் தானாம் மீளாய்வு நடக்கும் இல்லாட்டி நாளைக்குத்தானாம். கனகத்தைதெரிந்த பெண்ணொருத்தி முத்தாய்ப்பான அறிவிப்பால் கனகத்திற்கு தெரியப்படுத்தினாள். கனகத்திற்கு மூச்சு நின்றுவிடும் போலத்தான் இருந்தது என்றாலும் காட்டிக் கொள்ளாமலே "உள்ளவன் வீட்டுப் பணம்வர இல்லாதவன் வீட்டுப் பிள்ளை செத்த கதைமாதிரித்தான்" என்று கனகம் புறுபுறுத்துக் கொண்டது எல்லோருக்கும் கேட்டது போலவே விதானையாருக்கும் கேட்டிருக்க வேண்டும்.

விதானையார் கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டே கனகம் என்னவாம் என்றார். ஒருவித அதிகாரத் தொனியில்.

எல்லோரது விழிகளும் கனகத்தின் முகத்தில் நிலைகுத்தி நின்றன. "இண்டைக்காவது நேரத்தோட வந்து இந்த வேலையைச் செய்ய மனம் வரேல்லையாக்கும். "அவைக்கென்ன எங்கட பஞ்சம் பசியெல்லாம் அவைக்கிருந்தால் தானே தங்களைப் போல நினைச்சு செய்வினம். தங்கட வேலைகள் எல்லாம் முடிச்ச லீவிலைதானே இதுகளை செய்வினம்" என்று புறுபுறுத்துக் கொண்டு நின்றவையெல்லாம் இப்போது விதானையாரின் சிரிப்பை புரிந்துகொண்டு மௌனமாகினர்.

விதானையாரைப் பகைப்பட்டுக் கொண்டால் நிவாரணத்தை விதானை அதையிதைச் சொல்லி வெட்டிப் போடுவான். பிறகு ஏ.ஜி.ஏ. கந்தோருக்கு இழுபடவேண்டி வரும். வந்தாலும் சில வேளை நிவாரணம் கிடைக்காமல் போகும். என்ற எண்ணத்தில் எல்லோருமே விதானையாருக்கு நல்லவர்களாக இயன்றவரை நடிப்பதற்காக பேசாமல் இருந்து கொண்டனர். கனகம் மட்டும் என்ன செய்வது தெய்வம் விடைகொடுத்தாலும் பூசாரி விடை கொடுக்க மனமில்லாத நிலைதான் நாங்களிருக்கிறம் என்றவாறு தனது குடும்பக் காட்டை அடுக்கியிருந்த காட்டின் மீது வைத்தாள்.

"என்ன கனகம் இவ்வளவு சனமும் நேற்றுப் பிடிச்சு வந்து போகுதுகள் ஒண்டும் கதைக்கேல்ல. நீயிப்ப வந்திட்டு தொணதொணக்கிறாய்?" தன் கவனிப்பை புலப்படுத்திக்கொண்டே "மோன் எத்தனையாம் ஆண்டு படிக்கிறான்" என்றார்?

விதானையார் மகனை கேட்டகேள்வியின் ஆளத்தை புரிந்து கொண்ட கனகம்மா..... "என்ர மோன் பத்தாம் ஆண்டையா" என்று நயமாக சொல்லி வைத்தாள். விதானையார் தலையாட்டி விட்டு நேற்று சிறுவர் தின விழாவிலை நல்லா வெளுத்து வாங்கினவன். அதுதான் ..... என்று இழுத்து நிறுத்தினார். மனதிலேதோ ஒன்று அவரை உறுத்தியது போல அவர் முகபாவம் மாறியிருந்தது. கனகத்தின் தோற்றம் இப்போது விதானையாருக்கு சுதாவின் வடிவமாகத் தெரிந்தது.

".....அன்பானவர்களே, வீதியில், கடைப்படியில், வீதிச் சிலையடியில் பாதி இரவே தூங்கி விடிவதன் முன்னெழுந்து பிச்சையோ பிச்சை, பசியோ பசியென்று கூவி இரந்துண்டு வாழும் வீதிச் சிறுவர்களின் எண்ணிக்கை உலகில் பத்துக்கோடி. பள்ளிக்கு செல்லும் பராயத்தில் கூலிக்கு அமர்த்தப்பட்ட சிறுவர்கள் 2 1/2 கோடி. எமது ஈழ மணித்திருநாட்டில் கூலிகளாக அமர்த்தப்பட்ட சிறுவர்கள் 74,746 பேர். ஒரு இலட்சம் சிறுவர்கள் வீடு அற்றவர்களாக ஆக்கப்பட்டனர்.

"இந்தக் கொடுமைகளுக்குள் மட்டும் சிறுவர்கள் துயர் நிற்கவில்லை. மாறாக பணம் படைத்தவர்கள் தம் பாலியில் வக்கிரங்களுக்கு 30 ஆயிரம் சிறுவர்கள் பலியாக்கப்பட்டுள்ளார். இவையெல்லாம் ஒரு நாளில் நடந்த விபத்தா? அல்லது மேலாதிக்கவீரர்களின் அற்புதமென்பதா? இந்த புள்ளி விபரங்களைச் சேகரித்த காலத்தில் இச்சிறுவர்களுக்கான மாற்று வழியென்று ஏது செய்தார்கள்? இத்தனை கொடுமைகளுக்கும் ஆளாக்கிய சூத்திரதாரர்கள் கடவுளைத்தேடி அலைகிறார்கள். அழுது வடிக்கிறார்கள். ஆனால் இத்தனை கொடுமைகளுக்கும் விழுந்து துடிக்கும் சிறுவர்களோ கண்ணீரில் மூழ்கி ஏழுந்து வாழ்வோம், என்ற நம்பிக்கையோடு இந்தக்கொடிய உலகில் போராடிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களது வாழ்வே போராட்டமாகவும் போராட்டமே வாழ்வாகவும் மாறிவிட்டது. இந்நிலையில் எந்தக்கடவுளாவது இந்தச் சிறுவர்கள் தம் கொடுமைகளை உணர்ந்ததாகத் தெரியவில்லையே ஏன்? ஒருவேளை கடவுளால் வஞ்சிக்கப்பட்டவர்களுக்குதான் "சிறுவர்" என்று பெயரோ? அதனால் தான் கடவுளின் பெயரால் காலாட்சேபம் நடத்தும் கயவர் கைப்பொம்மைகளாக்கி சிறுவர்கள் சிதைக்கப்படுகிறார்களோ?

சுதாவின் சரமாரியான கேள்விகளை அங்கீகரித்தது போல அந்தச்சன சமுத்திரம் கரகோசத்தையெழுப்பி வானை அதிர்த்த அந்தக்காட்சி விதானையாரின் மனக்கண்ணில் விரிந்தது. கயமை குடிகொண்ட அந்த மனதை எரித்து பொசுக்கியிருக்க வேண்டும்.

என்ர வீட்டிலும் வயல் வீட்டுவேலை செய்யவும் வயல்வேலைக்குதவியாகவும் இரண்டு மூன்று அநாதைப் பொடியளை நான் வைச்சிருக்கிறன் இது கூடஅவன்ர பேச்சுக்குள்ள அடங்கி வந்திருக்கே? அப்பிடியெண்டால்..... ?.....இப்படிக் கேட்கத் தொடங்கின இவன்.....இவன் எனக்கும் சேர்த்து தானே நக்கல்களும் எச்சரிக்கையும் விட்டிருக்கிறான். ம்..... 15 வயசில.....கேட்கத்துவங்கின இவன் நாளைக்கு படிச்சு நல்லமாதிரி வந்தால் நாங்களெல்லாம் பாயைச் சுருட்ட வேண்டியது தானே? விதானையார் கனகம்மாவின் முகத்தில் சுதாவை மட்டும் காணவில்லை தனது எதிரியாய்..... தனக்கு எதிர்ப்பான ஒரு நாசகாரியாக இவன் வளர்வதான ஒரு பிரதிமையைக்கண்டார். நாங்கள் அரசாங்கத்தோட அதையிதைச் சொல்லிக் கதைச்சு இவைக்கு நிவாரணம் குடுக்க இவர் கொழுப்பிலதானே இப்பிடியெல்லாம் பேசி..... கறுவிக்கொண்ட விதானையாரின் மனத்தாக்கத்திற்கேற்ப முகம் இறுகி விழிசிவந்து தீக்கோளங்களாயின.

கனகம் உன்ர பொடியன் அரசாங்கங்களையெல்லாம் காரசாரமாகக் கண்டிச்சுப்பேசுறான் நீ என்னடாவெண்டால் நிவாரணத்திற்கு வந்திருக்கின்றாய் என்ன? விசமத்தனமான சிரிப்போடு வேடிக்கை போல கேட்டார் விதானையார்.

கனகம்மாவும் இச்சங்கதிகள் எதுவும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்பதால் புரிந்தோ புரியவில்லையோ ஐயா பள்ளிகூடத்தில வாத்திமார் சொல்லிக்குடுத்ததை தானே பிள்ளைகள் பேசியிருக்குங்கள். என்ரைபிள்ளை மட்டுமே பேசினது? எல்லாப் பிள்ளைகளும் என்ர மோனைப்போலதானே பேசியிருக்குங்கள்? அதுக்கும் இதுக்கும் ஏன் நீங்கள் முடிச்சுப்போடுறியள்? கனகம் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு மிகவும் பௌவியமாக கூறினாள். கூடிநின்ற சனங்களுக்கெல்லாம் விதானையார் நிவாரணம் வெட்டுற வழியைக் கண்டுபிடிச்சுட்டார் என்ற உண்மையை புரிந்து கொண்ட பாவனையில் ஒருவர் முகத்தில் ஒருவராக விழிகளைப் பதித்தனர்.

நீண்ட அமைதி ஏதேவொன்று நடக்கப்போவதாக உணர்த்துவதாக இருந்தது. விதானையார் இளநகை ஒன்றை உதிர்த்து விட்டு "கனகம் எங்கோதன் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்து விட்டு கனகம் உனக்கு பிச்சைக்காசும் வருகுதெல்லோ.....?" என்றார்.

"ஓமையா அதுவும் உங்களுக்கு தெரியாதே மூன்று நாலுமாசத்திற்கு ஒருக்காலெண்டுதானே வருகுது. தாற பிச்சையை ஒழுங்கா தாறபாடில்லையே" என்று அங்கலாய்த்தாள் கனகம். வஞ்சமில்லாது வறுமையின் தாற்பரியத்தையும் புலப்படுத்தினாள். வந்தவர்களை தன்வசமாக்கும் இளநகையொன்றோடு வரவேற்ற விதானையார் தங்கடை கரைச்சலுக்குள்ளும் உங்களுக்காக வந்திருக்கினம். இனி நீங்கள் கலகலக்காமல் பொறுமையாக இருங்கோ என்று பொடிவைத்தார்.

போனதடவை மீளாய்வின் போது குடும்பக்காட்டில் வேலைக்குரிய இடத்தை வெறுமையாக விட்டுவைத்திருந்த ஆசிரியர் சிவகுருநாதன் குடும்பம், திலகா ரீச்சா, சிவப்பிரகாசம் என்ற ஆசிரியர்களுக்கெல்லாம் நிவாரணம் குடுத்து அது கூப்பன்கடைக்குள்ளாலை வெளிவந்து பெரிய சிக்கல் எல்லாம் வந்தபோது இந்தப்பிரச்சனையிலிருந்து விதானையாரைக் காப்பாற்றினவர்களும் இவர்கள் தான். இவர்கள் வந்தது தனக்கு நல்லசகுனம் என்று விதானையார் மகிழ்ச்சிக்கடலில் மூழ்கித்திளைத்தவராகவே இருந்தார். சனங்கள் திட்டித்தீர்த்தாலும் பரவாயில்லை மேலதிகாரி தன்னை மதிக்க வேண்டும் தனக்குதான் செய்யிற திருவிளையாடலுக்கு ஒத்துழைப்புதரவேண்டும் என்பது மட்டுமே விதானையாரின் நோக்கமாக இருப்பதையறிந்தவர் யாரும்இருக்க முடியாது.

அரச அதிபர் கந்தோரிலிருந்து வந்தவர்களோடு விதானையார் வேற்றுமொழியொன்றில் சரளமாக உரையாடினார். உரையாடலின் போது கனகத்தின் பெயரும் வேறு தங்கமணியென்ற பெயரும் அடிபட்டது. இருவருமே புருசன் இல்லாதவர்கள். பேச்சுக்கள் முடிந்தபோது வந்தவரில் ஒருவர் சொன்னார் நிவாரணத் தொகை இம்முறை சரிஅரைவாசி வெட்டப்பட்டுவிட்டது. அதனால் நாங்கள்

உழைக்கும் வலுவிழந்த குடும்பத்தினருக்கு உரிமை நீக்கப்படக்கூடியவர் யார்? யார்? என்பதை விதானை ஐயா தெரிவிக்கும் தகவல்களின் அடிப்படையில் செய்வோம். இது மேலிடத்து உத்தரவாதம் அப்படியிருப்பதால் நீங்கள் எமக்கு ஒத்துழைத்தால் சரி என்று சொல்லிவிட்டு தமது கடமையில் கவனம் செலுத்திக் கொண்டனர்.

நேற்று வந்து காட் அடுக்கின ஆட்களைப்பர்த்துப்போட்டு இண்டைக்கு வந்தவையளைப் பார்க்கப் போறோம். நீங்கள் பிந்தி வந்தவை வேற அலுவல் இருந்தால் போட்டுப் பின்நேரம் வரலாம் என்று விதானையார் கண்சிமிட்டியவாறு சொன்னார்.

விதானையார் தனக்கு வளமானவர்களையும் வேண்டியவர்களையும் திருப்திப்படுத்த திட்டம் போட்டார் என்பதை எல்லோரும் புரிந்து கொண்டிருக்க வேண்டும். எல்லோரும் வெளியே கூடிக் குசுகுசுத்துக் கொண்டபோது. விதானையார் தனது முடிவை மாற்றிக் கொண்டு உதவியில்லாதவையை முதலில் விடுவோம் என்றவாறு கனகத்தின் காட்டை கையில் எடுத்தார் அந்தக்காட்டை ஆய்விற்கு வந்தவர்களிடம் கொடுத்துவிட்டு இன்னும் சில காட்டுக்களை தெரிந்து எடுத்துக்கொண்டார்.

விதானையார் வித்தைகாட்டப் போகிறார் என்பதை எல்லோரும் புரிந்து கொண்டு ஏதோ முடிவொன்றை உறுதியாக்கிக் கொள்வது போல நின்றார். பெடியன் ஒருத்தன் உழைக்கிற வயதிலையிருக்கிறான் கனகத்திற்கு பிச்சைக்காசும் வருது அரசாங்கம் தருதெண்டு எல்லாஉதவியும் ஒருஆளுக்கு குடுக்கிறதாலை மற்ற சனங்கள் பாதிக்கப்பட வருமே..... நீங்கள் பார்த்துச் செய்தால் ஒண்டை வெட்டி ஒண்டைக்குடுத்தால் எல்லாருக்கும் கொஞ்சம் என்றாலும் குடுக்கலாம் தானே என்று விதானையார் முடித்தபோது கனகம் மதுரையை எரித்த கண்ணகியாகி நின்றாள். "உழைக்கிற வயசுப் பெடியன் இருக்க பிச்சைக்காசேன் எனக்கு? அதையும் வெட்டலாமே விதானையார்-? நீங்கள் திலகம் ரீச்சருக்கும் சிவகுருநாதன் வாத்தியாருக்கும் குடுக்க இம்முறையும் யோசிக்கிறியளோ.....?சரிப்பட்டுவராது விதானையார் வவுனியாவிற்கு போன வடிவேலு வரதனாக்களெண்டு வைச்சிருக்கிற காட்டுக்

கெல்லாம் நீங்கள் நிவாரணம் எடுக்கவேணு மெல்லோ.....அந்தக் கணக்கெல்லாம் எங்களிட்டை இருக்கு....." என்று ஆவேசமாகப் பேசிநாள் கனகம்.

ஏழையின்ர வயித்தில அடிச்சு வட்டிக்காரனுக்கும். வடிவான ஆட்களுக்கும் குடுக்கிற யோசினை இனிச்சரிவராது விதானையார். உம்முடைய திருவிளையாட்டெல்லாம் எங்களுக்குத் தெரியும். எங்களை வெருட்டி அடக்கிப்போட்டு அப்படியே அள்ளுகுத்தகையா எடுக்கிற யோசினையோ? கூடிநின்ற சனங்களெல்லாம் ஊர்வலத்தில கோஷமெழுப்பின மாதிரி ஆர்ப்பரித்துக்கொண்டு விதானையாரை மொய்த்துக் கொண்டனர்.

திரைமறைவில் நடந்த அத்தனை இரகசியங்களும். வெளிச்சத்திற்கு வந்தபின் அவற்றை மறைக்க முயல்வது புயலைக்குடிலால் மூடிய நிலையில் தான் முடியும்..... அச்சம் இன்னுமின்னும் அவரை அச்சுறுத்தியது.

அம்மை நோயாளியின் கொப்புளங்கள் போல விதானையாரின் முகமெங்கும் வியர்வைத்துளிகள் தலை நீட்டின.....

தாங்கமுடியாத துன்பியல் தாக்கத்துள் மூழ்கித் துடித்துக் கொண்டிருந்தது மனம்.....

"வட்டிக்காரருக்கும் வடிவானவருக்கும்....."
''சிவகுருநாதன் வாத்தியாருக்கும் திலகம் ரீச்சருக்கும்....."
"வவுனியாவிற்குப்போன வடிவேலு, வரதன்....."

யாரோ ஒருவர் முகத்தில் மூர்க்கத்தனமாக அறைந்துவிட்ட பெருந்தாக்கத்திற்கு உள்ளாக்கப்பட்ட விதானையார் ஏ.ஜி.ஏ. கந்தோர்க்காரருக்கு முன்பாக இப்படிக் கேட்ட தன் சுயகௌரவத்தை அதளபாதாளத்திற்குள் தள்ளிவிட்டதை நினைக்க நினைக்க நெஞ்சு பற்றி எரிந்தது. சே..... என்ன முட்டாள் தனமாக நடந்து எனக்கு நானே இழிவைத் தேடிக்கொண்டு விட்டேன்..... இந்தப் பஞ்சக்கூட்டத்தையெல்லாம்..... மனதில் எங்கோ ஒரு மூலையில்

பற்றிய பெருஞ்சினம் ஏனோதானோவென்று அப்படியே அடங்கிப்போக தன்னையிழந்த நிலையில் தலை கவிழ்ந்து கொண்டார்.

வன்னியில் வட்டக் கொட்டில்களாக இருந்த பலவிதானைமாரின் வீடுகள் பெரும் கல்வீடுகளாக மாற்றம் பெற்றது அகதிகளிற்கான நிவாரணம் கொடுக்கத் தொடங்கிய பின்னர்தான் என்பதையும் அதை வெட்டிக்குறைக்க தன்னைப் போன்றவர்களின் தவறான செயல்பாடுகள் தான் காரணமானதென்பதையும் இப்போது எண்ணிப்பார்க்கத் தவறவில்லை.

இந்தச் சனங்கள் சொன்னதெல்லாம்.....கந்தோர்க்காரரின் விழிகள் விதானையாரின் முகத்தில் எதையோ தேடப்புறப்பட்டபோது விதானையாரின் முகம் புவியளந்த மணப்பெண்ணின் நிலையில்..... சென்ற முறை மீளாய்வின் போது கிடைத்த பெட்டிசங்களெல்லாம் மொட்டைப் பெட்டிசம் என்று கிழிச்சுப்போட்டதெல்லாம் உண்மைதானே? அவர்களின் மனதில் எழுந்த கேள்விக்கு விடை விதானையாரின் நீண்ட மௌனம் சாட்சியானது.

புயலின் பின் தோன்றும் பேரமைதி.....இப்படியே இதைச்ச மாளிக்க வேணும் இல்லையெண்டால் ஏ. ஜி.ஏ. க்குமுன்னாலை விதானையாரோடு நாங்களும் தலைகுனிந்து.....

ஜி.எஸ். உங்களைக் காப்பாற்ற வேறு வழியில்லை சமாளித்துக் கொண்டு எல்லோருக்கும் நிவாரணத்தைக் குடுத்துத்துலைப்பம் என்று அவர்களில் ஒருவர் ஆங்கிலத்தில் சொல்லி முடித்தார்.

சே. என்ன.....விதானையாரின் மௌனம் சனங்களிடையே எதையோ தேடியது..... என்ற 35 வருட ஆட்சியிலை இப்படியொரு பிரச்சனையை சந்திக்கவேயில்லை முந்தியென்டால் ஒரு இடியன்சத்தத்தோடை இருத்தியெளுப்பியிருப்பன் என்ன செய்யிறது? அப்பிடியெல்லாம் இப்ப செய்யேலாமல் போச்சே. ஒரு ஆட்சிமாற்றத்தின் காலம்மாறித்தான் போச்சு..... அதற்கு மேல் விதானையாரால் எதுவும் பேசமுடியவில்லை. நீங்கள் சொன்னது

போல் எல்லோருக்கும் குடுத்துத்துலைப்பம் என்ற வாறு நிவாரணத்துண்டுகளில் ஒப்பமிடத் தொடங்கினார்.

இட்டதே சட்டம் என ஒரு சிற்றரசு போல இதுவரை இந்த வன்னியின் விதானைமாரது வல்லாதிக்க அரசுப்போக்கும் ஆட்டோட்டமும் எல்லாம் சரிந்து போனதென அங்கீகரிக்கப்பட்டது போல விதானையாரின் கையொப்பம் அவரைப்பார்த்து பலமாக சிரிப்பது போல இருந்தது.



அரங்கேற்றம்

ஒரு காலத்தில் யாழ்ப்பாணத் தியேட்டர்களில் எம்.ஜி.ஆர், சிவாஜியின் படங்களிற் கெனத் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தை இன்று வன்னியில் கண்டபோது நான் திகைத்துத்தான் போனேன். திகைப்பென்று சொல்வது ஏதோ வார்த்தையின் கனம் குறைவுபோலத்தான் தெரிந்தது. மக்கள் குடியிருப்புக்களை முத்த மிட்டுத் திருப்திப்பட்டுக் கொண்டிருந்த இலங்கை அரசின் படைகளின் எறிகணை விதைப்பின் மத்தியிலும், நாளாந்தம் நிகழ்ந்து விடும் சாவுகள், அங்கஇழப்பு அத்தனையையும் மீறி இத்தனை திரளாக மக்கள் கூடிநிற்பதை பேராச்சரியம் என்று சொன்னால் ஒரு வேளை சரிப்படுமோ?..... திகைப்போ? பேராச்சரியமோ? இத்தனை கலாரசிகர்களாக தமிழ் மக்கள் இருப்பது ஏதோ ஒருவகைத் திருப்தியை எனக்கு தந்ததை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

நுழைவுச் சீட்டுக்களை திட்டமிட்டே இன்னொரு இடத்தில் வைத்திருந்ததால் அங்கு நானும் சென்று நுழைவுச்சீட்டை பெற்றுவந்து இருக்கையில் அமர்வதில் முந்திக் கொள்வதற்காக முண்டியடித்து எப்படியோ நுழைவாயிலை கடந்து

உள்ளே சென்றபோது அப்பாடா... ஒரு பெருமூச்சை விட்டுவிட்டு மேடைக்கு மத்தியாகப் பார்த்து அமர்ந்து கொண்டேன்.

அது ஒரு பாடசாலையின் விளையாட்டு மைதானமாகையால் இத்தனை சனமும் மின்விசிறிகளின் துணையின்றி இதமான மருதத்தென்றல் வந்து எல்லா மனங்களையும் தழுவித் தழுவிச் சுகமளித்துக்கொண்டிருந்தது.

மேடையின் திரை விலகியது..... இரைச்சலாக எரிச்சலையூட்டிய சனச் சத்தம் அப்படியே பெட்டிப்பாம்பாக அடங்கிப் போனது.

"அவள் ஓர் அழகி! அவளைப்பற்றிய சிறுகுறிப்பை உங்கள் முன் வைப்பதும் கூட ஒரு அழகுதான். பொங்கிப்பிரவகிக்கும் பௌர்ணமி நிலவு முகம், நிலவிலும் கறை, அவள் முகத்திலும் குறை, முல்லையோ நாணும் பல்வரிசை, நெற்றியோ கூன் பிறை. மானைப் பளிக்கும் விழி! அதில் தான் பெருங் குறை ..... மேடைக் குரலாக..... ஒலித்தகுரல் செவிகளில் புகுந்து சிந்தையைக் குழப்பியடித்த போது புள்ளி மானொன்று நிலத்தில் கால்படாது சிலோ மூவிங்கில் தாவிவரும் திரைக்காட்சியாக ஒரே தாவலில் மேடையின் மத்தியில் தாவித்தலை தாழ்த்தினாள்."

"ஆடினாள்,..... நடனம்..... ஆடினாள்" தேனாக செவியில் குழைந்த அந்தப்பாடலுக்கு கண்ணிற்கு பெருவிருந்தாக அவள் நடனம் ஆடத்தொடங்கினாள்.

எடுத்த எடுப்பிலேயே எல்லோரது கரகோசங்களும் ஒரே நேரத்தில் எழுந்து வானை இடித்து அதிர்ந்தது. கரும்புலித்தாக்குதலில் கலங்கித்தவிக்கும் மண்ணும் பெருங்கடலும் போல் விண்முகில் தவித்தது.

ஒதுக்கப்பட்ட இடத்தை விட்டு ஓடி ஓடித்திரிந்த புகைப்படக் கலைஞர்களின் ஒளிவீச்சுக்கள் பளிச்... பளிச்... பளிச்சென்று மின்னியடித்தன. பார்வைக்கு தடைபோடுவதாக அவர்களின் நடமாட்டம் இருந்ததால் பார்வையாளரின் குமைச்சலும் வெறுப்பும் புகைந்து கொண்டது எங்களைப் பற்றி இவர்கள் நினைக்காமல் குரங்குப்பாய்ச்சல் பாய்ந்து திரியுறாங்களே, என்று என் மனமும் ஏங்கித் தவிக்கத் தான் செய்தது.

நாளைய பத்திரிகை முகப்பை அலங்கரிப்பதற்காக இவர்களின் இன்றைய விடை எரிச்சலாயிருந்தாலும் நாளைய பத்திரிகையில் பார்க்கும் போது இன்னொரு காட்சி கண்ணுள் திரைப்படமாய் ஓடும். மகிழ்ச்சியும் ..... இப்போதய எரிச்சலாலும் மனம் நிறைந்திருந்தது.

பாதத்தின் எடுப்பு, இடையின் ஒடிப்பு, சதங்கையின் கிண்கிணி ஓசை, எல்லாவற்றுக்கும் மேலாகத் தொங்கிய கருங்குழலின் குஞ்சம் சுழன்று, அங்கோ இங்கோ என்று மனதை பிரமிக்க அவள் ஆடிக்கொண்டிருக்கிறாள்.

தில்லானா, மோகனாம்பாள், பத்மினியைப் பார்த்துக் கொண்டவர்கள். கமலா குசலகுமாரியைப் பலகாலத்தின் முன் பார்த்து பரவசப்பட்வர்கள். புதிசுகளும், பழசுகளும் குனித்த புருவமும் ..... எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால் மனித்த பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தில் என்று நடராசப் பெருமானைத் தரிசித்துக் கொண்டிருந்த பக்தர்கள், பலதரப்பட்ட பார்வைகள் அந்த நடன நங்கை மீது பதிந்திருந்தன.

திரை ஒரு முறை மூடிக்கொண்டபோது மீண்டுமொருமுறை கரகோசம் வானை உதைத்துக்கொண்டிருந்தது.

ரசிகப் பெருமக்களே! சுந்தரத் தமிழின் கலைவண்ணங் கண்டு சிந்தை களிகொண்டீர்! சிந்தனைக்கும் சிறையிடாது கொடுங்கள் சுதந்திரம்! அது சொல்லும் தாரகமந்திரம்.

ஒலித்த குரல் எங்கும் நிறைந்த போது அமைதியின் சிறகுகளால் அரங்கு தழுவப்பட்டுக் கிடந்தது. மீண்டும் தொடர்ந்தது.

மந்திரத்தால் மாங்காய் விழுத்த வந்த மாயப்பெண்கள் இருவர். ஆட்சி மன்றேறினர்! விதிவசத்தாலல்ல! தந்திரத்தால்! மந்திரத்தால் மாங்காய் பறிக்க வந்தவர்கள் குந்தி இருந்துகொண்டு குடிப்பதற்கு மனிதரத்தம் வேண்டி நின்றார்! எடுபிடிகள் ஏலம் விட்டார்! கொலைக்கருவிகள் குவிந்தன! கொலையே எங்கள் கலையென்று ஆடிக் கொண்டிருக்கிறாள் ஒருத்தி! மற்றவள் ஒத்தூதிக்கொண்டு

ஒக்கலித்துக் கொண்டிருந்தாள். பக்கவாத்தியக்காறர்கள் பல்லவியிலிருந்து, பலிகொள் படலம் வரை சுருதி பிசகாது வாசித்துக் கொண்டிருந்தனர்.

மாங்கனிக்காய் காத்திருந்த மக்கள் கோரப்பலிகளைக் கண்டு விழிகளை மூடிக்கொண்டு குமுறி அழுதனர். தமிழ் மக்கள் இனவாரித்தெரிவாகி அழிக்கப்பட்டார். மறவீரம் பொங்கியது.! மண்ணையும் மக்களையும் காக்க கவசவாகனங்களாய், கந்தகப் பொதி சுமந்த சந்தனப் பேழைகளாய் நிமிர்ந்தன. அந்த சந்தன மலரில் ஒன்றுதான் இந்த சுந்தரி. ஆம் இந்த ஊழித்தாண்டவத்தை ஆடியவள் சுந்தரிதான். கொலையைக் கலையாக்கிய மாயக்காரியால் இவள் விழிகளைத்தான் பறிக்க முடிந்தது. விழியிழந்து போன இந்தச் சுந்தரியின் ஊழிநடனம் இதோ

குரல் நின்ற போது அந்த மாயக்காரியை ஒழிப்போம்! கைமுஸ்டிகளை உயர்த்தி ஆக்ரோசத்தைக் காட்டி ஆர்ப்பரித்தது மக்கள் கூட்டம் - என் விழிகள் குழமாகிக்குதித் தோடிய கண்ணீர்த் துளிகளைத் துடைக்காமல் நானும் கையை உயர்த்தினேன்.

தத்தடுக..... தடுதடக! தடதடக தாம்தீ! தித்திடுக திமிதிமிக தீம்தீ! தீம்தீ! சுந்தரி தாண்டவத்தை ஆடத் தொடங்கினாள்.

யாரிவள்? என்ற கேள்வி எல்லோர் மனங்களிலும் பூதவடிவாகி நனவோடையில் நீந்தத் தொடங்கின.

குருநகர்! யாழ்ப்பாணத்தின் நகர்பகுதிக்கிராமம் ஒன்று. சுப்பையா மாஸ்டரின் இருபெண்கள் மூத்தவள் சுதந்திரி! இளையவள் சுந்தரி. இளைய மகனுக்கு சுதந்திரன் என்று பெயர். ஓகோ என்று வாழ்ந்த தமிழாசிரியக்குடும்பம் அது.

சிங்களச் சீமையிலிருந்து பெரும் படையெடுப்பு யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த போது எல்லாமிழந்து வன்னியில் தஞ்சமடைந்தனர். ஆட்சியாளர்கள் அச்சுறுத்தி விரட்டிய போது வன்னி மரங்கள் குடையாய் விரிந்தது வீடாகிக் குடியிருக்கச் செய்தன. கொலுவோடு குடிகொண்டபோது சுதந்திரனால் அடிமைச் சீவியத்தை மேற்கொள்ள முடியவில்லை.

அப்பா! எனக்கு சுதந்திரன் என்று நீங்கள் பெயர் வைத்தது ஏன்? என்று கேட்டான். நின்று விடாமல் எங்கள் வீடு, எங்கள் காணி, எங்கள் தெரு, எங்குமே அந்நியப் படைகள் அட்டகாச புரியாகி அவலப்பட்டுக்கொண்டிருக்க விட்டு விடுவதா? நான் இந்த அடிமை வாழ்வை நீக்கி சுதந்திரனாகவே வாழப் போருக்குப் போகிறேன். சொன்னவன் சொன்னதுதான் அவன் தேசியப் போரில் தன்னை இணைத்துக் கொண்டு போய்விட்டான்.

தமிழ் கற்பித்த ஆசிரியரல்லவா? புறநானூற்று வரிகளில் மூழ்கி எழுந்தவர் பூரித்துப் போனார்!

போ என்று கூறிஅனுப்ப முடியாத அவரால் இப்போது மகனைத் தடுக்கமுடியவில்லை! சிந்தனையில் மூழ்கி செந்தமிழ் நூல்களில் நீந்தத் தொடங்கினார்.

தாய் மங்கையர்க்கரசியோ மகனே! மகனே! குலத்துக்கொரு விளக்கே, என்று குரல் வைத்தாள். குமுறினாள். எரிமலைக் குமுறலை தாய்மையின் மனக் குமுறலால் அடக்க முடியவில்லை.

ஆண்டு ஒன்று ஓடிக்கழிந்தது, மலேரியாக் கொடுமை முறைதவறாது வருத்திக் கொண்டே இருந்தது. நகர்ப்புறத்தில் மெத்தென வாழ்ந்த குடும்பத்துக்கு இத்தனை தொல்லைகளையும் தாங்கமுடியவில்லை. அவர்களுக்கு மட்டுமல்ல இத்தொல்லை வன்னிக்கு வந்த அனைவரையும் விட்டு வைக்காத தொல்லைதான்.

"யாழ்ப்பாணம் சனங்கள் போகுதுகள் இன்னொரு புறம் அங்கே மோசமில்லையென்று கடிதம் கடிதமாக வந்துகொண்டிருந்தது. பயசின் குடும்பம் மாவீரர் குடும்பம் தானே, தங்களுக்கொரு கஸ்டமும் அவங்களாலை இல்லையாம் "நீங்கள் பயப்படாமல் வாருங்கோ" என்று என்னோடை லேடீஸ்கொலிச்சில் படித்த லக்சி கடிதம் போட்டிருக்கிறாள் அப்பா" சுந்தரிதான் சொன்னாள்.

சுப்பையா மாஸ்டர் சொன்னார் "கரைச்சலிருக்காது பிள்ளைகள் ஆனால் சுதந்திரம்? குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டின கதைதான் இது"

பிள்ளயளைப் பாருங்கோ எல்லாம் குரங்காய் போச்சுது! இஞ்சை இந்தக் குளோரோகுயினோட வாழேலாது. மங்கையர்க்கரசி கெஞ்சினாள்.

மனைவியின் கெஞ்சல்! பிள்ளைகளின் வேண்டுதல்கள், சுப்பையா மாஸ்டரால் தடுக்கமுடியவில்லை.

நடக்கிறது நடக்கட்டும் போவம். முடிவுகள் உறுதியாகி யாழ்ப்பாண வாழ்வு மீண்டும் தொடர்ந்தது.

சுதந்தரியும், சுந்தரியும் லேடீஸ்கொலிச்சில் மீண்டும் இணைந்தனர். கல்வி தொடர்ந்தது. போக்குவரத்தில் தொல்லைகளும், தொடர்ந்தன. அங்கீகாரத்தொல்லைகள் அழகாக நடைபோட்டுக் கொண்டிருந்தது.

பாடசாலைத் திருப்பத்து தடைமுகாமில் சுதந்தரிக்கு தினம், தினம் "அழகான பொண்ணுதான் அதுக்கேற்ற கண்ணுதான்" என்று கொச்சை தமிழோசை பல நாட்களாக விழுந்து பல்லிளித்து மறித்துக் கதைக்கும் அளவுக்கு வந்து கல்யாணம் செய்வம் என்ன? நாளைக்கு பதில் எழுதிவரவேணும் என்று சொன்ன போது தான் சுதந்தரிக்கு வினை முற்றிப்போனநிலை புரிந்தது.

பாடசாலை செல்வதை சுதந்தரி ஒருவாரம் ஒத்திப் போட்டாள். பரீட்சை அநுமதிச் சீட்டுக்களுக்கு எல்லோரும் தவறாது செல்லவேண்டும். காலத்தின் தேவை சுதந்தரியையும் அழைத்தது.

பள்ளிக்கூடத்திலிருந்து அவள் திரும்பி வரும்போது அந்தச்சிப்பாய் சீருடையோடு டிறக்கால் அவளை அடித்துக்கொன்று விட்டான் இச்சைக்கு ஒத்து வராதவளை வாழவிடுவதா?

விசாரணையின் முடிவில் விபத்து மரணம் என்ற தீர்ப்பு உரத்து வழங்கப்பட்டு உலகும் அறியத்தரப்பட்டது.

சுப்பையர் வீட்டில் பிலாக்கண ஒலி அடங்கப் பல நாட்களாகின. இங்கிருந்து மீண்டும் செல்வதெப்படி? சுப்பையா மாஸ்டர் மனத்தைச் சல்லடைபோட்டுத் துழைத்துக்கொண்டே இருந்தார்.

ஒரு நாள் வன்னிக்குக் கடிதமெழுதிய லக்சி வீட்டிற்கு இரவு இரண்டு சீருடைக்காரர் சென்றனர்.

லக்சிக்குப்பதில் அவளது அம்மா அகப்பட்டுக்கொண்டாள். விறாந்தை முன்புறத்தில் வைத்தே சீருடைக்காறர் இருவரும் சேட்டை விட்டுச்சீரளித்து விட்டுச் சென்றுவிட்டனர்.

பயஸ் வீடும் இருண்டு போனது, பயஸ் கடல் தொழில் செய்தபடியால் துணிவு பிறந்தது. தப்பிச் செல்லலாம் என்று
பயஸ் சுப்பையா மாஸ்டரை சந்தித்தான்
முடிவுகள் உறுதியாக்கப்பட்டன.

இரவொன்றின் விடிபொழுதில் குருநகர் கடலால் மீண்டும் வன்னிக்கே வந்து அடிமைத் துயரத்தைக் துடைத்துக் கொண்டனர்.

பெண்களின் ஆட்சியில் பெண்தின்னிப் பூதங்கள் பட்டாளமான செய்திகள் பத்திரிகையில் தலைப்புச் செய்திகளாய் பவனி வந்தபோது வன்னியில் "ஜெயசுக்குறு" போர் பெருத்த ஆரவாரமாகத் தொடர்ந்தது.

வன்னியில் மக்கள் சிதறிச் சிதறிக் காடுகாடாய் விரட்டியது விமானமும் ஏறிகணையும்.

சுந்தரியும் லக்சியும் முடிவுகளைத் துரிதமாகவே எடுத்தனர். அந்நியன் கையால் அடிமையாகச் சாவதிலும் சுதந்திரப்போரில் சாவது மேல்,
முடிந்த முடிபு செயலில் இருவரையும் இணைத்துக் கொண்டது.

மாதங்கள் ஓடி, ஓடி ஓராண்டு எப்படியோ வந்துவிட்டது. மன்னகுளத்தில் மகத்தான அந்த நாள் வந்து கார்த்திகைப்பூவாய் மலர்ந்தது.

சுந்தரி ஒண்டும் தெரியாத நிலையில் பெண்கள் மெடிக்ஸ்சில் கட்டிலில் புரண்டு கிடந்தாள் உணர்வுகளற்று. சுப்பையா மாஸ்டரும் மனைவியும் மகளுக்கு அருகில் கலங்கிய விழியோடு காவலாய் நின்றனர்.

கண்களிலும் தலையிலும் சிகிச்சை செய்ததை தெரியப்படுத்திய குருதித் துளிகள் மௌன மொழிகள் பேசின. சுந்தரி மட்டும் இருபது பேரை சுட்டுத்தள்ளினேன் என்னும் சுட்டிருப்பேன்..... விமானக் குண்டு கிட்டவாய் வெடித்திட்டது..... திரும்பத் திரும்பச் சொல்லிப் புலம்பிக்கொண்டிருந்தாள். விழியை இழந்தநிலையில் அவள் வீரம் இழக்காத பெண்புலி.

மயக்க நிலையிலும் சுந்தரியின் உள் மனம் தன் போர்ப்பாதை யாத்திரையை மீட்டுக்கொண்டேயிருந்தது.

மங்கையர்க்கரசியின் தாய்மனம் தணலாய் வெந்து கிடந்தது. சுப்பையா மாஸ்டரின் மனமோ "அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்..... வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்று முன்டோ" என்ற பாரதி பாடலை மீட்டுக்கொண்டிருந்தது.

நடனத்தின் முன் சொன்ன நல்ல தமிழ் வரிகள், பௌர்ணமி நிலவிலும் கறை! இவள் முகத்திலும் குறை! மானைப் பழிக்கும் விழி! அதில்தான் பெருங்குறை என்று சொல்லித் தந்ததோ என்று என்மனம் எண்ணியது போல எல்லோரும் உணர்ந்திருக்க வேண்டும். இல்லையென்றால் நடன அரங்கேற்றம் முடிந்து நன்றியுரைக்கு முடிவுகாணும் வரை இந்தக்கூட்டம் இருந்திருக்குமா? என்ற நினைவோடு எழுந்து பார்த்த போது அத்தனை தமிழ் மக்கள் நெஞ்சத்திலும் ஜெயசுக்குறு ஏதோ ஒன்றை அரங்கேற்றிக் கொண்டிருப்பதை உறுதியாக உணர்த்துவதாக இருந்தது.

உணர்வுகள்

பிறகமறியாத மனிதர்கள், உறவினர் என்று ஒருவரும் அப்போது இல்லை. ஒரு டாக்டரும் அவருடைய நேர்சும் அந்த வாட்டின் அற்றெண்டரையும் தவிர வேறு எவருமே இல்லை. டாக்டரைச் சந்திக்கச்சென்ற அரவிந்தன் மட்டும் அங்கு நடப்பவற்றை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தான்.

உன் பேரென்ன?

அக்லன்.

அக்காவின் பெயரென்ன?

சேல்வி

தம்பிக்கு என்னபேர்?

துவாகன்...

அண்ணாவுக்கு என்ன பெயர்?

உகும்..... சொல்லமாட்டேன்.

என்று விட்டு ஓடுவதற்காக அவன் எழுந்தான். டாக்டர் அவன் கையைப் பிடித்து இருத்திவிட்டுத் தமிழ்தினசரிப் பேப்பர் ஒன்றைக் கொடுத்து வாசிக்கும்படி கேட்டுக்கொண்டார். ஒழுங்கான உச்சரிப்பு இல்லாமல் வாயில் வந்த ஓசைகளை எழுத்துக்கேற்றவாறு ஏதோ பெரும் பிரயத்தனப்பட்டு வாசித்துவிட்டுப் பலமாகச் சிரித்தான்.

10-12-1999 தமிழீழ வானொலி

தீட்சண்யம் மிக்க விழிகள். தேஜஸ் குடிகொண்ட முகம். மாநிறம். பார்ப்பதற்குக் குழந்தைபோலத் தோன்றும். அவன் முகத்தில் இனம்புரிந்து கொள்ளமுடியாத ஒரு பீதியின் பிரேமை குவிந்திருந்தது. "இந்தக் கட்டில்களில் இருக்கிற ஆக்களைப் பார்த்துக்கொண்டு பிறகு ஊசிபோட வா'' என்று டாக்டர் சொல்லி அவனை அனுப்பிவைத்தார்.

ஏதோ விடுதலை பெற்ற கைதி போலத் துள்ளிக்குதித்தவாறு அவன் ஓடிச்சென்று விடுதியின் கடைசிக்கட்டிலில் படுத்திருந்த ஒரு காலிழந்த இளைஞனுடன் ஏதோ சிரித்துப்பேசிக்கொள்வது தெரிந்தது.

எறிகணை வீச்சால் முழங்காலுக்குமேல் ஒருகாலை இழந்த ஒரு இளைஞன் அந்தக் கட்டிலில் கிடந்தான். இவனது முயல் பாய்ச்சலைக்கண்டு அவன் பலமாகச் சிரித்துவிட்டான். போனவேகத்தில் திரும்பிவந்து வெளிப்பக்கம் சென்று கொண்டான். அவன் சிரித்த சிரிப்பை இவனால் ஜீரணிக்கமுடியவில்லைப்போலும்.

எட்டாம் ஆண்டு மாணவன் அகிலன். அவனுக்கு இரண்டு தடவைகள் டபுள் புறமோசன் கிடைத்தது. என்றும் இந்தப் பன்னிரண்டு வயதிக்குள் பல பரிசுகளைப்பரிசாக்கிப் பள்ளிக்கூடத்தில் மட்டுமல்ல தன் அயலில் கூட விவேகி என்ற சிறப்புப் பெயரையும் தனதாக்கிக் கொண்டவன். ஆனால் இப்போது வாயுள்ள ஒரு ஊமையாகப் பேசப்பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கிறான்.

கால் இல்லாத அவருக்குச் சிரிக்கவும், கதைக்கவும் முடியாது. ஆனால் எனக்கு நாக்கு சுழல மறுத்துக் கொள்வதால் பேச்செல்லாம் கொன்னித்துக் கொன்னித்து அரைகுறையாக வருகிறது. பலருக்கு இது வேடிக்கையாக இருக்கலாம். ஆனால் விபத்தால் காலிழந்த இவருக்குகூட எனது விபத்தைப்புரிந்து கொள்ளாமல் என்ன சிரிப்பு வேண்டிக்கிடக்கிறது. பேசமுடியாவிட்டாலும் இப்படித்தான் அகிலனின் மனம் அந்தகாரப்பட்டுக் கொண்டிருந்தது.

எல்லோரும் சிரித்துக்கொள்ளும்போது அவன் அந்தச்சிரிப்பை மறந்து தனக்கு நேர்ந்துவிட்ட கொடுமையில்தான் மனதைச்

செலவிட்டுக்கொள்வான். தன்னைப் பார்த்துச்சிரிப்பவர்களை எல்லாம் தன் பலங்கொண்டவரை ஏதாவது செய்து தன் சினத்தைத் தீர்த்துக்கொள்ள அவன் துடிப்பான். மறுகணம் அந்த நினைவுகளே அவனைப்பார்த்துச் சிரிப்பதாக உணர்ந்து கொள்வான்.

நான் சின்னப்பெடியன் என்ற நினைப்பிலைதானே இப்பிடி எல்லாரும் சிரித்து மகிழுகினம். காலில்லாத அந்த அண்ணனுக்காகப் பரிதாபப்பட்டு பெரிய கருணை மகான்களாகக் கூடமாறிக் கருத்துச்சொல்லி விடுகிற இந்த மனிதருக்கு மட்டும் ஏன் இப்படி கேலியாகப் பார்க்கிறார்கள்.

மற்றவையின்ரை துன்பத்திலை இன்பங்காணுகின்ற சின்னத்தனங்களுக்கு இந்த காலத்திலை முற்று வைக்காதவை பிறகு எந்தக் காலத்திலை வைக்கப்போகினம்.?

அவர் சண்டைக்குப்போய்த்தானே காலிலை சூடு வாங்கிக் காலில்லாமல் கிடக்கிறார். எதிரியை முதலிலை சுட்டுத்தள்ளியிருந்தால் இந்தக்காயம் இவருக்கு வந்திருக்குமோ? கால் இப்பிடித்தறித்துத் துண்டாக்கத்தான் வந்திருக்குமோ? பகிடிக்குக் கூட நான் இதைச் சொல்லவிரும்பல்லே, ஏனென்றால் எங்கடை நாட்டுக்கான போரிலை தானே கால்போனதெண்ட மனஆறுதல், ஒரு பெருமையும் கூட. ஆனால் ஆனால்..... எனக்கு..... நானென்ன பிறவி ஊமையே!

எல்லாருக்கும் நான் ஒரு பகிடிக்காரனாகிப் போனன்..... ம்.... ம்..... தன்னை மறந்து விக்கி விக்கி அழுதவாறு வெளியே இருந்த அந்த வாங்கில் அகிலன் உறங்கித்தான் போனான். விழிகளிலிருந்து வழிந்தோடிய கண்ணீர்நதிகள் கால்வாய் பதித்த மாதிரி அவன் கன்னத்தில் கோடிட்டுக்காய்ந்து போயிருந்தது.

அரவிந்தன் தான் வந்த விசயத்தை மறந்து அவனைப்பற்றிய தகவல்களில் கவனஞ்செலுத்திக் கொண்டிருந்தான். அரவிந்தனின் உள்ளத்தைப் புரிந்து கொண்டவர்போல அந்த டாக்டரும் அந்த குடும்பத்தின் துயர வரலாற்றையே சொல்லிக்கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணத்தின் பிரபல்யமான ஆசிரியர்களில் கதிரேசனும் ஒருவர். ஆசிரிய வாழ்க்கையில் அவர் தேடியதெல்லாம் தனக்கென்று

ஒரு மாணவர் கூட்டமும், சிறந்த ஆசிரியர் என்று பெயரும் தான். அதை விட்டுவிட்டால் அழகான மனைவியும், அறிவார்ந்த திறன் மிகுந்த பிள்ளைகள் நால்வர். இதைத்தவிர அவருக்கென்று சொத்துக்கள், சுகங்கள் ஏதுமே இல்லை.

வலிகாமத்தையும், வடமராட்சியையும் விட்டுவிட்டு உயிரைக்காப்பாற்ற தென்மராட்சிப் பகுதிக்கு மக்கள் வந்து குவிந்தபோது கதிரேசனும் தன் குடும்பத்தோடு வந்து சேர்ந்தார். கலிங்கத்துப்பரணியையும், சங்க இலக்கியங்களையும், அவர் கற்பிற்கும் போது சமகாலப்போரையும் இணைத்தே விளக்கவுரைகள் செய்து எழுச்சியூட்டுவார். மத்திய ஐரோப்பாவிலிருந்து மந்தை மேய்த்துக்கொண்டு பருவகாலத்திற்கொப்ப இடம் மாறித்திரிந்த ஆரியர்கள் சிந்துவெளியிலிருந்து போராடிப் போராடிக் கைபர் கணவாய்க்கூடாக வந்து திராவிடர் தம்மையும் அவர்தம் வாழ்க்கையைச் சிதைத்து சின்னாபின்னப்பட்டுப் போகக்காரணமானது வரையும் வரலாறு பிசகாது அவர் கற்பிப்பதில் அவருக்கு நிகராக யாருமில்லை என்ற பேர் வாங்கியவர். இவரிடம் கற்றபலர் போராளிகளாக மாறியதுபோல இவரது மூத்தமகன் பூரணனும் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டான். பூரணைப்பற்றிய அவர் கனவுகள் எல்லாம் சிதைந்து போன ஓவியமாகிப்போனபோது அவர் துடித்துத்தான் போனார். என்றாலும் போராட ஒரு சிலர்தான் என்ற நிலையிலிருந்து தன் சிந்தனையை மாற்றிக்கொண்டு மகனின் செயலை மதித்துச் சிலாகித்துக்கொண்டிருந்தார்.

தேசமும் வேண்டும். சுதந்திரமும் வேண்டும். ஆனால் போராடத் தமது பிள்ளைகள் போய்விடக்கூடாது என்று நினைத்துக்கடன்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பிய பலரை கதிரேசன் அறிந்திருந்தார். கணநாதன் என்ற ஆசிரியர் ஒருவர் போராளிகளைப் பற்றி புகழ்வதிலும் உதவிகள் செய்வதிலும் முன்னணியில் நிற்பார். தனது பிள்ளைகளை மட்டும் கண்டிப்போடு எந்த நிகழ்விலும் கலந்து கொள்ளவோ பார்ப்பதற்குக்கூட அனுமதிக்காது வாழ்ந்து கொண்டிருந்தார். போராட எல்லாரும் போய்விட்டால் நிர்வாக விடயங்களைக் கவனிப்பதற்கு ஆட்கள் வேண்டுமே! அதற்கு நல்ல கல்வியறிவைப் பெற்ற மாணவர்கள் தேவைதானே. படிக்கக்கூடிய திறமைசாலிகளை யெல்லாம் போராடவிட்டுவிட்டால் நிர்வாக விடயங்களுக்காக நாம் வேறு யாரிடமாவது கை ஏந்துவதா? பாட்டாளி

மக்களும் ஏழை, தொழிலாளி என்று கல்வியைத்தொடர முடியாத சனங்கள் நிறைய இருப்பதால் அவர்களைப் போராட்டத்தில் இணைத்துக்கொண்டு போராடுங்கோ தம்பி என்று சில போராளிகளோடு நேரிலும் இப்படிப் பேசித்தன் பொய்முகத்தை வெளிக்காட்டிக் கொண்டவர் கணநாதன்.

வட்டிக்கார வடிவேலுக்கு ஆறுபேரும் ஆண்கள். எல்லாம் பணத்தின் மிடுக்காலோ என்னவோ அரைகுறைப்படிப்போடு ஊர்சுற்றி திரிந்தவர்கள். விதம் விதமான மோட்டார் சைக்கிள்கள், உடுப்பு, நடப்பு என்று பெரும்படாடோபமாக எல்லாப் பிள்ளைகளையும் தன் இஷ்டப்படியே விட்டுவிட்டுப் பெருமையடித்துக் கொண்டிருப்பவர். யார் யாரையோ பிடித்து தனது பிள்ளைகள் ஒருவரைக்கூட இஞ்சைவிடாமல் கனடாவுக்கும் சுவிசுக்கும் அனுப்பிப்போட்டு "அப்பாடா" என்று நிம்மதிப் பெருமூச்சை விட்டுவிட்டு வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருப்பவர். மக்கள் வெளிநாட்டுக்குப் போகுமுன் பேராளிகளின் முகாம்களுக்கு சாப்பாட்டுப் பார்சல், முட்டைமா, என்று செய்து கொடுத்து தன்பெயரை பலருக்கு விளம்பரப்படுத்திக் கொண்டு திரிந்தவர். பிள்ளைகள் எல்லாம் வெளிநாடுகளுக்குப் போனதோடை எல்லாவற்றையும் துறந்துவிட்டு..... இவங்கடை சண்டை எப்பதான் முடியப்போகுதோ? சும்மா இடம் பெயர்ந்து இடம் பெயர்ந்து அநியாயமாகச் செலவழித்துத்துலைய வேண்டிக்கிடக்குது என்று அங்கலாய்த்துக் கொண்டிருப்பவர்.

இப்படிப்பல முகத்தோடு எங்கடையாக்கள் தான் தப்பத்தான் தப்ப எண்டு இருந்து கொண்டிருக்கிறதாலைதான் போரின் காலமும் நீளுது. முடிவும் எட்டிக் கொண்டே போகுது. இதையுணர்ந்தவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் தானே யாழ்ப்பாணத்திற்குள் மூன்று இடப்பெயர்வோடை இப்ப வன்னிக்குவந்து வன்னியிலும் எத்தனை இடப்பெயர்வாய்ப்போச்சு.

டாக்டர் அரவிந்தன் வந்த விடயத்தை விசாரிக்காமலே தன் மனக்குறையை வெளிப்படுத்திக் கொண்டு கதிரேசன் மாஸ்டரின் கதையை மீட்டுக்கொள்ளத் தொடங்கிவிட்டார்.

அரவிந்தனால் தட்டிக்கழித்து விடமுடியாத தர்மசங்கடமான நிலையில் தான் வந்த விடயத்தையும் மறந்து

கேட்டுக்கொண்டேயிருந்தான். திக்குவாயாகப் பேசிய அகிலனின் பேச்சும், அவன் விட்ட கண்ணீரும் கூட அரவிந்தனின் கதை கேட்கும் ஆவலைத்தூண்டியிருக்கவேண்டும். அவன் நெஞ்சில் ஈரத்தை மேலும் கசிய வைத்தது.

அகிலன் பாவம் டாக்டர். அவனைப்பார்த்து இந்தச்சனங்கள் சிரிக்கும்போது அவன் ஏதோ ஒரு தன்மானக் குறைவை உணர்ந்து கொண்டு பெருந்துயரத்தை தாங்கமுடியாத தவிப்பை அடைவதாகப்படுகிறது என்று அரவிந்தன் சொன்னான்.

மூன்று பிள்ளைகளை தேசவிடுதலைக்கு ஆகுதி ஆக்கி விட்டவர்தான் கதிரேசன் மாஸ்டர். மூன்றவாது பெடியன் மாவீரனாகி அவன் உடல் வந்த கோலம்.. அந்தப் பேழையை யாருமே திறக்கக்கூடாது என்று சொல்லியிருந்தபோது இவன் தான் அகிலன் அண்ணனை கடைசி முறையாகப் பார்க்க விடுங்கோ என்று அடம்பிடித்துக்கதறிக்கடைசியில் யாருமே எதிர்பாராத வேளை அவன் அந்தப்பேழையைத் திறந்துவிட்டான்.

சதைத்துண்டுகளாகவும், காலும் கையும், முகமில்லாத முண்டமும்..... ஓ..... அந்தக்கோரமான காட்சியைக் கண்டதும் ஆ..... ஐயோ என்றவார்த்தைகளைத் தவிர அகிலனின் வாயிலிருந்து வேறு எதுவுமே வரவில்லை. அவன் பேசிய கடைசி வார்த்தைகள் அவை. அப்படியே சிலையாகி வீழ்ந்தான். கண்களிலிருந்து தாரைதாரையாகக் கண்ணீர் பெருகிக் கொண்டேயிருந்தது.

இங்கு அகிலன் வந்து ஒரு மாதம் எப்படியோ ஓடிக்கொண்டது. இப்போது மெல்ல மெல்ல அவன் பேசும் சக்தியைப் பெற்றுக்கொண்டிருக்கிறான். ஆனால் கதிரேசு மாஸ்டர் என்ன சொன்னார் தெரியுமா? என்று ஒரு கேள்வியைக் கேட்டுவிட்ட டாக்டர் அரவிந்தனின் முகத்தையே பார்த்துக்கொண்டு நின்றார்.

போராட்டத்தை வெறுத்துப் பிள்ளைகளை வெளியே அனுப்பிக்கொண்டிருக்கும் முகங்கள் ஒருவகை, உதவி செய்வது போல நடித்து தமது காரியத்தை சாதித்துக் கொள்ளும்

நடிப்புச்சுதேசிகளின் முகம் ஒருபுறம், இந்தப்போரை எப்படியும் வென்றுவிட வேண்டுமென்று துடிக்கும் முகங்கள் ஒருபுறம். இப்படி எத்தனை முகங்கள் இந்த மண்ணில் தலைகாட்டிக் கொண்டிருக கதிரேசன் மாஸ்ரர் போன்றவர்களின் முகங்களும் உணர்வுகளும்.....சே.....

"சிங்கள அரசின் பலிமுகம் அடக்கப்படும்வரை நிற்காத இந்தப் போருக்கு அகிலனும் போக முடிவெடுத்தால் நான் மறுக்கப்போவதில்லை. ஏனென்றால் வாழ்ந்தால் சுதந்திர மனிதனாக வாழவேண்டும். இல்லையென்றால் அடிமை வாழ்விலும் அதை எதிர்த்து சுதந்திரத்திற்காகப் போராடிச்சாவதே மேலானது" என்று அவர் சொன்ன சொல் இப்படி எத்தனை மனிதர்கள்? என்று எண்ணத் தோன்றவில்லையா? அரவிந்தன் என்றார். அரவிந்தனால் என்ன பேசுவதென்றே தோன்றவில்லை. இப்படியும் மனிதர்களா? என்று சொல்லிவிட்டு டாக்டரைப் பார்த்தான் அரவிந்தன்.



மானுடம் சாகவில்லை

பகல் பொழுது சரிந்துவிட்டது. இன்னும் நான்குமைல்கள் ஓடிஆக வேணும். நீராவி இயந்திரகாலத்து கோச் வண்டிபோலக் கடகடா சத்தத்துடன் அந்த இரவல் மிதிவண்டியை மெள்ள மெள்ள உதைந்து கொண்டிருந்தான் அரவிந்தன். நெற்றியில் குமிழ்விட்ட வியர்வைத் துளிகளை சுட்டுவிரலால் வழித்து விட்டு அப்பாடா..... இன்னும் இருபது நிமிடங்களாவது ஓடியாகவேணுமே.... என்று நினைத்தபோது அவனுக்கு நெஞ்செல்லாம் அடைத்துக் கொண்டது, என்ன செய்வது? விதியென்று சொல்லி முற்றுவைப்பதா? அல்லது..... எதும் தோன்றாத சூனிய வெளியாகி இறுகிய நெஞ்சம் மேலும் கனத்தது.

சொட்டுச்சொட்டாக வீழ்ந்த ஒவ்வொரு வியர்வைத்துளியும் ஓராயிரம் கதைக்கு காரணமாக நிற்பது அவன் அறியாததல்ல. என்றாலும் என்ன செய்வது? மானிடராதல் அரிதினும் அரிதென்று ஔவைக்கிழவி பாடி பலநூறு வருடங்கள் மறைந்துவிட்டன. ஆனால் நாங்கள்..... நாங்களும் மனிதர்கள் தான். அதிலும் தமிழர்கள்,

27-08-1999
புலிகளின் குரல்

தமிழர்களாகப்பிறந்தது இந்தத் தேசத்தின் குற்றம். எங்கள் மொழி, எமது பிரதேசம் எமது கலாச்சாரம் என்று பேசுவது அடுத்த குற்றம் எம்மீது திணிக்கப்படும் மேலாதிக்க அரசை எதிர்த்தது..... எல்லாமே குற்றம் தான். நாம் இவைகள் பற்றிப் பேசுவதும், நாடுவதும் தேடுவதுங்கூடக் குற்றமென்றால் எம்மையும் எமது தேடல்களையும் மறுப்பது மட்டும் குற்றமில்லையா? இந்த நீதி விசாரணையை நடாத்துவது யார்?

அரவிந்தனின் மனதில் சிந்தனை சிறகடித்துப்பறந்தது. நேரம் ஓடிக்கொண்டிருந்தாலும் காட்டு வெயில் மட்டும் இன்னும் குறையாது தகித்துக் கொண்டேயிருந்தது. தெருவின் இரண்டு பக்கங்களும் ஆங்காங்கே பல குடிசைகளாக மாறி இருந்தன. புல்லால் வேயப்பட்டவை, கிடுகால் வேயப்பட்டவை. மெழுகு சீலைகள் கட்டப்பட்டவை என்று சிலவும், வெறும் குழைகளால் மறைக்கப்பட்ட கூரைகள் சிலவும்... இன்னும் ஒன்றையும் காணாமல் வெறும் தடிகளோடு கிடந்த குடிசைகளையும் மரநிழல்களில் சுருண்டுகிடந்த மக்களையும் காணக்காண அரவிந்தனின் மனம் தேம்பி அழுதது.

தென் கிழக்காசியா முழுவதையும் ஆண்ட ஒரு இனம்.... நாதியற்று நடைப்பிணங்களாக..... துயரத்தின் வடுக்களையே அரிதாரமாக்கிக் கொண்ட முகத்தோடு..... ஐயோ..... தமிழா! வாய்விட்டுத்தன்னை மறந்து கதறிவிட்டான் அரவிந்தன்.

ஓ..... பாவம்..... யாரோ பைத்தியம் ..... இப்படிச்சிலர் அவனைப்பார்த்துச் சொன்ன வார்த்தைகள் நாராசமாகச் செவிவழிப்புகுந்து சிந்தையில் தைத்தது.

என்னைப் பார்த்து பைத்தியமெண்ட இவன்களுக்கு என்ன புரியுது? நான் பைத்தியம்... இவன்கள்..... வெறும் விசரன்கள்..... ஒவ்வொரு தமிழனும் இந்த நாட்டில் விசரன்களென்றுதான் ஆட்சியாளர்கள் எண்ணுகிறார்கள். சொல்கிறார்கள்.

ஒரு காலத்தில் தேரில் தமிழனை இருத்தி குதிரைகளுக்குப் பதில் தாங்களே குதிரைகளாக நின்று அந்தத்தேரை இழுத்தவர்கள் இந்தச்சிங்களவர் தான். ஆனால் இன்று தமிழன் என்றால் போதும்.... வெட்டிச்சரித்துவிட்டுத்தான் வேறு வேலை பார்க்க நினைக்கிறார்கள்.

சம்புமால்குமரனைத் தேசியவீரனென்று முத்திரை வெளியிட்ட இவர்களுக்கு தமிழன் தனது தாயக பூமிக்காகப் போராடுவது மட்டும் பயங்கரவாதமாக ஏன் தெரிய வேண்டும்? அச்சத்தின் தாக்கமா? அல்லது தாங்கள் குயில் வழிமுறையில் வந்து இடம்கொண்ட வரலாற்றுத்தாக்கமா?

காக்கைக்குத்தானே கூடு சொந்தம். கூடில்லாத குயில் வந்து காக்கையின் கூட்டில் முட்டைஇட்டுக் குஞ்சு பொரித்ததை மறந்து காக்கைகளையே கூட்டைவிட்டு விரட்டிவிட நினைத்து அந்நியக்கழுகுகளின் உதவிகளைப் பெற்று காக்கைகளை விரட்டியடிப்பதற்கு நினைத்தால் காக்கைகள் என்ன சும்மாவா இருக்கும்?..... எப்போதுமே உணர்ந்துவிட்ட தமிழர்களைப் பார்த்து இப்படித்தான் சொல்வான் அடிமைச்சகவாசத்தில் ஊறிப்போன மனங்களல்லவா.....?

மோப்..... மொப மொப. மொப் விரைந்து வந்த அந்த பேரூந்து ஓசையோடு சுயமானான் அரவிந்தன்.

அந்தப் பேரூந்து நிறையப் போராளிகள்
எங்கையோ அடிபாடு நடக்குதாக்கும்

சே! மாங்குளத்துக்கு வந்திட்டான். வீட்டு நினைவுகள் குமிழிவிட்டன.

மனுசி ஏதாய்ச்சும் கொண்டுவருவனெண்டு வழி பார்த்திருப்பாள். பிள்ளைகள் கடைச்சாப்பாடு ஏதாய்ச்சும் அப்பா கொண்டு வருவாரெண்டு நினைத்து அங்கலாய்த்து ஓடிவரப்போகுதுகள்..... யாருக்கு என்ன பதில்.....? மிதிவண்டி திருப்பத்தில் திரும்பியபோது அவன் எண்ணியவாறு மனைவி லாவண்யா வழிபார்த்து நின்றாள். அவள் எத்தனை எண்ணங்களைச் சுமந்து நின்றிருப்பாள்.....?

அப்பா வாறார்..... அப்பா வாறார்..... ஒன்றன்பின் ஒன்றாக ஆவல் மீறிய மகிழ்வோடு ஓடிவந்தன குழந்தைகள்.

கணநேர சிந்தனை வெட்டு, கணணிப்பொறியாக அவன் மனம் செயற்பட்டது.

எல்லோரையும் ஏமாற்றிவிடாதே ஒரு இளஞ்சிரிப்போடு ..... வண்டியை விட்டு இறங்கினான் அரவிந்தன்.

காற்சட்டைப்பைக்குள் அவன் கை குதித்தபோது மனைவி லாவண்யாவின் விழிகள் அவனது சேட்டுப்பொக்கற்றில் நிலைகுத்தி மீண்டது.

போகும்போது வழிச்செலவுக்கென்று கொண்டு போன காசில் வாங்கிய தின்பண்டம் அது என்பதைப் பிள்ளைகள் அறியவில்லை என்றாலும் மனைவி லாவண்யா அறிய அதிகநேரம் எடுக்கவில்லை.

"சரிசரி விடுங்கோ அப்பா களைச்சுப் போனார். சாப்பிடட்டும்"

கையில் இருந்து தட்டிப்பறித்த மலிபன் பிஸ்கட்டோடு பிள்ளைகள் மறைய அவன் அந்த வீட்டில் தங்கள் பகுதிக்குள் சென்று அமர்ந்தான்.

அப்பாடா..... ஒரு நெடுமூச்சு.....
என்ன உங்கடை முதலாளி என்னவாம்.....

அதையேன் பேசுவான். "நான் சோறு கேட்டேன். அந்தாள் வயல் விதைக்கேல்லை எண்டது" ஏதாய்ச்சும் மாறிச்சாறி உதவுவாரெண்டு நிலைமையைச் சொன்னன். "தொழில்பட்டுப் போச்சு! வங்குரோத்து நிலை ஏதோ தேத்தண்ணியாவது தர முடிந்தது, என்று சொல்லி தேநீரோடு கையை விரிச்சிட்டான் பாவி"

முற்றத்தில் புத்தம்புதிய யமவறா மோட்டார் சைக்கிள் ஒன்று மினுமினுத்துக் கொண்டு நின்றதையும், அப்பால் ஒரு செற்றில் போர்த்து மூடிய மொறிஸ் ஓக்ஸ் போட் காரையும் தான் பார்த்ததை இப்ப சொன்னால்..... மனுசி நாலுவார்த்தைகளைச் செலவாக்கி விடுவாளென்ற நினைப்பில் ஒண்டும் பேசாமல் அம்மாப்பச்சை அரிசிச் சோற்றை கவனமாக்கி வயிற்றுக்கு வேலையைக் கொடுத்தான். முன்னர் ஒரு போதும் பச்சையரிசிச்சோற்றை அவன் பார்த்தே அறியாதவன் ஆனால் இன்று?

கிளாலிக்கரையிலே வந்து சேர்ந்தபோது இப்படியெல்லாம் நடக்குமெண்டு கற்பனைகூடச் செய்யாத லாவண்யா, "பாவியார் போற இடம் பள்ளமும் திட்டியு மெண்டு சும்மாவா சொன்னாங்கள்"

எங்களைப் பாவிபரதேசியாய்ப் போக வைக்கத் தானே இந்தச் சூழ்நிலையிலும் எங்கடை காசைக் கொள்ளையடிச்சவங்கள், பறப்பாங்கள் நல்லா இருக்கட்டும். சரிசரி.... நீங்கள் சாப்பிட்டிட்டுப்படுங்கோ. நாளைக்கு புதுவிளாங்குளம் போய் வாருங்கோ..... எப்பிடியும் இந்தச் சந்தர்ப்பத்திலை கயல்விழி எங்களுக்கு உதவிசெய்வாள். மனுசி தனது தீர்ப்பை வாசித்து விட்டு அமைதியானாள்.

" புதுவிளாங்குளம்"

அந்த இடம் எங்கை இருக்கு. எப்படிப்போவது? வழிகாட்ட யார்? வன்னி என்றால் முன்பின் எதுவுமே தெரியாத இடத்தில் என்னதான் செய்வது? என்று ஏதேதோ நினைவுகளோடு சோர்ந்துபடுத்துக்கொண்டான் அரவிந்தன்.

கனகசாசன்குளம் நீதிமன்றத்தில் நண்பன் ஒருவன் வேலை செய்வது நினைவில் வந்தது. அவனும் யாழ்ப்பாணத்திலிருந்து வந்தவன் தான் இடம் தெரியாது விட்டாலும் உதவுவான் என்ற எண்ணத்தைச்சுமந்தவாறு மாங்குளத்தில் பஸ் ஏறி கனகராசன் குளத்தில் இறங்கினான் அரவிந்தன்.

சைக்கிளைக் கொடுத்த நண்பன் சொன்னான், "எனக்கு இன்னும் வன்னி சரியாகத் தெரியாது. சந்தியில் ஒரு கச்சான் விக்கிற கிழவி இருக்குது. அந்த மனுசியிடம் கேட்டால் எல்லாம் அறிலாம்".

அம்மா, "புதுவிளாங்குளம் போற வழி எது?"

"ஐயா யாழ்ப்பாணத்திலை இருந்து இடம்பெயர்ந்து வந்தீங்களா? என்ற பீடிகையுடன் ஆரம்பித்து, "இப்பிடியே கொஞ்சத்தூரம் போனால் மேற்குப்பக்கமாக ஒரு பாதை வரும். காட்டுப்பாதை தான். அந்தக்காட்டுப்பாதை வழியே ஓரிடமும் திரும்பாமல் நேரே போனால் புதுவிளாங்குளம், சிவன்கோவிலடிக்குப் போகலாம்" என்று முடித்தாள்.

"காட்டுவழியென்றால் யானை வராதேயம்மா"

ம்... ஒண்டும் வராது. நீங்கள் பகல் வேளைக்குப் பயப்படத்தேவையில்லை. இருட்டினால் தான் பயம்.

பாதை அறிமுகத்தோடு அந்தக்காட்டுவழியில் எனது சைக்கிள் தன் எண்ணப்படி விரைந்து கொண்டிருந்தது.

மனித நடமாட்டமேயற்ற அந்தக்காட்டுவழியில் மனம் எதை எல்லாமோ மீட்டிக்கொண்டிருந்தது.

யாழ்ப்பாணத்தை விட்டுவந்து பரந்தனில் இருந்தபோது "பரந்தன் அடிக்கடி எறிகணை வாற இடம்.. திடீரென்று இராணுவம் முன்னேறத்தருணம் பார்த்துக் கொண்டிருப்பதால் நீங்கள் மாங்குளப்பக்கம் போதுவதுதான் நல்லது. இங்கிருந்து கெதியாகப் போகப்பாருங்கோ என்று கூறிவிட்டுப்போன போராளி நண்பரின் சொல்லோடு மாங்குளம் வந்து குடியிருப்பொன்றிற்கு பொறுப்பான கிறிஸ்தவத்துறவி யொருவருடன் கதைத்து இடத்தை முடிவாக்கிக் கொண்டுதான் பரந்தனைவிட்டுவிட்டு மாங்குளம் வந்துசேர்ந்தான் அரவிந்தன்.

மாங்குளம் வந்த மூன்று நாட்களுக்குள் அவன் மனிதமுகங்களில் பொய் முகங்களைத்தான் தரிசிக்க முடிந்தது. வேடதாரிகள் பலர் சமூக அந்தஸ்திற்காகப் பொய்மையை ஆடையாக்கி புனிதசீலர் வேடத்துள் நடமாடும் கொடுமையை கண்டான்.

"வருத்தப்பாட்டுப்பாரஞ் சுமக்கின்றவர்களே என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று கூறிய யேசுவின் சீடன், நாங்கள் இருபது பேர் ஒன்றாக வந்தது கண்டு ஏதோ நினைத்திருக்கவேண்டும். கிணற்றடி நாறுமே!.

இவ்வளவு பேருக்கும் இடங்கொடுத்தால் கிணறு போதாது. இவர்களை வெளியேறச் சொல் என்று சொல்லி வைத்தார். இந்த வன்னியில் இடமா இல்லை வேறு எங்காவது போய்விடுங்கள். என்று திருவாய் மலர்ந்துவிட்டார். ஏன் இப்படி என்னை விரட்ட வேண்டும்.? தேசத்தின் விடிவிற்காகப் போராடும் சிலர் அரவிந்தனோடு தொடர்பு கொண்டிருப்பதும் அடிக்கடி அங்குவந்து போக நேரும் என்பதை எப்படியோ அவர் அறிந்ததால் வந்தவினைதான் இதுவோ?

அப்படியானால் இந்த தேசவிடுதலையில் இவர்கள் நடிப்புச்சுதேசிகளாகத்தான் வாழ்கிறார்களா? கூட்டத்தில் கூடிநின்று கூவிப்பிதற்றலன்றி நாட்டத்திற்கொள்ளாத இந்த நயவஞ்சகப் பிசாசுகளை எண்ணி எண்ணி அரவிந்தனின் மனம் ஏரிந்துகொண்டிருந்தது.

சமூகத்தின் உயர் பீடத்திலே வாதர்! பாசத்தின் பிணைப்பிலே அக்கா... இரண்டிற்கும் நடுவில்..... எண்பத்தேழிலும் இப்படித்தானே இந்தியப்படைகளின் கெடுபிடி உச்சக்கட்டமாக.....

அரவிந்தன் வீட்டில்தான் அக்காவின் பிள்ளைகள். நண்பன் ஒருவனின் பிள்ளைகள்..... பதினைந்து பேருக்கும் மேல்.... கொம்படியால் அரிசி வந்தால்தான் சாப்பாடு இல்லாவிட்டால் மரவள்ளிக்கிழங்கு தான். இந்த நிலையில் படைச்சவன் படியளப்பான் என்று பார்த்திருந்தால் பசிதீர்க்கப்பட்டா விடும்....?

பம்பரமாக அவன் சுழன்று எல்லோர்க்கும் எல்லாமுமென்று கொடுத்து மகிழ்ந்து.... "சுற்றத்திற்கழகு சூழ இருத்தலென்று" பேசிமகிழ்ந்த நாட்கள்..... திரைப்படமாக அவன் மனக்கண்ணில் விரைந்து கொள்ள சைக்கிள் வந்து புதுவிளாங்குளம் சிவன் கோவிலில் நிற்கவும் சரியாக இருந்தது.

பூசை முடித்த ஐயர் பிரசாதம் கொடுத்துக்கொண்டிருந்தார். ஐயா வைத்திலிங்கத்தின் வீட்டிற்கு போக வேணும்.

அவனை அவர் புரிந்து கொண்ட பாவனையில் வழியைக்காட்டுகின்றார். நன்றி கூறிவிட்டு தேடிய வீட்டுமுற்றத்தில் அரவிந்தன் நின்றான். கயல்வழி! சத்தம் ஒன்றையுமே காணவில்லை. கயல்விழி! கயல்விழி! ..... மீண்டும் மீண்டும் அவன் அழைத்தான். உள்ளிருந்து ஒரு குரல்.....

அண்ணையே! வாங்க வாங்க! எப்படி வந்து சேர்ந்தியள்! ஆச்சரியப்பட்டுக் கொண்டாள் தங்கை கயல்விழி.

ஐந்து வருடங்களின் பின் என்குரலை மட்டுமே கேட்டு இனங்கண்டு வரவேற்றாள். உள்ளமெல்லாம் புல்லரித்தது. உடல்

சிலிர்த்தது. உறவு சொல்வதிலும் நட்பால் வந்த உறவுத்தங்கையென்றால் அதுதான் அவளுக்குப் பெருமை. ஏன் அவள் இரத்தத்தால் ஒன்றானவளல்ல. தூரத்து உறவுதான்.

இரத்தத்தின் இரத்தங்களே தூக்கி எறிந்துவிட்டபோது இவள்? உபசரித்தாள். உண்டேன். காட்டுவழிப்பிரயாணக்கழைதீர உறங்க வேண்டும் போன்ற ஒரு நிம்மதி! யாழ்ப்பாணத்தில் விட்டுவிட்டுவந்த நிம்மதியில் பாதியை பெற்றுவிட்ட நிலை. அவளால் வன்னியில் கிடைத்த பெரும் நிம்மதி.

வெறும் அன்பொன்றைத்தவிர வேறு எதையுமே பெறாத ஒருத்தி, "அண்ணியாக்கள் பிள்ளைகள் எல்லாம் எங்கையண்ணை எல்லாரையும் விட்டுட்டு நீங்கள் மட்டும் தனியனாக.....அவள் வார்த்தைகளை முடிக்கவில்லை.! ஆம் நான் தனிமையாக மட்டுமல்ல தனிமரமாக்கப்பட்டுப் போனேன். ..... அரவிந்தன் இந்த வார்த்தைகளைச் சொன்னபோது நாத்தழுதழுத்தது. நெஞ்சம் சத்தமின்றிக் கதறியழுதது. சோகம் தொண்டையைக்கட்டிக் கொள்ளப் பேசமுடியாது அப்படியே மௌனமாகிவிட்டான்.

அந்த மௌனத்தில் எத்தனையோ அர்த்தங்கள், கொண்டுவந்த பணத்தையும் தொலைத்துவிட்டு உடுத்த உடுப்போடு வன்னிவந்து சேர்ந்தது முதல் முன்னர் பத்து வருடங்களாக வேலை பார்த்த பாமஸிக்கார ரவிவர்மனிடம் சென்று ஏமாந்து வந்ததுவரை ஒருகண நிழலாட்டமாக ஓடி நின்றது.

"விழிகளில் இருந்து நீர்த்திவலைகள் பொல பொலத்தன. ஆனாலும் அவன் துடைத்துக்கொள்ளவில்லை"

"அரவிந்தனின் கைகளுக்குகூட கயல்விழிக்குக் கட்புலன் இல்லை என்பது தெரிந்துதானே இருந்தது."

உங்களுக்குத்தான் நண்பர்கள் பலர் இரக்கிறார்களே என்று கேட்டுவிடுவார்கள் வேறு யாருமென்றால். ஆனால் கயல்விழியோ, "அண்ணை ஆறு கடக்கும்வரை அண்ணன் தம்பி அப்பால் தாயும் பிள்ளையும் ஆனாலும் வாயும் வயிறும் வேறுதான்" என்று சொல்ற

காலமிது. நீங்கள் ஒருத்தரிட்டையும் போய் உதவி கேட்க வேண்டாம். நேரே வீட்டை போய் விடிந்ததும் பிள்ளைகளையும் அண்ணியையும் உங்களோடை வந்தவையையும் இஞ்சைகூட்டி வாருங்கோ.

நெஞ்சம் பனியாய் உருகிப்பஞ்சாய் மிதந்தது. என்னையும் பிள்ளைகளையும் அல்ல என்னோடு என்னை நம்பி வந்தவர்களையும் ..... சே.. பரந்த வன்னிப் பரப்பில் பலருக்கு இதயம் சுருங்கி இருந்ததையே இந்த ஒரு வாரத்திற்குள் கண்டு தெளிந்த அரவிந்தனுக்கு..... இவளின் இதயம் இத்தனை விசாலமாக வன்னிப் பெருநிலப்பரப்பாக விரிந்து கிடக்கிறதே என்பதைக் கண்டபோது அவன் நெடுமூச்செறிந்தான்.

மனிதம் சாகவில்லை..... மனிதம் சாகவில்லை..... அவன் மனம் ஓலமிட்டுக்கத்தும் அலைகடல் போல உரத்துக்கத்திக் கூத்தாடியது.

ஆண்டவா கயல்விழிக்கு விழியைக் கெடுத்து விட்டு கயல்விழி என்ற பெயரை வைக்கப்பணித்தாய். கொடுக்கக்கூடாதவர்களுக் கெல்லாம் விழியைக் கொடுத்துவிட்டாயே!..... இது தான் உன் கருணையா?

அவளுக்கு விழிகளைவிடச் சிறந்த கருணை விழி உள்ளத்துள் மலர்ந்திருக்கும்போது வெற்றுச்சடலங்களாக உலவும் இந்தக் கொடுமைமிக்க மனிதர்களின் விழிகளைப் போல் அவளுக்கும் கொடுத்திருந்தால் ஒரு வேளை அந்த விழிகளே அவளது கருணை விழிகளையும் கெடுத்து விடுமோ என்று நினைத்தாயா? என்றெல்லாம் அரவிந்தனின் மனம் சிந்தனைப் போராட்டம் நிகழ்த்திக் கொண்டிருந்தது.

ஒரு காலத்தில் ஓகோ என்று வாழ்ந்திருந்த அந்த பெரிய மனிதன் வைத்திலிங்கத்தின் மகள் தான் கயல்விழி. ஆனால் இன்று அம்மா என்ற ஒண்டிக் கட்டையோடு கூண்டுக்கிளியாட்டம் தனிக்குடித்தனம் செய்யும் விழியில்லாத ஒரு மனித இதயம்.

அரவிந்தன் விடைபெற்றபோது, "நாளைக்காலை இங்கு நீங்கள் வராது போனால், நீங்கள் இருக்குமிடத்திற்கு நான் வருவேன்

ரைக்கரோடு" ஆணித்தரமாக அவள் சொல்லும் வார்த்தைகள் காதில் எதிரொலித்து அடங்கின. பாசமல்ல மனிதார்த்தத்துவத்தின் மகத்துவ அறை அது.

அன்பின் நெருக்கம் அதிகரிக்கும் போது அதிகாரமாக மாறி விடுகின்றதோ? இல்லை இல்லை இது உண்மை அன்பின் வெளிப்பாடு. போலிமைகளற்ற அன்பு தனது உரிமையை வெளிப்படுத்தும் பாங்கு இது தான் போலும், என்று எண்ணியவாறு அந்தக் காட்டுப்பாதைக்குள் தன் மிதிவண்டியை ஓட்டத் தொடங்கினான் அரவிந்தன்.

"மரணித்த மாநுடம் என்ற சிறுகதை எழுதிப் பரிசு பெற்ற எனக்கு மாநுடம் சாகவில்லை என்று காட்டிவிட்டாயே கயல்விழி" என்று அரவிந்தனின் வாய் முணுமுணுத்தபோது அந்தக் காட்டு மரங்களும் கேட்டுச் சிலிர்த்துக் கொள்ளத் தவறவே இல்லை.

தேசத்தின் பாடல் இது

"அழுவதற்கா பிறந்தோம், கண்ணீரில் நனைவதற்கா வளர்ந்தோம், தெய்வம் ஊமை என்றும் அறிந்தோம்."

தனிமையில் இருக்கும்போது இந்தப் பாடல் வரிகளை சோகம் ததும்ப அவள் பாடுவதை இங்கு நான் வேலைக்கு வந்த இரண்டு மாதத்திற்கிடையில் எட்டாவது தடவையாக இன்றும் கேட்டுவிட்டேன். ஆனாலும் என்றும் இல்லாதவாறு இன்று அந்தப் பாடல் வரிகளை அழுத்தி அழுத்தி நெஞ்சை உருக்கிப் பிழிவதாகப் பாடி முடித்த போது விக்கலும் முனகலுமான ஒருவித ஒலி எழுந்து வந்தது. எனக்கு என்னவோ ஏதுவோ என்று ஒரு கேள்வி நெஞ்சைப் பிழிந்து உலுப்புவதாக இருந்தது. இத்தனை நாளும் தோன்றாக ஒரு எண்ணம் இன்று ஏனோ தலையெடுத்து நின்றது. கேட்டுப்பார், அந்த வானம்பாடியின் சோகத்தின் பொருளைக் கேட்டுப்பார் என்று உள்மனம் உறுத்திக்கொள்ள நான் அவள்முன் வந்து மெல்லச் செருமிக் கொண்டேன்.

9-4-1999 புலிகளின் குரல்.
25-4-1999 தினக்குரல்.
THIRD EYE january 2001.

''என்ன ராஜன் இன்று நீங்கள்....? சாப்பிட வெளியிலை

போகவில்லையா? ஏதோ கேட்பதற்காகக் கேட்டுவிட்டு தன் கைக்குட்டையால் முகத்தை ஒருமுறை துடைத்துக்கொள்வதன் மூலம் தன் கலங்கிய கண்ணீரைத் துடைத்தெடுத்துவிட்டாள். கைக்குட்டை கண்ணீரை உறுஞ்சிக் கொண்டது. என்னவோ உண்மைதான். ஆனால் முகத்தில் தோன்றிய கலக்கத்தை அந்தக் கைக்குட்டையால் துடைக்க முடியவில்லை. முகத்தை முகம் கொடுத்துப் பார்த்துக்கொள்ள முடியாதபோது அவள் சொல்லப் போவதைக் கேட்க முடியுமா? என்ற கேள்வி என்னுள் எழுந்து அடங்குவதற்கிடையில் பாவம் நீ கேட்கப் போவதால் இன்னும் அவள் துயரம் இன்னும் இன்னும் அதிகரித்துவிட்டால்.....! அந்தத் துயரை எப்படி ஆசுவாசப்படுத்தப் போகிறாய்.....? என்று இன்னொரு கேள்வியும் தலை நிமிர்த்தியது - மனம் தளுதாழிப்பட்டு தடுமாறியது.

அனுதாபம் ஒரு புறம்.....
கழிவிரக்கத்தால் எழுந்த அச்சம் ஒரு புறம் .....

அதை அறிந்துவிடவேண்டிய ஆர்வம் இன்னொரு புறமுமாக மனம் முக்குளித்துக் கொண்டிருந்தது.

மனித மனங்களை அக்குவேறு ஆணி வேறாக உலுக்கி எடுப்பது துன்பம் மட்டுமே. ஆனாலும் துன்பத்தை அடக்குதல் துயரை வளர்க்குமே ஒழிய துடைக்காது. யாரிடமாவது பகிர்ந்துகொள்வதால் மட்டுமே துன்பத்தின் வலுவையும் பழுவையும் குறைத்துக்கொள்ள முடியும் என்ற எண்ணம் என் சிந்தையில் தற்துணிவாக எழுந்து நின்றது.

"அமுதா வானம்பாடியைப்போல ஏனிப்படி தனிமையான வேளைகளில் இந்த துன்பப் பாடலையே நீண்ட நாட்களாகப் பாடிக்கொண்டிருக்கின்றாய்.....?' அவள் முகத்தைப் பார்க்காமலே கேட்டுவிட்டேன்.

"என்ன ராஜன் அப்படிக் கேட்டுவிட்டீங்க....ம்..."
என்று ஒரு நெடுமூச்சு உந்தியிலிருந்து வாய் வழியாக வெளியேறியது. மனதுக்கு சந்தோசமானவற்றை மற்றவர்களுக்குச் சொல்வதால் ஒரு திருப்தி ஏற்படும். ஆனால் மனதால் தாங்கிக்க முடியாத துன்பங்களை மற்றவருக்குச் சொல்லி ஏன் மற்றவர்களையும் துன்பப்படுத்துவான் என்று சொல்லி என்னைத் தட்டிக்கழித்துவிட அவள் நினைத்தாள்.

"இன்பத்தில் பங்கெடுக்க பலர் கூடுவாங்கள், ஆனால் துன்பத்தில் பங்கெடுக்க யாரும் முன்வருவதில்லை. அதனாற்தான் துன்பம் ஆட்கொண்டவரை அமுக்கி அழுத்தி தன் பலத்தை அதிகரித்துக் கொள்கிறது. அழுத்தங்களையும் அமுக்கங்களையும் குறைப்பதற்கு மற்றவர்க்கு துன்பத்தில் பங்கு கொள்வதன் மூலம் துன்பத்தின் வலுவைச் சிதைத்துவிடலாம்." என்று நான் சொல்லி அவளை தூண்டினேன்.

"இது எனது தலைவிதி, இதை மற்றவர்க்கும் சொல்லி ஏன் மற்றவரின் துன்பத்தைக் கிளறி அவர்களைத் துன்பத்தில் வீழ்த்துவான்?" அவள் தவற முயன்றாள்.

"துயரங்கள் யாவும் விதிப்படி என்றால் வேதனை எப்படித் தீரும்.....?"என்று கேட்டுத் தூண்டினேன். வேறு வழியில்லை என்றளவிற்கு வந்துவிட்டதாலோ என்னவோ அந்த வானம்பாடி தன் சோகத்தை காற்றில் கரைத்துக் கொண்டிருந்தது.

தாளாத மனச்சுமை. கனத்த இருள். செறிந்து வருத்தும் குளிர். கண்ணிற்குத் தெரியாத மனிதக்கூட்டத்தின் ஆரவாரமற்ற சந்தடி, இருளான போதும் பரந்த வெளியான படியால் ஏதோ முகம் விளங்காத உருவங்களில் அவசரங்கள். இத்தனைக்கு மத்தியிலே கிளாலிக் கடற்கரையில் அந்த இரவில் எங்கள் குடும்பத்தவரும் திசையற்ற படகுப்பயணத்திற்காக காத்துக்கொண்டு நின்றோம். அச்சம் நிறைந்த புது அனுபவம் அது.

"அம்மா விசயம் தெரியாமல் வந்துவிட்டோம். இனித் தாங்கமுடியாது போவோம் திரும்பி" பற்கள் ஒன்றோடொன்று மோதிக்கொள்ள எனது கடைசித் தங்கை நிதி சொல்லித் தன் தவிப்பை புலப்படுத்திக் கொண்டிருந்தபோது வரிசையை முன்னோக்கி யாரோ அழைப்பது கேட்டு நகரத் தொடங்கியது. அந்த வரிசையில் முன்னே சென்றவர்கள் இடுப்பளவு நீரவரை நடந்து சென்று படகுகளில் ஏறிக்கொள்கின்றனர். படகு ஏறும் இடத்திற்கு அண்மையில்தான் ஒரு விளக்கு (பெற்றோமாக்ஸ்) கடலின் நடுவில் அமைக்கப்பட்டிருந்த கொட்டிலினுள் சுடர்ந்து கொண்டிருந்தது. மக்கள் கூட்டத்தின் கணக்கை புரிந்துகொள்ள உதவுதல்போல் எண்ணிறந்த விண்மீன்கள் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன.

எங்கள் குடும்பத்தில் 6 பேர் படகில் ஏறிவிட்டோம். அக்காவையும் அத்தானையும் அடுத்த படகிற்காக காத்திருக்கவிட்டு எம்மைச் சுமந்த படகு மெல்ல அலைத்திட்டுக்களைக் கிழித்துக்கொண்டு இருண்ட சூனிய வெளியில் சென்று கொண்டிருந்தது. நீர்த்திவலைகள் இரு புறமும் தெறித்துத் தெறித்து உடலை மேலும் விறைக்க வைத்துக்கொண்டிருந்தது. உடலில் விறைப்பு அதிகரிக்க மனதில் அச்சமும் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. அனுபவமில்லாத அந்த பயணத்தின் முடிவு (நல்லூர்க்கரை பூநகரி நல்லூர்)க்கு வந்து சேர்ந்தபோது கலங்கரை விளக்கம் போல் இங்கு ஒரு லாந்தர் விளக்கு எம்மை வரவேற்றது.

குமுதினி என்ற படகில் சில காலத்திற்கு முன் வந்த பிரயாணிகள் கடற்படையினரின் மனிதாபிமானமற்ற கண்மூடித்தனமான தாக்குதலில் கண்டதுண்டமாக வெட்டிப் பலியாக்கி கடலைச் செங்குருதியால் நிறைத்த காட்சி ஒவ்வொருவரின் மனக்கண்ணிலும் தெரிந்து கொண்டுதான் இருந்தது. வேறு வழியில்லாத நிலையில் எல்லோருமே அத்துயரங்களை மனம் அசைபோட்டுப் பார்த்துக்கொண்டவாறு பேசா மடந்தைகளாக வாயிருந்தும் ஊமைகளாக வந்து இறங்கியபோது..... அப்பாடா என்று அந்த துன்ப நிகழ்விலும் ஒருவித இன்பம் அடைந்து கொள்ள வைத்தது. அந்த இன்பம் அதிக நேரம் நீடிக்கவில்லை.

சடச்சடசட..... சட்.....சடசட...சடச்சட..... செந்தணற் பொறிகளாக இருளைக் கிழித்துவிரையும் ரவைக் கழுகுகள் விண்ணிலிருந்து சரமாரியாக இறங்குவதை இக்கரையிலிருந்தவாறே பார்த்துக்கொள்ள முடிந்தது. வானவெளிக்காற்றை அதிர்த்தடித்து அலறியவாறு ஹெலிகொப்டர்கள் அக்கரையில் வட்டமிட்டபோது கூடி இருந்த மக்கள் அடைந்த துன்பம்..... வார்த்தைக்குள் அடங்காதவை. மனிதன் போராட்டமே வாழ்க்கை என்று ஆகிவிட்டபோது..... மீளா அடிமைகளாக நிற்கும் அவலத்தை அணு அணுவாகத் துடித்துத் துடித்து அனுபவித்துக்கொண்டு அக்கரைச் சேதிகளில் மனஞ்செல்லக் காத்திருந்தனர். எல்லோரும் ஏக்கம் நிறைந்த நெஞ்சினராய்...

அசுரநாடகம் ஒன்று அரசபடைகளால் அரங்கேற்றி முடிக்கப்பட்டுவிட்டது. சரமாரியான ரவைகளை ஹெலிகள் விதைக்க...

சியாமா செட்டி விமானங்கள் குண்டுமாரி பொழிய.....ஓ..... துண்டங்களாக..... சதைப்பிண்டங்களாக சில கணப்பொழுதில் நடந்துமுடிந்த கோர நாடகத்தில் பலர் பலியாகினர். அங்கமிழந்து அரைகுறையாகத் துடித்துக்கொண்டிருந்தனர். இன்னும் பலர். பொழுது விடிந்தபோது "அத்தானின் உடலே இல்லாத தலையைக் கட்டிப்பிடித்துபுரண்டு அக்கா கதறிக் கொண்டிருந்ததாகச் சேதி கிடைத்தது."

மனவேகத்தில் செய்திகள் அரைகுறையாக எல்லோர்க்கும் கிடைத்தது. அக்கரையில் அத்தானைப் பறிகொடுத்த அக்கா அபலையாக துயரில் துவண்டு கொண்டிருக்க இக்கரையில் நாங்கள் துடித்துக் கதறிக் கொண்டிருந்தோம். துயரில் சமபங்கேற்க முடியாத பாவிகளானோம். கொடிய துன்பம் ஒவ்வொருவருக்கும்..... ஒவ்வொரு தமிழ் மக்களுக்கும் பொது உடமையாகிப் போனதால் தேற்றுவதற்கு யாருக்கும் யாருமே இருக்கவில்லை.

நாட்கள் நகர்ந்தன. துன்ப நாட்கள் ஒவ்வொன்றாகக் கரைந்த போது கடிதங்களால் ஒத்தடம் கொடுத்த வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது.

வன்னிப் பகுதியில் மலேரியா அரக்கனும் தனது பலத்தை "மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த கதைபோல" தன் பலத்தைக் காட்டத் தொடங்கியது..

யாழ்ப்பாணத்தில் பிரச்சினை இல்லையெண்டு சனம் போகத்துவங்கிவிட்டது. கனகமக்காவும் குடும்பத்தினரும் போய்விட்டனர். காய்ச்சலில் செத்துபோன சின்னராசாவின்ரை அந்திரட்டியைக்கூட இஞ்சை செய்யாமல் சாம்பலையும் கொண்டு போகினம்.

கௌரி அக்காவுக்குச் சொல்லிக்கொண்டிருந்தபோது கடிதம் வந்தது. சித்தியின் மகள் பரமேஸ்வரி எழுதிய கடிதம் அது.

விசாரணைக்குக் கூட்டிக்கொண்டுபோன உங்கள் அக்காவையும் அவளைத் தேடிச்சென்ற பெரியம்மாவின்ரை மகன்

செல்வராசா மாஸ்ரரையும் பற்றி அறிய முடியவில்லை. எங்களுக்குப் பயமாக இருக்குது. தொடர்ந்து கடிதங்களைப் படிக்க முடியாது கௌரி அலறிப் புரண்டு கத்த எல்லோருமே சேர்ந்து கறித அழுதனர்.

அத்தான் செத்துப்போன ஒரு மாதத்துள் அக்காவும் விசாரணைக்குச் சென்று காணாமற் போனாள். அக்காவைத் தேடிப்போன பெரியயம்மாவின்ரை அண்ணன் எல்லோருமே காணாமற் போனோர் பட்டியலில் ..... நாட்கள் நகர நகர இந்தப் பட்டியல் முற்றுப்பெறாத கோலமாக நீண்டு கொண்டிருந்தது உறுதிப்படுத்தப்பட்ட முடிவுகள்.....?

யாழ்ப்பாணத்தில் கிருஷாந்தியின் உருக்குலைத்த உடல் புதைகுழிக்குள் இருந்து மீட்கப்பட்ட சேதி பத்திரிகைகளில் வெளியானபோது புதுக்குடியிருப்பில் நாங்கள் தங்கை புவனாவின் சிதைந்த உடலை தகனம் செய்து கொண்டிருந்தோம். புவனா பள்ளிக்கூடத்தில்தான் கிபீர் அடிச்சு செத்துப் போனாள். புவனாவோடு இன்னும் ஒன்பது பள்ளிச் சிறுவர் அநியாயமாகச் செத்துப் போயினர். காயம்பட்டு மருத்துவமனையில் இருந்தவரில்கூட மூவர் பின்னர் செத்துப் போயினர்.

யாழ்ப்பாணத்திலும் சரி வன்னியிலும் சரி அநியாயச் சாவுக்கள்தானே மலிந்து போயிருக்கு, இந்தச் சாவுகளிலிருந்து எங்களைக் காப்பாற்ற யாருமே இல்லையா? என்று கேட்டுவிட்டு அழுத அழுதா ஒருமுறை நிமிர்ந்து ராஜனைப் பார்த்துவிட்டு எங்கோ தன் பார்வையைச் செலுத்தியவாறு தொடர்ந்தாள்.

புவனாவின் சாவோடு புதுக்குடியிருப்பைவிட்டு மாங்குளம் வந்து பாடசாலை முகாம் ஒன்றில் இரண்டு மாதம் குடியிருந்தோம். அம்மாவுக்கும் காணாமல் போன என் அக்காவின் ஒரே வாரிசான ஜெகனுக்கும் காய்ச்சல் கண்டிருந்தது.

"குளோரக்குயினும்" "பிறேமாக்குயினும்" தினம் தினம் போட்டுக்கொண்டு காய்ச்சலின் வேகத்தை விரட்டி அடித்தபோதும் குளிசைகளின் தாக்கத்தால் எழுந்த பயங்கரமான உணர்வுகள் மீள முடியாத அச்சத்தை வேறு தோற்றிவிட்டது.

அம்மா அடிக்கடி புசத்துவதும் அழுவதும் அழுது தொலைப்பதுமாகத்தான் இருந்தா. சில வேளைகளில் செத்துப்போன அக்காவின் புருசன் வந்து கதைப்பது போலவும் அக்காவின் முகம் கருகிய தோற்றமாகவும் தெரிவதாகச் சொல்லி அழுது கொண்டிருந்தா.

தூக்கமில்லாத பல இரவுகள் ஓடிக்கொண்டிருந்தன. அக்காவின் மகனுக்கு காய்ச்சல் விட்டுவிட்டு நீண்டுகொண்டே இருந்தது. இனங்காணாத காய்ச்சலுக்கு கொடுக்கப்பட்ட குளிசைகள் நெருப்புக் காய்ச்சலுக்கு ஏதுவாகி இருக்கவேண்டும். மருத்துவமனையில் வாரக்கணக்கில் அவனை வைத்துப் பார்க்கும்படி ஆகிவிட்டது. குணமாகிவிட்டதால் வீட்டிற்கு அழைத்துவந்து மூன:று நாட்களின் பின் இரத்தவாந்தி எடுத்துக் கொண்டிருந்தான். அறிவு தெரியாத நிலையில் மீண்டும் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றபோது அவன் மூச்சுத் திணறி அங்கேயே செத்துப்போனான்.

"அம்மா எல்லாம் போச்சு. எத்தனை நாளைக்கு இந்த முகாமிலை இருந்து அலைக்கழியிறது.... என்ரை சங்கிலியை வித்துப்போட்டு ஒரு கொட்டில் கட்டுவம்"

"அழுதா என்னம்மா சொல்லுறாய்... அது ஒண்டுதான் மிச்சம்..அதையும் வித்துப்போட்டு என்ன செய்யப்போறியள்....?"

அகதிமுகாம் வாழ்க்கை சலித்துப்போச்சுதம்மா... இப்பிடியே எத்தினை காலத்திற்கு இருக்கிறது? இஞ்சை வந்து ஆறு மாதத்துக்குள்ளை சாவீடு மருத்துவம் அது இதெண்டு எவ்வளவு செலவு..... வரும்படி இல்லாத செலவுகளாலை கையிலை இருந்ததெல்லாம் கரைஞ்சு.... கரைஞ்சு... வாழ்க்கையே அர்த்தமற்றதாப்போன பிறகு சங்கிலி ஒரு கேடா? ஏதோ ஒரு வேலையைத் தேடிக்கொண்டு காலத்தை ஓட்ட வேண்டியதுதான்....."

"நவாலிக் கோயிலுக்கை துடிக்கத் துடிக்கக் கொப்பரைக் கொண்டு போட்டாங்கள்..... இப்ப கொத்தானை கிளாலிக் கரையிலை திண்டினம்... போதாக்குறைக்கு அவளையும் கொண்டொழிச்சுத் திண்டிட்டாங்கள்... இனி ஆரைத் தின்னப் போறாங்களோ...? ஆருக்குத் தெரியும்....?"

அம்மாவின் நச்சரிப்புக்களோடு சங்கிலியும் வித்துவீடு போட்டு ஒரு வேலையும் தேடிக்கொண்டு நிமிர்ந்தபோது மீண்டுமொரு கொடுமை....?

பாதை திறப்புச் சண்டை வந்தாலும் வந்தது... வரி வாதையின் உச்சம் என்று வந்து சேர்ந்தது.... இரவிரவாக எறிகணை வீச்சு நடந்த அந்தக் கொடிய இரவில் அம்மா..... என்ரை அம்மா.... வெளியாலை வந்தது. திரும்பவில்லை..... பக்கத்தில் விழுந்து வெடிச் சத்தம்..... சிலமணிநேரம் ஓரே சத்தம்..... வெளியே வரமுடியாது எல்லோரும் படுத்துக் கிடந்து..... உடலெல்லாம் வேர்த்துக்கொட்ட.... சத்தம் நின்றதும்..... ஒருவரொருவராக குரல்வைத்தபோது அம்மாவின் குரலைக் கேட்க முடியவில்லை..... லாந்தர் விளக்கோடை வெளியே வந்து பார்த்தால்.....

அம்மாவை அம்மாவாகப் பார்க்காமல்..... உடல் துண்டங்களாகப் பொறுக்கி எடுத்துக் கதறினம்.....

எங்கள் குடும்பத்தின் நம்பிக்கை யாவும் சிதறிப்போய்விட்டது. இந்த நிலை எமக்கு மட்டுமா?

மிக மலிந்த விலையில் மூவரைப் பறிகொடுத்துவிட்டு மூன்று பெட்டைச்சியளும் மூளியாக வாழ்கிறோம்... இன்று அம்மாவின் அறுபதாம் நாள்.... இனி என்னத்தைச் சொல்லி முடிவுரை எழுதிறது.....? அது தான் தெரியாமல் இந்தப்பாட்டே எனக்குப் பிடிச்சுப் போச்சு..... அதைக்கூட பாட முடியவில்லையே ராஜன்....

அவள் வாய்விட்டுக் கதறினாள்..... மேசைமீது தலையைச் சாய்த்து விம்மி விம்மி அழுது கொண்டிருந்த அமுதாவைத் தேற்ற வார்த்தைகளைத் தேடிய ராஜன்.....

அவனும் அழுது கொண்டிருக்கின்றான்.....அவன் ஏன் அழுகிறான்.....?

அவளுக்கு அவன் அழுத காரணம் தெரியவில்லை... ஆனால் அவன்.....?

நாகர்கோவில் பள்ளிக்கூடத்தில் அள்ளி எடுத்த தன் தம்பிமாரை நினைத்து அழுதது அவன் மனம். தோற்றுப்போய். அவனும் அழத் தொடங்கிவிட்டான்..... கேவிக் கேவி அழுத ராஜனின் வாயிலிலிருந்து.....'' நானும் எனது இரண்டு தம்பிகளையும் நாகர்கோவில் பள்ளிக்கூடத்தில் கூட்டித்தான் அள்ளினேன்.....'' என்ற வார்த்தைகள் வெடித்துச் சிதறியபோதுதான் அழுதா நிமிர்ந்து பார்த்தாள்.

பொங்கல் பானையின் வாயிலிலிருந்து பொங்கி வழியும் பால்நுரையாக இருவரது விழிகளும் கண்ணீரைச் சொரிந்து கொண்டேயிருந்தது.

''அழுவதற்கா பிறந்தோம்... கண்ணீரில் நனைவதற்கா வளர்ந்தோம்.....'' அந்தப் பாடல் வரிகள் இப்போது எங்கோ எதிரொலிப்பது போன்ற ஒரு உணர்வு.....

பிரேமையா.....?..... இல்லை இல்லை... இந்தத் தேசத்தின் பாடல் இது... ஆம்.!

இந்தத் தேசத்தின் பாடல் இதுதான்.....!



வாக்கு மூலங்கள்

விரிந்து கிடந்த வயல் வெளியின் எல்லைப்புறங்களில் அடர்ந்த காடு செழித்துக் கிடந்தது வயல்வெளியின் கீழ்த்திசையில் நீண்டு கிடந்த வீதி நீண்டகாலமாக எதுவித அபிவிருத்தியுமின்றிக் குன்றும் குழியுமாக அழுது வடிந்தது வயல் வெளியின் நடுநாயகமாக ஒரு குடிசை மட்டக்களப்பு நகரப்பகுதியில் அரண்மனை போன்ற அந்தப்பெரிய பங்களாவை விட்டுவிட்டு இந்தக் குடிசைக்கு முத்தையாவின் குடும்பம் வந்து மூன்று ஆண்டுதான் முகாமென்று நகரப்பகுதிக்கு அண்மையில் அமைக்கப்பட்ட வேளை அங்கிருந்து வெளியேறிய குடும்பங்களில் முத்தையாவின் குடும்பமும் ஒன்று. விவசாயத்தோடு வியாபாரத்தையும் தொழிலாகக் கொண்ட செழிப்பான குடும்பம் என்னும் இராணுவ நடவடிக்கை காரணமாக அகதிகளாக வெளியேறியதால் அவர்களின் சொத்துக்கள் எல்லாமே இராணுவ அடாவடித்தனங்களால் சூறையாடப்பட்டது.

"மக்கள் குடியிருப்புக்களின் அருகே இராணுவ முகாம்களை அமைத்து மக்களை வதைக்காதீர்கள்" பத்திரிகைகள் சில கண்டன அறிக்கைகளை வெளியிட்டன.

27-3-1998

ஈழநாதம்

"புலிகளின் முகாம்களுக்குக் கிட்ட இருக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுங்கள்" அரச வாக்கு மூலமாகத் துண்டுப் பிரசுரங்கள் வானில் இருந்து விசிறப் பட்டன.

முத்தையாவின் குடும்பத்திற்கு மட்டுமா இந்தக்கதி தமிழனென்று பிறந்து விட்ட அனைவர்க்கும் இது தலை விதியாக்கப்பட்ட போது முத்தையா குடும்பம் மட்டும் விதிவிலக்கா என்ன?

யாரோ ஒரு தெரிந்தவரின் வயலுக்குள் இருந்த காவல் கொட்டிலை சற்று விசாலமாக்கிக் கொண்டு அமைதி அடைந்தது முத்தையாவின் குடும்பம். நான்கு பெண்களுக்குத் தந்தையான முத்தையா சொத்துக்களை எல்லாம் இழந்துவிட்ட போதிலும் சோர்ந்துவிடாது விவசாயத்தை நம்பித் தனது குடும்பத்தை நகர்த்திக் கொண்டிருந்தார். அடுத்தடுத்து இராணுவச் சுற்றிவளைப்புக்கள் ஏறிகணை வீச்சுக்கள் என்று அயற்கிராமங்கள் ஆக்கபட்டபோதும் முத்தையாவின் தனிக் குடித்தனத்துக்கு அந்த துரதிஷ்டங்கள் கிட்டாமல் போனது பெரும் ஆச்சரியந்தான்.

தமிழீழத்தின் தூக்கம் கலைந்த நாட்களிலிருந்து இரவு வேளைகளில் முத்தையா தூக்கத்தை விடுத்துமன ஏக்கத்தோடு தான் படுத்திருப்பார். முத்தையாவின் வீட்டிலிருந்து நாலு ஐந்து மைல்களுக்கப்பாலுள்ள காட்டிற்குள் விடுதலைப் போராளிகளின் பாசறை ஒன்று இருந்தது. அந்தப் பாசறைக்கு சென்று உதவிகள் செய்வது முதல் இராணுவ நடமாட்டங்கள் பற்றிய தகவல்கள் சொல்லுவது வரை முத்தையாவின் கடமையாகமாறி இருந்தது யாருக்குமே தெரியாத ஒன்று.

தூக்கம் வராதநள்ளிரவில் முத்தையா வெளியே வந்து வான் மீது தன் பார்வையைச் சொருகிய போது கிழக்கு வீதியின் தெற்குப்பக்கமாக புகைவண்டித் தொடர் செல்லவதைப் போன்ற ஒரு இருள் படலம் நகர்ந்து வருவதைக் கண்டு செவிகளைக் கூர்மைப்படுத்தினார் சப்பாத்து ஓசைகள்..... ஓ.... இண்டைக்குச் சுத்திவளைக்க வெளிக்கிட்டினம்..... மனதுள் முடிவு உறுதியான போது அடிமனதிலிருந்து அனலாக பொறி ஒன்று எழுந்து உச்சிவரை சுட்டது. மாரிமழை வெள்ளத்தோடு சீரழிந்த சனமெல்லாம் பள்ளிக்

கூடங்கோயிலென்று தஞ்சமடைந்திருக்க நரபலி வேட்டையாட நாடாளும் நாசகாரப்படை... ஒரே ஒரு கணம்தான் இத்தனை புயல் வேகமாக மாறி செயல்வடிவமானது.

அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்த தன் மனவியை மெல்ல தட்டியெழுப்பினார். செல்லம்மா எழுந்த போது முத்தையாவின் கையில் இரட்டைக் குழல் துப்பாக்கி ஏதோ ஒரு பணிக்கு தயாராக இருந்தது. என்னங்க..... அச்சத்தோடு செல்லம்மா குசுகுசுக்க வாயைப் பொத்திக் கொண்டே ஆமி வெளிக்கிட்டிட்டுது..... செங்கலடிப் பபுகுதியில் வெள்ளத்தால் அகதியாகி வந்திருக்கிற சனத்தை சுற்றிவளைத்து செக்பண்ணுற சாட்டிலை பொடியளின்ரை காட்டு முகாமைத்தாக்கப் போறான்.

இவங்களைத் திசைமாற்ற வேண்டும். அதேவேளை, பொடியள் உசாராகி விட்டால் மனதுக்குள் எழுந்து துடித்த துடிப்பிற்கு தற்காப்பு வியூகம் ஒன்றைத் திட்டமிட்ட முத்தையா.... "பிள்ளையளை எழுப்பு" என்றார்.

இந்தப்பக்கம் உங்கடை துப்பாக்கி வெடிச்சா அவங்கள் எங்களை சும்மா விட்டுடு வாங்களா? நாலு குமருகளும் நானும் நாறிச்சாக ..... செல்லம்மா வேண்டாமென்று கெஞ்சினாள்.

எங்கடை பிள்ளையள் நாலுதான். பள்ளிக்கூடம் சுற்றி வளைச்சால் நாற்பது பிள்ளையள் எல்லோ நாசமாய்ப் போகும். அதைவிட எங்கடை பொடியள்.... அவங்களைக் காப்பாத்த உதவாத ஒவ்வொரு தமிழனும் ஒருவகையில் தமிழினத்துரோகி தான். அந்தத்துரோகத்தை நான் செய்யலாமா? முத்தையாவின் மனம் அவசரப்பட்டுத் துடித்தது.

போனமாதம் நடந்த சுற்றிவளைப்பில் 25 இற்கு மேற்பட்டவர்கள் சுடப்பட்டதும் 200 றிற்கு மேற்பட்டவர்கள் கைதாகிக் காணாமல் போனதும், பாலத்துக்குக் கீழே உருக்குலைந்து கிடந்த ஆறுபெண்களின் சடலங்களும் மனக்கண்ணில் தோன்றி மறைந்தபோது.... அவரது செய்கையின் அவசியம்..... அவசரம் அவளுக்குப் புரிந்து கொண்டதாலும் பிள்ளையளை மெல்ல எழுப்பி, எப்போதும் ஓடத் தயாராக இருந்த அந்த உடைப் பெட்டிகளை ஆளுக்கொன்றாகத் தூக்கிக்கொண்டு வயல் வெளிக்குள் இறங்கினர்.

"வயல் வரம்புகளாலை நேராக காட்டுப்புற வாய்க்காலடிக்கு செல்லுங்கோ..... வாய்க்காலுக்குச் செல்லுங்கோ..... வாய்க்காலுக்கை இறங்காமல் வடக்குப்பக்கமாகச் சென்று மரப்பாலத்தடியிலை இருங்கோ....." சொல்லிவிட்டு முத்தையா வயலுக்குள் இறங்கி வடக்குப்பக்கமாக நகரத் தொடங்கினார்.

துப்பாக்கியை எடுத்த முத்தையாவைத் தடுத்த போது செல்லாமாவுக்கு முத்தையா சொன்ன வார்த்தைகள் என்னதான் சரியான யதார்த்தத்தை பிரதிபலித்திருந்தாலும் வாய்க்கால் குழிகளில் விழுந்து சறுக்கிப் புரண்டெழும்பிய வேளை மனது கனத்தது கண்கள் கண்ணீரைச் சொரிந்தன. காலமெல்லாம் கண்ணீரில் குளிப்பது தான் தமிழருக்குச் சொந்தமா? இதற்கு ஒரு முடிவே இல்லையா? சத்துருக்கொண்டான் பன்னிச்சையடியில், பிள்ளையாரடிக் கிராமங்களில் 184 பேரை சுட்டுக் கொன்றபோது தன் சகோதரன் செல்வராசா மாஸ்ரரும் சுட்டுக்கொல்லப்பட்டதெல்லாம் இப்போது மனத்திரைக்கு வந்தபோது இந்த மனுசனுக்கு அவங்களோடை சமருக்குப்போகுது அப்பிடி ஏதுமென்றால்...அதற்கு மேல் அவளால் நினைக்கவும் முடியவில்லை வாய்விட்டுக் கதறவும் முடியவில்லையே என்ற ஏக்கத்தோடு நடைப்பிணமாகச் சென்று கொண்டிருந்தாள் தன் பிள்ளைகளோடு.

முத்தையாவின் இலக்கு முற்றுமுழுதாக இந்தச் சுற்றி வளைப்பைத் திசைமாற்றுவதிலும் போராளிகளை முந்திக்கொள்ளச் செய்வதாகவுமே அமைந்திருந்தது. கூரம்பாயினும் வீரியம் பேசேல் என்ற நிலையில் தான் புலிகள் இருக்கிறார்கள் எனினும் எதிர்பாராதாவேளை இந்த நாசகாரப்படைகள் முந்திக்கொண்டால்.. என்ற அச்சம் அவருடைய உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து கொண்டதால் வயல் வரப்புகளையும் வெள்ளஞ்சேறுகதி என்ற எதையுமே பொருட்டாகக் கொள்ளாது சிங்களப்படையைச் சின்னாபின்னப்பட்டுப் பின்வாங்கச் செய்துவிடும் உறுதி உரமாகச் சென்று கொண்டிருந்தார். நகரப் பகுதியில் இப்படியான ஒரு சுற்றிவளைப்பை முறியடிக்கத்தான் ஆற்றிய பங்களிப்பை பல போராளிகளின் பாராட்டுக்களைப்பெற்ற மகிழ்வின் நிறைவும் இப்போதும் இந்தப் பணியில் வென்றுவிடும் உறுதியை அவருக்குக் கொடுத்து இராணுவம் சென்று கொண்டிருக்கும் திசைக்குச் சமாந்தரமாகவே குனிந்து வளைந்து விரைந்து கொண்டிருந்தார்.

சந்திக்கு மேற்குப் புறம் சிறிய குளமொன்றும் அதன் கிழக்குப்புறக் காட்டில் பெரிய பாலை மரங்கள் மூன்று நான்கு நிற்பதாலும் அந்த இடம் தனது திட்டத்தைச் செயலாக்க வாய்ப்பான இடமென்று முத்தையா கருதியதில் தவறில்லை. அந்தக் காட்டிலிருந்து தான் கிழக்குப்பக்கமாக சந்தி பிரிந்து செல்கிறது. சந்தியால் திரும்பி அடுத்ததிருப்பத்தோடு தான் அவர்கள் காட்டுப் பகுதிக்குள்ளோ அப்பால் சென்று பாடசாலை அமைந்த கிராமத்தையோ சுற்றி வளைக்க முடியும். சந்தியில் வைத்து சுட்டால் இராணுவம் மேற்கே திரும்பித்தான் ஆகும். அப்போது சத்தம் கேட்டதும் புலிகள் கிழக்கிலிருந்து தாக்கத் தொடங்குவார் இந்த ஈனப்படை முன்னேற முடியாது திரும்பி ஓடவேண்டியது தான்.

மனதுக்குள் ஒரு இராணுவத்தளபதியின் வியூகம் அரும்பிக் கொடுக்க முத்தையா குளக்கரை நீக்குள் இறங்கி ஓசை எழுப்பாது பாலைமரப் பக்கம் நெஞ்சளவு நீருக்குள் சென்று மிதந்த போது ஒரு பெரும் திருப்தி. பாலை மரத்தோடு நின்றவாறு பார்வையைக் கூர்மைப்படுத்தினார். சந்தி கடந்த இராணுவத்தைவிட சந்தியை நோக்கி வரும் படைகளின் தொகையே அதிகமாக இருந்தது.

இறைவா இந்தத் தேசத்தின் விடிவிற்காகத் தம்மை இழந்து கொண்டிருக்கும் எமது பிள்ளைகளைக் காப்பதற்கான பலத்தை தந்தமைக்கு நன்றி என்று மனதிற்குள் பிரார்த்தித்தவாறு தனது இரட்டைக் குழல் துப்பாக்கியை நிமிர்த்தி.....

கணப்பொழுது தான் முத்தையாவின் துப்பாக்கி வெடித்துப் பொறியைக் கக்கியது. இராணுவப்பக்கமிருந்து வேட்டுக்கள் வருமுன்னர் அடுத்துநின்ற பாலைகளின் பின்னாலிருந்து பல துப்பாக்கிகள் சடசடத்துக் கொள்ளத் தொடங்கின. சரமாரியான அந்தத் தாக்குதலை எதிர் பார்த்திருக்காத மாதிரி எதிர்த் தரப்பில் இருந்து சில கணங்கள் தான் வெடித்தன.

முத்தையா நீருக்குள் மூழ்கி எழுந்து துப்பாக்கியை முறித்து அடுத்தரவையைத் திணித்து வெடித்தார். புலிகளின் தரப்பி இருந்து மழை பொழிந்த மாதிரி ரவைகள் அனற் பிழம் பாகிச் சிங்களப்படைகளைத் துழைதுச் சரித்தது படையினரால் தொடரமுடியாத அளவிற்கு இழப்புகள் அதிகரித்திருக்கவேண்டும்.

நிமிர்ந்து வந்த படை தரையில் உருண்டு உருண்டு பிரதிஸ்டை செய்து வந்தவழியே திரும்பத் தொடங்கியது. இராணுவப் பக்கத்திலிருந்து சுடுவதாக இல்லாதபோதும் புலிகள் சுட்டுக்கொண்டே முன்னேறிக்கொண்டிருந்த போது கிழக்கு வெளிக்கத் தொடங்கிவிட்டது.

அரைமணிநேரத் தாக்குதலோடை எதிர்த்தரப்பு முற்றாகவே திரும்பி ஓடத்தொடங்கியது வீதியை விட்டு வயல் வெளிகளுக்குள் வீழ்ந்தடித்து உருண்டு பிரண்டு நான்முந்தி நீமுந்தி என்று... சே! முத்தையா சந்தியில் நிமிர்ந்து நின்று சிரித்தார்.

பொழுது புலர்ந்தபோது வீழ்ந்து கிடந்த ஆயுதங்களையும் சிங்களப் படையினரின் உடல்களையும் புலிகளோடு சேர்ந்து பொறுக்கியும் அள்ளியும் குவித்து மகிழ்ந்தார்.

முத்தையாண்ணை தான் இண்டைக்கு எங்களுக்கு கொமாண்டிங் செய்துள்ளார் என்று ஒரு பேராளி முத்தையாவைத் தட்டிக்கொடுத்த போது முத்தையாவின் குடிசை சுவாலை விட்டு எரிந்து கொள்வதை எல்லோரும் பார்த்தனர். எல்லோரது பார்வைகளின் அர்த்தங்களையும் புரிந்து கொண்ட முத்தையா மரப் பாலத்தடியில் நிற்கும் தனது பிள்ளைகளும் மனைவியையும் நினைத்தவாறு நிதானமாகச் சொன்னார் "எரிந்து கொண்டிருப்பது முத்தையாவின் குடிசை அல்ல! புலிகளின் முகாம்" அந்தப் பெருமையோடு அது எரிந்து கொண்டிருக்கின்றது என்று.

தனது குடிசை எரிந்து கொள்வதையிட்ட முத்தையாவிடம் எந்த விதமான கவலையையும் காணமுடியவில்லை. மாறாகத் தனது துணிவின் மூலம் தான் இந்த வெற்றிக்கு துணை நின்ற பெருமைதான் அந்த தேசபக்தனிடம் மிகுந்திருந்தது.

குவிந்து கிடந்த இராணுவச் சடலங்கள் ஒரு லொறியிலும் ஆயுதங்கள் இன்னொரு லொறியிலும் அவசர அவசரமாக ஏற்றப்பட்டுக் கொண்டிருந்த போது முத்தையாவைச் சுட்டிக்காட்டிய போராளிகளின் தாக்குதற் பிரிவுத் தளபதி சொன்னார் "முத்தையாண்ணையைப் போல என்றைக்கு எமது மக்கள் எல்லோருமே இந்தப் போரில் பங்கெடுக்கிறார்களோ அன்று தான் எமது தேசம் விடியும்" என்று.

இமயங்கள்

நேற்றுத்தான் அவன் வந்திருந்தான். வந்த வேளை இரவாக இருந்ததால் எதையுமே புரிந்து கொள்ள முடியவில்லை நீண்ட பயணத்தின் கழைப்பு உடலையும் உள்ளத்தையும் அசத்திவிட்டதால் ஏற்பட்ட களைப்பு எதைப் பற்றியுமே ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க முடியாத குழப்பத்தோடு ஏதோ சில வார்த்தைகள் பேசிவிட்டுப்படுக்கையில் வீழ்ந்திருந்த அவனை களைப்போடு வந்த நித்திராதேவி அணைத்துக் கொள்ளத் தவறவில்லை.

காலை விடிந்து இத்தனை நேரமாகி விட்டபோதும் அவனால் எதையுமே கேட்க முடியவில்லை. சுவரோரங்களில் தலைநீட்டிக் கொண்டிருந்த கோரைப்புல்லின் கூர்மையான இதழ்களின் ஒளியின்மையால் மஞ்சளாகத் தெரிந்துகொண்டிருந்தது.

ஒவ்வொரு நாளும் வீடுகூட்டும் போது மனுசியோ பிள்ளைகளோ பிடுங்கிவிட்டுத்தான் கூட்டுவது வழக்கம். ஆனால் இந்தப்பாழும் புல் எப்படியோ முளைத்துக் கொண்டே இருக்கிறது. மனித வாழ்வோடு ஒட்டியிருக்கும் போராட்டம் போலவே

1-1-1998

இந்த மண்ணோடு புல்லும் போராடிக் கொண்டிருக்கிறதோ என்று நீண்ட மௌனத்தைக் கலைத்துவிட்டுக் கேட்டுக் கொண்ட ரவியைப் பார்த்து ரசிகன் சொன்ன வார்த்தைகள்.....

நன்றோரஞ் சொன்னார் மனைகளென்றால் எப்படி இருக்கும்? என்று அந்தக் கிழவி பாடி இரண்டாயிரம் ஆண்டு கழித்து அநுபவிக்கக்கிடைச்சிருக்கு ரவி. இதில் வேறு விசேடமாக இல்லை. நாங்கள் முன்தோற்றி மூத்தகுடிகள் என்று பேசிய பெருமைகள் எல்லாம் எம்மைவிட்டுப்பறந்து போனபின் இன்று கிடைத்திருக்கும் இந்தநிலை நாம் இரண்டாயிரம் ஆண்டு பின் நிற்பதாக மட்டுமல்ல, மூத்தகுடிகளின் அந்தப் பெருமைகளுக்கெல்லாம் பொருந்தாத ஒரு சாதியாக வந்துவிட்டதுதான் புதுமையாக இருக்கின்றது என்று கூறிமுடித்தான் ரசிகன்.

குலராசசிங்கம் என்பது தான் அவனுக்கு பெற்றோர் இட்ட பெயராகும். ஆனால் எந்த விடயத்தையும் ஒரு கலாபூர்வமாக்கிச் செரல்லும் திறமையால் அவனுக்கு அவனது நண்பர்கள் வைத்த பெயர் ரசிகன் என்பதாகும். ரசிகன் என்றால் தான் அவனை எல்லோருக்கும் தெரியும். அந்த ரசனை இன்னமும் .... இந்த இடர்ப்பாடான வாழ்க்கையிலும் அவனைவிட்டுப் போகவில்லை என்பதைப் புரிந்து கொண்டபோது ரவி பேராச்சரியமடைந்தான்.

தமிழரின் அவலம் நிறைந்த இடப்பெயர்வு வாழ்வின் தரிசனங்கள் எல்லாவற்றையும் ஒன்றுதிரட்டி ஔவையின் "வேதாளஞ்சேருமே" என்ற பாடலின் இறுதியடியான நன்றோரஞ் சொன்னார். மனை என்பதன் மூலம் நாசூக்காகப் புலப்படுத்தியமை நினைத்து ரவி பெருமைப்பட்டான்.

"அரசியல் பிழைத்த பாண்டியனால் மதுரை எரிந்ததும், சேரன் செங்குட்டுவன் இமயம் வரை சென்று வென்றதும், கங்கை கடாரம் வரை சென்று வென்ற சோழப் பேரரசு வீழ்ந்ததுவும், சேர். பொன். இராமநாதனைத் தேரிலை இருத்திச்சிங்களவர்கள் தாங்களே இழுத்துக்கொண்டு வந்ததுவரை" எல்லாம் ஒன்றுதிரண்டு வந்து ரவிக்கு ஏதேதோ உரைப்பதாகப்பட்டிருக்க வேண்டும். பெருமைகள் எல்லாம் பழைமையாகிப் போனதுதான் ஆனால் இந்தச் சிறுமைக்கெல்லாம் நன்றோரஞ் சொன்னவர்களாக நம்மினத்தைச்

சுட்டியதை அவனால் எற்கவும் முடியவில்லை. மறுதலிக்கவும் முடியவில்லை. என்றாலும் தான்படுத்தெழுந்த அந்தவீடே அதன் ஆதார அடிநாதமாகக் கண்டபோது தன்னைத்தானே சுதாகரித்துக்கொண்டான் ரவி.

காட்டுக்கம்புகளால் வரிந்தகட்டில் அதற்குகீழே தமது உடமைகளும், ரவி கொண்டுவந்த சூட்கேஸும் இருப்பதையும் அந்தக்கட்டிலின் மீது தான் படுத்தெழும்பியதையும் ஒருகணம் நினைத்துப்பார்த்து ஆயாசப்பட்டான்.

முற்றத்தில் இருந்து பார்க்கும்போதே தெரிந்த அந்தவட்டக்கிணறு, அதைச்சுற்றி நிற்கும் சனக்கூட்டம். குளிப்பவர் ஒருபுறமும் தண்ணீர்குடங்களில் நீர் நிரப்புபவர் ஒருபுறமுமென்று இல்லாமல் அவரவரே தத்தம் வாளிகளைப் போட்டுத் தண்ணீர் எடுத்துச் செல்வதையெல்லாம் பார்த்த ரவி அதிலொரு புதுமையும் உனக்குத் தெரியவில்லையா மச்சான் என்று எதையோ கிளறினான்.

என்ன தோன்ற வேண்டுமென்று நீ எதிர்பார்த்துச் சொன்னாயோ அதுதான் அந்தத்திருமூலரின் "ஒன்றே குலமும் ஒருவனே தேவன்" என்ற வரியும் கணியன்பூங்குன்றனின் யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற அடிகளும் தோன்றித்தான் விட்டது. என்றான் ரசிகன்.

யாழ்ப்பாணத்தில் நடவாத இந்நிகழ்வுகள் எல்லாம் இப்போது வன்னியில் நிகழ்வது நம்மினத்திற்கு நல்லதொரு எதிர்காலக்கட்டியம் தான் என்று ரவி சொன்ன போது, தண்ணீர்க்குடத்தைத் தோளில் சுமந்தவாறு ஒரு பெடியன் சைக்கிளில் செல்வதை ரசிகன் தன் சுட்டுவிரலால் காட்டிவிட்டு அவன் மறைந்தபோது ..... அந்தோனியைத் தெரியுமல்லோ உனக்கு ..... என்றான் ரசிகன்

நல்ல தண்ணீர் கிடைக்காத அருங்கோடையொன்றில் கோயிற்கிணற்றில் தண்ணியள்ளியதற்காக தனது கையொன்றை இழந்துபோன அந்தோனியை மனக்கண்ணில் நிறுத்தமுயன்று தோற்றுப்போனான் ரவி. இருபத்தைந்து முப்பது வருசத்துக்கு முந்திநடந்த அந்த நிகழ்ச்சியை அவன் மறந்துதான் போய்விட்டான்.

நாங்கள் பள்ளிக்கூடம் போறகாலத்திலை பள்ளிக்கூடத்துக்கு முன்னாலை ஆலடிப்பிள்ளைார் கோயில் கிணத்திலை தண்ணி அள்ளிக்கொண்டுபோன அந்தோனிக்கட்டாடியை நினைச்சுப்பார்..... இரண்டாந்தரம் வந்து தண்ணி அள்ளயுக்கை சைவப்புலவற்றை மோன் கந்தவேள் தண்ணி அள்ளிய கையை வெட்டிவிழுத்தியது நினைவிருக்கா? நாங்கள் வளர்ந்த பிறகுதானே அந்தச் சங்கதிகளை அறிந்தனாங்கள். அதுதான் நீ மறந்திருப்பாய் எண்டு தெரிந்ததாலை தான் அவனைக் காட்டினனான். அந்தப் பெடியன் அந்தோனியின் பேரன். இப்ப எல்லோரும் ஒன்றாகவே அள்ளுறம்.

நீண்டநேர யோசனையின் பின் தெரியுது தெரியுது... இப்பதான் நீ சரியாமாட்டிக் கொண்டிருக்கிறாய் என்று சொன்னான் ரவி.

இதிலை ஒண்டுமில்லை. சாதி பேதமில்லாமல் தமிழரெல்லாரையும் அங்கவீனர்களாக்கிக் கொண்டிருக்குது. (சிங்கள) இராணுவம். செல்லடிக்குப் பலர் தமது கைகால்களை இழந்துவிட்டதாக நான் எழுதிய கடிதத்தைத்தானே நீ குறிப்பிட்டாய் இல்லையா?

அதுவுஞ்சரி செல்லப்பா அம்மான்ரை குடும்பம் கிபிர் அடியில் சந்ததிக்குக் கூட ஒருவரில்லாமல் சதைத்துண்டுகளாகப் பொறுக்கி எடுத்த சேதியைப்போல ஐம்பதாயிரம் தமிழர்களுக்குமேல் செத்துப் போனார்களே என்று ஒவ்வொரு தமிழனும் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். என்பதெல்லாம்..... அவன் வார்த்தைகளை முடிக்காமல் இழுத்து நிறுத்திப் பெருமூச்செறிந்தான்.

போரின் கொடுமை என்று மட்டும் சொல்லித்தொலைத்துப் போடுவியோ என்றுதான் நான் நினைச்சன். உண்மையான ஒரு தமிழனாக இப்பதான் நீ மாறியிருக்கிறாய் என்று என்னாலை உணரமுடியுது. என்று ரவி சொன்னான்.....

ரவி சொன்னதைப்புரிந்து கொள்வதற்குள் அவனுள் பொங்கி வழிந்து கொண்டிருந்த உணர்வு பீறிக்கொண்டுவரவே போர் நல்லதென்று சொல்கிறாயா என்று ரசிகன் அவசரப்பட்டான்.

"யானை பிழைத்த வேல் எந்தல் இனிது" எனறு வள்ளுவனே போரைக் குறித்துப்பாடியிருக்கும்போது நான் சொல்லித்தான் தெரியவேணுமென்று இல்லை. இருந்தாலும் அணுகுண்டு வெடித்த நாடு யப்பான் முழு உலகத்தையுமே அதிசயிக்க வைத்து. முன்னுக்கு நிக்குது பார். குண்டு வெடிக்காத நாடு இந்தியா கூனிக் குறுகி நிற்குது. போதாமைக்கு அரசியல் வியாபாரத்திற்கு பெண்களை விலைப் பொருளாக்கிக் கொண்டு நிற்குது. தமிழீமும் யாப்பானைப்போலக் குண்டுகளைச் சுமக்குது. நாளை யப்பானைவிட ஒருபடி முன்னே நிற்கப் போவதும் தமிழீழம் தான். ஒவ்வொரு குண்டு வெடிப்பும் தமிழீழத்தை உறுதியின் உறைவிடமாக்கிக் கொண்டு தானே இருக்குது. இது ஒரு பெரும் வரலாற்றுத்திருப்பம். எல்லாளன் ஆண்ட நாடு. இப்போது மீண்டும் ஒரு எல்லாளனைப் பெற்றுவிட்டது. இல்லையா? என்று ரவி நிறுத்தியபோது..... சரிசரி... உங்கடை கதாப்பிரசங்கத்தை பிறகு நடத்துங்கோ. இப்ப ரீயைக் குடியுங்கோ என்றவாறு ரசிகனின் மனைவி ரேவதி தேனீரும் கையுமாக வந்து நின்றாள்.

வன்னியின் காலைக்குளிரைத்தேனீர் விரட்டியடித்தது. ரசிகனின் மகள் உத்தமி பள்ளிக்கூடம் செல்வதற்கான ஆயத்தங்களில் இறங்கியபோது ரசிகனும் ரவியுமாக சைக்கிளில் ஏறிக்கொண்டனர்.

இரண்டு, மூன்று ஒழுங்கைகள் கடந்து நோட்டில் வந்து மிதந்தபோது "என்னப்பா இது தோரணங்கள் கருங்கொடிகள் இல்லாத இடங்களை இங்கே காண்பதுவும் கண்ணீர் அஞ்சலிச் சுவரொட்டிகள் ஒட்டாத இடங்களையும் காண்பது முடியாது போலிருக்கே" என்று தன் ஆச்சரியத்தை வெளியிட்டான்.

அவசரப்படாதை இன்னுங்கொஞ்சத்தூரம் போனால் சங்கீதன் குடியிருப்பு.... அதை நீ பார்த்தால் ... நீ திரும்பிப் பிரான்சுக்குப் போகமாட்டாய் என்றான். ஒரே நாளில் பன்னிரண்டு பேரைப் பலிகொண்டது. சிங்களக் கிபிர்கள். அத்தோடு நாலைஞ்சு பேர் கால்கை இல்லாமல் உயிர்தப்பினவை. அதைச்சொல்லும்போது ரசிகனின் மனதில் அந்தக்கொடுமை தோன்றி விரிந்தது.

புலராத பொழுதின் பனித்திரையால் மூடிக்கிடந்த அதிகாலைப்பொழுது குடியிருப்புத்தொடக்கச்சந்தியிலும், குடியிருப்பிலும் இரண்டுகுண்டுகளை உறுமிவிரைந்த கிபிர்கள் துப்பிவிட்டபோது எழுந்த சத்தம் அயற்கிராமங் களையெல்லாம் துயில்கலைத் தெழுப்பியது. அவலக்குரல்கள் எங்கும் எதிரொலித்து பிலாக்கணமாக ஒலித்தது. அந்தக்கணப்பொழுது மனிதனைப் பார்த்துக் கேலி செய்தது. தப்பியெழுந்தவர்கள் வீடுகளைவிட்டு வெளியேவந்து குப்புறப்படுத்துக்கிடந்தனர். வேர்க்க விறுவிறுக்க மனதால்அவர்கள் சுமந்த சுமைகளை அளக்க இனிமேல் தான் ஏதாவதொருகருவி கண்டு பிடிக்க வேண்டும். காலொடிந்த ஆட்டுக்குட்டிக்காகக் கண்ணீர்விட்ட புத்தனின் பேரால் ஆட்சிபுரியும் அரசப்படைகளின் கிபிர் இரண்டும் தம் கருணையை தூக்கத்தில் புரண்டு கிடந்த அப்பாவிமக்கள்மீது சொரிந்துவிட்டு மிச்சம் பொழிவதற்குரிய இலக்கை நாடிச்சென்றுவிட்டபோது எங்கும் ஒரே புகைமண்டலமாக..... பிலாக்கணப் பேரொலியாகித் தொடர்ந்து கொண்டபோது விமானங்கள் சென்றுவிட்டன என்று உறுதிப்படுத்திக் கொண்டு ஒருவரோடு ஒருவராக அந்த இடங்களுக்கு விரைந்தனர்.

யார் யார்? எப்படி.. எப்படி? செல்லப்பர் அம்மான் என்று அனைவராலும் அழைக்கப்பட்ட செல்லப்பு வீட்டில் ஒருகுண்டு விழுந்து வெடித்திருந்தது. வீட்டிற்குள் படுத்திருந்த பத்துப்பேர் உருவமே இல்லாது சிதிலமாக்கப்பட்டு இறந்து போயினர். குடியிருப்பிற்குள் வீழ்ந்து வெடித்த இடத்தில் இருவர் செத்துப்போக நால்வர் அங்கமிழந்து புலம்பியவாறு கிடந்தனர். எங்கிருந்தோ விரைந்து வந்த ஒரு வாகனம் காயப்பட்ட நால்வரையும் ஏற்றிக்கொண்டு விரைந்து கொண்டது.

அன்று பார்த்த அந்தக்காட்சியை இப்போது பார்ப்பது போல பார்த்துக் கொண்டே ரசிகன் சைக்கிளை நிறுத்தினான்.

தீநாக்குகளால் கருக்கி அழிந்து சிதைந்த ஓவியமாகக்கிடந்த அந்தக் காணியருகில் ரசிகனும், ரவியும் இறங்கினர்.

செல்லப்பர் ஓடித்திரிந்த சோமசெட்கார் எரிந்து துருப்பிடித்த தகரமாக அந்தக்காணியின் காவல்செய்யும் கத்தரித்தோட்ட வெருளியைப் போல நின்றது. நெல்லிக்காய் மூடை சிதறியது போல் பென்னம்பெரிய அந்தவீடு துணிக்கைகளாகச் சிதறிக்கிடந்தது.

இதுவரை படத்திலும் கடிதங்களிலும் பத்திரிகைகளிலும் கண்ட காட்சிகளை நேரில் பார்த்த ரவி அதிர்ந்துதான் போனான்.

ரவி இவை நடந்து ஆறுமாசங்கள் முடிந்துவிட்டன தான். ஆனாலும் அன்றைய அந்த ரணநெடில்மணம் இப்போதும் எனதுமூக்கிற்குள் மணக்கின்றது. மொத்தமாக இந்த இடத்தில் பத்து மனிதர்கள் செத்தது உண்மை.... ஆனால் பொறுக்கியெடுத்த தசைத்துண்டங்கள் மூன்று. நான்கு பெட்டிக்குள் மட்டுமே அடங்கி இருந்தது என்றால் பாரேன் என்று ரசிகன் சொன்னபோது..... இதுதான் தமிழீழத்தின் உதயச்சின்னம் என்றால்.....ரவியால் வார்த்தைகளை முடிக்கமுடியாத போது அவனையும் மீறி அவனது கண்களிலிருந்து நீர் வெளியானது.

ரவியின் நிலையைப்புரிந்த ரசிகன் வீட்டை போவம் நாளைக்கு மிச்சம் என்றவாறு சைக்கிளை மிதித்தான்.

நீண்டநேர மௌனத்தின் பின் ரவி கேட்டான்..... நீயிருந்த கனகராசன் குளவீடும்.....

ஒண்டுக்குப்பின் ஒண்டாக நாலுசெல் விழுந்து வெடித்தது. துரதிஸ்டவசமாக நாங்கள் எல்லோரும் அன்று கோவிலில் பொங்கிக்கொண்டு நின்றோம் அன்று நாமும் வீட்டில் இருந்திருந்தால் செல்லப்பா அம்மான்ரை கதைபோல எங்கடை கதையும் முடிஞ்சிருக்கும். இந்தக் கொடுமைகளைத் தினம் தினம் பார்க்கத் துடிதுடிக்கத் தேவையேற்பட்டிருக்காதுதானே என்று ரசிகன் சொன்னபோது.....

அப்பா.....! அதுக்காகத்தான் தூரதிஷ்டம் என்றாயா?

பின்னை எப்படியப்பா சொல்றது. ஒவ்வொருநாளும் சாவைக்கண்டும் கேட்டும் இப்ப எங்களுக்கு சாவு ஒரு பெரிய விசயமாகத் தெரிவதில்லை. சாவு கீச்சுமாச்சுத் தம்பளம் விளையாட்டு மாதிரியாயிட்டுது. களத்தில் வீரச்சாசைத்தழுவிக் கொள்பவர்களைவிட அதிகமாக அநியாயச்சாவு செத்துக்கொண்டிருப்பதெல்லாம் அப்பாவிப் பொதுமக்கள் தான்.

வரலாறு அப்படிப்பட்டதுதான். சுதந்திரத்தைப் பெற வழிகாண்பதும் போராடுவதும் மட்டும் தான் வீரர்களின் செயல்.

ஆனால் சுதந்திரத்தை அநுபவிப்பவர்கள் மக்கள்தான். எனவே சுதந்திரத்திற்கான போரில் பொதுமக்களே அதிகம். விலை கொடுத்தல் இழந்துபோதல் தவிர்க்க முடியாததுதான்.

வீட்டிற்குவந்து சேர்ந்தபோது ரேவதி காலைச் சாப்பாட்டிற்குக் காத்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

சாப்பிடுவமா? ரேவதிதான் கேட்டாள்

ரவி ஒன்றுமே பேசவில்லை.

ஏன் ரவி சாப்பிட்டுவிட்டு மிச்சத்தைப்பற்றி யோசிக்கலாம். வாவா என்று ரவியின் நிலையைப் புரிந்துகொண்டது போல ரசிகன் துரிதப்படுத்தினான்.

கொஞ்சம் பொறுத்துச்சாப்பிடலாமெண்டு பார்த்தன்..... என்னாலை நீயும் சாப்பிடாமல் இருக்க உன்னாலை ரேவதியக்கா இருக்க சே..... வேண்டாமப்பா... சரி சாப்பிடுவம்.

எல்லாரும் ஒன்றாகச் சாப்பிட்டனர்.

நீண்டகால இடைவெளிக்குப்பின் இந்தச்சாப்பாடு எத்தினை கதையள் சொல்லுது தெரியுமா? ரசிகன் தான் கேட்டான்.

அந்த நாட்களா? ஓ! ... மேதினம்! ஊர்வலம்,.... சே! தமிழர்கள் சோனகர்கள் சிங்களவர்கள் மூன்று பகுதியும் ஒன்றாகக்கூடி கோஷங்கள் எழுப்பி ஊர்வலம் போனோம். சமவுடமைப்புரட்சி வரவேணுமென்று புதுமைபேசிப் புரண்டோம். கூட்டம் பேசிக்குதூகலித்தோம். சே!. அந்த ஆட்டங்கள் எல்லாம் நாட்டமிழந்து போக நேர்ந்தது.! அந்த இனிய நாட்களைப் பகைமைப்பட வைத்தது யார்?

சிங்களம் மட்டும்தான் மொழியென்றார்கள். பௌத்தம் தான் மதமென்றார்கள். இத்தனையும் செய்தவர்களே பிரிந்துபோகவென விரட்டி விரட்டியடிக்கிறார்கள். நாம் வெல்வோம்! விரைவில்! ரவி உணர்ச்சியோடு தன்னை மறந்து போன அந்த நாட்களின் நினைவை மீட்டுக்கொண்டுவந்து நிறுத்திவிட்டுச் சொன்னான் தமிழீழப் புரட்சியை நாம் கண்டுகளிக்கப்போபவர்கள் என்று.

எனக்கு அந்த நம்பிக்கை குறைந்துகொண்டு வருகிறது,. ரசிகன் வேதனையோடு சொன்னதைக்கேட்டு ரவி விக்கித்துத்தான் போனான்.

ஏன் ரவி அப்படிச்சொல்லிட்டே. யாழ்ப்பாணத்தைக் காப்பாத்திப்போட்டம் என்று சொல்லிக் கொண்டு எத்தினைபேரை முடிச்சிட்டாங்கள். செம்மணியிலை மட்டும் நானூறு பேரைப் புசைச்சிட்டான். காணாமல் போன பட்டியலிலை முதல்கணக்கு அறுநூறு இதுகளுக்குப் பிறகும் உலப்பொலிசு வேலை பார்க்கிற அமெரிக்காதானே இஞ்சை எங்களுக்கு எதிராகப் பயிற்சியும் கொடுத்து சண்டைத் தொடர் ஆதரவாக..... சே..... "அமெரிக்கர்கள் எங்கெல்லாம் இருக்கிறார்களோ அங்கெல்லாம் குண்டுகள் இருக்கும்" என்று சேகுவரா சொன்னது எவ்வளவு உண்மை. ரசிகன் உணர்ச்சி வயப்பட்டுத்தான் பேசினான்.

ம்..... உணர்ச்சியாலை உன்னை சிலவேளைகளில் இழந்துவிடுகிறாய். வியட்நாமுக்கும் அமெரிக்கப்படை போனதுதானே!

"ஏன் எங்கடை பெடியளிலை உங்களுக்கும் நம்பிக்கை இல்லையே" என்று ரேவதி இடைமறித்த போது, ரசிகன் சிரித்தான்.

சிரிப்பின் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட ரவி என்ன எங்களையா என்னையா சோதிக்கிறாய். என்று கேட்டபோது ரேவதி குழம்பித்தான் போனாள். இருவரும் நீண்டகால நண்பர்கள் எனினும் எனிந்தப்புதிர்ப் பேச்சுக்களோ? என்னையா? எங்களையா? என்பதிலுள்ள அந்தப்பன்மைக்குப் பொருள் என்ன? என்பதைப் புரிந்து கொள்ளமுடியாவிட்டாலும் கேட்கலாமா?

ரேவதியின் மனம் நனவோடை மயக்கதில் சஞ்சரித்துக் கொள்ளத் தொடங்கிவிட்டது.

பள்ளிநாட்கள் எல்லோரது வாழ்விலும் பசுமையான நாட்கள் அவைதான். அந்த நாட்களின் நினைவுகளுக்குத்தான் இந்தப்புதிர் தூபமிட்டதுபோலும், அந்த நாட்களின் அந்த இனிய காட்சிகளை இப்போது கண்முன் கண்டுகொண்டிருந்தாள்.

காரே வருகுது. என்று ரசிகன் கேட்பான். ரவியும் காரும் வருகுது காரிலை றேயும் வருகுது, என்று சொல்லிச்சிரித்துக்கொண்டு போவது யாருக்கும் புரியாத புதிராத இருக்கும். எத்தனை சனக்கூட்டமான இடத்திலும் நானும் ரேகாவும் வந்து கொள்வதைக் கண்டால் இப்படிச் சொல்லிக் கதைத்துக் கொண்டே சென்றி விடுவார்கள்.

ரேகாவும் தன் நெஞ்சத்தின் இனிய நினைவுகளைச் சுமந்து கொண்டுவருவாள். புன்னகையுடன் நான்மட்டுமென்ன அந்த நினைவுகள் இல்லாத வெறும் பதுமையா என்ன? எனது நினைவுகள் ரேகாவின் நினைவுகளை விட உச்சமானதாகவும் உரிமையானதாகவுமே தெரியும். ரசிகன் எனக்கு உறவின் மூலம் கிடைத்த அத்தான் ஆனால் நான் சிரிக்கவேணுமென்றுகூட இல்லையடி. ஆனால் நீயும் ரவியும் நட்பால் மலர்ந்து ஒன்றாகத்துடித்துக்கொண்டிப்பவர்கள். உங்கள் நினைப்பு ஈடேறுமோ, ஈடேறாதோ எனது நினைப்பு நிச்சயமானது என்று ரேகாவிற்கு ரேவதி சொல்வாள் மிடுக்காக.

உனக்கு நான் சளைத்தவளல்ல என்பதைக் காட்டுவது போல, உனக்கு மட்டுமல்ல ரேவதி எனக்கும் அவர் அத்தான்தானடி. இருந்துதான் பாரேன். செத்தாலும் சேர்ந்தே சாவதென்று முத்தான முடிவோடுதான் எங்கள் பயணம் தொடங்கியது என்பாள். அருகில் வருபவர்களுக்குக்கூட கேட்காத அளவிற்குக் காதும்காதும் வைத்த மாதிரிக் கதைத்து மகிழ்ந்த நாட்கள்.

என்னைக்கண்டதும் "காரே வருகுது காரே வருகுது என்று சொல்ற உன்ரை ரசிகனுக்கு ஒரு கண்ணாடி வாங்கிக்குடடி" என்று ரேகா சொன்ன போது "நீ கறுப்பாகவும் நான் சிவப்பாகவும் இருப்பதைத்தாண்டி அவர் இணைத்து இப்பிடிச் சொல்வதாக ஒருநாள் சொன்னாரடி. நான் உனக்கு அதைச்சொல்லக்கூடாது என்றுதான் விட்டிருந்தேன் என்று சொல்லி காக்கா கறுப்பு,... அதுக்காக அதன் முதல் எழுத்தையும் ரெட் என்ற ஆங்கிலச் சொல்லை நினைத்தே ரேயையும் சேர்த்து காரே என்று சொல்வதாகச் சொல்லிச்சிரித்த போது அது சரிதான் கறுப்புதான் "கா" அதன் குறியீடுதான் ..... நீ சிவப்புத்தான் "ரே" அதன் குறிதான் சிலவேளை இந்த சிவப்பை முன்னுக்கும் கறுப்பைப் பின்னுக்கும் சொல்ல நினைத்தாரெண்டு சொல்லிவிடுவாயோ என்று மிகச் சாவதானமாகச்

சொல்லி ரேகா சிரித்த போது அவள் கன்னக்குழியில் என்சுட்டுவிரலால் நான் தட்டிக்கொண்டு இது எப்ப நிரம்பும் என்றேன். அவளை மடக்கி விடும் நினைப்பில். ரேகா..... ஓ... அந்த ஒத்திகையிலும் நீ இறங்கிவிட்டியா? என்று ஒரு கேள்வியைப் போட்டு என்னைத் திகைக்க வைத்தவள் ரேகா.

அவருக்கு இதெல்லாம் நான் சொல்லிக்கதைத்ததும் அவர் மனதில் மறதியே இல்லாதவர்தானே. அந்த நினைவுகளை மீட்டு ரவியை ரேகாவுடன் சேர்த்துக் கேலி செய்ய நினைத்து இப்படிப்பன்மையில் சொன்னாரோ என்று ரேவதி ஒரு முடிவுக்கு வந்து நின்றபோது, ரவியின் முகத்தில் ஏதோ ஒருவாட்டம் கருமுகில் ஓட்டத்தூடு தெரியும் நிலவின் தோற்றமாகி மீண்டதை ரேவதி கவனித்தாள்.

ரவியின் முகத்தில் எழுந்த அந்த மாற்றம் இதுவரையில் ரசிகனுக்கோ ரேவதிக்கோ தெரியாத பக்கம் என்பதை அவன் மனம் எண்ணி அந்தப் பக்கத்தின் ஓரத்தில் மனதை வைத்தான். அந்த ஓரப்பாதை கடலில் கரைமீது தாவி மோதிச்சிதறி மீண்டும் மீணடுவரும் அலைபோல மனப்பொந்துள் சென்று மறைந்து கொண்டு பத்து ஆண்டுகளை விழுங்கிவிட்டதே. ..... என்ற நினைப்பில் அவன்தான் எழுதிய அந்தச் சரித்திரமான கடிதத்தை மனதுள் அசைபோட்டுப்படித்துக் கொண்டிருந்தான்.

என் இனிய ரேகா உன் கண்ணீர் மடல் கையில் மட்டும் கிடைக்காது மனதில் தைக்கவேண்டுமென்று நீ எண்ணியது போலவே தைத்துவிட்டது. என்னசெய்வது காலில் முள்குத்தினால் அதை நாம் உடனே எடுத்துவிடலாம். அதனால் ஏற்பட்ட வலியையும் தீர்த்துக்கொள்ளலாம். ஆனால் மனதில் குத்திய உன்கணையைப் பிடுங்கி எறியவும் முடியவில்லை. அந்த வலிக்கு மருந்தும் வைத்தியரும் அருகில் இல்லை. அதனால் நான் இங்கு வந்த நோக்கம் நிறைவேறும் வரை அந்தவலியைத் தாங்கிக்கொள்வதைத்தவிர வேறு வழியில்லை.

"எனக்கும் உனக்கும் ஏற்பட்ட காதல் தெய்வீகக் காதலல்ல" இந்த வரியைப் படித்தவுடன் நீ துடித்துப் போவாய். நமது காதல் "இலட்சியக்காதல்" இந்த வரிகள் முன் துடிப்புகளுக்கு ஒத்தடம்தரும்.

வலி நீங்கிவிடும். இல்லையா? உனக்கு எப்போதுமே வலியைவரவைக்கப் போவதில்லை. ஆனால் தெய்வீகக்காதல் காதலாகவே காதலர்களை வாழவைக்கும். இணைத்து விடாது. காதல் சாம்ராச்சியங்களைக் குறித்து நிற்கும் காவியங்கள் அதையே போதிக்கின்றன. அம்பிகாபதி அமராவதியின் காதல், ரோமியோ யூலியட், லைலாமஜ்னு இன்னும் எத்தனையோ..... இவையெல்லாம் தெய்வீகக் காதலானதால் தான் அவர்களை இணைத்து வைக்கவில்லை. ஆனால் இலட்சியக்காதல் குறித்தலட்சியம் நிறைவேறியதும் அந்தக்காதல்களை இணைத்துவிடும். எனவே இலட்சியக்காதலர்கள் இணைந்து வாழ்வார்கள் என்பதை நீ தெரிந்து கொண்டால் அந்த நினைவுகளோடு ஒரு சில ஆண்டல்ல ஒரு சகாப்தமே வாழ்ந்து விடலாம். நான் சகாப்த வாழ்வு வாழும் நம்பிக்கையோடு இருப்பதுபோல் நீயும் இரு. சகாப்தமல்ல... ஒரு தசாப்தம் மட்டும் இருந்தால் போதும் என்றேன். நீயோ பெண்விடுதலைக்குப் போராடப்போவதாய் சொன்னாய். மகிழ்ந்து சொன்னேன். "மண்விடுதலை இன்றிப் பெண்விடுதலை பெறமுடியாது." அதனால்தான் எனது தாயகக்காதலை முன்வைத்துள்ளேன் என்று எழுதிய அந்தக்கடிதம் பற்றிய சொற்கள் தூரத்திலிருந்து மெல்ல மெல்ல அருகே வருவது தெரிந்து கொண்டேன். நீ இதைத் தெரிந்துகொள்ளவில்லை என்பதைக்காட்டிவிட்ட ரீதியிலும் புரிந்துகொள்ள மறத்துவிட்டாய். என்பதையே காட்டிவிட்டாய்.

அந்தக்கடிதத்தின் முடிவுக்குப்பின் என்னதான் முடிவென்றறியாத உன் உயிர்நண்பர் ரசிகன்கூட என் மனவேதனையைத் தான் நீவிவிட்டுக்கொள்ளக்கூடாது என்பது போலத்தானே. எதிலும் தலையிடாது ஒதுங்கிக்கொண்டு விட்டதையும், நான் புரியாது இருப்பதாகப் பிழையான ஒரு கண்ணோட்டத்திலேயே எல்லோரும் இருக்க வெளிநாட்டு வாழ்க்கைக்காரக் குடும்பங்களே காரணமாகிவிட்டனர்.

வெளிநாடுகளுக்குச் சென்று உழைப்பால் உயர்ந்துவிட்ட பல குடும்பங்களின் மனோநிலை மாற்றங்களும் காரணமானது தான். யார் யாரிடமோ உதவிபெற்று வெளிநாடுகளுக்கு வந்த குடும்பங்கள் தமது இந்த உயர்ச்சிக்குத் துணையானவர்களை எல்லாம் ஏணிபோலக்கூட எண்ணிப்பார்க்காது பெரும் கனவான் வாழ்க்கை வாழ்வதைக் கேள்விப்பட்டுத் துயரப்பட்டிருப்பதை அறிந்த என்னைப்

போலவே ரசிகனும் அறிந்து கொண்டதால் அவன் என்னையும் அந்தப்பட்டியலில் சேர்த்துக்கொண்டு இருந்தவன் தானே. அவனே இப்படி ஆனபோது நீ இப்படி ஆகிவிட்டதில் என்ன தப்பு இருக்கப் போகிறது? வெளிநாடுகளில் இருப்பவர்களிடம் இங்கு (தமிழீழத்தில்) இருப்பவர்கள் எதிர்பார்ப்பது தன்னையும் வெளிநாட்டிற்கு எடுத்தல் வேண்டும். அல்லது அதற்குப்பதிலாக (பணஉதவி) கொடுத்தல் என்ற இரண்டுமே என்பதை நன்றாகத் தெரிந்திருந்தாலும் அவன் அரச ஊழியன் என்பதாலும் அவனுக்கு இடப்பெயர்வால் ஏற்பட்ட இழப்பின் நெருக்கடிக்கு மட்டுமே உதவவேண்டிய தேவையைத்தவிர வேறு ஏதும் அவனுக்கும் தேவைப்படவில்லை, என்பதாலும், நான் என் நண்பனுக்கு கொடுத்தலை மட்டும் செய்துவிட்டுத் திருப்திப்பட்ட காரணம் இனிமேல்தான் புரிந்துகொள்ள வாய்ப்பாகும். அதேபோல ரேகாவை நாளை நான் சந்திக்கும்போது அவள் அடையப்போகும் எதிர்பாராத தாக்கத்தில் முக்குளித்து விழிபிதுக்கத்தான் வேண்டிவருமென்பதை ரவி எண்ணியபோது ரசிகன் மட்டும் ஏதோ ஒரு அச்சத்தால் தாக்குண்டு விட்டவன் போலத் தவிப்பதை உணர்த்திக் கொண்டிருந்தான்.

ரவி பல்கலைக்கழகத் தரப்படுத்தலால் வெளியே நின்று ஆரம்பகால கலவரத்தால் நிகழ்ந்த கடையடைப்புகளில் ஈடுபட்டுக்கொண்டு நிற்கும்போது ரேகா பல்கலைக்கழகத்திற்குச் சென்று தன்னை உயர்த்திக்கொண்டு அங்கேயே ரியூட்டராகக் கற்பித்ததுவரை நிகழ்ந்தவற்றையும், ரேகாவைப் பெண்கேட்டுச் சென்று ஏமாந்து போனவர்களையும் ரேகா ஒருவித வெறுப்புணர்வில் வாழ்ந்து, பின் பெண்விடுதலை சார்ந்த அமைப்புக்களோடு சேர்ந்து கருத்துரை வழங்கிய பத்திரிகைகளில் சலசலப்பு ஏற்படுத்தியதுவரை எல்லாம் ரவி அறிந்திருப்பான் என்றதுவரை, உணர்ந்திருந்தும் அவனுக்கு அவளைப்பற்றி ஒரு கடிதம்கூட எழுதியதேயில்லை. அவனும் கேட்காது விட்டுவிட்டதால் எனக்கு எழுதவேண்டிய தேவையும் இருக்கவில்லை.

ஆசிரியப்பயிற்சி முடித்து வெளியேறிய போது வவுனியா மகா வித்தியாலத்தில் நியமனம் பெற்று வந்ததிலிருந்து ரேகாவிற்கும் எமக்குமிடையே தொடர்புகள் குறைந்து குறைந்து தபால் போக்குவரத்து தடைகளோடு இடைவெளி இன்னுமின்னுமென நீண்டு கொண்டிருந்தது.

அந்தவேளைகளில் இங்கு ஏற்பட்ட துயரங்கள், வெளிநாட்டிற்குச் சென்றவர்கள் புத்திசாலிகள் தான் என்றுகூட எண்ணவைத்தது. வவுனியாப்பகுதியின் இராணுவ நடவடிக்கையின் அதிகரித்த தொல்லைகள் என்னை நிலைகுலைய வைத்ததால், கனராசன்குளம் மகா வித்தியாலயத்திற்கு நானாகவே இடமாற்றம் கோரிப் பெற்றுக்கனகராசன் குளத்தில் வாழ்ந்து கொண்டிருந்தவேளை ஓரளவு நிம்மதியாகத்தான் இருந்தோம்.

காலம் தனது மாற்றத்தைத்தானே தீர்மானித்துவிடும்போது நமது செயற்பாடுகள் எதையுமே செய்ய வலுவற்றுப்போய் விடுகிறது. இதனைத்தான் ''வரலாறு தன்னை மீட்டுக்கொள்ளுமென்று சொன்னானோ அந்தப் பேரறிஞன்?''

யாழ்ப்பாணத்தில் அரசின் பெருத்தபடையெடுப்பு ஆரம்பமானது. யாழ்ப்பாணத்திலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து வன்னிப்பகுதிக்கு வரவேண்டிய தேவையின் கட்டாயம் உணரப்பட்டது. இரவோடு இரவாகக் கிளாலிக்கடல்தாண்டி சிரமங்கள்கூட யாழ்ப்பாண மக்களுக்குப்பெரும் துன்பத்தில் துன்பமே என்பதை உணர்ந்து கொண்டு ரேகா குடும்பத்தினரை தேடினோம்.

ரேகா போராட்டத்தில் இணைந்துவிட்டதாக அறியமுடிந்ததே தவிர அவர்களது குடும்பத்தின் நிலையை அறியமுடியவில்லை.

இந்தியப்படைகள் இங்குவந்த காலக்கெடுபிடிகளைவிட மோசமான கெடுபிடிகள் சித்தரவதைகள் எல்லாம் அரங்கேற்றமே தெரியாது புதைகுழிகளை நிரப்பிக் கொண்டிருந்தது. அந்தப் பொல்லாத வேளையில் கிளாலிக்கடலோர முற்றுகையின் போது அரசபடைகளின் வெறித்தமான விமானக்குண்டு வீச்சில் பலியான பலரில் ரேகா குடும்பத்தினரின் பெயர்களும் வெளியாகியிருந்தன. இந்தக் கொடுமையான நாட்களையெண்ணி ரேவதி பலநாட்கள் இளவுகாத்திருந்து தனது நட்பின் நெருக்கத்தைப்புலப்படுதினாள். அந்த நாட்களின் நினைவுகள் ரவியின் வரவோடு மீட்கப்படப்போகின்றது. இவை பற்றி நான் எப்படிச் சொல்வது? என்னவென்று சொல்வது? என்பதை நினைத்துதான் நான் குழம்பிக்கொண்டிருக்கிறேன் என்பதை ரவி புரிந்து கொண்டானோ இல்லையோ சொல்லமுடியாமலிருக்கின்றதோ என்ற நினைவால்தான்

ரசிகன் துடித்துக்கொண்டிருந்தான் என்பது அவனுக்கு மட்டுமே தெரியும்.

மூவரது நினைவுகளும் காலக்கொடுமைப் படலத்தில் தான் நீவிநீவி நீண்ட மௌனமாகி நின்றது. மௌனத்தில் விரிந்த பேரமைதியை குலைப்பது யார்? அமைதியே வாவென்று கூவியழைத்துப் பெறமுடியுமா? அல்லது அமைதிதானே எமது பரிதாப நிலைக்கு இரங்கி எம்மை வந்தணைத்துக் கொள்ளுமா? எங்கள் தேசமே அமைதியை இழந்து ஆண்டுகள் பலவாகினவே. அதை நீ அறிய வேணுமேயென்று விண்ணப்பம் செய்வதுபோல அந்த அல்பம், புத்தகங்களின் மீது கிடந்து சிரிப்பதைக் கண்ட ரசிகன் அப்படியே அதை ரவியின் கைகளில் வைத்தான்.

மனிதர்கள் மூலம் அறியமுடியாத வரலாற்று தகவல்களை சில பொருட்களிடமிருந்து இன்று அறிந்து கொள்கின்றோமே! அன்று எமது மூதாதையர்கள் விட்டுச்சென்ற சுவடுகளைக்கூட அந்நியப்படையெடுப்பால் அழிக்கபட்டு ஆதாரமற்ற நிலையில் வரலாறு குழம்பிக்கிடக்கின்றநிலை எதிர்காலத்தில் வரக்கூடாது. என்ற திட்டத்தை மனதில் கொண்டுதான் இந்த அல்பம் தயாரிக்கபட்டதோ? அல்லது ஒவ்வொரு வீட்டிலும் வைத்திருப்பது போன்ற வெளிநாட்டுக்காட்சிகளும் படங்களும் தானோ என்று கேட்டுக் கொண்டே அந்த அல்பத்தைப்புரட்டினான்.

சூரிகதிர் 1 என்ற சிவப்பு வர்ண எழுத்துக்கள் கண்களில் பட்டன. அந்த எழுத்தின் கீழே கருந்தாள்போல வெறும் இருளை உணர்த்தும் பாவனையில் கரியபடமொன்று இருந்தது. அதன்கீழ் "கோட்டான்கள் குடிபுகுந்தபோது காக்கைகள் தமது கூடுகளைவிட்டு வெளியேறிய நாள்" என்று ஒரு வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது.

தமிழர்களின் குறியீடாக காக்கைகளையும், சிங்களப் பெரும்படைகளின் குறியீடாக கோட்டான்களையும் ஒப்பிட்டு இருந்தமையை ரவியால் புரிந்துகொள்வது சிரமாக இருக்கவில்லை. தமிழீழத்தின் ஆதிக்குடிகள் தமிழர்கள் தான் என்பதும், சிங்கள இனவெறியாளர்கள் காலத்திற்குகாலம் இப்படித்தான் தமிழர்களை அழித்துக் கொள்கிறார்கள் என்பதற்கான விளக்கத்தை இச்சிறு உருவகத்தின் மூலம் ரசிகன் வெளிப்படுத்தியிருந்தமையை பெரிதும்

ரசித்துக்கொண்ட ரவி அடுத்த பக்கத்தை புரட்டி படத்தில் இடைவெளிகளே அற்ற மக்கள் நெரிசல் மிகுந்த ஒரு காட்சி. ஐந்துலட்சம் மக்களின் நகர்வென்றால் சும்மாவா? ஒரு படத்தின் அதை அடக்கிவிட முடியுமா? படத்தின் கீழே "வெள்ளம் போல் தமிழர் கூட்டம் வீரம்கொள் கூட்டம் அன்னார் உடலினால் பலர்தாமெனினும் உள்ளத்தாலொருவரன்றோ" என்ற பாரதிதாசனின் கவிதா வரிகள் பாரதிதாசனே நேரில் நின்று பாடுவதாக ஒரு பிரமை ரவியின் மனதில் பட்டிருக்கவேண்டும். சில விநாடிகள் மௌனமாக இருந்த ரவியின் விழிகளிலிருந்து வீழ்ந்த கண்ணீர்த்துளிகள் அல்பத்தில் பட்டுத்தெறித்தது. மறுபக்கத்தில் அதே கூட்டம் பாலம் ஒன்றினுள் நெரிபட்டு அசையாது நிற்பது போன்ற கட்சியும் மனதை நெருடியது. இருந்த நாவற்குழிபாலம் என்ற ஒரே வழிதான். அதன இருபுறமும் நீர் நிறைந்த கடல்நீரேரி ஆழமான பகுதி வடக்கே ஒருமைல் தூரத்தில் சில இடங்களில் திட்டுத்திட்டாக இருந்த நீர் குறைந்த இடத்தாலும் சிலர் நடந்து வந்ததாக பத்திரிரைகளில் முன்னர் பார்த்ததை நினைவுபடுத்தி பார்த்துக் கொண்டான் ரவி. ஐந்து இலட்சம் மக்களையும் அந்தப்பாலம் எப்படி ஒரே இரவில் கடத்தி இருக்கும்...? அப்பாடா! என்றவாறு இவையெல்லாம் கற்பனைக்கு எட்டாத அற்புதங்கள். வரலாற்றுக் கொடுமைகள், என்று வாய்விட்டுப் புசத்தி விட்டபோது விரல்கள் அடுத்த தரிசனத்திற்காக மறுபக்கத்தைப் புரட்டிக் கொண்டது. நெரிசல் மிகுதியாலோ மூச்சுத்திணறலாலோ செத்து வீதியின் ஓரத்தில் தேடுவாரற்றுக் கிடந்த சில மனிதச் சடலங்கள்.. விரல்கள் விழிகளின் கலக்கத்தைப் புரிந்து கொண்டது போல் விரைந்து மறுபக்கம் மறுமக்கமென்று தட்டிக் கொண்டிருந்தது. இந்தப்படம் ஏன் கறுப்பாகவும் புள்ளி புள்ளியாகவும் தெரிகிறது... ஓ!..... அந்தக் கொடியதுயர்க் காட்சியைக் கண்டு வானம் அழுதிருக்கிறது. அதுதான் குடைகளாக ஒவ்வொருவர் தலைக்கும் மேல் விரிந்து வர்ணச்சிறகாட்டம் தெரிகிறதோ? ஒரு படம் குடையால் வழிந்த மழை நீரைப் பெண் ஒருத்தி கையால் ஏந்திக் குடித்துக் கொள்வதைத் துலாம்பரப்படுத்திக் காட்டியது துலக்கமின்மை மக்கள் சேனையின் வெம்மை நகரமுடியாத நெருக்கம் தந்த தாகத்திற்கு தண்ணீர் தருவது யார்? தமிழா! உன் தாகத்துக்கு வானம் பொழிந்தது உன் தவப்பயனா? அல்லது உன் பரிதாபத்தை தாங்காது அழுத வானத்துக் கண்ணீரை வயிற்றுக்குத் தானம் கொடுத்தாயோ?.....

கேட்டுவிட்டுத் தன்னை மறந்து ஒரு கணம் அழுதுதான் விட்டான் ரவி.

அல்பத்தை மூடிவிட்டுத்தன் விழிகளைத் துடைத்துக் கொண்டான். அதற்கு மேலும் அந்தக் கொடிய காட்சிகளைப் பார்த்தால் அவனுக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போலிருந்தது. இந்தக் காட்சிகளைக் கண் கொண்டு பார்க்க முடியவில்லை. என்னால், அப்படியானால், இந்த இடப்பெயர்வின் பின் எத்தனைபேர் போராடி எம் பகையை வெல்ல வந்தார்கள்.....? என்ற கேள்வியோடு ரசிகனைப் பார்த்தான்.

ரசிகன் கீழ்த் தொனியில் கூறினான். "கூட்டத்தில் கூடிநின்று கூவிப் பிதற்றலன்றி நாட்டத்தில் கொள்ளாரடி கிளியே நாளில் மறப்பாரடி"பாரதியின் அந்தப் பாடல் வரிகளை ரசிகன் பாடிய விதம்.. "நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி வஞ்சனை சொல்வாரடி கிளியே வாய்ச் சொல்லில் வீரரடி....." என்று ரவியைப் பாடவைத்தது.

நண்பர்கள் இருவரும் பாடியபாடல் சத்தம் கேட்டு ரேவதி நல்லாத்தான் சொன்னாரு பாரதியார் அதெல்லாம் புத்தகத்தோடை சரி, ஆபிரிக்கா முதல் அமெரிக்கா வரை வாழ்கின்ற அத்தனை தமிழனும் இந்த மண் எங்களின் சொந்தமண் என்று பாடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அங்கை இருந்து பாடுறவை எல்லாம் இந்தப் போருக்குப் பயந்து போனவைதானே. என்று சொன்ன போது ரவியின் முகம் விகாரமடைந்தது. என்றாலும் யாரும் அதைக்கவனிக்கவே இல்லை.

உழைப்புக்காக போனவரும் உண்டு, நீங்கள் சொன்ன மாதிரிப் போனவரும் உண்டு..... இன்னும் போருக்கான சில வழிமுறைகளைத் தேவைகருதிப் போனவரும் உண்டு..... எல்லோரையும் நாங்கள் ஒரேமாதிரி கணிக்கக் கூடாது. என்றான் ரவி.

ஏன் நீங்களும் வெளிநாட்டில இருந்து வந்தபடியால் கோபம் வருகுதாக்கும் என்று கூறிச் சிரித்தாள் ரேவதி.

நீங்கள் சிரிக்கும் சிரிப்புக்குக்கூட வெளிநாட்டில் இருக்கும் தமிழன் இன்று பங்களிப்புச் செய்கிறான் என்பதை மறந்து விடாதீர்கள். என்று ரவி சொன்னதும் ரேவதி தனது தொனியை மாற்றி இளைஞர்கள் அதிகமானோர் வெளியில இருந்தால் எங்கடை போராடும் வலுப்போதாமல் இருக்கிறதே..... அதனால் தானே எதிரியை முற்றாகத்துடைத்தழிக்க முடியவில்லை என்ற ஆதங்கத்தால் தான் இப்பிடியெல்லாம் சொல்லும்படியாகி விட்டதென்று ரசிகன் சொல்லி அந்த விவாதத்தை முடித்துவிட்டபோது.

ரேகா இருக்கும் இடம் உங்களுக்கு தெரியுமா அக்கா என்று ரேவதியைக் கேட்டான் ரவி

கிபிர் போட்ட குண்டுமாதிரி அந்தக் கேள்வி அவளை அதிரவைத்தது எப்படி என்னத்தை சொல்வது? விடை தேடல் பொருளாகி நிற்பதைப் புலப்படுத்த முடியாது அவள் தவித்துக் கொண்டிருந்தாள்.

ரசிகன் கூட எதிர்பார்த்திருந்தாலும் திடீரென ரவி ரேவதியிடமே கேட்டுவிட்டதில் ஏதோ ஒன்று பொதிந்திருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

ரேவதி குழம்பிப் போனாள் முகம் வியர்த்துக் கொட்டியது. ரேகா ரேகா என்று அவள் மனம் ஓலமிட்டு பொங்கி எழுந்து அலைஅலையாக மனதிற்குள் எதிரொலித்துக் கொண்டேயிருந்தது.

ரவியின் மனதில் ரேவதியின் தாக்கம் ஒரு தெளிவை புலப்படுத்தியது. அவர்கள் இருவருமே இணைபிரியாத நண்பிகள் மட்டுமன்றி உடன்பிறவா சோதரிகள் தான் என்று அவன் முடிவு செய்வதற்கிடையில் விக்கலும் விம்மலுமாக ரேவதி அழத்தொடங்கி விட்டாள்.

நீண்ட மௌனம் அந்த மூவரையும் கட்டிப் போட்டது.

டக்..டக்...டக்...இதயத் துடிப்பு வெளியே மூவருக்கும் கேட்டுக் கொண்டிருந்த போது ரவி எழுந்து வெளியே சென்று விட்டு வந்து சொன்னான்.

"அக்கா..... !!நான் ரேகா வந்து உங்களையெல்லம் சந்திக்க வைப்பேன்" நீங்கள் கவலைப்பட வேண்டாம்.என்று

ரசிகன் நம்பாது சிரித்தான்.

ரேவதியின் முகமெல்லாம் பல்லாகத் தெரிந்தது சிரிப்பால்..... ரவியை ஏனோ அவள் நம்பினாள்.

ரசி... இன்று மாலை என்னையேற்றிச் செல்ல நண்பர் ஒருவர் வருவார்.

ரேவதி கேட்டாயா? என்னை நண்பன் சொல்வதை. நேற்றுத் தான் வந்தான் இன்று போகப்போகிறானாம்.

இந்த அகதிக் கொட்டிலுக்கை யாருக்கு தான் இருக்க மனம் வரும்..? என்ற ரேவதியின் வாய் மூடுவதற்குள் ரவி சொன்னான் ஆம்..... அது உண்மைதான்.
இ அகதி வாழ்வு எனக்குப்பிடிக்கவில்லை என்பது உண்மை. நீங்கள் மட்டுமல்ல எந்த மனிதனும் அகதிகளாக வாழக்கூடாது. மனிதன் மனிதனாக வாழவேண்டும். அதுதான் எமது இலக்கு. வீடு பிடிக்கவில்லை என்பது பொய்.

ரசிகன் குழம்பித் தவித்தான். இவன்.. நீ குழம்பிக்குழம்பிக் குமுற வேண்டாம். நாளைக்கு நீ அறியக்கூடியதை இன்று அறிய முடியாதல்லவா?

ஆமென்பதற்குப்பதிலாகத் தலையசைத்தான் ரசிகன்.

மதியவேளை விருந்துபசாரகுதூகலத்தோடு அந்தத் தடிகளால் வரிந்துகட்டிய கட்டிலின்மீது ரவி உறங்கிவிட்டான்.

ரசிகன் மட்டும் ரேவதியோடு என்ன ரேகா வந்து உன்னைப் பார்க்கப் போகிறாளாமே..... அப்படியானால் ..... அவள்.....? இவன் இருவருக்கும் மனம் குழம்பித்தவித்துத் துடித்துக் கொண்டிருந்ததேயன்றி விடையென எதுவுமே தோன்றவில்லை.

நேரம் அச்சுறுத்திக்கொண்டிருந்தது. அவர்களை அவன் போகப்போகிறானென்று . போருக்கான தேவைகருதிப் போனோரும் உண்டு என்று சொன்னதும், ரேகாவை வந்து உங்களைச் சந்திக்க வைக்கிறேன், என்றதும் ரசிகனைத்துளைத்துக்கொண்டேயிருந்த போது ரவி எழுந்துவிட்டான்.

ரவி வா... நீ எழுந்துவிட்டாய். என் மனப்புதிர் இன்னும் என்னைத்தூங்க விடவில்லை என்றான் ஒருவித சிரிப்போடு இன்று ஒரு நாள் என்னால் நீ பாடசாலைக்கு விடுப்பெடுத்துவிட்டாய் இல்லையா? கதையைத் திசை திருப்பினான்.

அதற்கென்ன இப்ப....

இனிமேல் நான் அப்படி வைக்கமாட்டேன். இங்கு ஞாயிறு மட்டும் வந்து போகலாமென்கிறேன்.

வெளியே ஒரு நோட்மாஸ்டர் மோட்டார் சைக்கிள் ஒன்று வந்து நிற்கின்றது. அவன் விடை பெற்றுக்கொண்டு அந்த மோட்டார் சைக்கிளில் இருந்தவாறு சொன்னான். "ரசி கார் வரும் ரேயை ஏற்றி உலா விடு" என்று

ரசிகனுக்குச் சிரிப்பு வரவில்லை. ஆனால் ரேவதி தன்னைக் கட்டுப்படுத்த முடியாது சிரித்துமுடித்த போது ஏன் குழப்பினாளோ.....? அழுது கொண்டாள் பெரும் சத்தமாக

அந்தச்சத்தம் காதுகளைவிட்டு மறைவதற்குள்ளாக ரவி உருமறைக்கப்பட்ட ஒரு வாகனத்தில் ஏறிச்சென்று கொண்டிருந்தது யாருக்குமே தெரிந்திருக்க முடியாது.

பிரித்தானிய ஏகாதிபத்தியம் சூரியன் அஸ்தமிக்காத சாம்ராச்சியத்தை படைத்திருந்த காலத்தில் உலகம் முழுவதும் தெரிந்திருந்த ஒரு பெயர் எலிசபெத் தான். ஆனால் அதற்குப்பிறகு உலகநாடெங்கும் பேசப்படும் ஒரே தலைவன் எங்கள் தலைவன் தான். என்ற பெருமையோடு அந்த ரவியும் பிரிய ரேகாவும் நின்றிருந்தனர். அழைப்பின் காரணம் புரியாது இருவரது விழிகளும் நிலம் நோக்கியவாறு இருந்ததே யொழிய எதை எதையோ

சொல்லத்துடித்துக் கொண்டிருப்பதை அவர்களது உதடுகளும் முகங்களும் சொல்லிக்கொண்டேயிருந்தன. இதயங்கள் இரண்டும் என்றுமில்லாதவாறு படபடத்துக் கொண்டிருப்பதையும் அவர்கள் உணரத்தவறவில்லை.

நீண்டஅந்த மௌனத்தை தலைவனின் சிம்மக்குரல் கலைத்தது. உங்கள் இருவரது அதிஉச்ச சேவையை இத்தனையாண்டுகளாக தேசத்திற்கு வழங்கியிருக்கும் உங்கள் சேவையைப் பாராட்டுகிறேன். உங்களைத் தவிர உங்கள் இருவரது குடும்பத்தில் யாராவது வாழ்ந்து கொண்டிருக்கின்றார்களா?

ஒரேயொரு கேள்வியில் எல்லாவற்றையுமே உள்ளடக்கியதாகவும் வேற்றுமையற்ற ஒரே பதில்தான் உள்ளது என்பதையும் கிரகித்துக்கொள்ள அவர்களுக்கு அதிகநேரம் தேவைப்படவில்லை. "இல்லை இல்லை" இருவரும் ஒத்தபடி சொன்னதைக் கவனித்த தலைவர் எழுந்து ஒருமுறை அப்படியும் இப்படியுமாக நடந்து மீண்டும் தன் இருக்கையில் அமர்ந்து கொண்டார்.

உங்கள் இலட்சியக்காதல் பற்றி நீங்கள் இருவருமே பேசி முடிவை நல்ல முடிவாக நாளை சொல்லலாம். ஒருநாள் அவகாசம் போதுமானதா அல்லது.....

போதும் அண்ணா..... இரு குரலும் ஒரு குரலில் சொன்னபோது தலைவன் நீங்கள் நாளை நல்ல முடிவோடுவர எனது வாழ்த்துக்கள் என்று கூறியனுப்பினார்.

பிரிந்தவர் மீண்டும் சேர்ந்திடும் போது!..... புன்னகை கலந்த அவள் இதழ்களின் மீது விழிகள் சொரிந்த கண்ணீர்த்துளிகள் வீழ்ந்து சிதறி மண்ணில் கலந்தது.

இது பிரிவுத்துயரால் வந்த கண்ணீரா? அல்லது இலட்சியத் தலைவன் தந்த ஆனந்தக்கண்ணீரா?

இத்தனையாண்டுகளும் பெண் போராளிகளுக்கு கற்பித்தல் மட்டுமே எனது இலட்சியமாகக்கொண்ட எனது காதல்பற்றி..... அவள் நினைக்க

"வெளிநாடுகளில் எமது தேசவிடுதலைக்காக பணியாற்றிய எனது இலட்சியம் பற்றி "..... அவன் நினைக்க.....

சே!..... ஒரு தேசத்தின் கதையையே எழுதிக்கொண்டிருக்கும் ஒரு வரலாற்றுத் தலைவனுக்கு புறம் தெரிந்தளவிற்கு அகம் தெரியாமலா போகும்? என்று யார் சொன்னது? என்று தென்றல் கேட்டது?

முற்றத்து மல்லிகைச் செடி போல் வளர்ந்த பச்சைக்கொடிகள் எத்தனை? அந்தக் கொடியவர் இச்சைக்குள் சித்திரவதைப்பட்டு இத்தேசத்தின் பேரால் மண்மூடிக்கிடக்கின்றனர்.

இளமைக்கால இன்பங்களைத்துறந்து மாவீரராகி துயிலும் இளைஞர் யுவதிகள் எத்தனை ஆயிரம்?


பாய்ந்து வெடித்து உடலை மண்ணுக்கும் உயிரைத்தமிழுக்குமாக ஈகம் செய்த கரும்புலிகள் எத்தனை? எத்தனை?

கடலிலே ஏதிரிப்படைக்கலத்தோடு விரைந்து வரக்கண்டு பாய்ந்தோடிக் கடலோடு எதிரியை தணலாகி அழித்து தம்மைச் சிதைத்த கடற்கரும்புலிகள் எத்தனை?

நாம் மட்டும் இளமை விருந்துண்டு இன்பக்களிப்பில் மூழ்குவதா? ரவியும் ரேகாவும் ரசிகன் ரேவதியையும் மகிழ்வித்து வருவதாகச் சென்று திரும்பியபோது உறுதியின் உறைவிடங்களாகத் திரும்பினர்.

தலைவனின் முன்னிலையில் தம் எண்ணத்தை வெளிப்படுத்தினர். "எமது இலட்சியம் வென்றெடுக்கும்வரை தொடர்ந்தும் நாம் போராட எம்மை அனுமதியுங்கள்" என்று

கைகளையுயர்த்தி சத்தியப்பிரமாணம் செய்வது போல நின்றுகொண்டிருந்த போது இலட்சியக்காதலர் தம் செய்தி கேட்டு தலைவன் புன்னகைத்தான். ரேகாவும் ரவியும் பிரிந்து தத்தம் பாசறைகளுக்கு செல்வதைப் பார்த்துக்கொண்டு நின்ற அந்தத் தலைவனுக்கு இந்த மண்மீது தணியாத தாகம் கொண்ட போராளிகளின் மனங்கள் இமயங்களாக தளராதிருப்பதைக்கண்டு இறும்பூபெய்தினான்.



ஈகையின் மறுபக்கம்

அம்மா..... நான் கராஜ்சுக்குப் போகாமல் நிக்கட்டே... விடிகாலைப் பொழுதில் பாயில் இருந்தவாறே விநோதன் கேட்ட கேள்வி இது.

வேலையில்லாமல் எத்தனைபேர் கஸ்டப்பட்டுத் திரியுதுகள் நீ ஏன் மாட்டன் என்கிறாய். இயக்க அண்ணாக்கள் எங்கடை கஸ்ரத்தைப் பார்த்துத்தானே உன்னை கராச்சிலை சேர்த்தவை. அண்ணனும் இயக்கத்திலை நிவாரணமும் இப்ப குறைஞ்சதாலை ஏதோ உழைச்சால்தானே நாங்களும் பட்டினி கிடக்காமல் சாப்பிடலாம்.

இரண்டு மாதத்துக் கிடையிலே நீ வேலை பழக முடியுமே..... நாலைஞ்சுமாதம் போயிட்டால் பிறகு உனக்கு சாப்பாட்டோடை சம்பளமும் தருவினமெல்லே.

அண்ணை இயக்கத்திற்குப் போகாட்டில் இப்ப நான் கராஜ்சிலை அடிவேண்டி வேலைபழக

வந்திருக்காது தானே நின்று நினைத்தவனாக ..... சரிசரி போறன்.... சாப்பிட ஏதாய்ச்சும் இருக்கோ.....

அரை றாத்தல் பாண் இரவு தான் சாப்பிடாமல் வைத்த அந்தப் பாணை வெட்டி மகனுக்கும் மகளுக்கும் கொடுத்தாள். அடுத்த சனிக்கிழமைதான் அவன் இனி வருவான். விநோதனை அநுப்பிவிட்டுத் துயரவரிகளை மனதில் துவைத்துக்கொண்டு படுத்திருந்தாள். பர்வதம். கிளிநொச்சி வெற்றியோடை எத்தினையோ பெடியள் வந்து போகினம். விவேக் எப்பதான் வருவானோ என்ற ஏக்கமே அவளது எதிர்பார்ப்பாயிருந்தது.

இரண்டு வருடங்களின் பின் மல்லாவி வீதியில் விவேக்கின் மிதிவண்டி விரைந்து கொண்டிருந்தது. வீட்டிற்குப்போகும் தூரம் குறையக்குறைய இன்பத்துயரம் மனதில் பெருஞ்சுமையாகக் கனத்தது. நெஞ்சில் நிறைந்த அந்தத்துயரின் பாரம் நெஞ்சை அழுத்துவதான ஒரு உணர்வு.

என்னைக்கண்டதும் தங்கையும் தம்பியும் நான் முந்தி நீமுந்தி என்று ஒடிவந்து ..... அம்மா புன்னகையின் பூரிப்பில் நிறைய..... இப்போதே மனக்கண்ணில் திரைப்படமாக ஓடியது. அந்தக்காட்சி..... சேரன் சுவையத்தின் முன்னே மிதிவண்டியை விட்டு பூட்டிவிட்டு உள்ளே நுழைந்தான்.

மிக்சர், தேன்குழல், லட்டு, வடை, பூரி, என்று தின்பண்ட வகைகள் கண்ணாடிச்சிறைக்குள் இருந்து அவனை அழைத்தன. மற்றொருபக்கம் செந்தாமரைத் தடாகம் போலக் கேக் வகைகள் கொத்தாய் தொங்கும் மலர்கூட்டம் போல் கண் சிமிட்டின. எதை வாங்குவது? எதை விடுவது? அண்ணா என்று ஒடிவரும் தங்கைக்கு இது. தம்பிக்கு இது, என்று மனக்கணக்கோடு தின் பண்டங்களைக் கட்டிக்கொண்டு சுமாரான ஒரு பார்சலோடு பணத்தைக்கொடுத்து மீதிச்சில்லறை களோடு வந்து வண்டியின் பூட்டைத் திறந்தான். பின்னே யாரோ அவன் முதுகைச் சுரண்டியபோது வீட்டு நினைவுகள் மேலோங்கி நின்றதால் திரும்பிப்பார்க்காமலே கையில் இருந்த சில்லறையை நீட்டியகைக்குள் போட்டு விட்டு வண்டியை எடுத்தான். மிதிவண்டியின் கரியரை மீண்டும் யாரோ பற்றி இழுக்கவே விவேக் திரும்பிப்பார்த்தான்.

பஞ்சடைந்த விழிகள், எண்ணை காணாது பரட்டை பற்றிச் சுருண்ட தலைமயிர். அழுக்கேறிய உடையைத்தாங்கிய உடல். படபடக்கும் அந்தக் கருவிழிகளில் கங்கை ஒன்று உடைப்பெடுக்கத் தயாராகிக் கொண்டிருந்தது.

ஒரே ஒரு கணம் தான்.

மின் அதிர்வு கண்களை நம்பாது ஒருமுறை துடைத்துவிட்டுப் பார்த்தான். கையில் இருந்த தின்பண்டப் பொதி கீழே விழுந்தது. அம்மா நீ பவானிதானே!.

அண்ணா என்று அந்தச் சிறுமி கத்திக்கதறினாள். துயரத்தின் அணை உடைந்து அன்பின் வெள்ளம் அணை கடந்து பாய்ந்தது. இதயம் எரிமலை வாயில் வீழ்ந்து பொசுங்கியது. யாரைப்பற்றிய கவலைகளுமின்றித்தன் கைக்குட்டையால் பவானியின் முகத்தைத் துடைத்துக் கொண்டான். பார்சலை அவள் கையில் எடுத்துக் கொடுத்துவிட்டு மிதிவண்டியின் பாரில் அவளைத் தூக்கி ஏற்றிவிட்டு வண்டியில் தாவி ஏறினான்.

நெஞ்சைத்துயர் அடைத்துப்பற்றி அமுக்கியது. கால்கள் சோர்ந்தன. சோகம் மிகுந்த நம்நாடு இல்லை என்பாரை இல்லாமல் செய்யவும் எல்லோர்க்கும் எல்லாம் கிடைக்கவும் தமிழீழம் ஒன்றுதான் முடிந்தமுடிவு என்று அண்ணா பாரச்சிலுவையைச் சுமந்து நிற்பதன் உண்மைத் தெளிவை அவன் மனக்கண்ணில் இப்போதுதான் முதல்தடவையாகக் கண்டான்.

மாவீரன் மேஜர் கண்ணனின்ரை மோனெல்லா இவன். இந்தப்பெட்டையைத் தூக்கி ஏத்திக்கொண்டு போறானே. ஆரோ சொந்தக்காரனாக்கும் என்றது ஒரு குரல்.

இயக்கப்பொடியளுக்கு சின்னஞ் சிறிசுகளென்டால் கொள்ளை ஆசை.... இப்பிடித்தான் என்றது இன்னொரு குரல்.

முத்தெடுக்கப்போனவன் கிளிஞ்சல் பொறுக்கிய கதையாக எங்கள் வீடும் ஆகிப்போச்சோ? கமலமலர்ச் சிரிப்போடு தங்கைவர

கடகடத்து வீரச்சிரிப்போடு தம்பி வந்து தின்பண்டத்திற்கு அடிபட்டிழுத்து ஆர்ப்பரிக்க அகமகிழ்ந்து அம்மாவைக் கட்டி அணைத்து மகிழ்ந்து..... சே..... இன்ப நினைவுகளைச் சேர்த்துச்சுமந்து வந்த அவன் விழிகளில் இரத்தக்கண்ணீர் வடிந்தது. மிதிவண்டி ஊர்ந்து கொண்டிருந்தது. விழிகள் ஓசையற்ற பாசையைக் கண்ணீர்மொழியால் பேசிக்கொண்டிருந்தன.

அண்ணன் வந்துவிட்ட ஆனந்தப்பெருக்கு பவானிக்கு "அண்ணா இனி எங்களைவிட்டிட்டுப் போகமாட்டீங்களே" என்று கேட்டவாறு முகத்தைத் திருப்பி அண்ணனின் முகத்தைப் பார்த்தாள்.

அண்ணா அழுகிறார். ஏன் அழுகிறார்? அவளால் கேட்க முடியவில்லை. சிறுமி என்றாலும் கேட்காமல் பேசாமல் இருந்தாள். சந்தியின் வலது பக்கம் மிதிவண்டி திரும்பியபோது முக்காடிட்ட பெண்களை நினைவூட்டுமாறு வெண்ணிற நீல நிறப் படங்குகளால் முக்காடிட்ட குடிசைகள் நிரைநிரையாகத் தெரிந்தன. இடப் பெயர்வுக்குடிசைகள் தான் இவை. இரண்டாவது திருப்பத்தில் திரும்பியதும் அவன் வீட்டுமுற்றத்தில் தங்கையுடன் இறங்கினான்.

என்ரை ராசா வந்திட்டியோ... ஓடிவந்து குழந்தைபோல அவனை அணைத்துக்கொண்டாள். அந்தத்தாய். ஆம் விவேக் குடியிருந்த கோயில் அது. பாசப்பெருந்தென்றல் அவனை நெஞ்சாரத்தழுவியது.

அம்... மா... அவன் வார்த்தைகள் நெஞ்சுக்கூட்டுக்குள்ளே வீசிய அனலில் பொசுங்கிப்போயிருந்ததாலோ என்னவோ வெளியே வரவில்லை.

அவன் அழுதான்.....

அவளும் அழுதாள்.....
உருக்குலைந்து போய் என்புந்தோலுமாக மாறிய அந்தத்தாய்... பஞ்சையாய் நிற்கும் தங்கை... வறுமைத்தீயால் வெந்து பொசுங்கிக் கொண்டிருக்கும் தன் குடும்பத்தை நினைத்து அவன் அழுதான்.

இரண்டு வருடத்திற்கு பிறகு வந்த என்பிள்ளைக்கு ஒருநேரம் நல்ல சாப்பாடு கொடுக்க இல்லையே என்ற ஏக்கத்தில் அந்தத்தாயின் அழுகை பெற்ற வேளையைவிடப் பெரும்நோக்காடாகி மனம் கனக்க அந்தத்தாய் அழுதாள். கருமேகத் திரைகளால் மூடிய முழுநிலவு போலத் தாயின் முகம் மாறிக்கிடந்த கோலத்தை கணநேரத்திற்குள் புரிந்துகொண்ட விவேக் தன் பொக்கற்றிலிருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து அவள் கைகளில் திணித்தான்.

விழிநீரை விழியோடு திரையாக்கிக்கொண்டே மகன் படுப்பதற்காகப் படுக்கை போட்டுக்கொடுத்துவிட்டுக் கடைத்தெருவுக்குள் ஓடினாள். அந்தத்தாய்

சமையலுக்கான அத்தனை பொருட்களோடும் பர்வதம் கடையிலிருந்து திரும்பிக்கொண்டிருந்தபோது அங்கு நின்ற சிலர் ஊர்த்தளவாரத்தை விட்டு விட்டு இண்டைக்குப் பர்வதம் கனக்கச்சாமான் வாங்கி மிச்சக்காசும் வாங்கிக்கொண்டு போறாள்.

மோன் வந்தவனாம் அதுதான் பர்வதத்திற்கு பெரும் சந்தோசம். ம். இயக்கத்திலை இருந்து வரேக்கை அவங்கள் சும்மா விடுறேல்லை. செலவுக்கு என்று ஒரு தொகை குடுத்துத்தான் விடுறவங்கள் என்று விசயம் தெரிந்த வித்தகராகக் கடை முதலாளி விளக்கினார்.

அதுதானே ஒண்டு மலைமாதிரி இயக்கத்திலை இருக்க.... பாவம் அந்தப் பவானிப்பெட்டை கடைகடையாய் கைநீட்டிப் பிச்சை எடுக்குது... இந்த இலட்சணத்திலை அவருக்கு இயக்கமோ? என்று இன்னொருத்தி விண்ணாணம் பேசினாள்.

ஓமோம் அவங்கள் ஆமிக்காரரை அடித்துத்துரத்தி இப்பிடி வைச்சிருக் காட்டில் இந்த விண்ணாளங்களையெல்லாம் நீங்கள் பேசேலாது எண்டதை மறந்து போனியள். யாழ்ப்பாணத்திலை ஆமி வந்துவிட்டதென்று வன்னிக்கு வந்தியள் இப்ப வன்னியையும் அவன் பிடிச்சு ஏப்பம் விட நினைக்கிறான். உங்களுக்கு இதெல்லாம் எங்கை விளங்கப்போகுது. உங்களைப் போல அவங்களும் நினைச்சிருந்தால் எப்பவோ உங்கடை கதைகளும் செம்மணிக்

கதையோட சேர்ந்திருக்கும். ஒரு பள்ளிக்கூடப் பெண் சினந்து பேசிவிட்டுப்போனபோது எல்லோரும் வாயடைத்துப் போய் நின்றனர். நீங்கள் இப்பிடிச் சுகமாகச் சீவிக்கிறதற்காக எத்தினை குடும்பத்துப் பிள்ளையள் தியாகம் செய்திருக்குதுகள். அந்த தியாகத்திலை நீங்கள் குளிர்காய அந்தக்குடும்பங்கள் இப்பிடிப்பட்டினித்துயரோடு போராடுதுகள்.. என்று அவள் போகும்போது சொன்ன வார்த்தைகள் எல்லோரையும் உலுப்பிக் கொண்டிருந்தது.

பாயில் கிடந்த விவேக் சிந்திக்கத் தொடங்கினான். பார்சல் தின் பண்டங்களை பவானி அண்ணணின் மீது சாய்ந்திருந்து சுவைத்துக்கொண்டிருந்தாள். கவலையின்றி பொள்ளல் விழுந்த கூரைக்கு ஊடாக ஓடிக்கொண்டிருக்கும் முகில் கூட்டம் தெரிந்தது. வேவுக்குச் சென்று ஒளிந்து கொள்ளும்போது எம்மை மறைத்த அந்தப் பற்றைகளுக்கூடாகக் கூட இப்படி முகில்களைக் காணமுடியாதே. கண்ணிவெடி வயல்களாகக் கிடக்கும் ஏதிர்ப் பாசறைச்சூழலில் நெஞ்சூர்ந்து பாம்புப்பிறவிகளாய் மாறிக் கம்பிச்சுருள்களைக் கடந்து சேற்றிலும், சகதியிலும் உழன்று படுத்து எதிரியின் சலசலப்புக்கேட்டால் நாட்கணக்கில் பத்தைகளுக்குள்ளேயே அன்னந் தண்ணியில்லாமல் கிடந்து துவண்ட நாட்களில் எல்லாம் துன்பத்திற்குப்பதில் பேரின்பம் அடைந்திருக்கின்றேன். என்னைப்போல எத்தனை தோழர், தோழியர் அந்தப்பணிகளில் பெருமைப்பட்டு இத்தித்து மகிழ்ந்தோமே, வெற்றிகள் குவித்தோம். இந்தத்தாய் திருநாட்டிற்காக இத்தனை சேவையாற்ற வைத்த தலைவனையும் அந்தப் பணியின் மகத்துவத்தையும் நினைத்து இன்ப சாகரத்திற்குள் மூழ்கிக் கிடந்தோமே.

ஆனால்,

ஆனால் வீடு, வாசல், தாய், சேய் உறவு என்று வந்ததும்..... ஓ..... கைநீட்டிப்பிச்சை கேட்ட தங்கை..... எலும்புந்தோலுமாய் ஆனதால்..... பள்ளிவயதில் தொழில் கற்கச் சென்றுவிட்ட தம்பி.....

விவேக் எழுந்து அடுப்படிப்பக்கம் பார்த்தான். சாம்பலே இல்லாத அடுப்பு. நெருப்பெரிந்தால்தானே சாம்பல் இருக்கும். சே.... ஆடரிபட்ந்த கோடுயர் அடுப்பில் ஆம்பிபூப்ப ..... சாத்தனார் என்ற புலவர் தன் வறுமையைக் குமணமன்னனுக்குச் சொல்லப் பாடிய அந்தப்பாடல் வரிகள்... எனது வீடும்... ஐயோ .... அம்மா என்று கத்தியபடி பாயில் வீழ்ந்தான் விவேக்.

என்ன ராசா ஏன் அழுகிறாய். உனக்குத்தானே தலைவரின் பரிசு கிடைத்திருக்கே இதைவிடப்பெருமை உனக்கு வேறு என்ன கிடக்குது. என்றவாறு பர்வதம் மகனுக்கு அருகில் வந்தாள்.

அம்மா உங்கள் துயரங்களைப் பார்த்த பிறகு என்னால் எப்படி அம்மா அழாமல் இருக்கமுடியும். எப்படி அழாமல் இருப்பது என்று சொன்ன விவேக் அண்ணைக்கு கடிதம் எழுதிப்போட்டுட்டு நான் நிக்கப் போறனம்மா.


உனக்குப்பரிசுதந்த தலைவருக்கு நீ செய்யப்போகும் கைமாறு இதுதானா? மாவீரரான உன் அப்பாவின் ஆத்மா சாந்தி அடையுமா? உன்னைப்போல எல்லாப் போராளிகளும் தங்கடைவீட்டைப்பற்றி நினைச்சிருந்தால் உந்த சிங்களப்படை எங்களை நிம்மதியா நித்திரை கொள்ள விட்டிருப்பாங்களோ? அப்பாவின்ரை கடைசி நாட்குறிப்பில் இந்தத் தேசம் என்றைக்கு விடிவைக் காணுகின்றதோ அன்றைக்குத்தான் எம்மைப் போன்றவர்களுக்கும் விடிவு பிறக்கும். என்று எழுதி வைத்துப் போனதை மறந்து போனாயா? என்ற கேள்வியோடு சமையலில் மூழ்கிவிட்டாள்.

விவேக் வாயடைத்துப் போனான். ஊரான் கேலிக்கும் பஞ்சம் பசிக்கும் ஈடுகொடுத்து இந்தத் தேசத்தின் விடிவிற்காகச் சுமைதாங்கியாகிப்போன எனது தாயைப்போல ஆயிரமாயிரம் தாய் மனங்கள் நினைக்கத்தான் செய்கின்றன. அந்த வீரத்தாய்கள்

இருக்கும்வரை இத்தேசம் தலைவணங்கிப் பாதபூசை செய்யாது. என்று தனக்குள் எண்ணிப்பெருமைப்பட்டான்.

"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல்
நாடு பெரிதென்று வாழுங்கள்"

"ஏனென்றால் நிலையற்ற எம் வாழ்விலும் நாட்டின் வாழ்வு மேலானது." "எங்கடை தலைவர் சொன்ன அந்த வரிகளுக்கும் அம்மாவின் சிந்தனைக்குமிடையே எந்தளவு பொருத்தப்பாடு, தாயை ஒரு விழிக்குள்ளும் தலைவனை மறுவிழிக்குள்ளும் ஒரே நேரத்தில் கண்டு மனம் பூரித்து நிறைந்தது. அவனது மனம். "பஞ்சமும் நோய்களும் மெய்யடியார்க்கோ பாரினில் மேன்மைகள் வேறினியார்க்கோ" என்ற பாரதியின் பாடல் வரிகள் வானொலியிருந்து வந்து செவிவழிப்புகுந்து சிந்தனையை நிறைத்தது.



தேசத்தின் கொடி

பூபாளம் பாடித்துயில் எழுப்பியது தென்றல் வழக்கம் போல எழுந்து என் மேசைக்கு மேலே சுவரில் தொங்கிக்கொண்டிருந்த நாட்காட்டியின் மறைந்து போன நேற்றைய தாளை மெல்லக்கிழித்தேன்.

செப்டம்பர் 26. அந்த இலக்கம் 26 கண்களில் பட்டபோது மனதில் ஏதோ ஒரு நினைவு சுகந்தம் நிறைந்து மூக்கைப் பிசைந்து கொள்ள வைத்தது. ராசி..... மனம் அந்தப் பெயரை உச்சரித்து நின்றது.

இன்று உன் 19வது பிறந்த நாள். ஒரே ஒரு காலைத்தென்றலில் தாவியேறிய மனம் ராசியின் வீட்டிற்கு விரைந்தது. வழக்கம் போலவே தொதலும், லட்டும், சர்க்கரைப் பொங்கலும் ஆக்கி வைத்துவிட்டு உன் அம்மா அழுதுகொண்டிருந்தாள்.

"இஞ்சை ஒண்டும் செய்ய வேண்டாம். வீணாக அழுது தொலைத்து ஆஸ்பத்திரிக்கு என்னால் இழுக்கேலா தெண்டு நேற்றே சொன்னனான். நீ துவங்கி விட்டாய் என்ன?" என்றவாறு ராசியின் அப்பா சீறிக்கொண்டிருந்தார். யாருக்காவது

1997-10-26
புலிகளின் குரல்

அந்த வீட்டின் சுகமில்லையென்றால் போதும் அவர் இப்படித்தான் சினந்துகொள்வது வழக்கமாகிப்போன தொன்று. தனது பிள்ளைகளோ. மனைவியோ அழுவதை அவரால் தாங்கிக் கொள்ளமுடியாது. அந்தத் தாக்கத்தின் வெளிப்பாடு தான் இந்த பிரலாபங்கள் பாசத்திற்குரியவர்களின் சிறு துயரைக்கூடத் தாங்க முடியாது குழம்பித்தவிக்கும் இந்த தவிப்பு தந்தைக்கு இருக்கும் போது பத்துமாதம் சுமந்து பெற்று பாலூட்டித்தாலாட்டிய தாய்க்கு ஏற்படும் துன்பம் எப்படியிருக்கும்? வரிகளுக்குள் அடக்கிவிடமுடியுமா என்ன?

"இறைவன் தன்னால் எல்லோருடைய தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியாத போது தான் தாயைப்படைத்தான்" என்று யாரோ ஒரு அறிஞன் சொன்ன வார்த்தை எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. இந்த வரையறைக்குட்பட்டவள்தானே இந்தத் தாயும். மேசைமீது ராசியின் புன்னகை மாறாத அந்தப்படம், அவளது விருப்பத்திற்குரிய தின்பண்டங்களை எல்லாம் இத்தனை கஸ்டங்களுக்கு மத்தியிலும் செய்து முடித்து படையல் செய்துவிட்டு பத்தொன்பது ஊதுபத்திகளை பற்றவைத்து விட்டு நடுவே சூடத்தைக் கொழுத்தி வைத்தாள். சுற்றிவர அந்தக் குடும்பத்தில் உள்ள அனைவரும் வைத்த கண் வாங்காது பார்த்துக்கொண்டு நின்றனர்.

சுடர்விட்டு எரிந்த சூடத்தை ராசியின் தாயே வாயினால் ஊதி அணைத்தாள். ராசி ஊதி அணைத்தால் என்னென்ன செய்வாளோ அந்த வேலைகளை எல்லாம் தானே செய்து எல்லா உணவிலும் ஒவ்வொரு துண்டுகளை எடுத்து அந்தப்படத்தின் முன்வைத்துவிட்டு ஓவென்று கதறினாள். 'பொங்கிவரும் ஆற்றைக்கூட மனிதன் அணை போட்டுத்தடுத்துவிடுவான். ஆனால் மனதில் பொங்கிவரும் பிரிவின் துயரை மட்டும் அணை போட்டு தடுத்துவிட முடிவதே இல்லை.' அந்தத்தாயும் அப்படித்தான் தன்துயரை அடக்கிக் கொள்ளமுடியாது கத்திப்புலம்பினாள்.

தாய் அழுவதைக்கண்டு சினஞ்சிறிசுகளும் அழுதன. என்னதான வீரத்தாய் என்று பிறர் பெருமைப்பட்டுக் கொண்டபோதிலும் அவளால் தன் ராசியை நினைத்து அழாது இருக்கமுடியவில்லை.

தாய்மையின் தாளாத துயரம் இது..... சின்னவயது தான் ஆனால் காலத்தின் தேவையை உணர்ந்ததில் ராசி மிகவும் பெரியவள்.

அந்நியப்படைகள் அழகாபுரியாக அமைதிப் பூங்காவாக இருந்த யாழ்ப்பாணத்துள் லட்சலட்சமாகத் குவிந்தபோது மேலாதிக்கத்தீயை அணைக்கப் புறப்பட்டவர்களோடு ராசி இணைந்து கொண்டாள். அவளுக்கு இந்தத்துணிவு மட்டும் எங்கிருந்து வந்தது? விடுதலைப் போராளிகளுக்கு உணவு கொடுத்தார் என்ற குற்றத்தைச் சுமத்தி ராசியின் தந்தை அந்நிய இராணுவப் படைகளால் கொண்டு செல்லப்பட்டவேளை அது.

பதினைந்து நாட்களாக தந்தையைக் காணாத அந்தக்குழந்தைகள் துடித்துக் கொண்டிருந்தன. அந்தத்தாயோ ஒவ்வொரு இராணுவ முகாமாகத் தன் துணைவனைத் தேடித்தேடி படிபடியா ஏறி இறங்கி ஏமாந்து போய்த் திரும்புவாள். "அவர் இங்கு இல்லை...." அப்படி ஒருவரை நாங்கள் பிடிக்கவில்லை ஒவ்வொரு முகாமிலும் அவளுக்குச் சொல்லப்பட்ட பதில் இதுதான். சண்டிலிப்பாயிலிருந்து மாதகல் வரையும்.. அம்பனை, தெல்லிப்பளை, சுண்ணாகம்... இப்படியே தினம் ஒரு முகாமாக அவள் சுற்றி அலைந்துவந்தாலும் இன்னமும் சோர்ந்து விடவில்லை. நாளைக்கு ஆனைக்கோட்டை முகாமிற்கும் தாவடி முகாமிற்கும் செல்வது அல்லது யாழ்ப்பாணத்தில் இருக்கும் தலைமை முகாமிற்குச் செல்வதென்ற உறுதியோடு அவள் காத்திருந்தாள்.

பொழுது விடிந்தது.....

ராசிக்கு அப்போது வயது 15 தான். எல்லோரும் அப்பாவை நினைத்து அழுது புலம்பிக்கொண்டிருக்க அவள் மட்டும் சிந்தனைவயப்பட்டவளாக வெறித்த விழிகள் செந்தணலாகிச் சிவந்து போகும்வரை விழித்து ஏதோ ஒரு முடிவை உறுதியாக்கிக் கொண்டிருந்தாள்.

"பாய்ந்து வெடித்திடவேண்டும் எதிரிகள் பாசறை, சாய்ந்து தகர்த்திட வேண்டும் எங்கள் தமிழர் தம் காய்ந்த மனங்கள் கழிப்புற வேண்டும்" என்று ஒரு காகிதத்துண்டில் எழுதி வைத்து விட்டு எடுத்துப்படிப்பதும் பின்னர் அதை வைத்துவிட்டு அக்காவின் அந்த அல்பத்தைப் புரட்டிப்பார்த்துத் தனக்குள் தலையை ஆட்டிச் சிரித்துக் கொண்டிருந்தாள். அந்த வீரச்சிரிப்பை யாரும் புரிந்திருக்கவில்லை.

நெல்லியடிச்சிங்களப் படையினரின் முகாமைச் சிதைத்து எதிரிகளை திணறிவிட வைத்த முதற்கரும்புலி மில்லரின் படத்தில் தான் அவள் மனம் இப்படி நிலையாக நிற்பதும் தலையை அசைப்பதற்கும் காரணமானதென்பதும் யாருக்கும் தெரியாத ஒரு சங்கதி, அவள்மனம் உரம்பெற்றுவைரமாகியது.

காலையில் அப்பாவைத் தேடிப் போன அம்மாவை இன்னமும் காணவில்லையே என்ற ஏக்கத்தோடு தவித்துக்கொண்டிருந்த பிள்ளைகள் எல்லாம் முற்றத்தில் குந்திருயிருந்தனர். நேரம் செல்லச்செல்ல நெஞ்சத்திரைகளெல்லாம் அச்சதின் இருளால் நிறையத் தொடங்கிவிட்டன. ஆனால் ராசி.....?

எங்கடை அப்பாவைப்போலை எத்தனை அப்பாக்கள்? எத்தனை அண்ணாக்கள்? அக்காமார்தான் எத்தனை? எத்தனை? இவர்களை எல்லாம் இவர்கள் ஏன்பிடித்து ஒழிக்கவேண்டும். பிடிக்கும்போது இருக்கும் தைரியம் பின்னர் எங்குதான் போய்விடுகிறது.?

"குட்டக்குட்டக்குனிபவனும், குனியக்குனியக்குட்டுறவனும்" என்ற அந்த நிலையை மாற்ற மில்லர் அண்ணனைப் போல எத்தனைபேர் தேவை? அத்தனை பேரில் நான் ஒருத்தி ஆகவேண்டும் என்ற உறுதிமலையாக மனதில் வளர்ந்து கொண்டிருந்தது.

மாலைக்கருகலுக்குச் சற்று முன்னதாக அம்மா வந்தபோது... அப்பா... கோலமெல்லாம் மாறி உருக்குலைந்து நடைப்பிணம்போல அம்மாவின் பின்வந்து கொண்டிருந்தார்.

எல்லோரும் ஓடிச்சென்று "அப்பா"..... அப்பா என்று ஆனந்தக்கூத்தடித்த போதுதான் அவள் வெளியே வந்தாள்.

உருக்குலைந்துபோன அப்பாவின் தோற்றம் அவள் நெஞ்சைப்பிழிந்தது. "அப்பா....." அவள் எல்லோரையும் விடப்பலமாகக்கத்தினாள். ஆனால் கண்ணீர் வரவில்லை. ஒருவித வெறி அவளை ஆட்கொண்டிருந்தது. மனம் கல்லாய் இறுகிப் போனது. அதுதான் அவளது இறுதிப்பாச வார்த்தை என்பதை அப்போது யாரும் புரிந்து கொள்ளவில்லை.

யாழ்ப்பாணத்தை விட்டு எல்லோரும் இடம்பெயர்ந்து வன்னிப்பரப்பில் குடியேறியபோது அவள் பாசறை ஒன்றில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தாள்.

தாய்மனம் தந்தையோடு சீரழிந்து நிம்மதி பெற்ற சிலநாட்களில் மீண்டும் ஒரு சோதனையா.....?

பெத்தமனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்று சொல்லும் ஏனைய தாய்மாரைப்போல அந்தத்தாய் சொல்லவே இல்லை. ஆம் பிள்ளையளையும், பெடியளையும் பிடிச்சுச்சித்திரவதை செய்யத்துவங்கினால்..... பெண் பிள்ளைகள் இப்படித்தானே செய்யபோகுதுகள். என்று சொல்லிக்கலங்கினாள்.

அந்தக்கலக்கம் இப்படி விரைவில் நீளுமென்ற அந்தத் தாய் மட்டுமல்ல யாருமே நினைக்கவில்லை.

துயரங்களின் சுமைதாங்கிகளாக மாறிவிட்ட தமிழர்களுக்கு இந்தத்துயரங்கள் இல்லாதொழியவேண்டுமானால் தாயகத்தின் விடிவு விரைவுபடுத்தப்படவேண்டும். பெரும் சாதனைகள் தியாகங்களின் மூலம் தான் அது நிறைவேற்றப்பட வேண்டும். "தியாகங்களுக்கு அஞ்சாத கரும்புலிகளின்" சாதனைப்பட்டியல் நீண்டுகொண்டிருந்த போது அந்தச் சாதனைகளிலெல்லாம் சிகரமான ஒரு சாதனையை தான் செய்து கொள்ள வேண்டும் என்று ராசி சதா துடித்துக் கொண்டே இருந்தாள்.

இதயத்தின் துடிப்போசை ஒவ்வொன்றும் சாதனை சாதனை என்றே அவளைத் தூண்டிக்கொண்டிருந்தது.

தற்செயலாகத்தான் அவளை நான் சந்திக்க நேர்ந்தது. இன்று அந்த நாட்களை எண்ணிப்பார்த்துக்கொண்டேன்.

எங்கள் பதிப்பத்திற்கு தனது கடமை ஒற்றை நிறைவேற்ற வந்திருந்தாள்.

சின்ன வயது, மழலை மாறாத மென்குரல் பருவத்தின் மெருகு ஏறாத பச்சைப்பிள்ளை. ஆனால் அவள் அணிந்திருந்த கோல உடை அவளது லட்சிய வேகத்தைப்புலப்படுத்தியது.

ஆம் அவள் ஒரு போராளியின் கோல உடையோடு நின்றிருந்தாள். அவள் தந்த பணியை என் பணியாளரிடம் கொடுத்துவிட்டு அவளோடு பேசிக்கொண்டிருந்தேன்.

அழகாகவும், ஆழமாகவும் பேசினாள். "நீங்கள் ஏனையா உங்கள் வளம் மிகுந்த அந்த ஊரைவிட்டு இந்த வன்னிக்கு வந்தீர்கள்?"' என்று ஒரு கேள்வியைப் போட்டுவிட்டு அவள் என்பதிலுக்கு காத்திருந்தாள். ஆனால் அவளது கேள்வி என்னை எங்கெல்லாமோ இழுத்து நிறுத்திக்கேள்விமேல் கேள்விகேட்டு துளைத் தெடுத்தது.

'நாங்கள் எல்லோருமே போராட்டத்தில் குதித்திருந்ததால் இன்று இங்கு வந்து இத்தனை துயரங்களையெல்லாம் சுமக்கவும், வேதனைப்பட்டுத்துடிக்க வேண்டியும் வந்திருக்காதே....' இந்த உண்மையை விளங்கிக்கொள்ள எனக்கு அதிக நேரம் எடுக்கவில்லை. ஆனால் ஒரு சிறுமி உள்ளக்கதவை உலுப்பி என்னைச் சிந்திக்கவைத்துவிட்டதை நினைத்தபோது சோழப் பேரரசை நிறுவித்தமிழர் பெருமையை உலகமறியச் செய்த இராச இராச சோழ மன்னனும் அவனது மகள் குந்தவியும் தோன்றிச்சிரித்தனர். சோழரின் வரலாறு பக்கம் பக்கமாக விரிந்தோடியது மனத்திரையில்.

குந்தவியின் குறுகுறு விழிகளும் கிள்ளை மொழியும் இராசியின் துருதுருத்த விழிகளோடு அவளது பேச்சோடும் பின்னிப் பிணைந்திருப்பதை உணர்ந்து கொண்டேன். குந்தவியின் விழிகள் இப்போதும் அழகொளிரும் விழிகளாகத்தான் என்மனக்கண்ணில் தோன்றிக் கொண்டிருந்தது. ஆனால் இராசியின் விழிகள் மட்டும் ஏன் அப்படித் தெரிய மறுக்கிறது. குந்தவியின் வயதைவிட மிகமிக

இளைவள் ராசி. ஆனால் அவள் விழிகள் என் சிந்தனைப்புலத்தைக் கீறிக்கிழித்துவிட்டது. ஊடுருவித்துழைத் தெடுக்கும் அந்த விழிகள்.....?

"ஸ்கொட்" "பேரியாட்" எதிரியின் கலன்களைத் தேடி அழித்துவிடும் உன்னதமான பெரும் தயாரிப்பு ஏவுகணைகள். அந்த இரு ஏவுகணைகளும் இவளது இரு விழிகளாக என் சிந்தையில் பட்டது.

இந்தச் சிறுமி இப்படி என்றால்?..... இவளது கூட்டம்.....? அந்தக் கூட்டத்தின் முனைவன்.....? மதிப்பீடு செய்து பார்க்க என்மனம் முடியாது தவித்தது.

சின்னஞ்சிறிதுகட்கெல்லாம் இந்த இலட்சிய வேட்கை மீறிப்பீறி எழ வேண்டிய தேவை காலத்தின் தேவையா? அல்லது மாற்றம் பெறப் போகும் வரலாற்றின் கோலமா? எது? என்பதை தீர்மானிக்க என்னால் முடியவில்லை.

யாழ்பாணத்தில் பெரும் படையெடுப்பை நடத்தியது அரசு. தர்மத்தின் வழித்தடத்தில் நின்ற தலைவன் அழிவிலிருந்து மக்களைக் காப்பதற்காக வன்னியை நோக்கி பின்நகர்வை செய்து நின்றான். ஏமாற்றத்தை தாங்கிக் கொள்ள முடியாத அதர்மத்தின் அரசப்படைகள் வன்னி மீது போரைத் தொடங்கின.

ஓமந்தையிலிருந்து "ஜெயசிக்குறு" என்ற பெயரில் அந்த யுத்தம் தொடர்கதையாகி நடந்து கொண்டிருந்தது. எல்லாப் போரிலும் இராணுவ ரீதியாகத் தோற்றுவிட்டதால் தானோ இந்தப் போருக்கு "வெற்றி நிச்சயம்" என்று பெயரிட்டனரோ?

போர் உக்கிரமானது. தெற்கிலிருந்து வடக்கு கிழக்காகவும் ஆனையிறவிலிருந்து தெற்கு நோக்கியும் இராணுவம் நகர்ந்தது அங்குலம் அங்குலமாக.

தகவல் தொடர்பு கோபுரங்கள் எதிரிப்படையின் பெரும் பலமாக இருந்தன அந்தக் கோபுரங்களை தகர்த்து விட்டால்..... தலைவனின் சிந்தனை செயலாகியது.

இராசி கரும்புலியாகிச் சென்றாள். உப்புக்காற்றில் உரசலோடு இராசி பதுங்கிப் பதுங்கி எதிரிப்பாசறைக்குள் நுழைந்து கொண்டாள். செந்திருவும் கூடச் சென்று தாக்கும் இலக்கை கண்டுகொள்ளக் காத்திருந்த போது..... எதிரியின் சரமாரியான தாக்குதல் தொடங்கியது.

இராசி உறுதி தளராது ஊர்ந்து ஊர்ந்து இலக்கை நோக்கி நகரத் தொடங்கினாள். தகவல் கோபுரம் சமீபமாக அவள் வந்த போது..... பூமி பிளந்ததோ.....? வானிடிந்து வீழ்ந்ததோ? என்று சிந்திக்க வைக்கும் பேரொலி. அனற் பிளம்போடும் புகை மண்டலமாகி எதிரிப்பாசறையை அதிர்த்தது.

அனர்த்தங்கள் பலஎதிரிகளுக்கு நடந்து அடங்கிய போது இராசி..... தேசத்தின் காற்றோடு காற்றாகிவிட்டாள்..... ஆம்..... அவள் உடலிழந்து.....

இந்த மண்ணின் விடுதலைக்காகத் தன்னை ஈகம் செய்த இராசிக்கு இன்று 19வது பிறந்த நாள்.

அன்னை அவளது பிறந்த நாளை கண்ணீர்த்துளிகளால் அர்ச்சித்துப் பூஜித்துக் கொண்டிருந்தாள்.

ஆனால் இராசி..... இந்த தேசத்தின் சுதந்திர காற்றை சுவாசிக்க விரும்பிய லட்சோபலட்சம் மக்களின் மூச்செல்லாம் நிறைந்து நின்றாள். அந்த இன்பப் பேருவகையைச் சுமந்து கொண்டே நான் அந்தத் தாயிடமிருந்து விடைபெற்றேன். இராசி இராசி என்று தமிழீழத்தின் காற்று என் செவிக்குள்ளிணைந்து அவள் பெயரை உச்சரித்துக் கொண்டே செல்வதை நான் மட்டுமா உணர்ந்தேன்... நாளை நிமிர்ந்து அசையப்போகும் இந்தச் தேசத்தின் கொடி இராசியைப் போன்ற ஆயிரமாயிரம் மாவீரர் பேரைச் சொல்லித்தான் அசையப் போகின்றது.

சவுக்காரம்

அப்பு.....

அவசர அவசரமாகப் படலை வரை சென்று விட்ட செல்லப்பரின் காதில் இந்த அழைப்புக் குரல் கேட்டுவிட்டது.

"காலங்காத்தாலை போனவழி போகவிடாமல் பிறகாலை கூப்பிடுகிறாள். இண்டைக்குப் போற காரியம் முடிஞ்ச மாதிரித் தான்....." மனதுக்குள் புறுபுறுத்துக் கொண்டே படலைக்குள் திரும்பி நின்று, வா..... வா.... இஞ்சைவா எனக்கொண்டும் புரியேல்ல என்று செல்லப்பர் மகளைத் திருப்பி அழைத்தார்.

கிணத்தடிப்பக்கம் கிடுகு பின்னிக் கொண்டிருந்த செல்லாச்சிக்கிழவி, "இந்த மனுசனுக்கு ஒண்டும் விளங்காது. சும்மா கண்மூடிக்கொண்டு, போனால் வயலும், புலமும் வந்தால் வீட்டுத்திண்ணையிலை என்னதான் புரியுது....." தாவணிச் சீலையை உதறிச் சுற்றிப் பின் கொய்யாணத்திலை சொருகியவாறு படலையடிக்கு வந்து சேர்ந்தாள்.

"தொடமாட்டாமல் கிடக்கிறவளை இஞ்சைவரச் சொல்லிக் கேட்டால் அவள் வருவளே!. வயலுக்காலை வரேக்கை சின்னச் சந்தைப் பக்கம்

1994ல் யாழ் இலக்கிய வட்ட வெள்ளி விழாச் சிறுகதைப் போட்டியில் 1ம் பரிசு பெற்றது.

போய்வரட்டாம். அங்கினை ஆரேன் சவுக்காரம் கொண்டு வந்து விப்பாங்கள். ஒண்டைப்பாதியை எண்டாலும் வாங்கியாப்பா" என்று சொல்லிவிட்டுச் சொல்லாச்சி திரும்பினாள்.

"சவுக்காரமோ....?" ஏன்டியப்பா அண்டைக்கெல்லே எழுபது ரூபா குடுத்து இரண்டு கட்டி வாங்கியந்தனான்....., அதுக்கிடையிலை என்ன தாயும் மோளுமாச் சவுக்காரமே தின்னிறியள்" என்று புறுபுறுக்க தொடங்கிய செல்லப்பர் உழைக்கிற உழைப்பெல்லாம் சவுக்காரத்துக்குத்தானே காணும்.....? தோளிலை போட ஒரு துவாயில்லை. கோயில் திருவிழாவும் வருகுது. கோயிலுக்கும் ஏதேனும் குடுக்கோணும், ஒரு வேட்டியும் வாங்கவேணும். ஓ..... கிடக்கிற வேட்டியைக் கட்டலாமெண்டால் அதுவும் நடுவாலை கிழிஞ்சு போய்கிடக்குது. இனி வெட்டியான் பூச்சிக்கு மருந்தடிக்கோணும்..... என்னை என்ன பண்ணச் சொல்றாய்.....?"

அப்படியே ஒரு கணம் தன்னை இழந்தவராகச் செல்லப்பர் அத்தனையையும் நினைத்துக் கழைத்தபோது செல்லாச்சியைப் பார்த்தார்.

செல்லாச்சி வீட்டுமறைவில் திரும்பிக்கொள்வது தெரியுது.

இவளுக்கு நாலு இளுவை இழுத்தால் எல்லாம் சரிவரும். உங்கை எல்லாருக்கும் தாய்மார்தான் பிள்ளைப்பெத்துப்பாக்கினமோ? தாயில்லாதவை பெறேல்லயோ? அவனுக்கென்ன கொண்டந்து விட்டுப்போட்டுப் போட்டான். தூ..... வாயில் குதப்பிய வெத்திலையைத் துப்பிவிட்டு மடியிலிருந்து வெத்திலைச் சரையை எடுத்துப் பிரித்தவாறு சினத்தோடு நடக்கத்தொடங்கினார் செல்லப்பர்.

மனதில் எத்தனையோ வெப்பியாரங்கள்.

"உத்தியோகமெண்டு சொல்லி எல்லாம் வழிச்செடுத்துக் கொழுத்த சீதனமும் வேண்டிப்போட்டு, இப்ப ஒவ்வொரு பிள்ளைப் பெத்தும்பாத்து,.....அவர் கொண்டந்து விட்டுப்போட்டு அங்கினை சுத்திச்சுழண்டு சோக் கடிக்கட்டும்....." மனதில் ஏற்பட்ட கோபத்தோடு வயல் வரப்பில் சறுக்கி வீழ்ந்தபோதுதான் வயலுக்குவந்த நினைப்பே வந்தது.

எதிர்பாராத பரபரப்போடு எழுந்து பொழுதுக்குக் கையைக் குடுத்து நிமிர்ந்த போதுதான்.... சே..... எல்லாரும் வந்திட்டாங்கள். ஒரு நாளுமில்லாத மாதிரி இண்டைக்குச் சிவசம்பரும் வந்து நிற்கிறார்போலை கிடைக்குது. அந்த மனுசன் சும்மா எல்லாத்துக்கும் விண்ணாணம் பேசுறவர். ஏறுமாறா ஏதும் கதைச்சால்.....

வயலுக்குள் கால் வைக்கும் போதே சிவசம்பர் துவங்கினார். என்ன செல்லப்பர் இண்டைக்கு பிந்திப்போனாய்.... ஏன் வீட்டிலை ஏதும் கரைச்சலோ..?

முகமெல்லாம் பல்லாக நின்றார் செல்லப்பர். மனைவி செல்லாச்சிக் கிழவியும் மகளின் அழைப்பும் ஒருகணம் நினைவில் வந்து நிற்க, நுரை நுரையாகச் சவுக்கார நினைவுகள் நுரை கொண்டெழ.....

என்ன செல்லப்பண்ணைக்குச் சவுக்காரப்பிரச்சனையாக்கும் என்று ஆறுமுகம் ஆரம்பிக்க "உத்தியோக மாப்பிள்ளை வேணுமெண்டு எல்லாத்தையும் வித்துச் சுட்டுக் குடுத்தவர். இப்ப மருமோன் கொழும்பிலை, இஞ்சை செல்லப்பண்ணை பாடு பெரும்பாடு தான் என்று குஞ்சரம் முடித்தாள்."

நீண்ட சங்கதிகளையெல்லாம் அந்த வார்த்தைகள் சுமந்து நின்றன.

சிவசம்பர் வாய் திறவாமல் சிரித்தார்..

ஆறுமுகம் பக்கத்து வீடென்பதால் எல்லாம் புரியுது என்ற நினைப்பின் சிரிப்புத்தான் அது.

நாற்று நடுகை மும்முரமாக நடந்து கொண்டிருந்தபோது செல்லப்பர் மருமோனைப்பற்றி எல்லாருக்கும் மனதுக்குள் இருக்கிற வெறுப்பைப் புரிந்து கொண்டார்.

கல்யாணம் முடிச்சு மூண்டு பிள்ளைக்களுக்குத் தகப்பனான பின்னும், தகப்பன் தாய் சகோதரமெண்டு மருமோன் காசனுப்பிக் கொள்வதை நினைக்க நினைக்க நெஞ்சுக்குள் புட்டுக்கட்டி மாதிரி..... சினம் முட்டியது.

செல்லப்பர்... தனக்குள்ளேயே சிந்தனையில் ஈடுபட்டார்.

கிடுகு வித்த காசும் முடிஞ்சுது. சாப்பாட்டுக்கெண்டு வைச்ச கௌபியும் முடிஞ்சுது. அண்டைக்கெண்டு செலவுக்குக் கூலி வேலைக்குப் போனால்தான் ஏதோ அடுப்புப் புகையுமெண்டு வந்திட்டுது. இந்த நிலையிலை எப்ப இருந்தனான். சே.....!

இந்தக் குறுக்காலை போன ஆமிக்காறன் காம்புக்குள்ளை இருந்து செல்லடிக்கிறதாலை தோட்டமெல்லாம் புலம்பத்திக் கிடக்குது. சாமான் சக்கட்டெல்லாம் ஆனை விலை குதிரை விலையெண்டு போகுது. எண்டாலும் என்ரை செல்லாச்சியின்ரை ஐயூரியத்தாலை ஏதோ..... எல்லாச் சனங்களும் தேங்காயெண்ணை விளக்கெரிக்க என்ரை வீட்டிலை மண்ணெண்ணை விளக்கெரியுது என்று எண்ணிய போது, மனைவியைப் பற்றிய உயர்வான ஒரு கணிப்பு குமுழ்கொண்டு சிரிப்பாக வெளிவந்தது.

சிவசம்பர் வீட்டிலிருந்து கஞ்சியும் மாங்காய்ச் சம்பலும் வந்து சேர்ந்தது.

சிவசம்பர் எல்லோருக்கும் பரிமாறினார். கடுதாசிப் பார்சலை எடுத்துச் சிவசம்பர் பிரித்தபோதுதான பனாட்டுத்தட்டும் பழைய குருடியாக வந்து சேர்ந்ததைப் புரிந்து மகிழ்ந்தனர்.

"எங்களைப் பினாட்டுத் தின்னியளெண்டு பழிச்சுப் போட்டு இப்ப எங்கடை பொடிபொட்டையளெல்லாம் பினாட்டுத் தின்னத் துவங்கியெல்லோ விட்டினம்"

காலஞ்செய்த கோலந்தானே. அமெரிக்கன் மாவிலை பாணும் றொட்டியுமாத் திண்டவைக்கும் காலம் வந்து பாடம் சொல்லிக் குடுத்திருக்கே, என்று செல்லப்பர் அங்கதச் சுவையோடு பேசிக்கொண்டார்.

பனாட்டில் ஒரு கடியும் கஞ்சியில் ஒரு மிடறும் குடிச்சுச் சம்பலினையும் தொட்டு நாக்கிலை தடவி.... காய்..... என்ன சுவை..... இந்தச் சாப்பாடுகளை யெல்லாம் மறந்து..... சே..... வார்த்தைகளைச் செல்லப்பர் முடிக்க முன்னர் சீதேவிக் கிழவி

சொன்னாள். "எடதம்பி நாங்கள் பினாட்டுத் திண்டாலும் ஒருக்காலமும் பனங்களியிலை உடுப்புத் தோய்க்கேல்லைக் கண்டியோ..... இப்ப எல்லாம் பனங்காய் காவியெல்லோ உடுப்புத் தோய்க்கினம்."

இதைக் கேட்டதும் வாயிலை அவல்போட்ட மாதிரித்தான் இருந்தது. மற்றவைக்கும்.

எல்லோருமாக ஒரு கணம் அரசியலிலை குதிச்சு, "எங்கடை பொடியளோடை சமாளிக்கேலாமல் எல்லாத்தையும் நிப்பாட்டியெண்டாலும் இவங்களைப் பணிய வைக்க அரசாங்கம் பாக்குது. உது இந்தச் சென்மத்திலை நடவாது.

சிவசம்பர் இந்தப் பேச்சுக்களையெல்லாம் வாங்கிக்கொண்டு வயலிலிருந்து புறப்பட்டபோது எல்லோரும் மீண்டும் வயல்சேற்றுள் கால்புதைத்தனர்.

"இந்தச் சேற்றுக்கால்கள் தான் நாளை சோற்றுக் கைகளின் அத்திவாரம் போலும்."

எப்ப இரண்டுமணி வருமென்ற நினைப்போடு செல்லப்பர் நாற்றுக்களை ஊண்டிக் கொண்டிருந்ததார். சின்னச் சந்தை மூண்டுமணியோடை கலைஞ்சு போகும். சிலவேளை சனமில்லாட்டில் முந்தியும் கலையும். அதுக்குள்ள போனால் எப்படியும் ஒரு சவுக்காரக் கட்டியை வாங்கிப் போடலாமென்ற எண்ணம் மட்டுமே அவரிடம் மேலொங்கிநின்றது.

போனகிழமை முப்பத்தைஞ்சு ரூபாப்படி இரண்டு சல்லேற்றுக் கட்டி வாங்கினனான். இண்டைக்குத் தின்னியள் என்னவிலை சொல்லப் போறான்களோ ஆருக்குத் தெரியும்? சவுக்காரத்தின் விலையிலேயே செல்லப்பரின் மனம் நிலைகுத்தி நின்றது. சவுக்காரத்தடைதந்த மவுசு இது.

இரண்டு மணிக்குச் சற்று முன்னதாகவே வேலை முடிஞ்சு போச்சு. எல்லோருக்கும் பெரிய மகிழ்ச்சி.

நாளைக்கு.....? நாளைக்கும் ஏதாவது வேலை வேணுமே என்ற எண்ணம் கேள்வியாக எல்லோர் மனங்களிலும்

எதிரொலித்தபோது, சிவசம்பரின் மனைவி பாக்கியம்மாள் "நாளைக்கு ஹெலியடிச்சான் வயலிலை வேலையிருக்கு" என்று சொல்லிக் கொண்டே எல்லோருக்குமுரிய கூலிக்காசைக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

எல்லோரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். அந்தப் பார்வைகளில் ஏக்கம் கருவிட்டுக் கொண்டிருந்ததை பாய்க்கியம்மாளால் இனங்காண முடியவில்லை.

ஆத்தியடி வயல் என்ற அந்த வயலில் இரண்டு அருவி வெட்டுக்காலத்தில் ஹெலி வந்து சுட்டுத்தள்ளியதில் ஆறேழுபேர் காயப்பட்டதும், இரண்டு பேர் அந்த வயலிலேயே செத்துப்போனதிலிருந்தும் அந்த வயல் "ஹெலி அடிச்சான்" வயலென்ற உவமைப்பேரைப் பெற்றுவிட்டது. அந்தக் கொடுமைகளின் பின் அந்த வயலுக்கு வேலைக்கென எவருமே செல்லாததால் இன்றுவரை அது வெறும் வயலாகவே அறுகு படர்ந்து கிடந்தது.

இந்த வருசம் எப்படியும் அந்த வயலை விதைச்சால் நல்ல அறுவடை செய்யலாமென்ற எண்ணத்தில் சிவசம்பர் முதல் விதைப்பாக அதை விதைத்திருந்தார். மழை உரிய காலத்தில் பெய்யாததாலை ஊடுபத்தி இப்ப நாத்து நடவேண்டி வந்திட்டுது.

பாக்கியம்மாவின் சொல்லுக்குப் பதில் சொல்வதற்கு ஒருவரிடமும் துணிவில்லாத நிலையில், செல்லப்பர் யோசித்தார். வந்தால் காசு வராட்டில் ஆர் தருவினம்.? "எல்லாரும் நிலம்வெளிக்கேக்கை வாருங்கோ பத்து மணிக்குள்ள முடிச்சுப் போடலாம்" என்று செல்லப்பர் சொன்னபோது எல்லோரும் தலையாட்டிக் கொண்டு புறப்பட்டனர்.

செல்லப்பர் தனீது சம்பளப் பணத்தை வாங்கி வெற்றிலைச் சரையுள் வைத்தவாறு சின்னச்சந்தையை நினைத்தார்.

"அவன் ஐயாத்துரையின்ரை பொடியன் வவுனியாவாலை வந்தால் சவுக்காரம் கொஞ்சம் மலிவாக இருக்கும் இல்லாட்டில்....."

சந்தை இன்று வழமைக்கு மாறாகவே சனக்கூட்டமாக இருந்தது. ஏதோ மலிஞ்சிருக்கு. அதுதான் சனமெல்லாம் அள்ளுக்குத்தகையாக ஒரே இடத்தில் நிறைஞ்சு வழியுது.

கூட்டத்தை விலத்தி எட்டிப்பார்த்தார் செல்லப்பர். சவுக்காரம் இல்லை. ஏதோ பெட்டி பெட்டியாய் ..... சீனவெடிப்பெட்டி மாதிரி ஏராளமாக அடுக்கிக் கிடந்தது.

"தம்பி..... சவுக்காரமில்லையே....." ஏக்கம் நிறைஞ்ச மனத்தவராகக் கேட்டார் செல்லப்பர்.

அம்மான் சவுக்காரத்துக்குப் பதிலா இந்தப்பவுடரைக் கொண்டுபோங்கோ.... ஒரு பெட்டி 150 ரூபா. ஒரு மாசத்துக்கு உங்களுக்குக் காணும்.

செல்லப்பர் ஏங்கி இடிவிழுந்த நிலையில் அப்பிடியே சிலையாகத் தலையிலை கைகளை ஏந்தியவாறு குந்திவிட்டார்.

மனதில் ஆயிரமாயிரம் குமிழிகள் உடைந்து நொருக்கிச் சிதறின.

கோயிலுக்கும் வேட்டிக்குமெண்டு கொஞ்சங் கொஞ்சமாகச் சேத்து வைச்ச காசெல்லாம்.....

ஆசைகள்.....
கனவுகள்.....

எண்ணங்கள் எல்லாமே பொடிப்பொடியாக ..... கால தலை முறையிலை இல்லாத புதினம். பிள்ளைப்பெத்து இரண்டு மாசத்துக்கிடையிலை அவளுக்குத் தலைமுழுக்கு வந்திட்டுது. சாணைச்சீலை தோய்க்க, துடக்குச் சீலை தோய்க்க... எல்லாம் ஒண்டடிமண்டடியாய்..... அவள் சொல்லாச்சி ஒற்றைக் கால் சன்னதத்திலை நிப்பள்... சவுக்காரமில்லாட்டில் அதையாவது வாங்காமல் இஞ்சை ஏனப்பா வந்தனி... "பனங்கழியிலை இந்தத்துடக்குச் சீலையளையும் தோய்க்கேலுமே" எண்டு அவள் வேற கேட்டுத் துலைப்பாளே.... நினைவுகள் கனத்து நெஞ்சை

அடைத்த போது, செல்லப்பருக்குத் தலைசுற்றியது.

"தம்பி ஒரு பைக்கற்றைக் கொட்டிப் பாதியைத்தாவன்?" கேட்கத் கூடாததையா அவர் கேட்டார். என்னைப் போலை ஆரும் மிச்சப்பாதியையும் வேண்டுவினம்தானே....

அம்மான் என்ன பகிடியா விடுறியள்....? சும்மா போங்கோவன், ஆரையேன் கேட்டுப் பங்காய் வாங்கிப் பிரிச்செடுங்கோ.

"பெடியன் சொல்றதும் சரிதான். ஆரையேன் கேட்டுப் பாப்பம்"

பலபேரைச் செல்லப்பர் கேட்டுப்பார்த்துவிட்டார். வெட்கத்தை விட்டுக் கேட்டுக் கடைசிலை செல்லப்பர் கேட்டதற்காக வெட்கமும் வேதனையும் பட்டுக் கொண்டது தான் மிச்சம்.

இறைச்சி.... மீன்... எண்டால் அரைவாசி கால்வாசி கூடப் பிரிச்செடுப்பினம். இதைப் பிரிச்செடுக்கிறதுக்குத்தான் இவைக்கு .....சே ..... "சவுக்காரத்தை விடமனுசன் மோசமாயப்போனான்."

வெத்திலைச்சரையைப் பிரிச்சு இருந்தகாசை எண்ணிப்பார்த்தார் செல்லப்பர். இன்றைய வேலைக்காசோடை இருநூற்றி அறுபது ரூபா இருந்தது.

மகளுக்காக நூற்றைம்பது ரூபாவைக் கொடுத்து இதை வாங்கினால்.... கௌரி அம்மனுக்கு வருசம் வருசம் நாங்கள் பரம்பரையாகச் செய்யிற பூசைக்கு .... அதை என்னண்டு விடுறது?

வேட்டியை வேண்டாமல் விடலாம். துவாயையும் வேண்டாமல் விடலாம். கௌரி பூசையை விடலாமோ? விதைச்சது ஒருவயல் அதிலை வெட்டியான் பூச்சி விழேக்கை அதுக்கு மருந்தடிக்காட்டில் சோத்துக்கும் நெல்லில்லாமல் போகும். எல்லாத்தையும் மொத்தமாக்கி இந்தச் சவுக்காரப்பவுடர் விழுங்கப்பாக்குதே. செல்லப்பரின் மனதில் ததும்பிய கவலைகள் அழுகையாக வந்துவிடும் போலிருந்தது.

சந்தைக்கூட்டம் மெல்ல மெல்லக் கலைகின்றது.

மதியவேளைப்பசி வயிற்றை வேறு அரிக்கின்றது.

செல்லாச்சி சவுக்காரத்துக்காக எழுப்பப்போகும் கேள்விகள் விஸ்வரூப மெடுத்து எழுந்துகொண்டு வருகுது.

ஆனால் இன்னும் யாராவது வருவார்கள் தானே? ஒருபைக்கேற்றை வாங்கி பாதி பாதியாய்ப் பிரிப்பம் என்ற எண்ணத்தையே நம்பிக்கையாக்கிக் கொண்டு இன்னமும் காத்திருக்கின்றார் செல்லப்பர்.



பசி

"ரவி எழும்பனையா எழும்பி முகத்தைக் கழுவு. தங்கச்சியாக்கள் எழும்ப முன்னம் இந்தக் கஞ்சித் தண்ணியைக் காச்சிப் போட்டு நானொருக்கா விதானையார் வீட்டையெல்லோ போகவேணும்" என்று அடுக்களைக் குள்ளிருந்தவாறு குரல் கொடுத்தாள் கனகம்.

ரவி சோம்பல் முறித்துக் கொண்டு மெல்லச் சிணுங்கியவாறு எழுந்து நடந்தான்.

இடுப்புக்கு மேலே தோலைப் பிய்த்துக் கொண்டு வெளியே வரக் கங்கணம் கட்டிக் கொண்டிருந்த எலும்புக் கோர்வை கனகனத்தின் கண்களில் பட்டுக்கொள்ள என்ன செய்வது... குறுக்கால போன ஆமிக்காறனால.... அந்த மனுசன் இப்படி அநியாயமாகச் செத்திருக்காட்டில் இப்ப என்ர பிள்ளை.... இப்ப என்ன மாதிரி இந்த குஞ்சுகளைப் பட்டினி கிடக்காமல் பார்த்திருப்பன். போயும் போயும் இந்த நாட்டிலை தமிழராகப் பிறந்து நாங்கள் படுகிற துன்பங்கள் ... கனகம் பானையைத் துளாவிக் கொண்டு மனத்துயர்களை அடக்கினாள்.

உலை முகத்தில் பொங்கியெழுந்த நுரையை முந்திக்கொண்டு அவள் மனதில் பொங்கிவந்த துயரைப் புரிந்துகொள்வதுயார்?

கனகத்தின் விழிகளில் நீர்த் திவலைகள்.

அம்மா... பசி... க்குது... குழந்தை ரமேஸ் எழுந்த இடத்தில் இருந்தவாறே தன் குரலை வெளிப்படுத்தியது.

கனகம் கஞ்சிப் பானையை இறக்கி வைத்துவிட்டு ரமேஸ் இருந்த இடத்திற்கு வந்துவிட்டாள்.

பொள்ளல் விழுந்த அந்தப் பாயில் திக்குக் கொருவராக நாலு குழந்தைகளும் தூங்கிக் கொண்டிருந்தன.

நடுவேயிருந்த ரமேஸின் முகத்தில் நெற்றிப் பரப்பிலிருந்து கழுத்து பூராகவுமே வியர்வைத் துளிகள் முளை கொண்டிருந்தன.

அம்மா ..... ப.....சி..... க் சொல்ல முடியாது சொல்லித் தாயின் மடியில் சரிந்தான் ரமேஸ்

கனகத்தின் கண்களில் கண்ணீர்ப் பூக்கள் பொல பொலத்துச் சொரிந்தன. இரவு சாப்பிடாமல் கிடந்த பிள்ளைக்குப் பசிக்களை... அதுதான்.. இப்படி வேர்க்குது... ரவியைக் கூப்பிட நினைத்த கனகம் ஏதோ நினைத்தவளாக "இரையய்யா வாறன்" என்றுவிட்டு எழுந்து சென்று துணி ஒன்றை நீரில் நனைத்து இலேசாக பிழிந்துவிட்டு கொண்டு வந்து அந்த ஈரத்துணியால் ரமேசின் முகத்தையும் உடலையும் துடைத்து விட்டாள். பின் தன் முந்தானைச் சேலையால் அந்த ஈரம் போகும்வரை உரசித் துடைத்தாள்.

"கஞ்சி ஆறட்டும் பிள்ளைக்கு குடிக்கத் தாறன்" என்று செல்லமாகக் கூறி ரமேசின் உச்சியை மோந்துவிட்டு, கஞ்சியை பெரிய சட்டி ஒன்றில் ஊற்றினாள் கனகம்.

"கஞ்சி ஆறட்டும்".....

ரமேஸ் கஞ்சியைப் பார்த்துக்கொண்டிருந்தான். கனகம் மற்றக் குழந்தைகளையும் ஒவ்வொன்றாக எழுப்பி முகம் கழுவி

துடைத்துக்கொண்டு வந்து எல்லோருக்கும் ஒவ்வொரு ஏதனங்களில் வார்த்துக் கொடுத்தாள்.

ரவி கிணற்றடியைவிட்டு இன்னமும் வரவேயில்லை. அவன் எதையோ யோசித்தவாறு நின்றான்.

உப்படித்தான் மூத்தவன் சதீசும் நிண்டுபோட்டு போயிட்டான். கனகம் எட்டி எட்டி மகனைப் பார்த்தவாறே சிறிசுகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

ரவி இன்னமும் வந்தபாடாயில்லை... "அம்மா இண்டைக்கு என்ன கிழமை" ரவி தான் கேட்டான்.

"இவனுக்கு இப்ப என்ன தேவை வந்தது.? வெள்ளிக் கிழமையிலதானே போக்கறப் போனவங்கட 'செல்' பட்டு அந்த மனுசன் ....ம்....."

"அன்று அண்ணா எங்கையம்மா போட்டுது - நீ ஏன் அழுகிறாய் அண்ணாவும் அப்பா போன மாதிரி போட்டுதே?"

"அப்படிச் சொல்லாத அண்ணா வருவான்."

"பின்ன ஏன் நீ அழுகிறாய்....." அண்ணை எங்கையெண்டு சொல்லு நான் போய் கூட்டி வாறன்.

நாலு வருசத்துக்கு முன் நடந்த அந்தச் சம்பவங்கள் ஒரு கணம் மனதில் தோன்றி மறைய .... "இஞ்சை வா ராசா.... இப்ப ஏன் உனக்கு கிழமை.... நான் ஒருக்கால் விதானை வீட்டை போட்டுவர வேணுமெல்லே"

கனகம் இழுத்து கதையின் திசையை மாற்றினாள்.

"ரவி சிரித்துக்கொண்டே வந்தான்" அம்மா நிவாரண காட்டுக்குத்தானே போறியள்.

''ஓமய்யா அதையெண்டாலும் வாங்கினாத்தானே உங்களுக்குப் பசிக்காமல் நான் சமைச்சுத் தருவன். பால் மாவும் தருவாங்களாம்.. நீ தம்பி தங்கச்சியோட இருந்துகொள். நான் ஓடிப்போய் ஓடி வந்திடுவன். என்ன.....?''

கஞ்சியைக்... குடிச்சுச் சொன்னான் ரவி ''குண்டாலையும் செல்லாலையும் ஆக்களைச் சாக்காட்டிப் போட்டு நிவாரணம் தாறான் நிவாரணம் .....'' நீங்கள் பாஞ்சு விழுந்து வாங்குங்கோ... மனதில் ஏதோ ஒரு வைரத்தின் தாக்கமாக அவன் வார்த்தைகள் வெளிப்படுவதாகக் கனகம் உணர்ந்து கொண்டாள். கனகம் ஒருவாறு மனதைத் தேற்றியவாறு கொய்யகச் சேலையை இழுத்துவிட்டு முந்தானைச் சேலையை அவிழ்த்து உதறி முகத்தைத் துடைத்தவாறு புறப்பட்டு விட்டாள்.

ரவியும் ஏனைய குழந்தைகளும் அந்தக் கஞ்சியை ஊதி ஊதி வயிற்றை நிரப்பிக்கொண்டிருந்தனர்.

கனகம் பலவித சிந்தனைகளையும் சுமந்தவாறு எட்டி மிதித்து நடந்து கொண்டிருந்தாள். சனம் அதிகம் வந்து கூடிவிட்டுதெண்டால் நேரத்தோடை வரேலாது என்ற அச்சம் மேலோங்க அவள் சென்று கொண்டிருந்தாள்.

முந்தின காலங்களில் புருசன் இல்லாதவைக்குப் பிச்சைக்காசுக்கெண்டு ஒரு காட் குடுக்கிறவை அந்தக் காட்டுக்கு மிஞ்சிப் போனால் ஒரு விதான பிரிவில 20 பேருக்கு மேல இருக்காது. இப்ப அப்பிடியே ..... ஆயிரம் நூறெண்டு சுட்டும் குண்டுபோட்டும் செல்லடியெண்டு எல்லா வழியாலும் சாகடிச்சுப் போட்டு..... சின்னப்பிள்ளை எண்டாலும் ரவி கேட்டதன் நியாயம் இப்போதுதான் அவளிடம் பூதாகாரமெடுத்தது.

''ஆக்களை செல்லாலையும் குண்டுகளாலையும் கொல்லிப்போட்டு நிவாரணமோ குடுக்கிறான்கள்''

சே..... எவ்வளவு அர்த்த புஷ்டியான வார்த்தைகள்.... என்ரை பிள்ளைக்கு இப்பதான் பத்து வயது இப்பவே.... இப்படிச் சிந்திக்கிறவனை.....

மூத்தவன் சதீஸ்கூட எவ்வளவு கெட்டிக்காரன்... அரசாங்கமோ முந்தினது இயக்கமோ முந்தினதம்மா? என்று ஒருதடவை கேட்டுவிட்டு பதிலை எதிர்பாராமலேயே அரசாங்கங்கள் எல்லாமே எல்லா இனங்களையும் சமமாக நடாத்தி இருக்குமானால் எந்த ஒரு நாட்டிலும் புரட்சிகர இயக்கங்கள் எதுவும் தோன்றி இருக்கவும் முடியாது. போரும் இத்தனை அழிவுகளும் கூட ஏற்பட்டிருக்காதுதானே. விசயம் தெரியாத சனங்கள் இயக்கங்களைத் திட்டிக்கொண்டே இருக்கும்வரை அரசுகளும் தங்கட நாடகத்தை நடத்திக் கொண்டுதானிருக்கும்.

இந்த நாளையில சின்னஞ் சிறுசுகளுக்குதான் எவ்வளவு பெரிய அறிவும் சிந்தனையும்... எங்கட காலத்திலை... நாங்கள் உந்த வயதிலை... ஓ... என் செல்வங்களுக்கு இந்த வயதிலை தகப்பனில்லாத பிள்ளைகளாய்ப் போச்சுதுகள்... கனத்த மனதிலிருந்து வெளிப்பட்ட பெருமூச்சு மெல்ல வெளிப்பட்டுக் காற்றில் கரைந்தது.

அன்று ஒரு வெள்ளிக்கிழமை. மாலைக் கருக்கல் இருள் பூமியை எங்கும் மை வண்ணமாக்கிக் கொண்டிருந்தது. யுத்த காலத்தில் எழுந்த துப்பாக்கி வேட்டொலி போல நாற் திசையிலிருந்தும் கூவிச் சிதறி வெடித்தன செல்கள்.

நாடு பூராவும் செல்களின் ஆட்டம்..... நடைபாதை தோறும்... வீடுகள் தோறும்.... ஓ எத்தனை மனித உடல்கள்.. அங்கமிழந்து உருக்குலைந்து.

எங்கும் வெடித்தெறிந்த செல்லின் ஓசை நின்றது. அந்த ஒரு கணத்தில் தான் எத்தனை அவலக் குரல்கள்.. மெல்ல சதீஸ் வெளியே வந்து நிற்கின்றான்.

அடுத்தடுத்த வீடுகளில் அவலக் குரல்கள்.... இதயத்தைப் பிழிந்து கொள்ள மெல்லத் தலையை நீட்டியவாறு பிள்ளைகளோடு வந்த கனகம் "ஐயோ அப்பா..." என்று சதீசின் தீனக்குரல்..... என்ரை ராசா..... எங்கை எங்கை ஐயோ....." அம்மா அப்பாவின் தலையைக் காணோம்..

கனகம் மூர்ச்சித்து வீழ்ந்தாள்

பொழுது விடிந்த மறுநாள் கனகத்தின் புருசனோடு நாலு மனித உடல்கள் சிதையில் நீறின.

கனகத்தின் நெஞ்சத்தில் கனலெடுத்து காற்றோடு காற்றானது. கண்மூடித்தனமான இலக்கற்ற அரசும் ஆட்சியாலும் இப்படி அபலைகளாக்கப்பட்ட பெண்கள், பிள்ளைகள்.

பெண்களின் 'தாலியை அறுத்துவிட்டுப் பூக்கடை நிவாரணம் பரிசளிக்கும் அரசு....' "கண்களைப் பிடுங்கி ஏறிந்துவிட்டு கண்ணாடி கொடுக்கும்..." இப்படிப் பித்தலாட்டம் செய்வதுதான் ஆட்சி, அதிகாரம். இது மாற்றாத வரை நாமும் நமது மக்களும் சுண்டைக் காய்கள்தான்.

மகன் சதீசின் குரலும்.. அந்தக் கோர நிகழ்வுகளும்.. ஒன்றன்பின் ஒன்றாக எழுந்து வந்த கனகத்தை தடுக்கும்.

மகன் போராளியாகப் போராடிக் கொண்டிருக்கும் போது கேவலம் இந்த அரசின் பிச்சைப் பணத்தையா நீ ஏற்கப் போகிறாய்.

அரசின் வஞ்சகத்தை வஞ்சகத்தால் தான் வெல்ல வேண்டும். பழிக்குப்பழி

மனதில் ஆயிரம் துப்பாக்கிச் சன்னங்களின் துழைப்பு. கனகம் எந்த அவஸ்தைகளையும் பொருட்படுத்தவே இல்லை.

விதானையார் வீட்டில் ஏதோ... நாலு ஐந்து பேர் இப்போதுதான் தலை நீட்டிக் கொண்டிருந்தனர்.

கனகம் நீ உதவியில்லாத நீ..... தூரம் வா... வா

பிள்ளைகள் எப்படியோ கஞ்சியைக் குடித்துவிட்டுப் பேசாமல் விளையாடுங்கள்... ஆனால் ரவியின் வார்த்தைகளும் யோசனைகளும்.. கனகம் சிந்தனையோடுதான் நடந்து கொண்டிருந்தாள்.

கனகத்தின் உடல் வியர்த்துக்கொட்டியது.

கனகம் வீடு வந்து சேர்ந்தபோது சிறிசுகள் எல்லாம் கூடி விளையாடிக் கொண்டிருந்தனர்.

கனகத்தின் கண்கள் ரவியின் தோற்றம் தெரியாதா என்ற ஏக்கத்தில் அங்குமிங்குமாக....

ரவியைக் காணவில்லை.

வீட்டிற்கு உள்ளும் இல்லை. அடுக்களைப் பக்கம் புகுந்தபோது கஞ்சிப் பானையருகே பெட்டி ஒன்றுக்குள் ஒரு மடித்த காகிதம்

நடுங்கும் கரங்களால் மெல்லக் குனிந்து அந்த கடிதத்தை எடுத்துப் பிரித்தாள்.

"அம்மா, வருவாயற்ற ஏழைகளுக்கு வயிற்றுப் பசி. ஆதிக்கவெறியர்களுக்கு ஆதிக்க வெறிப்பசி, இல்லாமை இல்லாது ஒழிய வேண்டுவது இலட்சியப்பசி ஈடில்லாக் கலைஞானத்துள் சுழன்று கொண்டிருக்கும் இவ்உலகில் உலகின் அமைதியையே நாடிநிற்கும் ஆத்மீகவாதிகளின் இறைபசி இளமை மோகத்தில் திளைத்து நிற்போர்க்கு இளமைக்காலக் காதல்பசி என்ன செய்வது உலகில் எத்தனையோ பசிகள் மனிதனை ஆட்கொண்டு வதைக்கின்றன.

எல்லாவற்றையும் விட முக்கியமானது எங்களது சுதந்திரம் அம்மா. அதனால் தான் நம் நாட்டை மீட்கும் சுதந்திரப் பசியோடு போராடிக் கொண்டிருக்கும் போராளிகளோடு சேர்ந்து போராடினால் தான் இந்தப் பசி தீரும். அந்த சுதந்திரப் பசி தீரும் வரை உங்களிமிருந்து விலகி இருக்கும் மகன்.....

அந்த தாயின் பனித்த விழிகள் இப்போது மேல் நோக்கின.



மரணித்த மானுடம்

1-7-1990ல் ஐரோப்பியத் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் (பிரான்ஸ்) தனிநாயகம் அடிகள் நினைவாக நடத்திய அகில உலக சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற சிறுகதை.

மாலைவானம் மையல் செய்மாதர் தம் உதடுகளைப் பரிகசிக்கத் தொடங்கியபோது திரேசம்மா தன் இரு கைகளாலும் நாரியைப் பிடித்தபடி முற்றத்தில் உலவுவதும் முகஞ் சுழிப்பதுமாக நின்றாள். அவளின் பின்னே அவளது நான்கு வயதுச் சிறுமி அம்மா..... அம்மா என்று எதற்கோ நேரம் வந்துவிட்டதை நினைவூட்டுமாறு அழுது சிணுங்கியவாறு இழுபட்டது.

குழந்தைக்குப் பசி எடுக்கிற நேரமாப் போச்சு.... எணை ஆச்சி உந்த பெட்டிக்கை பாண் கிடக்குதணை, அதை எடுத்துக் கிறேசிக்குப் பிச்சுக்குடணை, கத்தப் போறாள்.

குறஞ் சுருட்டொன்றை வாயில் வைத்துப் புகைந்து கொண்டிருந்த ஆனாசிக் கிழவி, தூ..... என்று எச்சியைத் துப்பி விட்டு ''ஏன்மோனை உனக்கென்ன நாரியுழைதே..... சும்மா சும்மா நாரியைப் பொத்துறாய்.'' என்று திரேசம்மாவைக் கேட்டுக் கொண்டே எழுந்து அடுக்களைக்குள் புகுந்தாள்.

சிறுவயதிலேயே தாயை இழந்து போன திரேசம்மாவை ஆனாசிக்கிழவிதான் வளர்த்து சந்தியாப்பிள்ளையின்ரை கையில பிடிச்சுக் குடுத்திட்டு இன்னமும் திரேசிக்காகவே இருப்பது போல ஊசாடிக் கொண்டிருந்தாள்.

"அம்மாச்சியிட்டைப் போய் பாண் வாங்கித்தின்னம்மா..... போடா போ..... " என்று மகளை அனுப்பிவிட்டு குடிசையினுள்ளே சென்று செத்தையோடு சாய்ந்து கொண்டாள் திரேசம்மா.

கரைவீச்சுக்குப் போன புருசனை இன்னமும் காணவில்லையே என்ற ஏக்கத்தின் தாக்கம் அவள் முகத்தில் நிழலாடியது. கடந்தகால அநுபவங்களின் அச்சத்தாலோ என்னவோ இந்த மனுசனை இன்னும் காணேல்ல...ம்.... உடம்பெல்லாம் பதறுது.... இண்டைக்குப் பறுவத்திலே தானாக்கும்.... வார்த்தைகளை முழுமையாக்கா மலேயே பல்லைக் கடித்துக் கொண்டாள். வேதனையை வெளிக்காட்டாமல்,

சீனி..... சீனி..... என்று பாண் துண்டைக் கையில் வாங்கிக் கொண்ட கிறேஸி அடம்பிடித்தாள்.

வேறுவழியின்றி ஆனாசிக்கிழவி சீனியை ஒரு பெட்டிக்குள் அளவாகக் கொட்டிக் கொடுத்துவிட்டு திரேசம்மாவைக் கவனிக்க வந்துவிட்டாள். குறுக்காகக் கட்டியிருந்த தன் சேலைத் தலைப்பால் திரேசம்மாவின் முகத்தைத் துடைத்துப் பார்த்து வியர்க்கவில்லையே என்பதைக் கண்டு ஆ..... அது சும்மா பெலவீனத்தாலை உழையுதாக்கும். நீ பயப்பிடாமல் உதிலை மெல்லப் படன்பிள்ளை என்று சொல்லிக் கொண்டாள் ஆனாசிக்கிழவி.

"இல்லையெணை ஆச்சி நாரி நல்லா உழையுது..... இதிலை இப்பிடிச் சாந்து கொண்டிருக்க எப்பன் சுகமாகக் கிடக்குது. நீ போய்ப் பிள்ளையை ப் பாரணை. கைவிளக்கை அவள் தட்டிக்கிட்டிப் போடுவள். அது பேந்து வேறை கரைச்சலாய்ப் போகும்" என்றாள் திரேசம்மா.

ஆனாசிக்கிழவி அந்த மச்சுக் குடிசைக்குள்ளே அடுக்களைக்கும் திரேசம்மாவடிக்குமாக மாறி மாறித் தன் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தாள்.

பிள்ளைத்தாச்சிக் காரியமெல்லே, பெடியன் வந்திட்டு தெண்டால் கொஞ்சம் தெண்பாயிருக்கும். அவனைக் காணயில்லை. ம்..... நாளைக்கு மாதாகோயில் கூடுசுத்துக்கு மோனைக் கொண்டுபோக வேணுமெண்டு இரண்டு மூன்று நாளைக்கு முந்திக் கதைச்சதை நினைச்சுக் கொண்ட ஆனாசிக்கிழவி ஆரட்டையேன் சைக்கிள் கேட்டுப்பாக்கவும் போயிருப்பான் என்று தன் பாட்டில் புறுபுறுத்துக் கொண்டிருந்தாள்.

பௌர்ணமி நிலவு மெல்ல மெல்லக் கோலங்காட்டி ஒளியைச் சொரிந்து கொள்ளத் தொடங்கியது.

பொங்கிவரும் பெருநிலவைக் கண்டு கடலைகள் எழுந்து சீறி ஆனந்தக் கூத்தடித்து இரைந்து கொள்ள இந்த மனுசனுக்கு இண்டைக்கு அள்ளுக் குத்தகையாகப் பிடிபட்டுட்டு தாக்கும். அதுதான் சுணங்குது போலை. கச்சான் சாடையா வீசினது தானே.....

ஓமடிபுள்ளை, கச்சான் உசாவினால் கறிபடும். அதுதான் சுணங்கிறானாக்கும். நீ ஒன்றுக்கும் பயப்பிடாதை. அவன் வந்திடுவன் என்று அடுக்களையில் இருந்தவாறே ஆறுதல் சொன்னாள் ஆனாசிக்கிழவி.

''எக்கச்சக்கமான நேரத்திலை குத்தெழும்பினால் கரைச்சல்படுவியள். உங்கடை வீட்டை காரும் கொண்டுவாறது கரைச்சல். முந்தி முந்தின பிள்ளையளுக்கு நடந்தது மாதிரி இந்தப் பிள்ளைக்கும் வந்திடாமல் நேரத்தோடை ஆசுப்பத்திரிக்குப் போகோணும் திரேசம்மா.''

கிளினிக்கிலை வைச்சு நேர்ஸ் சொன்ன வார்த்தைகள் தருணமறிந்து எச்சரிப்பது போல இப்போது சிவப்பு விளக்கு காட்டிக் கொண்டிருந்தது அவள் மனதில்.

இந்தப் பிள்ளைக்கு முதல்பிள்ளை வீட்டில் பிறந்தபோது நஞ்சுகொடி விழாமல் உடல் நீலம்பாயத் தொடங்கியபோது நாட்டு மருத்துவிச்சி ஆசுப்பத்திரிக்குக் கொண்டு போகச் சொல்லித்தான் தப்பித்துக் கொண்டாள். சந்தியாப்பிள்ளை திரேசம்மாவையும் பிள்ளையையும் வண்டியில் ஏத்தி மணலுக்கை வில்லங்கப் படேக்கை

பூட்டாங்கயிறு அறுந்து கொள்ள மாடு விலத்திவிட்டது. வண்டில் முன்பக்கமாக கீழே விழுந்து துலா மணலில் குத்தியபோது குழந்தை நிலத்தில் விழுந்துவிட்டது. திரேசம்மா வண்டில் கிறாதியை எட்டிப் பிடித்துத் தப்பிக்கொண்டாள். அப்படியே அழுதழுது சந்தியாப்பிள்ளை ஒருவாறு ஆசுப்பத்திரிக்குக் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டான். குழந்தையைக் காப்பாற்ற முடியாமற் போய்விட்டது.

"திரேஸிக்கு உடம்பெல்லாம் நீலம் பரவிப்போச்சாம். இனிப்பிழைக்க மாட்டாள்" என்று சம்மாட்டி வீட்டார். கதையளந்ததும் சந்தியாப்பிள்ளை மாதா கோவிலில் முகங்குப்புறக்கிடந்து துடித்ததும்" இப்பிடி ஊர் மருத்துவத்தாலை தான் அநேகம் தாய்மார்கள் செத்துப் போகிறார்கள், நேரத்தோடை ஆஸ்பத்திரிக்கு வந்தால் இப்படியெல்லாம் வராது, என்று ஆசுப்பத்திரி டாக்குத்தரம்மா சொன்னதெல்லாம் ஒன்றுக்குப்பின் ஒன்றாக நினைவுக்குவர, அந்த நினைவுகளால் மனம் பேதலிக்க கடலுக்குப்போன மனுசனையும் இன்னும் காணவில்லையே என்ற ஏக்கமும் தாக்கமும் எல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து திரேசம்மாவைச் சித்திரவதைப்படுத்திக் கொள்ள அவள் அறுத்துப்போட்ட ஆமைபோலத் துடித்துக்கொண்டிருந்தாள்.

தின்னியள் லெக்சனுக்குத் துண்டு போடச் சொல்லிக் கேட்கேக்கை உங்களுக்கு இந்த முறை றோட்டுப் போட்டுத் தருவம் எண்டு சொல்லிச்சொல்லி எத்தினை காலமாய் ஏய்ச்சுப் போட்டாங்கள். இந்த மணலுக்குள்ளாலை ஓடேலாதெண்டு ஒரு கார்க்காரனும் கார்விடாங்கள். விட்டுத்தானென்ன, காரென்ன வண்டிலுக்கே வெட்டி சளிக்கிற மணலுக்கை அவங்கள் தான் என்ன செய்யிறது.

கடற்கரையிலையிருக்கிறதும் போதும். மனுசன் படுகிறபாடும் போதும்..... ஆ..... அடிவயித்திலை லேசாய்க் குத்துதெணை ஆச்சி..... ஆ.....ம்.....

என்ன என்ன திரேசு,..... வண்டிலைக் கொண்டரட்டே. ஆச்சி, என்னணை ஆசுப்பத்திரியிலை கொண்டே விடுவமோணை, என்றவாறு சந்தியாப்பிள்ளையும் வந்து சேர்ந்தான் அவசரமாக,

வீச்சு வலையையும் கறிப்பறியையும் முற்றத்தில் வைத்துவிட்டு அவசர அவசரமாக அவன் ஓடினான்.

''சின்னமலை மாதாவே இந்த சுமையை சுகமாக இறக்கிப்போடு'' ஆனாசிக்கிழவியின் ஏக்கங்கள் வேண்டுதல்களாயின.

சா பிள்ளைப் பெத்து நல்லா உடம்பும் கெட்டுப்போச்சு. அதுக்கிடையிலை இப்பிடியொண்டைக் குடுத்திட்டாய், நல்லிரத்தம் இல்லையெண்டு கிழமைக்குக் கிழமை ஊசியும் மருந்துமாய்த் திரிஞ்சவள். இந்தக் கனத்த நாளையிலை இப்பிடி வந்திட்டுதே..... மாதா ஒண்டும் வரவிடமாட்டா..... என்று மடுவிலில் இருந்து யாரோ கொண்டு வந்து கொடுத்த மண்ணைக்குழைத்து திரேசம்மாவின் நெற்றியில் பூசினாள் ஆனாசிக்கிழவி.

ஆனாசிக்கிழவிக்கு காலமை கூரையிலையிருந்து கொர்..... கொர்..... என்று தத்தித் தத்திக் கத்திய காகம் ஏதோ ஒன்று அந்த வீட்டிலை நடக்கப் போவதை உணர்த்துவது போலிருந்தது. அப்பிடிக் காகம் கத்துமெண்டால் எப்பிடியோ கெடுதிதான் நடக்குமெண்டு ஆனாசியின் புருஷன் அந்தோனி சொன்ன சாத்திரம்.

இந்த நடைமுறைச் சாத்திரத்தை இப்போது யாரும் அறிவதாகவோ அறிந்திருப்பதாகவோ இல்லை என்பதுதான் ஆனாசியின் நினைப்பும்.

காகம் கத்திக் கத்தித் தலையைத் தாழ்த்தி..... தலைமயிர்கள் சிலிர்த்து.... என்ரை போக்காளன் காகத்தைக் காட்டிப் பாரப்பா உப்பிடிக் காகம் கத்தினால் இரத்த உறவுக்கை ஆரேன் சாவீனமாம். அப்பு ஆச்சிக்கு இந்தக் காகச் சாத்திரம் நல்லாத் தெரியும். காகம் கத்துறமுறை, அது இருக்கிற திசை, அது செய்யிற..... எல்லாத்தையும் கவனிச்சுப் போட்டு அப்பு சொன்னாரெண்டால் கையான் தப்பாது. ஆனாசி இப்ப அப்பிடியெல்லாம் சொல்ல எந்த விண்ணனாலை ஏலும் ஒரு கதையே சொல்லி ஆனாசி தன்ரை தேப்பன் தாயவையின்ரை வாழ்க்கை முறையளைக்கூட மனுசன் வடிவாச் சொன்னவற்றில்..... ஒருவித நினைப்பு வர..... மீகாமன் நாடகம் பார்த்து விடியுமட்டும்

முழிப்பிருந்த நித்திரைத் தூக்கத்திலை நான் கிடந்து நித்திரையாய்ப் போனன். அந்த மனுசன்..... என்ரை ராசா..... கட்டு மரத்தை எடுத்துக் கொண்டு கூடெடுத்துப் பாக்கவெண்டு போன மனுசன்தானே..... இண்டைக்கும் நாங்கள் அவற்றை உடம்பைக் காணயில்லையே. அண்டைக்கும் இப்பிடித்தான் காகம் கத்திச் துலைச்சது. இண்டைக்கும் காலமை கத்தக்கத்த நான் அவள் திரேசிக்குத் தெரியாமல் எத்தினைமுறை என்ரை பொல்லைக் காட்டி கலைச்சுவிட்டனான். இப்போது ஆனசியின் மனதிலை ஒரு புயலே வீசுற மாதிரி..... பழைய நினைவுகளும் எழுந்து மாறி மாறி வந்தபோது.....

மாதாவே கந்தசாமிப் பொடியன்ரை கார் நிக்கவேணும். மனம் கசிய அவள் வேண்டிக்கொண்டிருந்தாள். வேறையாருமெண்டால் இஞ்சை கார் விடான்கள். மாட்டனெண்டு போடுவான்கள்.

நோட்டில்லாத இடத்திலை இருந்துகொண்டு சே..... என்ரை போக்காளன்ரை காலத்திலையிருந்து நோட்டுப் போடுறமெண்டு ஏமாத்திப்போட்டுத் துண்டு போடீச்சவங்கள். போய்த் துலைஞ்சும் போனாங்கள்.

இப்ப இக்கரைச் சனங்களெல்லாம் எழும்பி அங்காலை அடுத்தடுத்துப் போனாப் போலை போட்ட நோட்டையும் அவன் தின்னி..... மதிலைக் கட்டி மறிச்சுப் போட்டான். இந்தப் பகுதியிலை இருந்த சனங்களெல்லாம் குடிபெயர்ந்து போகேக்கை சொன்னான். "நீயும் எங்கினையேன் வசதியான இடமாப் பாரடாமோனை யெண்டு" அவன் தானென்ன செய்வன். காசில்லாதவனுக்கு யார் உதவீனம்? பணம் பணத்தோடை சேர இலம்பைப் பட்டவை இலம்பைப்பட்டுப்பட்டு இப்பிடியே சீரழிஞ்சு சாக வேண்டியதுதான். அரசாங்கமும் அதிலை இருக்கிறவங்களும் எல்லாம் பணக்காறங்கடை ஆக்கள்தானே. இல்லாட்டி சம்மாட்டி பிலிப்பர் தன்ரை காணியுக்கை லெக்சன் கூட்டம் வைப்பரோ. கூட்டம் வைச்சுப்போட்டு அந்தக் காணிக்கை நோட்டையும் போடீச்சுப் போட்டு இப்ப காணியை சுத்தி மதிலைக் கட்டேல்லையோ? ஆர் இதைக்கேட்டினம். கவுண்மேந்திலை இருந்து வந்தவங்களுக்கு காசை விசுக்கிப் போட்டுச் சம்மாட்டி பிலிப்பு பேசாமல் இருக்கிறான். நாங்கள் துண்டு போட்டதுதானே மிச்சம்" என்று பேதுருப்பிள்ளையின் பேரன் சொன்னது சரிதானே!

மண்ணள்ளிப் போவாராலை நாங்கள் சிலுவை சுமந்த ஆண்டவரைப் போலக் கதறிக்கதறி..... மூக்கைச் சீறிக் குண்டிச் சீலையிலை துடைச்சுக் கொண்டு ஆனாசிக்கிழவி வெப்பியாரப்பட்டுக் குமுறிய உள்ளத்தோடு வெளியே எட்டிப்பார்த்தாள்.

நிலவு வெளிச்சத்திலை சந்தியாப்பிள்ளை அந்திரேசு வீட்டுத் திருக்கலோடு வருவது தெரிந்தது. கடற்கரையானபடியால் குடிப்பதற்கான நல்ல தண்ணிக்கு அவர்கள் வெகுதூரம் வரை செல்ல வேண்டியிருந்தது. தண்ணி இழுவையோடு இப்படி அந்தரிச்சுப்போன மக்களுக்காகவும் அந்திரேசுவின் திருக்கல் உதவி அளித்துக் கொண்டுதானிருந்தது.

தொடர்ந்துவந்த வெளிச்சமும் கோர்ண் சத்தமும் காரின் வரவைக்கூற "பிள்ளை, பிள்ளை..... தம்பி வந்திட்டான். மெல்ல மெல்ல எழும்பி வெளியாலை வரேலுமே" என்று ஆயுத்தமணியாக நின்றாள் ஆனாசிக்கிழவி.

வயிற்றுக்குள் இருக்கும் பிள்ளை உதைச்சுப்பிரட்டி வெளியேறுமாப்போன்ற குத்தில் திரேசம்மா எழுந்துகொள்ள முடியாது அவதிப்பட்டுக் கொண்டிருப்பது அவளுக்குத்தானே தெரியும். பிரசவக்குத்தென்பது என்ன லேசுப்பட்ட குத்தே?

சீனியைத் தொட்டுத் தொட்டுச் சூப்பிக் குதப்பிப் பாணைத்திண்டு முடித்துக் கொண்ட குழந்தை வெளியே வந்தபோது முற்றத்தில் அந்திரேசுவின் திருக்கல் திரும்பி நிற்க சந்தியாப்பிள்ளை குதித்தான். "திரேசு..... தூக்கட்டே" என்றவாறு குனிந்து சென்றபோது திரேசம்மா கால்களை நீட்டியவாறு குடிசையின் செத்தையின் செத்தையில் சாய்ந்தவாறு முனகிக் கொண்டிருந்தாள்.

"கவனமடா... தம்பி...." ஆனாசிக்கிழவியின் எச்சரிப்பு.

அப்பா..... நானும்..... நானும்..... அம்மாவோடை வரப்போறன். கிறேசியின் அழைப்பு சிலுவைக் குறியைத் தனது நெஞ்சிலும் திரேசம்மாவின் நெஞ்சிலுமிட்டுவிட்டு மெல்ல அவள்

கையைத் தன்தோளில் போட்டுவிட்டு மறுகையால் கால்களைத் தூக்கிக்கொண்டு கூரையில் முட்டாமல் குனிந்து வந்து திருக்கலில் இருத்தினான் சந்தியா.

திரேசம்மா பின் வண்டியில் இருந்ததால் முன்னே மாட்டில் பூட்டியதுலா உயர்ந்து கொள்ள அந்திரேசு துலாவை அமர்த்தியவாறு ஆசனத்தில் ஏறிக்கொள்ள வண்டி மெல்ல அசைந்தது.

"அம்மா..... அப்பா..... நானும்" குழந்தை கிறேசி அழத் தொடங்கினாள்.

ஆனாசிக்கிழவி ஒருகையால் பொல்லோடு மறுகையால் கிறேசியைப் பிடித்துக்கொண்டு "சின்னமலை மாதாவே சுகமாக இறக்கிப்போடு" என்று வாய்விட்டுக் கூறினாள்.

வண்டி மணலுக்குள் வெட்டிச் சறுக்கிக் குடை சாய்வது போல அப்படியுமிப்படியுமாக அசைந்தசைந்து ஊர்ந்து கொள்ளப் பின்னே நின்று தள்ளிக் கொடுப்பதும் மணலுக்குள் வெட்டும் சில்லை உருட்டிக் கொடுப்பதுமாகச் சந்தியாப்பிள்ளை பின்தொடர்ந்தான்.

வண்டில் நோட்டை அண்மித்தபோதும் கிறேசியின் அழுகுரல் கேட்டுக் கொண்டேயிருந்தது.

"சொக்கா வாங்கியாறன் அழாமல் இருங்கோ....."
சந்தியாப்பிள்ளை குரல் வைத்துச் சொல்லிக் கொண்டே வண்டியை காருக்கு அணைவாக நிறுத்தும்படி சொன்னான்.

திரேசம்மாவின் முனகல் அதிகரித்தபோது காருக்குள் திரேசம்மாவைப் பிடித்தபடி சந்தியா கதவைச் சாத்தினான்.

சந்தியாண்ணை பெற்றோல் அடிக்கலாம் தானே, கந்தசாமி நாசூக்காகத் தன் காரியத்தில் கண் வைத்தான்.

இண்டைக்கு எப்பன் ஆத்துக்குப் போனதாலை நல்ல விளைக்குட்டியள் வீச்சுக்கைபட்டது. ஏதோ மாலைக்கறி மலிவாக்குடுத்துக் கிடுத்து நாப்பது ரூபா கிடக்கு தம்பி, உனக்கு இருவத்தைஞ்சை அளவாத்தாறன். பேந்து தான் மிச்சம்

ஒரு லீற்றர்தான் அடிக்கலாம், ஆ, பரவாயில்லை, போய்வரக்காணும்.

திரேசம்மாவை காரில் ஏத்திப் போட்டுப்போன அந்திரேசுவின் திருக்கல் வீட்டை போன கையோடு ஆனாசிக்கிழவியைச் சுற்றி எல்லாப் பெண்டுகளும் மொய்க்கத் துவங்கி விட்டினம்.

"என்னணை ஆச்சி திரேசி இண்டைக்குப் பெத்துப் போடுவளே', "என்னடிமோனை சொல்லுறது. அவளும் நல்லாப் பெலவீனப்பட்டுப் போனாள். காலமை பிடிச்சுக் காக மொண்டு சாத்திரஞ் சொன்னமாதிரிக் கத்திப்போட்டுப் போக அவளும் ஆசுப்பத்திரிக்குப் போறாள். ஆண்டவரே....." ஆனாசிக் கிழவியின் குரலில் கவலையின் ஆழம் தெரிந்தது.

எணையெணை நீ ஒண்டுக்கும் பயப்பிடாதையணை. நாங்களிருக்கிறம்தானே. ஐஞ்சைப்பத்தை மாறிச்சாறியெண்டாலும் "உவளை இம்முறையொருக்கால் வடிவாப் பாக்கோணும்." நெடுகச் சாபிள்ளைப் பெத்துப்பெத்து அவளும் இளைச்சுப் போனாள். என்று கபிரியேலின் தாய் சொன்னாள்.

"இண்டைக்கு நல்லநாளணை. சைவக்காறற்ரை விளக்கீடெல்லே." பெத்துப் போட்டாளெண்டால் பிள்ளை நல்ல பலனோடை பிறக்கும். அத்திரேசுவின் மனைவி ஞானம்மா சொன்னாள்.

கையிலை மடியிலை ஒருதுட்டுக்கும் வழியில்லாமல் இருக்கிறான்பிள்ளை. என்ன செய்யப்போறான். எல்லாம் சாபிள்ளையோடை அழிச்சுத்துலைச்சுப் போட்டான். இனிஎன்ன செய்ய ஆரிட்டைப் போக..... ஆனாசிக்கிழவி தாற்பரியத்தைக் கூறினாள்.

நாங்கள் இருக்கிறம் தானேணை. நீ ஏன் இப்படிக் கதைக்கிறாய், சந்தியா வரட்டும். என்ன உதவியெண்டாலும் வந்து கேட்கச் சொல்லு நாங்கள் செய்யிறம். நான் முந்தி நீ முந்தி எண்டு எல்லோரும் உதவிக் குரலெழுப்பி ஆர்ப்பரித்து விட்டுப் புறப்பட்டனர். போகும்போது ஞானம்மா சொன்னாள், "எணை ஆச்சி சந்தியாவுக்கோ திரேசிக்கோ ஒண்டெண்டால் அந்த மனுசன் துடிச்சுப்

போகுமணை, நீ பாரன் இந்தமுறை அவளை ஒருக்காப் புதுப்பொம்பிளை மாதிரி ஆக்கித்தாறம்.'' நீ ஒண்டுக்கும் பயப்பிடாமல்கிட என்று,

ஆனாசி கிறேஸிக்குப் படுக்கைப் பாயை விரிச்சுக் கொண்டே"ஒருத்தரும் கைவிடாளே எல்லாரும் உதவி செய்வளே" என்று மகிழ்ந்தாள்.

சந்தியாப்பிள்ளை திரும்பும்போது குப்பிவிளக்கு மட்டும் அவனின் குடிசைக்கு காப்பாளனாக அழுது வடிந்து கொண்டிருந்தது. ஆனாசிக் கிழவியும் குழந்தையும் நன்றாக உறங்கி விட்டனர்.

இண்டைக்கு திரேசு ஒண்டும் சமைச்சிருக்க மாட்டாள் என்ற நினைப்போடு அடுக்களைப் பக்கம் எட்டிப் பார்த்தபோது உறியில் கிறேஸிக்குப் பிச்சுக்குடுத்த பாண்துண்டு பெட்டி ஒன்றுள் மூடி வைக்கப்பட்டிருந்தது.

விடிய வெள்ளணை கிறேசி எழும்பிக் கத்துவாள். ஆச்சி பாவம்.. கடைக்கும் நடக்கமாட்டா. இது கிடக்கட்டும் என்றவாறு அந்தப் பாண்துண்டை வைத்துவிட்டு மூடிய தண்ணிப் பானையைத் திறந்தான். குளிர்ந்த நீர்..... அப்படியே பானையோடு தூக்கி வாயுள் ஊற்றி வயிறு நிறைந்ததும் பானையை பக்குவமாக வைத்துவிட்டுப் படுத்துக்கொண்டான். நீரின் குளுமை வயிற்றுப் பசியைப் பறக்கடித்துக் கொண்டது. "என்னைப் போன்ற பலருக்கு தண்ணிதானே பாதி நாட்களை ஓட்டுது."

மாரிக்கடலின் சோவென்ற பேரிரைச்சலும் குளிர்காற்றும் அவனது தூக்கத்தை விரட்டியத்துக் கொள்ள ஆஸ்பத்திரிக்கும் ஆற்றுக்குமாக தன் நினைவுக் குதிரையைத் தட்டிவிட்டான்.

கடல் வெள்ளம் ஆற்றுக்குள் பாய்ந்ததாலை தானே அப்போதை உவ்வளவு விளைக்குட்டியள் பட்டுது. இனிக்கொஞ்ச நாளைக்கு ஆத்திலை மினக்கெடலாம். காலமைக்கு நேரத்தோடை முறிப்புப் பாலத்தடிக்குப் போய்ப் பாக்கவேணும். ஆத்திலை இனிக் களங்கட்டிறவை தங்கடை கடற்பங்குக்கு வரிச்சல் போட்டுக் கூடுகளைத் தொங்கவிட்டிடுவினம். முறிப்புப் பாலத்தடியிலை ஒருத்தரும் கட்டுறேல்லைத்தானே.

திரேசி பாவம் நல்லாப் பெனவீனப்பட்டுப் போனாள். இந்த முறை வடிவாச் சரக்கரைக்கிறதுக்கும் பத்தியம் பாக்கிறதுக்கும் ஆள் வைக்கிறேல்லை. உவளவைக்குக் காசு கொடுத்ததுதான் மிச்சம். அவள் ஒண்டும் தேறினதாயில்லை. இந்தமுறை எல்லாம் நான் தான் பாக்கிறது.

காலை வீச்சுக்கறிக்குப் பாலத்தடிக்கு பெரிய பெரிய உத்தியோகாரரெல்லாம் வருவினம். பெரிய உத்தியோகக்காரர் தான். சரியான கசவாரங்கள். அறுவத்தெட்டு விலைசொல்லி பிடி காசு பிடிச்சுத்தான் தருவங்கள். எண்டாலும் கெதியா வித்துப்போட்டு அப்பிடியே ஆசுப்பத்திரிக்குப் போகலாம். காசில்லாமல் அங்கைபோய் என்ன செய்யிறது. இப்படியே யோசித்த சந்தியாப்பிள்ள ஒருவாறு உறங்கிப்போனான். உறக்கமென்றொன்று இல்லையென்றால் கனவில் காணும் இன்பங்களைக் கூட அவர்கள் அனுபவிக்க முடியாதே?

பொழுது விடிந்தபோது வலையும் பறியுமாகப் பாலத்தடியில் நின்றான் சந்தியாப்பிள்ளை. ஒரு முறையோ இரு முறை தான் வீசியிருப்பான் நல்லாப் பட்டுட்டது.

விளைக்குட்டி, வஞ்சூரன், செம்பாரை, சே..... பத்தியக்கறி அரைச்சுக் காய்ச்சிப் போட்டுத் திரேசிக்குக் கொண்டு போகலாம். இப்ப ஒண்டும் குடுக்கேலாதே. குழந்தை பெத்திட்டால் நாளைக்குக் குடுக்கலாம் தானே என்று தன்னைத்தானே தேற்றிக் கொண்டு ஆரும் வரமாட்டாங்களா என்று நோட்டமிடத் தொடங்கினான்.

நினைத்தது போல உத்தியோகக் காறர் வரவில்லை. பெட்டிக்காறர் இருவர் சைக்கிளில் வந்து நின்றனர். அவர்களுக்கே மீனைவிற்றுவிட்டு அப்படியே ஆஸ்பத்திரிக்குப் போய்விட்டான் சந்தியா.

"ஒப்பிறேசன் செய்துதான் பிள்ளை எடுக்கவேணும். தியேட்டருக்குக் கொண்டு போட்டினம்." பக்கத்துக் கட்டிலில் கிடந்த ஒரு பெண் கூறினாள்.

"சின்னமலை மாதாவே இப்படியுமா சோதிக்கிறாய். இரத்தமில்லையெண்டு எத்தினை நாள் உடம்பிலை ஊசி

போட்டவங்கள். நாங்கள் நல்ல சாப்பாடு சாப்பிடுறேலை எண்டு தானே ரத்தம் ஏற ஊசி ஊசியாய்க் குத்தினவங்கள். இப்பவும் ரத்தமில்லையெண்டால் ஊசி ஏன் போடுவான்? ஐயோ நான் காணக்குமுந்தி இப்படிக் கொண்டேய்.... சந்தியாப்பிள்ளை குழந்தை மாதிரி அழத் தொடங்கினான்.

நேர்ஸ் ஒருத்தி வந்து "மனுசிமாரைக் கவனிக்காமல் உங்கடை ஆசையை முடிச்சுப்போட்டு போடுவியள். இப்ப ஏன் அழுவான். ஒப்பிறேசன் பெரிசில்லை. இப்ப அவவுக்கு ரத்தம் ஏத்தவேணும். அதுதான் பெரிய விசயம். கெதியாய் போய் ஆரையேன் கூட்டி வாரும்."

அவள் போய்விட்டாள்.

கால்கள் நகர மறுக்கின்றன. நெஞ்சு பக்பக்கென்று அடித்துக்கொள்ள ஆரைப் பிடிச்சு ரத்தம் கொடுக்கிறது. புரியாத கேள்வியைச் சுமந்தவாறு சந்தியா ஓட்டமும் நடையுமாகப் புறப்பட்டான்.

"ரத்ததானம் உயிர் காக்கும். தானத்தில் சிறந்தது ரத்ததானம்"

பள்ளிப்பிள்ளைகள் கியூவில் நின்று ரத்ததானம் செய்தார்கள். பத்திரிகைச் செய்திகளையும் விளம்பரங்களையும் காட்டிப் பேச்சு வாக்கில் ஒருநாள் கபிரியேல் சொல்லிக்கொண்டது சந்தியாப்பிள்ளைக்கு ஞாபகத்தில் வந்தது.

விசயம் தெரிஞ்சவன் வெளிநாடெல்லாம் போய் வந்தான். எப்பிடியும் உதவி செய்வான் என்ற நினைப்போடு கபிரியேல் வீட்டுப் படிகளில் நின்றான் சந்தியாப்பிள்ளை.

"கபிரியேல்....."

ம்..... என்னண்ணை ஏன் ஒருமாதிரி இழுத்து நிறுத்தினான் கபிரியேல்,

இல்லைத்தம்பி கபிரியேல் "மனுசிக்கு ஒப்பிறேசன் செய்து பிள்ளை எடுக்க வேணுமாம். அதுக்கு ரத்தம் குடுக்க வேணும். அது தான்....."

அவன் வார்த்தைகளை முடிக்கும் முன்னமே ..... ஆருக்குத் தெரியும் இப்படிவருமெண்டு. "சே..... போன மாதம் தானே நான் ரத்தம் குடுத்தனான் இப்ப என்னண்டண்ணை....."

அழுது வடிந்த முகத்தோடு நிண்ட இடத்துக்கும் பேசாமல் ஓடினான். சந்தியாப்பிள்ளை..... பேதுருப்பிள்ளையற்றை பேரனைக் கேட்டுப் பாப்பம்.

பேதுருப்பிள்ளையற்ற பேரன் சீமோன் தலை இழுத்தபடி கண்ணாடிக்கு முன் நின்றான்.

தம்பி சீமோன் ..... சொல்ல வேண்டிய தெல்லாம் சொல்லி சாவின் முனையிலிருந்து திரேசியை விடுவிக்க வேணும். பிச்சை கேட்பவன் போல சந்தியா இரந்து நின்றான்.

"இண்டைக்குத் தானே எங்கடை வள்ளம் வெள்ளோட்டம் விடப்போறம். நான் அதுக்குத்தானே....." மீதியைக் கேட்கச் சித்தமில்லாத சந்தியா அழுது தீர்த்து விடும் நிலையில் இனி எங்கு செல்வது.....? அடுத்தடுத்து ஏற்பட்ட ஏமாற்றத்தால் அவனுடலில் ஏதேதோ மாற்றங்கள்..... உணர்வு கலக்கமுறுவதான ஒரு நிலைத் தவிப்போடு ஒரு பெரும் புயலை மனத்திற்குள் அமுக்கி வைத்துக்கொண்டே யார் யாரிடமோ வெல்லாம் ஓடினான். ஒரு மனித உயிரைக் காத்திட இந்த மண்ணில் ஒருவருமே இல்லையா?

இந்த மனித உருவங்ளெல்லாம் மனிதம் மரத்துப்போன வெற்றுச் சடலங்களா? அல்லது உருவில் உலாவும் மனிதப் பிண்டங்களா? அவனுள்ளம் பிளக்கப்போகும் ஏரிமலை போலக் கலங்கித் தகித்துக் கொண்டிருந்தது. தலைசுற்றிக் கனத்து ஒரு விதமாகி..... குனிந்து முகத்தைத் துடைத்தான். வியர்வையால் முகம் கழுவுப்பட்டுக் கொண்ட ஒருவித தெண்புடன் யாரையோ நினைத்துக்கொண்டு ஓட்டமும் நடையுமாகச் சென்றான்.

கார்க்காறக் கந்தசாமிக்கு விசயத்தைச் சொன்னால் ஏதும் செய்ய மாட்டானா? சந்தியாவின் சங்கடமான மனம், எல்லோரும்

சொன்னதையெல்லாம் கேட்டபிறகும் ஒருவித நப்பாசையுடன் கந்தசாமியிடம் போனான்.

எங்கடை கோயில் சுவாமிக்கு ஒரு ஓட்டம் இருக்குது. ஓடிப்போட்டு வாறன். என்னை நம்பவேண்டாம். நீ வேற ஆக்களை ஒழுங்கு பண்ணு. இல்லாட்டில் இருநூறு ரூபாக் காசு ஆயத்தமாக வைச்சிரு. நான் வந்து யாரையாவது பிடிச்சுத்தாறன்.

"இருநூறு ரூபா.....". "இருநூறு ரூபா...." அதுக்குக்கூட சந்தியாவால்..... இப்போது யாரைக் கேட்டாலும் யார் தருவார்.....? உயிரோடு போராடும் ஒருத்திக்கு ஒருதுளி ரத்தம் குடுக்க முடியாத இந்த வெற்று மனிதர்களிடமா இருநூறு ரூபாய் கிடைக்கப்போகிறது?

திரேஸம்மா சீட்டுப்பிடிச்சு வாங்கின வீச்சுவலை. அது ஒண்டுதான் இப்ப என்ரை சொத்து. திரேஸிக்கு இல்லாத பொருளைப்பிறகு..? ஆருக்கு.....தொழிலுக்கென்ன செய்வது.? உள்ளிட்ட ஒருமனம் குறுகுறுத்துப் பேசியது. தூண்டிலுமா இல்லை. முடிந்த முடிவாக பாலத்தடியில் வீசிவிட்டு மரக்காரிடம் குடுத்துவிட்ட அந்த வலையை மரக்காருக்கே அடைவாகக் கொடுத்து.....

ஓடினான். இதயத்தின் ஓலமிடும் அத்தனை ஓசைகளையும் கேட்டுக்கொண்டே ஓடினான், திக்கற்றவனாக.

"முந்நூறு ரூபாய்க்கு மூன்று மாசத் தவணை முறையில் அடைவுக்கு வலை கொடுக்கப்பட்டுவிட்டது.

ஆஸ்பத்திரிக்குச் சந்தியாப்பிள்ளை வந்து சேர்ந்தபோது நாலுமணிக்கு மேலாகிவிட்டது. அவன் கண்கள் கந்தசாமியைத் தேடித்துளைத்துப்பார்த்து ஏமாந்தபோது ஒரு நப்பாசை ஆஸ்பத்திரிக்குள்ளே பார்ப்போமோ? மரணித்துவிட்ட மனிதத்தை இன்னும் அவன் நம்புகின்றானா?

எல்லா இடமும் பார்த்து களைத்து திரேசி படுத்திருத்த வாட்டுக்கு வந்து சேர்ந்தான்.

அவன் திரேசி கிடந்த கட்டிலுக்கு ஓடினான். குழந்தையொன்று கட்டிலோடு இணைந்திருந்த கட்டுத் தொட்டிலுக்குள் தூங்கிக் கொண்டிருந்தது. திரேசியை மட்டும் காணவில்லை.

ஆவல் மீறிய அவனது மனம் சொல்லவொண்ணாத உணர்வுகளைக் கொட்டிச் சொரிந்தது. தன் முரட்டுக் கைவிரல்களால் குழந்தையின் சிவந்த ரோஜாக் கன்னத்தைத் தொட்டு மகிழ்ந்தான். மறுகணம் திடுக்குற்றவனாகி..... ஓ..... என் திரேசி.....

திரேசி..... திரேசி ..... என்று மனம் அடிக்கத் தொடங்கிச் சந்தேகப் படுகுழிக்குள் வீழ்ந்து கரையேற முடியாது சமுத்திரத்தில் தத்தளிக்கும் படகோட்டியானான். ஐயோ..... ஐயோ..... ஐயோ என் திரேசி..... என்று வாய்விட்டே அவன் தன்னை மீறிய நிலையில் கதறியே விட்டான்.

பக்கத்துக் கட்டடில்காரி சொன்னாள் ''திரேசுக்கு ஒண்டுமில்லை, இன்னும் தியேட்டராலை கொண்டரேலை. ஏன் வீணா அழுகிறயள்'' என்று.

நான் அழத்தானே வேணும். அழுவதைவிட்டால் இந்த உலகில் வேறு என்னத்தைத் தான் செய்யலாம்.

சுவாமி ஜீவகதாஸ் ஒவ்வொரு பூசையிலும் சொல்லி வைத்தாரே''மனிதனாக வாழ்ந்திட வேணும்.'' அதை மட்டும் பழகிவிட்டால் ஆண்டவன் மிக விரைவாக நம்மிடம் தானே வந்துவிடுவான் என்று. ஆனால் என்ரை ஊருக்குள்ளே ஒரு மனிதனைக்கூட என்னாலை பார்க்க முடியவில்லையே..... மனிதம் மரணித்துப்போன மானிட சாதியா இந்த மண்ணில் இருக்கிறது.

அந்த ஒரு கணத்தில் தான் எத்தனை உணர்வுகள். அவனுள்ளத்தில் இப்படிப் பொங்கிக் பிரவகித்ததோ?

பாவம் அந்தப் பக்கத்துக் கட்டில்காரி சொன்ன வார்த்தைகளை நம்பிவிட இன்னமும் அவனுடைய மனதில் ஏனோ இடம் கொடுக்க மறுத்துக்கொண்டது. ''வாழ்வின் ஓருபக்க முடிவுக்கு மனிதன் வந்துவிட்டால் எதிலுமே நம்பிக்கை பிறக்காது போலும்.''

ஒப்பறேசன் தியேட்டர்..... எந்தப் பக்கம்,.....?

அவன் தியேட்டர் பக்கமாகவே ஓடினான். பைத்தியம் பிடித்தவனாகி.....

கூட்டமாக சிலர் நிற்கும் அந்த இடம் ..... ஓ..... அதுவாகத்தான் இருக்கவேண்டும்.

அங்கே.....

வரிசைக்கிரமமாக சில ரெச்சர்களைத் தள்ளிக்கொண்டு வருகிறார்கள். ஆஸ்பத்திரி ஊழியர்கள்.

ஒவ்வொரு ரெச்சர்களைத் தள்ளிக்கொண்டு வருகிறார்கள் ஆஸ்பத்திரி ஊழியர்கள்.

ஒவ்வொரு ரெச்சரையும் சந்தியாப்பிள்ளை மிக விழிப்பாகவே பார்த்துக் கொண்டான். எல்லாமே முகமறியாத மனிதர்கள். அப்படியானால் என் திரேசி..... திரேசி..... வாய்விட்டு கதறியபடி அப்படியே சந்தியாப்பிள்ளை என்ற அந்த உருவம் வீழ்ந்துவிட்டது.

அங்கு நின்றிருந்தவர்கள் ஏதோ ஒன்றைப்பார்ப்பது போலப் பார்த்துக் கொண்டு நின்றனர்.

அவனைத் தூக்க யாராவது மனிதர்கள்..... மனிதம் நிறைந்த மனிதர்கள் வருவார்களா?



போராளிகள்

மைவாடி என்பது யாழ்ப்பாணத்தின் கிழக்குப் புறமாக ஓங்கி உயர்ந்து நிற்கும் குக் கிராமம். நீர்த் தேக்கங்களும் ஆற்றிடை மேட்டு நிலங்களும் அக் கிராமத் திற்கு மிகை யற்ற வளத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தன. நெய்தலும், மருதமும் தனக்கே சொந்தமென்று அந்தக் குக் கிராமம் நிமிர்ந்து நிற்பதை யார்தான் மறுத்துவிட முடியும். இத்தனை செல்வ வளங்கள் யாவும் நிறைந்த அக் கிராமத்தில் மனித இதயங்கள் ..... ஓ..... அதுதான் அந்தக் கிராமத்தின் பஞ்சம் போலும்.

சித்திவிநாயகரின் விழாக் கோலங்கள் நாளொரு வண்ணமும் பொழுதொரு வண்ணமுமாகி இன்று இறுதி விழாவான தேர்த்திருவிழா. சாரை சாரையாக மக்கள் குவிந்தனர். அயற் கிராமத்தவரும் அண்டையூர்க் காரர்களும் கூடக் குதூகலித்து நின்ற காட்சி... சே..... போங்கள் அது சொல்லுந் தரமன்று.

சிவகாமி கைகளைத் தலைமீது வைத்துக்கொண்டு கண்ணீர் பெருக் கெடுத்தோட பக்திப் பரவசமாய் விநாயகரை வழிபட்டுக்

12-10-1979
பனம் பொ. சூ. சங்க சமாசத்தினரின் சிறுகதைப் போட்டியில் உம் பரிசு பெற்றது.

27-10-1979 தினகரன்

கொண்டிருந்தாள். சிவகாமியின் மகன் செல்வன் மட்டும் தாயையும் ஏனைய மக்களையும் மாறி மாறி வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். ஏதோ ஒரு மாற்றம்.. ஒரு பேதமை... அவனுக்குப் புலப்படாமலில்லை. பத்துப் பன்னிரண்டு வயதுகூட நிரம்பியிராத செல்வனின் உள்ளத்தில்தான் எத்தனை போராட்டம். ஆம்..... அவனது சிந்தனை தெளிவடைகிறது".

"அம்மா எல்லோரும் சாமி கும்பிடக் கோயிலுக்குள் போறாங்க. நீங்க மட்டும் ஏன் வெளி வீதியைச் சுத்திக் கொண்டிருக்கிறீங்க?" அது செல்வனின் இதயத்தின் அடிநாதமாயொலித்த கேள்விதான்.

"ம் செல்வா உனக்குச் சொல்லாமல் விட்டால் வேறு யாருக்குச் சொல்லி என்ன லாபம்? கேளடா என் செல்வம் கேள்" என்று அந்த வீரத் தாய் தன் மகனின் சுதந்திரப் பக்குவத்தை உணர்ந்தவள் போலப் பேசினாள். அது என்ன மேடைப் பேச்சா.....? இதய தாகம்.. ஆம் காலம் காலமாக அடிமை இருளில் மூழ்கடிக்கப்பட்டு மனித உரிமைகளற்றுச் சோம்பிக் கிடந்த அந்தத் தாயின் இதயத்தில் தணியாத தாகமாகப பொங்கிப் பிரவகித்த இதய தாகம். இலட்சோப இலட்சம் தாழ்த்தப்பட்ட மக்களாக்கப்பட்டுச் சுக போகத்தில் அந்தச் சுரண்டல் காரர்களால் நசுக்கப்பட்ட ஒரு பிரிவினரின் இதயமெல்லாம் நிறைந்திருக்கும் இதய தாகமன்றோ.

"நாங்கள் கீழ் சாதிகளாம். தீண்டப்படாதவர்களாம். கோவிலுக்குள் சென்றால் தோஷமாம்." சிவகாமியின் அந்த வார்த்தைகள் செல்வனின் இதய நாண்களை யெல்லாம் உரமேறிக் கொதிக்க வைத்தது. அவன் கொதிப்பானது பொங்கிப் பெருந் தீயாக இதயத்துள் கெம்பிச் சுடர் விட்டுக் கொண்டிருந்த போதுதான் அந்த கொடுமை நடந்தது.

தேர், தேர் முட்டியிலிருந்து வெளியே வந்து விநாயகரைத் தாங்கிய வண்ணம் நிமிர்ந்து நிற்கிறது. மக்கள் வெள்ளம் குவிந்து நின்று அலைகடல் போல் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது. எங்கும் ஒரே அமளி துமளி.

"அடியடா..... அடி ..... கட்டடா..... அவனை வெட்டடா....." பக்தர் கூட்டத்தின் மத்தியிலேழுந்த குரலின்

சொற்கள்தான் இவை. காவல் தெய்வமாக இருந்த சூலாயுதங்கள் சிலரின் கைகளில் தாண்டவமாடியது. "கீழ் சாதியள் தேரிழுக்கப் போறியளோ?..... இழுங்கடா பாப்பம்....." "ஐயோ ..... ஐயோ..... அவலக் குரல்கள் அங்குமிங்குமாக எழுந்து கொள்ள மக்கள் ஆட்டு மந்தைகள் போல அங்குமிங்குமாகச் சிதறி ஓடினர்.

செல்வனின் இதயம் இரத்தக் கண்ணீர் வடித்தது. அது இரத்தக் கண்ணீரா? இல்லை.... அடிமை.... இருளை அகற்றப் பொங்கிப் பிரவகித்துக்கொண்டிருக்கும் சுதந்திரப் பிரவாகம். அவன் கைகளும் தோள்களும் தினவெடுத்தன. "அம்மா" என்றவன் "சும்மா நிற்க முடியாது தாயே இந்த சோற்றுப் பிண்டங்களின் கொடுமையைப் பார்த்துக் கொண்டு..... அடிமையாக..... மனித உரிமையற்ற வெறும் பொம்மையாக..... நிற்க முடியாதம்மா" கையில் அகப்பட்ட ஒருகல்லைக் கொண்டு அந்தக் கூட்டத்தில் பாய்ந்தான் செல்வன்.

சிவகாமி அவனைத் தடுக்கவில்லை.

பாவம் செல்வன் என்ன செய்துவிட முடியும்? பன்னிரண்டு வயதுதானே. தலையில் செங்குருதி கொட்ட எதையோ தேடித் திரும்பிக் கொண்டிருந்தான். சிவகாமி செல்வனைத் தேடிக் கண்டுபிடித்திருந்தாள். செல்வனின் தலையிலே சீறிக் கொண்டிருந்தது. செவ்விரத்தம். ஆனால் உள்ளத்தில் இழைப்போ களைப்போ அச்சமோ எதையுமே அவளால் காண முடியவில்லை. "செல்வன் நீ சிறுவனடா.... இந்த வெறி நாய்களோடு உன்னால் போராட முடியுமா? "அவனைக் கட்டியணைத்து உச்சி மோந்தாள். அந்தத் தாய்.

தலையில் கட்டுப்போட்ட நிலையில் செல்வன் ஆஸ்பத்திரிக் கட்டிலில் படுத்திருந்தான். அவன் கையில் தினசரிப் பத்திரிகையொன்று..... அவன் எதையோ பார்த்துவிட்டு பலமாகச் சிரித்தான்.

மதிய உணவோடு அங்குவந்த சிவகாமி, "என்ன செல்வா, தலையில் காயமிருக்கும் போது இப்படியெல்லாம் செய்யலாமா?'

"அம்மா இரண்டு மூன்று நாட்களாக மைவாடிக் கிராமத்தில் சாதிப்பேயோடு போராடிக் கொண்டிருக்கும் போராளிகளைப் பார்த்துக்

கொண்டிருந்த கூட்டம் ஏதோ கறுப்புப்பட்டி போராட்டமாம். சாதி ஒழிப்பிற்கு கறுப்புப்பட்டி போராட்டம் செய்யப் போகிறதாம். இங்கு நடைபெறும் மனித உரிமைப் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லாமல் அதற்கெதிரான பாதைகளில் மக்களை திசை திருப்பிச் செல்லும் இவர்கள் நாளைய வரலாற்றுப் போரை எப்படி ஆதரிக்கப் போகிறார்கள்? போராட்டத்தையோ, போராளிகளின் சிந்தனைகளையோ புரிந்துகொள்ளாது மறுதலிக்கும் இக் கூட்டம் என்றோ ஒரு நாள் தூக்கியெறியப்படத்தான் போகிறர்கள். இந்த இலட்சணத்தில் தான் இவர்கள்....." அவன் சுதந்திர தாகம் பேச்செல்லாம் மூச்சாக நிறைந்தது.

"செல்வா' நீ நன்றாகச் சிந்திக்கின்றாய் என்பதில் நான் எவ்வளவு பூரிக்கின்றேன் தெரியுமா? சிவகாமி கூறினாள்.

செல்வன் குணமடைந்துவிட்டான். தலையில் காயம் குணமடைந்துவிட்டது. என்னவோ உண்மைதான். ஆனால் ஊமைக் காயமாக அவனிதயத்தில் ஆழப் பதிந்துவிட்ட அந்தச் சுதந்திரவடு..... அது எங்கே அழிந்தது? வீர சுதந்திர வடு என்பது, பெறுவோரை அழிக்கப்படமுடியாத ஒன்றுதானே.

"அம்மா நான் சென்றுவர வேண்டும். என்னை ஆசீர்வதித்து அனுப்பு வாயாம்மா.....? " தன் தாயின் பாதங்களில் வீழ்கின்றான்

"அம்மா! மனித உரிமைகளை வென்றுவர வேண்டும். ஆதிக்க வெறி பிடித்த இந்த அக்கிரமக்காரர்களை ஒழித்துக் கட்டிச் சண்டாளத் தனத்தைச் சவக்காட்டிற்கு அனுப்பிவிட்டு, ஏழ்மையும் பசியும் இல்லாத, மனிதனை மனிதன் மதிக்கும் மனிதார்த்தமான ஒரு நவ உலகைப் படைக்கும்வரை நான் ஓயமாட்டேன். அதோ ஒரு கூட்டம்.... அந்த சுதந்திரப் பாசறையில் நானும் ஒருவனாகப் போகிறேன்."


அப்படியே தன் மகனை நெஞ்சோடு நெஞ்சாக வாரி அணைத்துக் கொண்டாள் சிவகாமி. அந்த பன்னிரெண்டு வயதுப் பாலகனை கன்னம் உப்பிவிடும் வரை முத்தமிட்டாள்..... தாய்மையின் பூரிப்பு அது.

"நீதாண்டா என் வீர புத்திரன். சென்று வா. பகையென்று கண்ட தெல்லாம் வென்று வா."

அந்தத் தாயின் வாழ்த்துக்களோடு செல்வன் சென்று கொண்டிருந்தான்.

ஆம்.

அவன் மனித உரிமைகளுக்காகப் போராடும் போராளிகளுடன் இணைந்து போராடப் புறப்பட்டுவிட்டான்.



நான் வரமாட்டன்

"தோடுடைய செவியன்" என்ற தேவராத்தைத் திருஞானசம்பந்தர் மூன்று வயதில் தான் பாடினார். இப்படி அன்று ஆசிரியர் படிபித்த போது சுத்தப்பொய் என்று தர்க்கித்து அடிவாங்கிய நாட்களை இன்றும் நினைத்துப் பார்ப்பதுண்டு. நான் மட்டுமா நம்பிக்கையீனப் பட்டேன். என்னைவிட இன்னும் எத்தனையோ மாணவர்கள் நம்பவில்லைத்தான். ஆனாலும் அவர்களை ஆசிரியர் சொல்வதை அப்படியே சீரணித்துக்கொள்வதால் என்னைப் போல அபிப்பிராயங்களை வெளிக்காட்டிக் கொள்வதில்லை. இந்தத் தேவாரச்சங்கதியை இன்றும் கூடப் பலர் இன்னமும் நம்பமறுக்கின்றனர் என்பது பலருக்கும் தெரிந்த ஒன்று.

ஆனால் எனக்கு? ஒருவேளை திருஞானசம்பந்தர் அந்த வயதில்பாடி இருக்கலாம் என்ற எண்ணங்களை இப்போது வலுப்படுத்திக் கொண்டிருந்தான் என்மகன் நீதி. நீதிக்கும் வயது மூன்று தான் ஆகிறது. கொட்டும் மலையருவிபோல..... அவன் வார்த்தைச் சிதறல்கள் தான் எத்தனை அற்புதமானவை. இயற்கையின் சீதனமா..... அல்லது திறமையின் வெளிப்பாடா..... இனங்காண முடியாத பூரிப்பு... என் னுள் ளத் தை எங்கெல்லாமோ இழுத்துச் செல்லும்.

25-08-1985
சுழற்சி

அந்த இழுவை விசையில் நான் ஊஞ்சலில் மிதந்து தென்றலில் ஆடுவேன். அந்த ஆட்டத்தின் மயக்கத்தில் நான் என்னையே மறந்து விடுவேன்.

"நீதி சாப்பிட்டாச்சா.....?" படிக்கவெல்லோ வேணும். ஒவ்வொரு மாலைப் பொழுதும் நான் கேட்பது வழக்கம். 'சாப்பிட்டாச்சு' ..... இனிப்படிப்பம் அவனும் சொல்வான். ஆனால் இதுவரை படித்துவந்த தமிழ் ஒன்று என்ற அந்தப் புத்தகம் இப்போது அவனுக்குப் பிடிக்கவில்லைப் போலும்.

"அப்பா எனக்கு வேறை புத்தகம் வாங்கித் தாங்கோ. பழம் புத்தகம் வேண்டாம்" என்று பட்டென்று பதிலளித்தான்.

ஏன் உங்கடை புத்தகம் தான் அச்சாப்புத்தகம் என்று நான் சொல்லிமுடிப்பதற்குள். அச்சாப்புத்தமெல்லாம் தெரியும் அது இனி வேணாம். இனிப் புதிசு வேணும் என்று நிச்சய சுருதியோடு சொல்லிவிட்டு, நாளைக்குப் புதுப்புத்தகம் வாங்கித்தாங்கப்பா என்று என் நாடியைத் தடவினான் நீதி. பிஞ்சு விரல்களின் வருடல் என்னை எங்கோ இழுத்துச் செல்ல அவன் நினைவைத் திசைமாற்ற எண்ணி வானத்து நிலவைக்காட்டி சொக்கன் வந்து படிக்கப்புத்தகம் கேட்கிறான் என்றேன்.

அப்பா..... அப்பா உந்தச் சொக்கன் படிக்கமாட்டான்.....
பாதிச்சொக்கன் பாவம் என்னப்பா என்று விட்டு பெரிய சொக்கன் எங்கப்பா என்று வேறு கேள்வியைப் போட்டுத்துழைத்தான். பதிலுக்கு

"அவன் ஒழிஞ்சு நிற்கிறான் .நாளைக்கு வருவான்."

நாங்கள். போய் பார்ப்பமே . சங்கிலி மச்சாள் .சசிஞ்தாக்கா ஒழிச்சு விளையாடுற மாதிரித்தான் சொக்கனும் ஒழிச்சுநிக்கிறானப்பா வாங்கப்பா நாங்கள் போய் பார்ப்பம் என்று தன் ஒழிச்சு விளையாடும் படலத்தை நினைவுகூர்ந்து கொண்டே அடம்பிடித்தான்.

நிலவில் மனிர்கள் உலாவிவருகின்ற காலம் தான் .ஆனாலும் அவனுக்கு என்ன சொல்லி நான் தவறிக்கொள்ள என்று

ஏங்கினேன் .அயோத்தி ராமன் நிலவைப் பிடித்துத்தரும்படி அடம்பிடித்தபோது கண்ணாடியில் நிலவைக் காட்டிய கைகேயின் நினைவுகள் என்மனதிலும் ஓடி நிலைத்தது .கண்ணாடியை எடுத்துக் காட்டினேன். எப்படியாவது ஏமாற்றிவிடாலமென்று. இது கண்ணாடி.... இது கண்ணாடி..... என்று கூறிக் கண்ணாடியைத் தட்டிவிட்டான். கண்ணாடி தரையில் வீழ்ந்து சிதறியது தான் மிச்சம்.

மனிதமனம் பலவீனமானது தானா? என் மனத்தில் சினத்தின் படையெடுப்பு ஒரேயொரு கணம்தான். என் சினத்தை நான் அவன்மீது திணிக்க முனைந்தபோது..... தன்குவளை விழிகளால் ஒரு தாக்கு..... அந்த விழிகளிள் வீச்சு என்ன வானத்து மின்னலா? நான் என்னை மறந்து சிரிக்கிறேன். "அப்பாச் சிரிப்பு,.. நாய்ச்சிரிப்பு...கூ....கூ..." என்று கைகளைக் கொட்டி அவன் சிரிக்கும்போது என்னால் சிரிக்காமல் இருக்க முடியுமா? மீண்டும் மீண்டும் சிரிக்கின்றேன். நாயின் குரைப்பை எனது சிரிப்பிற்கு ஒப்பிட்டுக்கொண்டானே என்ற வியப்பு என்னைக்குடைகிறது. இந்த மழலைச் சிந்தனைகள் எல்லாம் இப்படி வளர்ச்சியென்றெண்ணிய அறிவியற் குழந்தைப் பருவத்தின் சிருஷ்டிகளான கொலைக்கருவிகள், குண்டுகள், கொடிய ஏவுகணைகளையும் பாவிக்கத்தருணம் பார்க்கின்றான். சே! என்னே பேதமை நிறைந்த மனித வாழ்வு மனத்திற்குள் விரக்தி நிறைந்து வழிகிறது.

நான் நீதியை எண்ணிப்பார்க்கின்றேன். ஐந்து வயதிற்குரிய பாடப்புத்தகத் தினை அப்படியே முற்றாக மனனஞ் செய்து விட்டானே. இந்த மூன்று வயதில் இப்படியொரு ஞாபக சக்தியா? கல்வி வளர்ச்சியின் காலவேகமா? அல்லது உளவளர்ச்சியின் ஞாபக விரிப்பா? எதையுமே அனுமானிக்க முடியவில்லை.

என் மனைவி தங்கத்தோடு நீதியின் திறமைபற்றியும் சமகால நிகழ்வுகள் பற்றிய வானொலிச் செய்திகளைப்பற்றியுமே பேசிக்கொண்டிருந்தேன். வானொலிச் செய்தி தந்த கொதிப்பு மனதில், வாயிலே சுருட்டு. இப்படித்தான் நான் இருந்தேன். முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்த நீதி எதையோ தீர்மானித்தவனாக வந்து என் மடிமீது வீழ்ந்து கொண்டான். தாயின் முகத்தில் நீதியின் விழிகள் எதையோ தேடுகின்றன. தாய் தங்கமோ பக்கத்து வீட்டு

மதன் தலையில் பலமான காயத்தோடு, மனைவியைப் படுகொலைக்கு பலிகொடுத்து விட்டு வந்த சோகச் செய்திகளைப் பற்றிச் சொல்லிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள்.

"மதன் காரியாலத்திலிருந்தே காயத்தோடு தப்பியோடி எங்கோ ஒரு முஸ்லிம் வீட்டில் தங்கி இருந்தவனாம். அங்கிருந்து தானாம் அகதிமுகமாமுக்கு வந்துசேர்ந்து இஞ்சை வந்திருக்கிறான். மாலா பாவம் எந்த நிலையில் எப்படிக் கொலை செய்யப்பட்டாளோ யாருக்குத் தெரியும்" ..... மதன் சொல்லி அழுகிறான்.

பரிதாபத்திற்குரிய மதனின் கதையைச் சொல்லும்போது தங்கத்தின் விழிகள் கலங்கிப் போயின. அந்தக் கோரக்காட்சிகளை இவள் பார்த்திருக்க முடிந்திருந்தால்..... ஒருவேளை இதயம் வெடித்துச் செத்திருப்பாளோ.....?

ஹ்ம் என்ன செய்வது இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் ஒரு முடிவு கிட்டாமலா போகும். ஆண்டுக்காண்டு தமிழருக்குத்தானே இப்படி நடக்கு,

இருவருமே எங்களை மறந்த ஒரு சுயநினைவற்ற நிலையில் இருந்தோம்.

அப்பா..... "சூட்டு அச்சா அச்சா" என் கையிலிருந்த சுருட்டைப்பற்றிக் கொண்டு தம்பிக்கு தம்பிக்கு என்று நீதி சத்தமிட்டபோது தான் நான் சுயஉணர்வு பெற்றுச் சுருட்டைப்பறித்துக் கொண்டேன்.

"கக்கா.... கக்கா".... என்று சொல்லிச் சுருட்டைப் புடுங்கி வீசிவிட்டு என் தவறை நினைத்துக்கொண்டேன். "இனிமேல் இவனுக்கு முன்னாலை ஒண்டுஞ் செய்லேலாதப்பா," என்று நச்சரித்துக் கொண்டேன்.

"புகைத்தல் கூடாது" என்று கூறித் தங்கம் வேறு சிரித்துக்கொண்டாள். சுருட்டுக்கும் இனிச்சீட்டுக்கிழிக்க வேண்டியது தான் என்று மனத்திற்குள் முடிவு செய்து கொண்டபோது தான் மதன், எல்லாமிழந்த கம்பனின் இராவணனாக வந்து கொண்டிருந்தான்.

நான் மதனைத் தேற்றினேன். அழுகின்ற பிள்ளைக்குத் தாலாட்டு, பசித்த வயிற்றுக்கு உணவு, ஆனால் மதனுக்கும் மதனைப் போன்ற மற்றவர்களுக்கும்?

"அப்பா மாமாக்கு ஆர் அடிச்சது. ஏன் தலையிலை அடிச்சவன். மாமா அடிக்கேல்லையோ? மாமா அடிக்க மாட்டுதே" நீண்ட மௌனத்தைக் கலைத்து கேள்விமேல் கேள்வி கேட்டான் நீதி.

பதில் சொன்னாலன்றி நீதி விடமாட்டான். எப்பிடி என்னவென்று சொல்வது? எனக்குள் ஒரு தடுமாற்றம். இந்தப்பிஞ்சுமனத்தில் இந்த பீடைகளைச்சொல்லி வடுக்களை ஏற்படுத்தக்கூடாது. உணர்ச்சிகளைக்கொட்டி வெறியூட்டுவதால் மட்டும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளவா முடிகிறது. நான் என் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திவிட்டு ஒருவாறு சொன்னேன். "கொழும்பிலே யாரோ கள்ளர் களவெடுக்கப்போய் மாமாவை அடிச்சுப் போட்டாங்களாம். அது தான் மாமா அடிக்காமல் தப்பி வந்திட்டுது."

"அப்ப கொழும்பிலை எல்லாரும் கள்ளரோ?"

"கள்ளரும் இருக்கிறாங்கள். நல்லவங்களும் இருக்கிறாங்கள்"

"அப்ப எனக்கும் அடிப்பாங்களா அப்பா? "

"ஓம் ..... அடிப்பாங்கள் தானே....."

"இரத்தம் வருமே.. மாமாவுக்கும் இரத்தம் வந்ததே"

"மண்டை உடைஞ்சால் இரத்தம் வரும்"

'அப்ப நான் கொழும்புக்கு வரமாட்டன்'

ஏன் நீதி கொழும்புக்கு.... இதுவரை எங்கள் உரையாடலை கேட்டுக் கொண்டிருந்த மதன் தான் இப்படிக் கேட்டுக்கொண்டான்.

'றேடியோவிலை பாட.....' என்று சொல்லிவிட்டுத் தங்கத்தின்

பின்னே சென்று ஒழித்தக் கொண்டான் நீதி. வெட்கத்தின் பாவனை அவனை அப்படி ஒழிக்க வைத்திருக்க வேண்டும்.

மதன் சிரித்தான் கவலையை மறந்து....

"அது ..... றேடியோவிலை நடக்கும் சிறுவர் நிகழ்ச்சியை இவனுக்கு போட்டுக் காட்டுறனாங்கள். சும்மா நீதியைக் கொழும்புக்குக் கூட்டிக்கொண்டே றேடியோவிலை பாட வைக்கவேணுமென்று ஒருநாள் கதைத்தனாங்கள் அதுதான்" தங்கம் எப்போதோ பேசிக் கொண்டதை நினைவூட்டினாள்.

"அண்ணை இந்தப்பிஞ்சுக்குழந்தை என்ன சொல்லுது பாத்தியளே?.... மதனின் கேள்வி இது'

நான் நீதியைப்பார்க்கின்றேன். சூரிய ஒளிபட்டுத் தெறிக்கும் வெண்பனிப்பற்களைக் காட்டிச் சிரித்துவிட்டு வெளியெ ஓடினான் அவன்.

நான் கொழும்புக்கு வரமாட்டன். நான் கொழும்புக்கு வரமாட்டன். நான் கொழும்புக்கு வரமாட்டன் என்று சத்தமிட்டவாறு அவன் வீட்டுமூலையில் போய் ஒளிந்து கொண்டான். அந்தச்சத்தத்தில் நம்மை மறந்தவர்களாக நாம் மூவரும் அப்படியே மௌனிகளாகி விட்டோம்.



இந்த மண்ணில் தான் இதுகளும்

சிந்தியாக்கிழவன் குறுக்கும் நெடுக்குமாக, நடப்பதும், அந்தப்படலையை தாண்டி றோட்டு வரைக்குச் செல்வதுமாகப் பதறிக் கொண்டிருந்தான். றோட்டில் வெகுதூரம் வரை யாரும் வருகிறார்களா? அந்த மழை நிலவில் தன் பார்வையைத் தீட்டுவதும் யாருமில்லை... என்றதும் தன் குடிசைக்குத் திரும்பி ஓடுவதுமாகத் துடித்துக் கொண்டிருந்தான்.

குடிசைக்குள் மேரி ஐயோ..... ஐயோ... அம்மா...ஆ..ஆ.. என்ற அவலக் குரல் சந்தியாக் கிழவனின் ஈரலைக்கருக்கும்.

மீண்டும் கிழவன் வெளியே யாரும் போகிறார்களா? வருகிறார்களா என்று தலையை நீட்டுவதும் ஓடுவதுமாக....

ஐயோ..... தாத்தா..... தாத்தா.. ஈனக் குரலாகி எதிரொலித்து மெல்ல அடங்குவதும் பின் அந்தகாரமாக ஆவேசமாக எழுவதும்...

சந்தியாக் கிழவனுக்குக் கையும் ஓடவில்லைக் காலும் ஓடவில்லை செய்வதறியாது

1985 தினகரன் கத்தோலிக்க மஞ்சரியால் நடாத்தப்பட்ட உம் பரிசு பெற்றது.

தடுமாறினார். சூசையப்பர் கோவில் வெளிச்சம் தூரத்து வெள்ளி போலத் தோன்றியது. எதையோ யோசித்தவராக... திரேசம்மா இப்ப வீட்டிலை இருப்பள் ஒருக்கா போயிட்டு வருவம் என்று மனத்துக்குள் முடிவான முடிவை அரங்கேற்ற நினைத்தார்.

" தாத்தா... தாத்தா...ம்.... ம் "

ஐயோ மேரி நானென்ன செய்யத்தாயே, இந்த பரதேசியின்ரை கொட்டிலுக்கு நீ இதுக்குத்தானா வந்தாய்? கண்கள் உடைப்பெடுக்க சிலுவைக்குறியைப் போட்டு ஆண்டவரே சஞ்சலத்திலிருந்து தளரா நிலைக்கும் அச்சத்திலிருந்து நம்பிக்கைக்கும் என்னை வழி நடத்தும், அப்படியே சூசையப்பர் கோவில் பக்கம் பார்த்தவாறு சந்தியாக் கிழவன் ஜெபிக்கத் தொடங்கினான்.

" மேரி.... "

இளமையின் எழிலாட்டம் அவளின் கொலுவாக இருந்தது. எந்தக் கண்களின் வீச்சும் அவள் முகத்தில் பட்டுக்கொண்டால் அவை எங்கெல்லாமோ சென்று ஏதோ ஒரு இனம் புரியாத தவிப்பினுள் முழ்கிவிடும். அத்தனை அழகி அவள்.

"அழகு விருப்பத்திற்குரிய ஒன்றாக எப்படியிருக்கிதோ அந்த அழகிற்கு வேண்டாத்தனங்களின் குடியிருப்பாகவும் அமைந்துவிடுகிறது பாவம் மேரி இப்போது தன் அழகிற்காகவும் அழுது கொண்டாள். உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவென்று கிழம்பிய அந்தக் கூட்டத்துள் மேரியும் ஒருத்தியாகத்தான் வந்தாள். அதிபரின் மனைவியாக இருந்த மேரி அகதி என்ற மகுடத்தோடு தான் வந்துகொண்டாள்.

அவர் எங்கே? எப்படி வருவாரா,? அல்லது..... மனதில் எழுந்துநிலை குத்திய சந்தேகக் கோடுகள் நிச்சயமாகி விடக்கூடாதென்ற வேண்டுதலோடுதான் அவள் அந்தக் கூட்டத்தோடு வந்து கொண்டிருந்தாள். மனதிலே துயரச்சுமை, வயிற்றிலே எதிர்காலத் தமிழரின் சுமை, இறக்கி வைக்கக்கூடிய சுமைகளா இவை? காலத்தின் பிரசவத்தை யார் தடுத்து நிறுத்துவது? மேரி அழுதாள் அதைத் தவிர வேறு வழி?

அகதிமுகாம் ஒற்றை வந்தடைய மேரிக்கு எட்டு நாட்கள் பிடித்தன. அகதிமுகாம் துன்பச்சுமை தாங்கிகளான ஒரு கூட்டத்தின் தேக்கம். ஆனால் அது கூட ஒரு புதுவித சீவனோபாய இடமாகி விட்டதைக் கண்டபோது மேரி கண்ணீர் விட்டாள்.

யார் வந்தாலும் ஏதோ ஒரு வார்த்தை ஆறுதல் சம்பிரதாயத்துக்காவது சொல்ல மாட்டார்களா? என்று ஏங்கிக் கொண்டிருக்கும் அவர்களை ஏதோ சினிமா நடிகர்களைப் பேட்டி காண்பாவனையிற் தான் சீண்டிக் கொண்டிருந்தனர் வருவோரெல்லாம்.

உங்கள் கணவர் என்ன வேலை செய்கிறார். நீங்கள் அவரை விட்டு எப்படிப் பிரிந்தீர்கள். இந்த இளமைக்காலத்தில் இப்படி ஒரு நிலையா? இப்படி எத்தனை நிருபர்கள், எத்தனை கேள்விகள், சீ... இவர்கள் எல்லாம் இதயமே இல்லாதவர்களா? அல்லது வேலை இல்லாத வெட்டிகளா?

மேரி ஒழிந்து ஒழிந்துதனிமையாக ஒதுங்கிக்கொண்டாள். அவள் மனதில் விகற்பமான பல எண்ணங்கள் விரிந்து .....விரிந்து சேய், இப்படியொரு ஈனநிலையில் வாழ்வதிலும் சாவது மேல். இப்படி என்னும் மனம் மறுபடி அவளை எங்கோ கவனத்தைத் திருப்பிக் கொள்ளும். நீ எப்படியாவது உன் குழந்தைக்காக வாழ்ந்துதான் தீரவேண்டும்.

"புருசனை எண்ணியபோது மேரிக்கு வாழமுடியவில்லை. குழந்தையை நினைத்த போது சாக முடியவில்லை." இரண்டுக்கும் நடுவில் அலைகடலில் துரும்பாக திரிசங்கு சொர்க்கத்தில் துடித்துக் கொண்டிருந்தாள் மேரி.

சாப்பாட்டுப் பாசல்கள் என்றால் போதும்.... சினிமாவுக்கும் ரிக்கற் எடுக்கும் மனோ பாவனையில் முன்னடிக்கு ஒன்றுக்கு இரண்டாக, ஏதோ முதலில் அகப்பட்டவர் சுருட்டிக்கொள்ள வேண்டியதுதான். வலிமையற்றவர்களும் ஒழுங்கு தெரிந்தவரும் பட்டினி கிடக்க வேண்டியது தான். ஏதோ ஒரு சுக சீவியமாகக் கருதிக் கொள்பவர்களும் இல்லாமல் இல்லை.

அகப்பட்ட பத்திரிகையில் நாள்தோறும் அவரைப்பற்றிய சேதி வராதா? இப்படியே நாட்களை எண்ணி எண்ணி ஏதோ ஒரு

முடிவை நிதானப்படுத்த வேண்டியவளாக மேரி வந்த போது அவள் மெல்ல வெளியேறினாள்.

கால்கள் போன பாதையில் எங்கோ சுற்றினாள். எதையெல்லாமோ எதிர்பார்த்தாள்.

ஐயா, திருமலை அகதி ஏதும் உதவ முடியுமா? இப்படித்தான் அவள் கேட்டாள். ம்... போ... போ,, இப்பதான் எல்லாருமே அகதிதானே போ, போ.... சினத்தை வீசிக்காட்டி விட்டு அவள் சற்று விலகிக் கொண்டபோது, ஆரட்டையேன் வாங்கிறது. வாங்கிப்போட்டு, இனி தெரு வழியே பெத்துத் தொலைக்க வேண்டியது தானே.

விசக்கண்களின் தாக்கம் என்ன செய்வது... அவர்களிடம் யாசிக்கப் போய் தானே, இப்படியெல்லாம்.....?

வேண்டாம் இந்தப்பாத்திரத்துக்கு முடிவொன்று கட்டிக் கொள்வோம். மேரி முடிவெடுத்துக் கொண்டு தனியாக அந்த வழியே திசைதெரியாத படகாகச் சென்று கொண்டிருந்தாள்.

தூரத்தே வானத்துக் கவிழ்ச்சி கிட்டிய தூரத்தில் கடல் இருக்கிறதோ. வெற்று வெறும் மணற்புட்டிகளும் தென்னங்காணிகளும் இடையே ஒரு குடிசை வெகுதொலைவில்....

மேரிகண்டு கொண்டாள். இந்தக்குடிசையிலும் என்ன மாதிரி மனிதரோ யார் கண்டது. சந்தியாக்கிழவன் மேரியைக் கண்டுவிட்டார்.

"வா, புள்ள வா, புற ஊரோ? இஞ்சாலை இரம்மா நல்லாய்க் களைச்சுப் போனியே, தண்ணி குடியன்"

களை, தீர்ந்த மாதிரித்தான் மேரிக்கு.....

"சந்தியா...."

"மேரி...."

அறிமுகங்கள், தொடர்கதைகள் எல்லாமே நடந்து முடிந்த போது கோழி கூவத் தொடங்கியது.

பிள்ளை எனிப்படம்மா, நீ சுகமில்லாத பிள்ளை கனநேரம் நித்திரை முளிக்கக்கூடாது. சந்தியாக்கிழவன் அன்புக்கட்டளை இட்டு விட்டு தானும் வெளியே படுத்துக்கொண்டான்.

வீட்டு வேலைக்குப் பிள்ளை பிடிக்கவும், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் கேள்விகளைக் கேட்டுப்பதிலாக்கி வர்த்தகம் செய்து கொள்பவர்களையும், அகதி முகாமில் தரிசித்து விரக்தியின் பழுவோடு வந்தவருக்கு சந்தியாக்கிழவன் தாய்மையின் சிகரமாகி உயர்ந்து நின்றான். அந்த தாய்மை நிழலில் மேரி இத்தனை நாட்களையும் நிம்மதியாகக் கழித்து விட்டாள்.

சந்தியாக் கிழவனின் குடிசையில் மேரி குடிவந்த இத்தனை நாட்களில் அகதிகட்கு நிதி கோரி வந்த எத்தனையோ மனிதர்களையெல்லாம் பார்த்துவிட்டாள். இவர்களெல்லாம், அகதிகளை முன்நிறுத்தி சொந்தத் தேவைக்காக சுரண்டும் திட்டம் தானா? என்ற கேள்வி அவளிடம் அசாதாரணமாகவே எழுந்து கொள்ளும். அகதிகளின் பேரால் இங்கு எத்தனை குடும்பங்கள் இப்படியே வாழ்கின்றன என்று எண்ணி வேதனைப்படுவாள். சந்தியாக் கிழவனோடு தன் வேதனைகளைப் பகிர்ந்து கொள்ளும் போதெல்லாம் தாத்தா யேசுநாதரும் இப்படி அன்று அகதியாக பெத்தல கேமை விட்டு ஓடித்தான் தப்பினார். அந்த நாதரை நம்பி அன்று எத்தனை லட்சம் மக்கள் இருக்கிறார்கள் தெரியுமா? அப்படித்தான் இன்றைய அகதிகளை நம்பி இங்கும் ஒரு பிச்சைக்காரக் கூட்டம் இருக்கின்றதே. என்று வெறுப்பின் அந்தத்தில் நின்று சொல்லிக் கொள்வாள். உண்மை தாம்மா. அகதிமுகாமிலை இருந்து யாராவது நிதி சேர்க்க வர்றதாய்த் தெரியவில்லையே யார், யாரோ எல்லாம் கொப்பியும் கையுமாகத் திரியிறாங்களே, இவங்களுக்கு மனிதாபிமானமே இல்லையா என்றுரைப்பார் சந்தியாக்கிழவன்.

நான்கு நாட்கள் நெருங்கி நெருங்கி "அக்கா, அக்கா என்று பழகிய ஒருத்தன் குழந்தையைப் பெத்து யார் கிட்டையாவது கொடுத்திட்டு என்னோடு வாறீங்களா?" "நான் கண் கலங்காமல் உங்களைப் பாத்திர்றன். இப்படிக் கூடக் கேட்டான் ஒருத்தன். பாவம் மேரி... முகாமுக்கு வந்ததில் இருந்து இப்படி எத்தனையோ பேர் சோடி சேர்ந்து தலைமறைந்ததையும் .... இணைத்துபார்த்துக் கொண்டு இந்த மண்ணில் இப்படியெல்லாம் நடக்குமென்று

தெரிந்திருந்தால் அங்கேயே மாண்டவர்களோடு சேர்ந்து மாண்டிருக்கலாமென்று வெந்து வெதும்புவாள்.

என்ன செய்வது. "திட்டமிடப்படாத எந்தச் செயல்பாடுகளும் இப்படித்தான் போய் முடியும்" என்று தன்புருசன் அடிக்கடி சொல்லும் வாத்தைகளை இப்போது மீட்டுப்பார்த்துக் கொள்வதைத் தவிர அவளுக்கு வேறு எதுவுமே தோற்றம் பெறவில்லை.

நெஞ்சப் பொந்தில் ஆயிரம் துன்பவடுக்களோடு மேரி புரண்டுகொண்டிருந்தாள். அவளுக்கு இப்போது பிரசவவேதனை வேறு எழுந்துவிட்டது. சந்தியாக் கிழவனைத் தவிர வேறு யாருமே துணைக்கென்று இல்லை. துணையில்லையே என்று அந்த வேதனை பொறுத்திருக்குமா என்ன?

அவள் அலறினாள்... துடித்தாள்

சந்தியாக்கிழவன் ஓடி ஓடி ஏதும் செய்ய முடியாத வேளையில்... செபித்துக் கொண்டிருந்தான்.

மேரியின் சத்தங்கள் அடங்கிக் குழந்தையின் வீலென்ற ஓசை சந்தியாவின் காதில் விழுகின்றது. சந்தியாக்கிழவன் கைகூப்பியவாறு வானத்தைப்பார்த்துக் கொண்டிருந்தார்.

குழந்தையின் வீரிட்ட புதுக்குரல்

இந்த உலகத்தில் பிறந்து விட்டதுக்கான அழுகையா. அல்லது ஏன் பிறந்தேன் என்ற அழுகையா?

துள்ளி எழுந்து குடிசைக்குள் பிரவேசித்தார் சந்தியா குழந்தையை வாஞ்சையோடு அப்படியே தூக்கிச் சென்று நீரூற்றிக் கழுவிச் சுத்தம் செய்து தானே மருத்துவச்சியாகி முடித்தார்.

குழந்தையை ஏந்தியவாறு கொண்டு சென்று மேரிக்கு எதிர்த்திசையில் வளர்த்தினார்.

ஆடைகள் கலைந்த நிலையில் இரத்தப்பெருக்கோடு கிடந்த

மேரியின் ஆடைகளை சீராசெய்து விட்டு மீண்டும் வெளியே ஒரு கணம் தலை நீட்டினார். யாராவது ஒரு பெண் வேணுமே மேரியைக்கவனிக்க...


உள்ளே குழந்தையின் அழுகை ஒலிகேட்டுக்கொண்டே இருக்கிறது.

மீண்டும் குடிசைக்குள் சென்ற சந்தியாவின் பார்வை மேரியின் முகத்தில் நிலைகுத்தி நின்றது.

"மேரி.. ஆ..... அம்மா... மேரி.." சந்தியாக்கிழவன் மேரியின் கைகளைத் தொட்டு அசைத்துப் பார்த்தார்.

ஓ ..... மேரி..... சந்தியாக்கிழவன் உணர்ச்சித் தாக்கத்தால் குழறினார்.

மேரி இறந்து வெகுநேரமாகி விட்டதென்பதை சந்தியாக்கிழவன் இப்போது தான் புரிந்து கொண்டார்.



அவள் ஏன் ஓடுகிறாள்.....?

அவள் இடுப்பிலே கைக்குழந்தை கையிலே ஒரு சீலைப் பொட்டணி முத்து வியர்வையின் படையெடுப்பு அவள் நடந்த தூரத்தை அளவிட்டுக் காட்டியது போலத் துளித்துளியாக உடலெங்கும் அரும்பிக்கிடந்தது. களைப்பின் தாக்கம் பசியின் வேகத்தோடு அவள் நடையை வலுவிழக்கச் செய்திருந்தது. கண்களின் வெண்பனித்திரை போன்ற ஒரு தெளிவற்றநிலை இருந்தும் அவள் நடந்து கொண்டேயிருந்தாள், எதிரே ஒரு கூட்டம் அந்த வாகைமர நிழலில் இருப்பதை அவள் கண்டு கொண்டாள் மெல்ல அந்தக் கூட்டத்தின் பக்கமாகச் சென்று "ஐயா..... பசிக்குது ஏதும் குடுங்கையா" அவள் முகமெல்லாம் பல்லாகக் கெஞ்சினாள்.

போ.....போ..... அந்தச் சந்தியாலை திரும்பிய பக்கத்தையுள்ள பள்ளிக்கூடத்திற்கு போ... இண்டைக்கு அங்கை ஏதோ குழந்தையளுக்கு என்னென்னவோ எல்லாம் குடுக்கிறாங்களாம் என்றான் ஒருவன்.

இம்..... இந்தா பாவமாக் கிடக்குது பத்துச் சதத்தை அவளிடம் சுண்டி எறிந்துவிட்டுச் சொல்லிக் கொண்டான் இன்னொருவன்.

12-5-85

ஈழமுரசு

டேய் இஞ்ச மேசைக்கு கைக்காசில்லை எண்டெட்டு தர்மமா பண்ணுறா..... சோம்பேறி..... இந்தக் கழுதையள் ஆரட்டையேன் பிள்ளையை வாங்கிப்போட்டு சுமந்து திரிவினமெண்டு பெரிய தர்மவான் தர்மம்பண்ணுறார். சீட்டாட்டத்தின் ருசியில வகை தெரியாமல் ஊரி வீசினான் ஒருவன்.

இரப்பதற்கென்று வெளிக்கிட்டிட்டால் இப்படி எத்தனையோ வார்த்தைகளை கேட்டுத்தான் ஆகவேண்டுமென்பதை அநுபவம் கற்றுத்தந்ததால் எதையுமே பேசாது வள்ளுவனின், "இரப்பான் வெகுளாமை வேண்டும்" என்ற குறளின் இலக்கணமாகச் சென்று சந்தியை அடைந்தாள்.

குழந்தைகள் ஆண்டுக் கொண்டாட்டங்கள் வெகு கோலாகலமாக ஆரம்பிப்பதற்கான ஆரம்ப முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன குழந்தைகள் பற்றிய சுவரொட்டிகள் எங்கும் தொங்கிக் கொண்டிருந்தன. குழந்தைகளுக்குக் கொடுப்பதற்காகப் பலவித மா வகைகள் விளையாட்டுப் பொம்மைகள் எல்லாம் இறக்கி வைக்கப்பட்டுக் கிடந்தன.

"ஐயா ஏதாய்ச்சும் சாப்பிடத் தாருங்கள்." அவள் குழந்தையோடு தன் குரலையும் வைத்தாள்.

அவளை ஏறெடுத்தும் பார்ப்பதற்கும் யாரும் அந்தக் கூட்டத்தில் தயாராக இல்லை.

"ஐயா... ஐயா....." மீண்டும் அவள் தான் குரல் வைத்தாள்

"சீ.....சீ..... போ..... போ..... இதென்ன பிச்சைக்காரர் மாநாடா நடத்துறம். போய் ஊருக்குள்ள பார்..... போ....." என்று ஒருவர் பாய்ந்து கொண்டு முன் வந்து விரட்டிய பெரியவர் உங்களையெல்லாம் கவனிக்க இந்த ஏற்பாடுகளை செய்யவில்லை எங்கடை எதிர்கால செலவங்களுக்காகத் தான் இந்த ஏற்பாடுகள் போ..... வேறஇடத்தைப் பார்..... வெகுண்டெழுந்து மீண்டும் அவர் தான் பேசினார்.

குழந்தைகளாண்டுக் கொண்டாட்ட லட்சணம் இதுதானா? என்ரை பிள்ளை குழந்தையில்லையா? ஏழைக்கொரு நீதி

பணக்காரனுக்கொரு நீதியா. பசியால் துடிக்கும் குழந்தைக்கு ஒருவேளை உணவில்லை பசியேயறியாத குழந்தையளுக்காக கூட்டம் போட்டு சாப்பாடு குடுக்கிறியள்?..... மனிசங்களா ? நீங்கள் தான் முண்டங்கள். அகப்பட்டதைச் சுருட்டிக் கொள்ளும் பெருச்சாலிகள் நீங்களும் உங்கடை கூட்டமும் உருப்படாது..... அவள் தீனக்குரலில் சாபமிட்டுக் கொண்டாள். அந்தப் பாடசாலைக்கு முன்புறமாக இருந்த வளவிற்குச் சென்று முற்றத்து மரநிழலில் அமர்ந்து கொண்டாள்.

பாடசாலையில் அவள் கேட்டதும் சாபம் போட்டதும் எல்லாவற்றையும் கவனித்தவள் போல அந்த வீட்டுக்காரி கற்பகம் என்ன என்று கேட்காமலேயே பிஸ்கட்டுக்கள் சிலவற்றை அந்தக் குழந்தைக்கு கொடுத்தாள். பிஸ்கட்டுக்களை கண்டதும் அந்தக் குழந்தை அப்படியே வாரியெடுத்துக் கொண்டது எல்லைமீறிய பசியின் வேகமது.

அம்மா நீங்கள் மகராசியாய் இருப்பீங்கள் நேத்துப்பிடிச்சு என்ரபிள்ளை பட்டினி கிடக்குதெண்டு ஏதோ குழந்தைகளுக்கான விழா நடத்தினமாம் குடுக்கப் போறாங்களாமெண்டு இரந்து கேட்க "தங்கடை புள்ளைகளுக்குத்தானாம் அது" என்று சொல்லி கழுத்தைப்பிச்சு தள்ளுற மாதிரி விரட்டிப்போட்டாங்கள். இவங்கள் உருப்படுவாங்களா? மூச்சிரைக்க இரைக்கத்தன் சினங்களைத் தீர்த்துக் கொண்டாள் வார்த்தைகளால். வார்த்தைகளைத் தொடர்ந்து அவள் கண்களிலிருந்து உடைப்பெடுத்த நதியாட்டம் கண்ணீர் பெருகி வீழ்ந்து சிதறியது.

குழந்தையின் மயிர்களை கைகளால் கோதிவிட்டுக் கொண்டு நெடுமூச்சை விட்டாள் அவள். அவளுக்கும் பசி.

கற்பகம் ஒரு இலையைப் பெட்டியினுள் வைத்துப் பெட்டி நிறையச் சோறோடு வந்து சேர்ந்தாள்.

அந்தப் பிச்சைக்காரப் பெண்ணின் கண்கள் பனித்தன முகம் மலர்ந்தது. சாப்பாட்டைக் கண்ட மாத்திரத்தில் அந்த ஏழையின் முகமலர்ச்சி ஏதோ உண்டுகளை தீர்ந்தவரின் முகப் பொலிவு அப்படியே வாங்கிக் கொண்டாள். "மூண்டு நாளாச் சோத்தைக்

காணேல்லையம்மா" இந்தத் தெருவோரமெல்லாம் கேட்டுக் கேட்டே காதடைச்சே போச்சே ஐந்துசதம் பத்துச்சதமென்று சிலர் காசைத் தந்தாங்க, நாயைச் சூக்காட்டியவரும் உண்டு என்ன செய்ய என்ர வயித்திலை பிறந்த குற்றத்திற்கு இந்தப் பாலனும் பட்டினி தான். கைகளுவத் தண்ணி தாங்கம்மா.....

கற்பகம் தண்ணீரைக் கொடுத்து விட்டு அவளைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கைகளைக் களுவி விட்டு சோற்றைக் குழைத்து ஒரு கவளம் சோற்றை மண்மீது வைத்த விட்டு கண்களை மூடிச் சில விநாடிகள் மௌனமாயிருந்து விட்டுச் சாப்பிடத் தொடங்கினாள்.

பாவம் எங்கோ நல்ல குடும்பத்திலை இருந்துகளாக்கும் நல்ல பக்தி கடவுளுக்கு நன்றி சொல்லி விட்டுதான் சாப்பிடுகிறாளே. கற்பகம் அவளுக்காக இரக்கப்பட்டாள்.

அம்மா..... இந்த சோத்தை நான் கிள்ளிவைச்சதைத் தானே யோசிக்கிறியள் என்று கூறிவிட்டு மூக்கைச் சீறிக்கொண்டு தன் கதையை சொல்லத் தொடங்கினாள்.

குடிமக்களை வைத்தாண்ட குடும்பத்தில் பிறந்து பிச்சை எடுக்க வந்தது ஒரு நெடுங்கதை. யாரிடமும் இந்தக்கதையை சொல்லி விட்டால் போதும். என்ன என்று மலைத்துவிடுகின்றனர். ஆனால் மலைத்துப்போகின்ற அளவுக்கு செய்ய யாருமே முன்வருவதில்லை செத்துப் போன என் புருஷனோடு ஓடிப்போன ஒடுகாலி நான் என்பதாலோ அல்லது சம்பிரதாயங்களை மீறிய சாதியரக்கனின் கொடிய பார்வையோ தெரியவில்லை. சாதிகுறைஞ்ச ஒருவரோடு நான் ஓடிப்போனது தரக்குறைவென்றால் இப்போது பிச்சை எடுப்பது தரக்குறைவானதில்லையோ? கேடு கெட்ட இந்தச் சமூகம் பிச்சை எடுப்பவரைத் தரக்குறைவாக மதிப்பிட்டுக் கொள்கிறது. ஆனால் பிச்சை கேட்பவருக்கு கொடுக்க மறுப்பதும் கேலிப் பேச்சு பேசுவதும் தரக் குறைவான தென்பதை ஒத்துக் கொள்ள மறுக்கின்றது.

என்ன செய்வது எனக்கு இப்படியொரு நிலைமை வருமென்டு நானெங்கை நினைச்சன் என்னைப்போல எத்தனை பேர்..... கண்ணீர்த் துளிகளைச் சிந்தின.

இஞ்சர் நீ அழாதை..... உனக்கு கஷ்டமாயிருந்தால் சொல்ல வேண்டாம் அவளுக்கு இரக்கப்பட்ட கற்பகம் வளைத்தடுத்தாள்.

மூக்கைச் சீறியெறிந்து கொண்டேயவள் வெறிச் சோடிய தன் விழிகளை எங்கோ செலுத்திக் கொண்டாள் அந்தப் பார்வையில் வெண்முகிற் கூட்டமொன்று சூழ்ந்துகொண்டிருந்த தன் முகிலோடு சேர்ந்து தன் மெருகை இழப்பது தெளிவாகத் தெரிந்தது. இந்த வெண்முகில் ஓ..... அந்த வெண்முகில் போலத்தான் அவள் வாழ்ந்திருக்க வேண்டும்.

நெசவாலையொன்றில் ஆசிரியராக அவள் பணியாற்றினாள் அவனோ கிராமசபை நூல் நிலையப் பொறுப்பாளனாகப் பணியாற்றினான். அவளொரு புத்தகப் பூச்சி நூல் நிலையத்திற்கு அடிக்கடி சென்று வருவாள் தனக்குப் பிடித்த எழுத்தானர் களின் நாவல்களையெல்லாம் சொல்லிவைத்துப் பெற்றுக் கொள்ள அவள் தவறுவதேயில்லை நெருங்கிய இருவருக்கும் ஏதோ ஒரு உறவை வளர்க்கத் தொடங்கியது. அந்த உறவில் தான் என்ன சுகம்.

அவள் அவனை விரும்பினாள். அவனும் அவளை நேசித்தான் உறவுகள் விரிந்தன. உள்ளங்கள் ஒன்றிக் கலந்தன.

உலகின் செய்திகளில் எல்லாம் வலுவுடையதான செய்தி ஆண் பெண் உறவு பற்றியது தானே. அந்த சோடிகளின் காதல் கிசு கிசுத்தது அந்த கிசு கிசுக்களுக்கு மத்தியில் சாதிப்பூதம் தன் விஸ்வரூபத்தை எடுப்பதற்கு தருணம் பார்த்துக் காத்திருந்தது.

அவள் துடித்துப்போனாள். அவளால் அவனை விட முடியவில்லை அவனோடு ஊரைவிட்டே கிழம்பி விட்டாள்.

அவனது வீடு தீக்கிரையானது. அவனது உறவினர் துன்புறுத்தப்பட்டதும் அவனுக்கோ அவளுக்கோ எட்டாத செய்திகளானாலும் கூடக் கொடுமையிலும் கொடுமை நடந்து தான் முடிந்தன.

கட்டுகஸ்தோட்டையில் அவனது நண்பனிடம் தான் அந்த இளஞ் சோடிகள் தஞ்சமடைந்தன நண்பனின் உதவியோடு அவன்

கட்டுகஸ்தோட்டையிலுள்ள எஸ்டேட் பாடசாலையொன்றில் ஆசிரியனானான் களங்கமில்லாத காதல் காலத்தால் அழிக்க முடியாத வாழ்க்கைப் படகை கரை சேர்த்துவிடும். அவள் அவனோடு சில ஆண்டுகள் தாண்டி புதியதொரு உயிரைப் பெற்றெடுக்க ஆஸ்பத்திரியொன்றில் அநுமதிக்கப்பட்டாள்.

அன்றிரவு முழுவதும் வானம் இடித்து நீர் கொட்டியது போல மழை பொழிந்து தீர்த்தது. பொழுது புலர்வதற்கு இன்னுஞ் சிலமணி நேரங்கள் தானிருந்தன. அதற்கிடையில் இயற்கையின் சீற்றம் புயலாக மாற்றம் பெற்றது. மண் சரிவு..... கட்டுகஸ்தோட்டைப் பகுதியில் பாதிவரை மண்மேடாக மண்சரிந்து சகலதையும் தன் வயிற்றுள் அடக்கிக் கொண்டது. அந்த மண் சரிவின்போது அவளது பெண்மை ஒரு புதிய உருவை அவள் கைகளில் கொடுத்து விட்டு..... அவளைக் கைப்பிடித்த அவனை..... ஓ..... அந்தப் பிஞ்சுக் குழந்தையின் காரணணை அவளிடமிருந்து பிடுங்கிக் கொண்டது.

சில தினங்கள் தனிமையின் அரவணைப்பில் அவளும் குழந்தையும் கிடந்தனர் குழந்தை வீரிட்டுக் கதறும் போதெல்லாம் அவளும் கதறினாள். அவளது வாழ்வு சந்தோஷம் நிம்மதியெல்லாம்..... அன்று திரண்டிருந்த கருமுகில்களால் தான் அழிந்து கொண்டதுவோ..... இந்த முகில்களும் அந்த வெண்முகிலை..... ஓ..... அவள் தன் நினைவுகளிலிருந்து விடுபட்டுத் துடிதுடித்து எழுந்து விட்டாள்.

அவளின் கண்ணீர்ச் சுவடுகள் கால்வாய் போலப் பாய்ந்ததைக் கண்ட கற்பகம் தன்னை மறந்து கண் கலங்கினாள். தன் புருஷனை நினைத்து அவள் தரையில் வைத்த அந்த சோற்றுக் கவளம் கற்பகத்தின் நெஞ்சில் குண்டாகப் பாய்வது போன்றதொரு பிரமை. நாத்தழுதழுக்க..... நீ..... கற்பகம் அப்படியே சாய்ந்து கொண்டாள்.

தங்கச்சி..... தங்கச்சி..... அம்மா..... அம்மா..... அவள் கற்பகத்தை தன் மீது வைத்துக் கதறினாள்.

அவலக் குரல் கேட்டு ஒரேகூட்டம். கற்பகத்தின் வீட்டு முற்றத்தில் கூடியது. சிலர் கற்பகத்தை அவள் மடியிலிருந்து பிடுங்கி எடுத்துக் கொண்டனர்.

சில நிமிடங்கள்..... கற்பகம் லேசாகக் கண்விழித்க் கொண்டாள். அவள் விழிகள் எதையோ தேடின.

"இந்தப்பிச்சைக்கார நாய் தான் அவளுக்கு ஏதோ செய்து போட்டாள். இவளை அடிச்சுத் துரத்துங்கடா....." குழந்தைகளாண்டுக் கொண்டாட்டத்தில் நின்று அவளை விரட்டிய அதே பெரியவர்கள் தான் சொல்லிக் கொண்டனர்.

சொல்லி முடிப்பதற்கிடையில்தான் அவள் மீது எத்தனை கல் எறிகளும் சொல்லடிகளும்.

அவள் தன் குழந்தையை எடுத்துக் கொண்டு ஓடினாள் குழந்தையைக் காப்பாற்ற, அந்தக் குழந்தையோ..... வேதனை மிக்க அந்த நிலையிலும் தாய் விளையாட்டுக் காட்டுவதாக நினைத்துச் சிரிக்கிறது. அந்த குழந்தையின் சிரிப்பை புரிந்து கொள்ளாத இதயமற்ற அந்த மனித மிருகங்கள் விசரி விசரி எனப் பலமாகக் கத்தி அவளை எறிந்து விரட்டின. அந்த மனித மிருகக் கூட்டத்தோடு அக்கம் பக்கத்து நாய்களும் சேர்ந்து குரைத்துக் கொண்டன. வேலியைப் பிய்த்துக் கொண்டு வந்த ஒரு நாய் அவளைத் துரத்திக் கொண்டு செல்ல மற்ற நாய்களும் தொடர்ந்தன. பாவம்..... விசரியாக்கப்பட்ட அவள் தன் குழந்தையைக் காப்பாற்றுவதற்காக மூச்சிழைக்க ஓடிக்கொண்டிருந்தாள். அவள் ஓடுவதைப் புரிந்து கொள்ளாத அந்தக் கூட்டம் வெற்றிப் பெருமிதத்தோடு குழந்தைகளாண்டுக் கொண்டாட்ட மண்டபத்தை நோக்கி சென்று கொண்டிருந்தன.



நிழல் தேடும் நெஞ்சங்கள்

அவளுக்கு என்னதான் நடந்துவிட்டது. ஏனிப்படி ஆனாளோ? இப்படித்தான் கூடியிருந்த உறவினர் தமக்குள் குசுகுசுத்துக் கொண்டனர். ஏதோ ஒரு முடிவுக்கு வந்துவிட்டதைப் போல எல்லோரது விழிகளும் அவளின் முகத்தில் தான் நிலைகுத்தி நின்றன.

ஆரும் பணக்காரர் அப்பிடி.... இப்பிடியெண்டு ஏதும் செய்திருப்பினமோ? இப்படி ஒரு அபிப்பிராயம்.

"சீ.... சீ... அப்பியொண்டுமில்லை... இவள் நெடுக ஆலடிப் பக்கத்தாலைதான் அந்தோனியாரிட்டைப் போறவள்..... அதுதான் அந்த ஆலடியான் ரை சேட்டைத்தான் இது." இது இன்னொரு குரல்.

ஆனால்... அவள்... இந்தக் குரல்களுக்கெல்லாம் செவிமடுப்பதற்கு தயாராக இல்லை. தன்னையறியாமலேயே சிரிப்பதும் மிரண்டு விழிப்பதும் ஏதையோ தேடுவதும் முணு முணுத்துச் சிரிப்பதுமாகத்தான் இருந்தாள்.

அன்ரன் மட்டும் எதையுமே பொருட்படுத்தாது குறித்த நேரங்களுக்கொப்ப மாத்திரைகளைக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

28-7-1985
சுழுமுரசு

"அன்ரன் நீ ஒருக்கா கோவில்துறை பேதுருப்பிள்ளையிட்டை இவளைக் கொண்டேக்காட்டு. இது ஒரு வருத்தமுமில்லை. ஏதோ ஒரு பிசாசின்ரை குறைபாடு போலத்தான் இருக்கு. பேதுருப்பிள்ளை எந்தப்பிசாசையும் ஓட்டி விடுவார். இந்த விசயத்திலை அவர் மகாவீரன். இப்படியொருத்தர் தன் கண்டுபிடிப்பையும் பரிகாரத்தையும் எடுத்தியம்பினார்.

அன்ரன் சிரித்தான்.

ஏன் தம்பி வைரவர் கோவில் பூசாரியிட்டை ஒரு நூல்முடிவிச்சுப்பார்த்தா லென்ன. ஆலடிப்பிசாசென்றால் வைரவற்றை நூலுக்கு நிண்டிடும்...

சும்மா குழந்தைப்பிள்ளைக்கதை கதையாமலிருங்கோ.

ஒண்டுக்கும் ஒத்துவராமல் நீ அவளை என்ன சாக்காட்டப்போறியே, "தம்பி பெரிய மனிசர் சொல்லுறதைக் கேள். இல்லாட்டில் அந்தோனியாற்ரை வாசலிலை கொண்டு போய் விட்டுவிடு. நல்லா அவரிலை பழியைப் போட்டிட்டு செபி". அன்ரனின் தாய் திரேசம்மா சொல்லிவிட்டு மூக்கைச்சீறிக்கொண்டாள்.

எல்லாம் முடிந்த நிலையில் தான் இப்படிக்கிடக்கிறாள் என்பதை இவர்கள் அறியாதவர்கள் தானா?

ஏன் இப்படியானாள் என்பதைக்கூட இன்னும் புரிந்து கொள்ளவில்லையே என்று எண்ணிய அன்ரன் அவர்களுக்காகப் பச்சாத்தாபப்பட்டான்.

அவள் பெயர் ரீட்டா. அலை போன்ற நீண்ட கருங்கூந்தல். முழுநிலவிலும் கறையுண்டு. அவள் முகத்தில்..... ? தேடினும் கிடைக்காது.. அத்தனை பேரழகி ரீட்டா. அதனால்தான் 37 வயதுவரை காத்திருந்து கல்யாணம் செய்து கொண்டாள். போலும். இந்தக் கல்யாணத்திற்குக்கூட அவள் சம்மதித்திருக்க மாட்டாள். தங்கை கேமாவின் மகள் பிரேமா பெரிசாகி விட்டாள். கல்யாணங்களை ஆயிரம் காரணங்கள் காட்டித் தடுத்துவிடலாம். ஆனால் இயற்கையின் இந்த மலர்ச்சியைத் தடுத்துவிட முடியுமா? அப்படி ஒரு வழியிலிருந்து

அது ரீட்டாவிற்கும் தெரிந்திருந்தால் நிச்சயமாக இந்தக் கல்யாணமும் நடந்திருக்காது ரீட்டாவின் தம்பி டானியலும் தனக்கென்று ஒரு வாழ்க்கைத்துணையை தேர்ந்தெடுத்திருக்க முடியாது.

தன்னழகிற்கு இணையான அழகனைத்தேடி எத்தனையோ மாப்பிள்ளைகளைத் தட்டிக்கழித்துக் கொண்டிருந்த ரீட்டாவின் வயதுகளை ஆண்டுகள் விழுங்கிக் கொண்டிருந்தபோது இப்படியொரு சந்தர்ப்பமா? எப்படியோ ரீட்டாவிற்குக் கல்யாணம் நடந்துவிட்டது.

மாப்பிள்ளை அன்ரன் ஒரு பஸ் றைவர். தேசிப்பழம் போன்ற நிறம். ஓரளவிற்கு முகத்திற்கு எடுப்பான அரும்பு மீசை. பார்ப்பதற்கு ஒகோ என்றில்லா விட்டாலும் ஓரளவு அழகன் தான். அன்ரன் தன் இளமைக் காலத்தின் பெரும் பகுதியை மதுவோடும் , மங்கையோடும் தான் கழித்துவிட்டான். இந்த அனுபவங்களால் பெண்கள்மீது வெறுப்பையும், அர்த்தமற்ற சந்தேகங்களையும் சூழ்நிலை அவனுக்கு ஏற்படுத்தியிருந்தது. இதனால் தனது நாற்பது வயது வரை கல்யாணம் செய்யாதிருந்து பட்டுக்கழித்து கல்யாணப்பந்தத்திற்கு புகுந்தான்.

'துருவங்கள் இணைவதில்லை' ஆனால் மனிதர்கள்....? என்னதான் மாறுபாடானவர்களானாலும் திருமணப்பந்தத்தால் இணைந்து விடுகிறார்கள். இப்படியாக இணைபவர்களால் தான் புவியில் துன்பங்கள் மலிந்து விட்டன போலும். மனித மனந்தானே. மனிதமனம் மாறக்கூடியது. மாற்றப்படக்கூடியதும் தானே. இல்லையென்றால் விலைப்பொருளாக பெண்மையை எண்ணிய ஒருவனும் அழகிருந்தால் எதையும் சாதித்துவிடலாமென்று எண்ணிய ஒருத்தியும் இப்பிடி இணைந்திருக்க முடியுமா?

அன்ரன் ரீட்டா திருமணம் முடிந்து மூன்றாண்டுகள் ஓடி மறைந்து விட்டன. பேர் சொல்ல ஒரு குழந்தை கிடைக்கவேயில்லை. இப்போது ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் ஏழுமணிப்பூசைக்கு அந்தோனியாரைத் தரிசிப்பதற்காக இருவரும் நிற்கின்றனர்.

அக்கா நாலுபிள்ளைகளின் தாய், தங்கைக்கு ஆறு குழந்தைகள். அக்காவின் பிள்ளைகள் கல்யாணம் செய்யப்போகிறார்கள். அவர்களும் பிள்ளைபெறப் போகிறார்கள். ஆனால் நான்..... நான்.....?

ஏக்கங்கள்! ..... வேண்டுதல்கள்..... எதிர்ப்பார்ப்புக்கள்... மனதாலும் கர்த்தரை எண்ணியிராத இவன் இப்போது பிரார்த்திக்கின்றான். கண்ணீரால் அரச்சிக்கின்றான். நெஞ்சாரச் செபிக்கின்றான்.

"தேவரீருக்குப் பொருந்தாத பாவத்தைச் செய்தபடியினால் முழுமனதுடனே விசனப்படுகின்றேன். இனிமேல் சுவாமி தேவரீருடைய உதவியினாலே ஒரு போதும் பாவஞ் செய்யேனென்றும், பாவங்களுக்கடுத்த முகாந்திரங்களெல்லாம் விடுவேனென்றும் கெட்டி மனதுடனே பிரதிக்கினை பண்ணுகின்றேன்"

தன்னை மறந்து அழுது தீர்த்தான் அன்ரன். ரீட்டா மட்டும் என்ன தேங்கி நிற்கும் ஆசைகளையெல்லாம் ஒன்றாக்கித்தன்னை மறந்து துதித்தாள். நெஞ்சத்தில் சுமையாகக்கிடக்கும் தன் எண்ணத்தை ஈடேற்ற பிரார்த்தித்தாள். அந்த ஜீவத்துடிப்பில் அவள் இதயத்தில் ததும்பிய ஏக்கங்கள் பெரூச்சாகி காற்றோடு காற்றாகக்கலக்கின்றன.

"பரமண்டலங்களிருக்கும் எங்கள் பிதாவே உம்முடைய இராச்சியம் வருக. உம்முடைய சித்தம் பரமண்டலங்களிலே செய்யப்படுமாப்போல பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்களப்பம் எங்களுக்கு இன்று தாரும்."

ரீட்டாவின் உடலில் தன்னையறியாத ஒருவித சிலிர்ப்பு.....

அன்ரன் ரீட்டா தம்பதிகளின் விண்ணப்பமும் வேண்டுதலும் குழந்தையே, தேவையேற்படும் போது தம் ஆசைச்சிறைக்குள் வேதனைச்சிறைப்படுத்தி எப்படியோ தமது தேவைகளைப் பெற்றுவிடத்தானே மனிதர்கள் துடிக்கிறார்கள்.

மனிதர்கள் சுயநலநோக்கில் தான் தேவனையும் படைத்தார்களோ?

தேவன் பாவங்களை வேண்டிக்கொண்டாலும் ..... கொடுப்பதிலும் ஏதோ அளவு முறையை வைத்துள்ளான் போலும், அதனால் தான் உள்ளார் சிலராகவும், இல்லார் பலராகவும் உலகில்

இருக்கிறார்களோ? இல்லார் எல்லார்க்கும் தேவன் கொடுக்கும் நாள் வாராதோ?

பூசை முடிந்து வெகுநேரமாகிவிட்டது. தேவாலயத்திற்கு வந்திருந்தோர் எல்லோருமே சென்றுவிட்டனர். ரீட்டாவும் அன்ரனும் மட்டும் இன்னமும் எழுந்திக்கவே இல்லை.

கண்ணீர்ச்சுரப்பிகள் ஓயும்வரை அவர்கள் அழுது தீர்த்துக்கொண்டனர்.

பாதர் லோறன்ஸ் எங்கோ புறப்படுகின்றார்.

பாதர்.....ரீட்டா தான் முதலில் அழைத்தாள். அன்ரனும் சேர்ந்து கொண்டான்.

என்ன பிள்ளையள். என்னா நல்லா அழுது தீர்த்திருக்கிறியள். பாதரின் கருணை நிறைந்த வார்த்தைகளைத் தொடர்ந்து முறையீடுகள் நடந்தேறின.

"ம்.... துயரப்படுபவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேற்றப்படுவார்கள். நீங்கள் நிச்சயமாக உங்கள் முயற்சியில் வெற்றியடையவீர்கள். தேவனுக்கு முறையிட்டு அவனை நன்றாக மன்றாடுங்கள்." ..... அத்தோடு..... சற்று நிறுத்தி எதற்கும் "உங்களுக்காக நானும் வேண்டிக்கொள்கின்றேன்." "தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்" என்ன சரிதானே பாதர் நடக்கிறார்.

ஏதோவொரு புதிய நம்பிக்கையொளி ரீட்டா அன்ரனோடு டாக்டர்களை நாடினாள்.

தேடுங்கள் கண்டடைவீர்கள் அவள் தேடினாள். குழந்தையென்ற நிழல் வேண்டிப் பரிசோதனைகள்.....

ஆய்வுகள்.....

சிகிச்சைகள்

முடிவு பூஜ்ஜியம் தான். எத்தனையோ டாக்டர்கள் பார்த்துவிட்டனர். எல்லோரது முடிவுகளும் ஒன்றுதான்.


கருவளம் இல்லை காலம் கடந்துவிட்டது. தேவனே உன்னை வேண்டிக் கொண்டதும் பிரார்த்தித்துச் செபித்ததெல்லாம் வீண்தானா?

"தேவன் மனிதன் கேட்பதையெல்லாம் கொடுப்பாரா? அப்பிடியென்றால் இல்லாமை எப்போதே இல்லாதொழிந்து விடுமே."

"ஆனாலும் மனிதர்கள் பலவீனமானவர்கள்"

அன்ரன் இப்போது எதைப்பற்றியுமே சிந்திப்பதில்லை. ஆனால் ரீட்டா..... அவள் தான். இப்பிடி ஆகிவிட்டாளே!

ஆஸ்பத்திரியில் இருக்கும் ரீட்டாவைப் பார்க்க உறவினர்கள் தினமும் வந்து செல்கின்றார்கள்.



சங்கமம்

"முருகா! முருகா! இந்தக் கொடுமைகளையெல்லாம் கண்டும் காணாதது மாதிரி இருக்கிறியே உனக்கே இது அடுக்குமா? ஏதும் அறியாத என்ரை பாலனை எங்கிட்ட தாஇல்லையெண்டால் என்னை நீயே எடுத்துக் கொள்"

கரை பிரண்டோடும் கங்கைப் பிரவாகக் கண்கள் உடைப்பெடுக்க கையேந்தி நின்று கதறினாள் கமலாம்பிகை.

நெஞ்சில் துயரச் சுமை அதிகரிக்கும் போதும் தாங்க முடியாத துன்பத்தால் தாக்கப்படும் போதும் கமலாம்பிகை இப்படித் தான் நல்லூர் முருகனுக்கு முறையிட்டு புலம்புவாள். ஆனால் இன்று அதிகாலை யிலிருந்து நல்லூர்க் கந்தசாமி கோயிலின் முன் புரண்டு கிடந்தாள். மாலைப் பூசை முடிந்த பின்னும் கமலாம்பிகை கண்ணீர் பெருகத் தரையில் கிடந்தாள்.

"யாரப்பா இராமாயணத்தில் கிடந்த கைகேயி மாதிரி..... பாவம் அந்த மனுசிக்கு என்ன துன்பமோ..... ?." கமலாம்பிகையை அந்தக் கோலத்தில் கண்ட சிலர் இப்படிப் பேசிக் கொண்டார்கள்.

1984 ல்
மட்டக்களப்பு தூரகை சஞ்சிகை நடாத்திய சிறுகதைப் போட்டியில் உம் பரிசு பெற்றது.

"கமலம்..... கமலம் இஞ்சரும் எழுந்திருமப்பா ஏழுமணியாப் போச்செல்லே.." கமலாம்பிகையின் புருசன் சண்முகநாதன் மாஸ்ரர் எழுப்பினார்.

"ஐயோ..... முருகா....முருகா இந்தக் கொடுமையிலிருந்து ஒரு முடிவு தா... நானென்ன செய்ய.. இனி என்ன செய்ய....?" எல்லோர் மனத்தையும் கரைத்துவிடும் படி கமலாம்பிகை கதறினாள். சண்முகநாதனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

ஒரு கணம் யோசித்தார். மறு கணம் ராக்ஸ்சி ஒன்றில் கமலாம்பிகையைத் தூக்கி ஏற்றிக் கொண்டு வீட்டிற்கு சென்றார். கமலாம்பிகையை வீட்டிற்குள் விட்டு பூட்டிக் கொண்டார். அவள் இன்னமும் அழுவதை நிறுத்திக் கொள்ளவேயில்லை.

''இவள் இப்படி அழுதே தன்னை அழித்துக் கொள்ளப்போகிறாள்." தாயெல்லே எப்படி அழாமல் இருக்க முடியும் தேற்றுதலுக்காக வந்த உறவினர்களின் பேச்சுக்கள் இவை.

சண்முகநாதன் எதையுமே பேச முடியாதவராகி அப்படியே சோபாவில் உட்கார்ந்து சாய்ந்து கொண்டார்.

இரண்டு வாரங்களுக்கு முன்தான் அது நடந்தது. ரியூசனுக்கு சென்ற மாணவர்களில் ஐவரை இரணுவத்தினர் பிடித்துச் சென்றுவிட்டனர். மாலை ஆறுமணிக்கு பின் கிடைத்த சேதி இது.

தேவதாஸன் இன்னும் வீட்டிற்கு வரவே இல்லை. சண்முகநாதன் மகன் தேவதாஸனைத் தேடி ரியூட்டரிக்கு சென்று திரும்பிக் கொண்டார்.

"ஐவரில் ஒருவன் தேவதாஸனும் தான் மாஸ்டர்" ரியூட்டரி ஆசிரியர் ஒருவர் தான் இந்தச் சேதியைத் தெரிவித்தார்.

ஒரே ஒரு கணம்தான். சண்முகநாதன் திணறிப்போய் விழ்ந்து விட்டார்.

இரவு எட்டு மணிக்கு அவர் வீட்டிற்கு வந்து சேர்ந்த போது வீடுநிறைந்த கூட்டம் இருந்தது.

கமலாம்பிகை அறிவற்ற பிணமாக தரையில் கிடந்தாள்.

ஐந்து பெண்களுக்கு தேவதாஸன் ஒருவன் தான் ஆண். குடும்பத்தில் முத்தவனும் தேவதாசனே.

"ஒன்றான தேசம் பல மொழிகளைப் பேசும் மக்களைக் கொன்டதாயும் இருக்கலாம். ஒரு மொழிக் கொள்கை கொண்ட ஒரே இன மக்கள் வாழும் நாடாகவும் இருக்கலாம். ஆனால் பல மொழிகள் பேசும் மக்கள் உள்ள நாடு அந்தந்த மொழி வழி இனங்களின் தனித்துவத்தை அழித்து விடாது மொழிவழி இனங்களை பாதுகாக்கும் சுய நிர்ணய உரிமையைப் பேணிப் பாதுகாக்க வல்ல ஆட்சி அமைப்பைக் கொண்டதாக இருக்க வேண்டும். இல்லையேல் நாட்டின் அமைதிக்குப் பங்கம் ஏற்பட நேரும்."

இப்படிப் பொதுவுடமைத் தத்துவத்தைப் பேசிய ஆசிரியர்தான் சண்முகநாதன் ஆசிரியர்.

"பொருளாதார திட்டத்தை மூலமாக வைத்தே அரசியல் கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும். அவரும் மொழி வாதத்தில் கட்டியெழுப்பும் அரசியல் இன வாதத்திற்கே வழிவகுக்கும்."

தனது கூற்றையெல்லாம் ஒருகணம் மீட்டுப்பார்த்த சண்முகநாதனுக்கு இப்போது எதுவுமே புரியவில்லை. அவர் கலங்கிக் குழம்பிப் போனார்.

கட்சி அமைப்பாளர்கள்- அரசியல் செல்வாக்கு மிக்கோர்- மந்திரிகளின் நண்பர்கள் என்ற வரிசையில் திறவாத படலைகளையெல்லாம் தன் மனச்சாட்சிக்கு விரோதமாகத் திறந்து ஏறாத படிகளெல்லாம் ஏறி இறங்கி கழைத்து விட்டார்.

ம்.. ஆறு சீவன்கள் ஒருவருக்காக சாகவேண்டுமா?

சட்ட வல்லுனர்களை நாடினார். நீதிமன்றத்தில் மகனை நிறுத்தும் படி மனுத்தாக்கல் செய்துவிட்டு திரும்பினார்.

தாக்கல் செய்த மனுவின் பதில் கிடைக்க சில தினங்கள் தாமதிக்கலாம் அந்த நாள் வரையும் பொறுத்துக் கொள்ளும்

நிலையில் கமலாம்பிகையோ பிள்ளைகளோ இல்லைத்தான்..... இருந்தும் என்ன செய்ய, ஆட்சியும் அதிகாரமும் அப்படித்தானே இருக்கிறது.

பணம் கரைந்து கொள்கிறதேயொளிய ஒரு வழியிலும் நல்ல முடிவு கிடைப்பதாக இல்லையே என்ற மன உழைச்சலோடுதான் சண்முகநாதன் நடந்து கொண்டிருந்தார்.

பூபாலசிங்கம் புத்தகசாலையின் முன் என்றுமில்லாத கூட்டம். ஏதோ புதினம் நடந்திருக்க வேணும் என்பதை அந்தக் கூட்டம் புலப்படுத்திக் கொண்டிருந்தது.

இரண்டு கூடல்கள் முகம் கருகிய நிலையில் பண்ணைக் கடற்கரையில் கிடக்குது.

கண்ணிரண்டும் தோண்டிய நிலையில் ஒண்டு கிடக்குது.

சண்முகநாதனுக்கு இந்தச் செய்திகள் நாராசமாகத்தான் இருந்தன. எதை எதையோ எல்லாம் நினைக்கும்படி மனம் பெதலித்தக் குமைந்தது.

டாக்ஸி.....

சண்முகநாதன் ஏறிச்சென்று பார்த்தார். ம்.... நிச்சயமாகத்தான் இருந்தன.என் மகனில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டுதிரும்பினார். இருந்த போதிலும் அவர் மனம் சாந்தியின்றி தவித்துக் கொண்டுதானிருந்தது.

வாழ வேண்டிய பருவம்..... இப்படிச் சித்திரைவதை செய்து போட்டு..... ரியூட்டரியில் கைது செய்த பொடியள் எண்டுதான் கதை.... கதை கதையாகிக் காற்றோடு காற்றாகி எங்கும் செய்தியாகிவிடுகிறது.

இந்தச் செய்தியை கமலாம்பிகை அறிந்தால்..... ஓ..... அதை நினைத்துக் கூடப்பார்க்க முடியவில்லை.

சண்முகநாதன் பஸ்ஸ்ராண்டில் பஸ்ஸுக்காக நின்றார். பஸ் இப்ப வந்திடும். தன்னைத்தானே தேற்றிக் கொள்கிறார்.

பக்கத்து வீட்டு இராசையா ஓடி வருகின்றான்..... "உங்கட மனுசி வீட்டிற்குள்ள கயிறு போட்டுத் தூங்கி....."காருக்குள் வைத்து விக்கி விழுங்கி ஒருவாறு சொல்லி முடித்தான் இராசையா.

என்ன?

அதிர்ச்சிகள்..... தாக்கங்களாகி அவரைத் துளைத்துத் தெடுத்தன. ம்... ஒரே ஒரு கணம் தான். எங்கோ வெறித்துப் போன தன் பார்வைசை செலுத்திவிட்டு..... இனி நித்திய செத்த வீடு தான் என்றார் அவர்.

"தாயின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள மகனை அனுமதியுங்கள்" விண்ணப்பங்கள் பல முனையிலுமிருந்து பல எம். பி. மார்என்று பலர் கேட்டுக் கொண்டனர்.

இரண்டு நாட்களாக கமலாம்பிகையின் 'என்போம்' பண்ணிய சடலம் ஊதுவத்தி வாசனையில் ஊதிப் பொருமிக் கிடந்தது.

ஊரெல்லாம் கூடி ஒப்பாரி வைத்தது.

இரண்டாம் நாள் மாலை எல்லோரது விழிகளும் தேவதாசனின் வரவை எதிர் பார்த்தக் கொண்டிருந்தது. மாலை ஆறுமணிக்கெல்லாம் மூன்று நான்கு ரக்குகள் புடைசூழ தேவதாசன் அங்கு கொண்டு வரப்பட்டான்.

எங்கும் ஒரே பரபரப்பு. அவனைப் பார்த்துவிடத்தான் இத்தனை பரபரப்புகள்.

கைவிலங்கோடு ஒரு உருவம்- நடமாடும் எலும்புக்கூடாகத் தள்ளாடித் தள்ளாடி வருகின்றது. இவனைச்சூழ நான்கு புறமும் இராணுவச் சிப்பாய்கள்.

"அம்மா ... " "அம்மா..." .....

விலங்கு பூட்டிய கைகளை தலைமீது மோதிக் கதறினான் தேவதாஸன்.

சண்முகநாதனின் நீர் நிறைந்த விழிகள் தேவதாஸனின் உடலை ஊடறுத்துக் கொண்டிருந்தன. என் மகன் தேவதாஸன் தானா இவன்....? ஓ..... இதற்குள் இப்படியாக்கப்பட்டானா? இதயம் பொங்கிக் குமுறியது.

என்ன செய்வது, மகனே என்று அவனைத் தொட்டுப் பேசமுடியாத நிலை..... பார்வையால் மட்டும் உறவைப்பேணிக் கொண்டார். சண்முகநாதன்.

தேவதாசன் அப்படியே தாயின் உடல் மீது வீழ்ந்து விட்டான். உணர்வுகளற்று..... அவன் வீழ்ந்த போது அண்ணா..... அண்ணா..... ஒன்றோடு ஒன்றாக தேவதாஸனின் உடன் பிறப்புகள் வீழ்ந்து புரள்கின்றன.

ஓ..... கலைந்து விட்ட தேனீக்கள் போல எங்கும் ஒரே கூக்குரல் ஒலி பேரிசைச்சலாகி.....

இராணுவச் சிப்பாய்கள் தம் கடமையை மறந்து போகும் வரை அந்த செஞ்சுருக்கும் நிகழ்வுகள் நடந்தன.

தேவதாஸன் வீழ்ந்த படி கிடந்தான். கடைவாயிலிருந்து இரத்தம் கசிந்து தாயின் உடல் மீது சிந்திச் சிதறியது.

இராணுவச் சிப்பாய்கள் ஒருவரை ஒருவர் பார்த்து ஏதேதோ பேசிக் கொண்டனர். ஒருவன் தேவதாஸனின் தோள்களைப் பற்றி அசைத்துப் பார்த்தான். "ஓ.. மை.. கோட்" அப்பால் அவன் எதையும் பேசவில்லை.

வெளியே இருந்த அதிகாரி அழைக்கப்பட்டார்.


சில விநாடிகள்..... நீண்ட பயங்கர பீதி..... "தேவதாஸன் எக்ஸ்பயர்ட்" அதிகாரியின் வாய் இப்படித்தான் முணுமுணுத்தது.

"ஐயோ..... தேவதாஸா நீயுமா போய்விட்டாய்? சண்முகநாதன் பலமாகத் தலையில் அடித்துக் கதறியபோதுதான் தேவதாஸன் செத்துப் போன சேதி அப்பால் நின்றவர்களுக்கெல்லாம் தெரிந்தது.

சட்டத்தின் விலங்குப் பிடிக்குள் மீண்டும் அவனைச் சிறைப்பிடிக்க முடியாத இராணுவம் ஏமாற்றத்தோடு விலங்குகளை எடுத்துச் சென்றது.

"யாராலும் விலங்கிடாதபடி செத்துவிட்டாய அண்ணா?..... அண்ணா அம்மாவும் நீயுமில்லாத போது நாம் மட்டும் இருந்து என்ன செய்வோம்..... எங்களையும் கூட்டிச் செல் அண்ணா..... அண்ணா" என்று தங்கைகள் கட்டிப் புரண்டு கதறினார்கள்.

மனைவி கமலாம்பிகையின் சிதைக்கும் தேவதாஸனின் சிதைக்கும் சண்முகநாதன் தீமூட்ட இரு சிதைகளும் தீயோடு சங்கமமாகியது.



ஒரு விதவை மலர் சூடுகிறாள்

அவள் போய்விட்டாள். ஆம், என் பத்திரிகை காரியாலயத்திற்கு எதிரே குடி இருந்த கவிதா எங்கோ சென்றுவிட்டாள். என்மனம் இழக்கக் கூடாத எதையோ இழந்துவிட்டது போலத் தவித்துக் கொண்டது. இனம்புரிய முடியாத ஒரு தவிப்பு, ஏன்தான் - ஒரு நாளுமில்லாத தவிப்பாக என் இதயத்தை வாட்ட வேண்டும் ஓ.... என்மனம் என்னையும் அறியாமலேயே அவள் அழகில் மயங்கிவிட்டதா? என் மனக்கண்ணில் கவிதா தன் பேரெழிற் கோலத்தோடு நிறைந்து காட்சி தருகின்றாள். கடல் அலைபோல, அலை அலையாகச் சுருண்டுவிட்ட கேசம். அத்திப்பழத்தைப் போலச் சிவந்த செவ்வண்ண அதரங்கள். படபடக்கும் கருவிழிகள். சே! அவள் ஒரு எழிற்கூடம் தான். முத்துப்பற்களைக் காட்டி சத்தமின்றி அவள் நகைத்தபோது, அந்த மோகனப்புன்னகையை தாங்க முடியாது "கவிதா..." என்று மறந்து கூவி அழைத்து விட்டேன்.

என்ன சார்... கூப்பிட்டீங்களா? என் செயலகத்துப் பியோன் வந்து எதிரே நின்றபோது தான் என் நிலையைப்புரிந்து கொண்டேன். என்னை அறியாத ஒரு அச்சம் கலந்த

1977 வைகாசிச் சுடர்

நாணம் எழுந்து கொண்டாலும் ஒரு பியோன் முன் ஒரு பத்திரிகை ஆசிரியன் இப்பிடி நடந்துகொண்டால்... அவன் என்னைப் பற்றி எப்படி எல்லாம் நினைத்து விடுவானோ?... என்னை வெகு துரிதமாகச் சுதாகரித்துக் கொண்டேன்.

"சுதா.... மூன்று அஞ்சல் அட்டைகள் வாங்கி வா" பாக்கெட்டில் இருந்து சில்லறைகளை எடுத்துக்கொடுத்து அனுப்பிவிட்டேன். சுதாகரன் என்ற அந்தப் பியோனை எல்லோரும் சுதா என்று தான் அழைப்பது வழக்கம். அவன் பியோனாக வேலை செய்தாலும் எவரையும் எடைபோடுவதில் அவனுக்கு நிகர் அவனேதான். நான் கவிதா என்று அழைத்ததை எப்படியும் கவனித்துத்தான் இருப்பான். சே, அவன் கவனித்திருந்தால் எப்படி தன்னை அழைத்ததாக வந்திருக்க முடியும். ஒருவேளை கவனித்திருந்தால் ..... நானும் இளைஞன் தானே..... கவிதா என்ற பெண்ணிற்கும் இவருக்கும்.....காதல் கீதல் என்று எதையாவது உளறி தள்ளி விடுவானே! என்மனம் இருந்த நிலையைவிட இப்போது வேகமாக அடித்துக் கொண்டிருந்தது.

என் சிந்தனையை திசைமாற்ற எண்ணி மேசையில் கிடந்த இலக்கிய சஞ்சிகையை புரட்டினேன். மனம் அதில் நாட்டம் கொண்டதாக இல்லை. விழிகள் வெறித்த வெற்றுப்பார்வையை செலுத்த, விரல்கள் மட்டும் ஒவ்வொரு பக்கம் பக்கமாகப் புரட்டிக்கொண்டே இருந்தன. தற்செயலாக என்விழிகள் நிலைகுத்திய போது அங்கே "அந்திவானம்" கவிதா என்ற இரு சொற்றொடர்கள் இருப்பது தெரிந்தது. அந்திவானம் என்ற தலைப்பிலான ஓர் புதிய நடைக் கவிதையைக் கவிதா என்ற ஒரு பெண் புனைந்திருந்தாள். கவிதா... கவிதா... கவிதா.. என் வாயிதழ்கள் அந்த பெயரினை மட்டும் நெட்டுருப்பண்ணிக் கொண்டிருந்தது. கவிதையில் மனம் நாட்டம் கொள்வதாக இல்லை.

இனம் புரியாத ஒரு இன்பத்தவிப்பு

ஏக்கத்தின் சாயலில் எழுந்த ஒரு பெருமூச்சு, என்னை அறியாமலே என் எண்ணம், என் புத்தி, சித்தம் அத்தனையும் கவிதாவே நிறைந்து கொண்டாள். அந்த அர்த்தம் புரியாத உணர்வுதான் காதலா?... இனம் புரியாத இந்த ஏக்கத்தின் பெயர்தான்

காதலா? அப்படியாயின் நான் அவளைக் காதலிக்கின்றேனா? தீர்வுகாண முடியாமல் என்மனம் சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்தபோது சுதாகரன் வந்து நின்றான்.

"ஏன் சுதா அஞ்சலட்டை வாங்கவில்லையா?"

"போஸ்ற் ஆபிஸ் சாப்பாட்டிற்காக மூடப்பட்டிருக்கு சார்"

சில்லறையை மேசைமீதே வைத்துவிட்டு அவன் போய்விட்டான். கைக்கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டேன். பன்னிரண்டு நாற்பத்தைந்து. எழுந்து வெளியே வந்து சாப்பாட்டு அறைக்குள் சென்று அமர்ந்தேன். மதிய உணவிற்காக என் நினைவுகள் சுழலத்தொடங்கிவிட்டன.

அன்று ஒரு திங்கட்கிழமை நான் மதிய உணவை சாப்பிட்டுவிட்டு கைகளை அலசிக்கொள்ள வெளியெ வந்து நிற்கின்றேன். எதிர்வீட்டு வாசலில் யாரோ ஒரு பெண் என்னைப் பார்த்தபடி நிற்பது தெரிகிறது. என் பார்வை அவளது விழிகளைச் சந்தித்தபோது ஏனோ என்னை விடுவித்துக்கொள்ள முடியவில்லை. நான் மெல்லச் சிரிக்கின்றேன். பதிலுக்காகவோ என்னவோ அவளும் இளநகை ஒன்றை உதிர்த்து விட்டு உள்ளே சென்று மறைந்து கொண்டாள். உணவுவேளை முடிந்ததும் நான் செயலக அறைக்குள் சென்று சற்று ஓய்வெடுத்துக்கொண்டபோது பென்சனியர் தணிகாசலம் வந்து நின்றார். அவரை எதிரே இருந்த நாற்காலியில் அமரச் செய்துவிட்டு வந்த நோக்கத்தை வினவினேன்.

"தம்பி... உங்கடை பேப்பரிலே வீடு வாடகைக்கு என்று ஒரு விளம்பரம் கொடுத்திருந்தேனே. அதை இன்றோடு நிறுத்திவிடுங்கள்."

மூன்று நாட்களுக்கென்று தந்திருந்த விளம்பரம் அது. இரண்டாவது நாளே நிறுத்திவிடச் சொல்கின்றாரே. "ஏன் சார்..... உங்க வீட்டிற்கு யாரோ வந்திருக்கின்றார்களோ?"

"ஆமாம் தம்பி..... யாழ்ப்பாணத்துப்பிள்ளை ஒன்று இங்கை தானாம் படிப்பிக்கிறா..... ஸ்கூலுக்குக் கிட்ட என்றபடியால் என்ரை

வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டா..... நல்ல குடும்பத்துப்பிள்ளைபோல இருக்கு. பெயர்கூட ஏதோ..... கவிதாவாம். அதுதான் இனிமேல் நீங்கள் அந்த விளம்பரத்தைப் போட வேண்டாம்."

தணிகாசலம் போய்விட்டார். விளம்பரப்பகுதி மனேச்சருக்கு அந்த விளம்பரத்தை நிறுத்திவிடும்படி சொல்லிவிட்டு மறுநாளைய ஆசிரியத்தலையங்கத்தை தீட்டத் தொடங்கினேன். அன்றுமுதல் கவிதாவும் நானும் பார்வைகளால் மட்டும் தான் பழகிக்கொண்டோமே ஒழிய இந்த ஓராண்டு காலத்தில் ஒரு நாளாவது பேசிக் கொண்டது கிடையாது, அவள் அருகே இருக்கும்போது புலப்படாத இந்த உணர்வுகள் இப்போது மட்டும் ஏன்தான் என்னை இப்படி வதைக்கின்றனவோ?

"கவிதா மாற்றத்தோடு யாழ்ப்பாணம் சென்று விட்டாள்."

என்மனம் கவிதா என்று தவித்துக்கொண்டே இருந்தது. இரண்டாவது ஆண்டில் இரண்டு மாதங்கள் எப்படியோ ஓடி மறைந்து கொண்டன. யாழ்ப்பாணத்தில் இருந்து அம்மாவின் நீண்ட கடிதம் வந்து சேர்ந்தது. எதை எதையோ எல்லாம் சுற்றி வளைத்து எழுதி இருந்த அம்மா கடிதத்தின் முடிவில் தந்தியைப் போலப் பாவித்து உடன்புறப்பட்டு வரவும் என்று குறிப்பிட்டிருந்தாள்.

பத்திரிகைப் பொறுப்புக்களை உதவி ஆசிரியர் சந்திரனிடம் ஒப்படைத்து விட்டு இரவு தபால் வண்டியில் புறப்பட்டுவிட்டேன். அம்மாவின் அந்தக் கடிதத்தை திரும்பத் திரும்பப் படித்துக்கொண்டிருந்தேன். வண்டியில் "உனக்குப் பெண் பார்த்து இருக்கின்றோம், ஏதற்கும் உன் முடிவிற்காகத்தான் உன்னை அழைக்கின்றோம்." அந்த வரிகளில் எனது மனம் ஆழமாகப் பதிந்துவிட்டது. அந்தப்பெண்... அவளாக இருக்கக்கூடாதா? என் மனதை (இப்போ) இன்ப வேதனை செய்து கொண்டிருக்கும் கவிதாவாக இருக்கக்கூடாதா? என் மனதோடு கலந்து விட்ட கவிதாவை என்மனம் எண்ணிக்கொண்டதில் தப்பில்லைத்தானே. வீட்டிற்கு வந்து சேர்ந்த இரு தினங்களும் கவிதாதான் என் மனதில் தோன்றித்தோன்றிச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

பெண்பார்க்கும் நாளும் வந்துவிட்டது. பெண்ணின் வீடு மானிப்பாயில் இருப்பதாக அம்மா சொல்லித்தான் நான் தெரிந்து கொண்டேன். ஏதோ நடக்க வேண்டியது நடந்து தானே தீரும் என்று எண்ணிக்கொண்டு எல்லோருடனும் நானும் ஒருவனாக காரில் ஏறி அமர்ந்து கொண்டேன். எங்கள் குடும்பத்தின் சுமையை சுமக்க முடியாத நிலையில் கார் அலறிப்புடைத்துக்கொண்டு கிளம்பிச் சென்றது.

நீண்டு கிடந்த அந்த வீதியில் கிழக்குப்புறமாக இருந்த அந்த வீட்டிற்குள் எல்லோரும் இறங்கிச்சென்று கொண்டனர். இறுதியாக நானும் அக்கா மரகதமும் தான் சென்றோம். வரவேற்பு உபசரணைகள் எல்லாம் பிரமிக்கும்படி இருந்தது. அப்படியும் இப்படியுமாக ஒரு பெண் ஓடித்திரிவது குனிந்திருந்த என் கண்களில் சற்று தட்டுப்படுகின்றது. எங்கோ பார்ப்பது போல மெல்லத்திரும்பி அந்தப் பெண்ணை நோட்டமிட்டேன். அவள்..... அவளேதான்..... என் கவிதா.... என்னை அறியாமலே என்கால்கள் வானில் தாவிப் பறக்கின்றன. அவள் என்னைக் கண்டு கொண்டாளோ?..... இளநகை ஒன்றை உதிர்த்துவிட்டு சென்று மறைகிறாள். அணைகடந்த வெள்ளம் என் மனம் பொங்கிப் பிரவாகித்தது

அடக்கத்தின் உருவமாக மென்னடை பயின்று வருகின்றாள். பெண்ணொருத்தி அவள் பின்னே கவிதாவும் வந்து நின்ற போது அம்மா இவள் தான் பெண் என்பதை தெரியப்படுத்துவது போல என்னைப் பார்த்தாள். கவிதா கவிதா என்று தவித்துக்கொண்டு இருந்த என் மனதிற்கு இன்னொருத்தி பெண் என்றதும் இந்த உலகமே பிளந்து என் தலைமேல் விழுவதைப்போன்ற ஒரு பிரமை. இவள் தான் மணப்பெண் என்றால் கவிதா.. அவள் யார்?..... உறவினரா? அல்லது உற்ற தோழியா? என் மனம் கேள்விக்கணைகளைத் தொடுத்துக்கொண்டே இருந்தது.

"அக்கா" - மெல்ல அழைத்துவிட்டு எழுந்து வெளியே செல்கின்றேன். அக்கா என் பின்னே வந்து என் முகத்தின் மாற்றங்களை கவனித்தாளோ, என்னமோ. "..... ஏன் சுகு இவளை உனக்குப் பிடிக்கவில்லையா?' அவளும் மெல்லத்தான் கேட்டு வைத்தாள். கவிதாவை என் மனம் நாடுவதை அக்காவிடம்

எப்படிச் சொல்லுவது? சொல்லாது விட்டாலும் கேடாய்ப் போகும்.. நல்ல தருணம் இதை நழுவவிடாதே! மனம் எச்சரித்தது....

நீண்ட சிந்தனை

தீராத மனப்போராட்டம்

சொல்லமுடியாத ஒரு தவிப்பு

''என்ன? என்ன?'' அக்காவின் கேள்வி வேறு என்னைத்துளைத்துக்கொண்டே இருந்தது. எனது தடுமாற்றத்தையும் உள்ளத்தின் தவிப்பையும் புரிந்துகொள்ள யாரால் முடியும்?

"அக்கா..... அந்தப்பெண்ணின் பின்னே நிற்பவள்"....

"அவளா? ..... அவள் தான் புவனாவின் அக்கா கவிதா. கல்யாணமாகி மூன்றாம் வாரமே விதவையாகி விட்டவள். பாவம் கவிதா?"

என்ன! கவிதா விதவையா?..... என்மனம் சூன்யப் பெருவெளியாகி இருண்டு கொள்ள தலைசுற்றியது.

முடிவு... முடிவு என் முடிவை அறிந்துகொள்ள அக்கா பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தாள்.

"அக்கா" ..... "அக்கா வார்த்தைகள் தடுமாறுகின்றன. அக்கா புவனாவை யாருக்கும் கட்டி வைக்கலாம். ஆனால் கவிதாவை யார் கட்டிக்கப் போகிறார்கள்? யாரும் செய்த முடியாத ஒன்றைச் செய்வது தானே சாதனை... அந்தச் சாதனையை நானே செய்து விட்டால்... விதவைக்கும் வாழ்வு வேண்டும் தானே.. "அக்காவின் முகம் சுருக்கொண்ட முகில்போல் கறுத்துக்கொள்வதைப்புரிந்து கொள்ள எனக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

"டேய் சுகு... உனக்கென்ன பயித்தியமா பிடித்துவிட்டது?" அக்கா எனக்கு அப்படி எதுவும் பிடிக்கவில்லை சமூகத்தில் பழமைப்பூதங்களை புதைக்க ஒரு வாய்ப்பு அதனால் கவிதாவை கட்டுவதென்றால் பத்துமுறையும் சம்மதம்.

எப்படித்தான் இத்தனை துணிவு பிறந்ததோ தெரியவில்லை சொல்லிவிட்டேன். அக்கா அம்மாவை வெளியே அழைத்துவந்து ஏதோ நீண்ட நேரம் வாதிட்டுக் கொண்டிருந்தாள். அப்பாவும் அந்த வாதத்தில் கலந்து கொள்ளத் தவறவில்லை.

பெண் வீட்டாரின் விழிகள் பேந்தப்பேந்த விழித்துக்கொள்ளத் தலைப்பட்டது. என்னவோ எதுவோ என்று.

அப்பா கவிதாவின் தந்தையுடன் ஏதோ ரகசியமாகப் பேசிவிட்டு வருகின்றார். இருவரின் முகத்திலும் மென்னகை இழையோடி இருந்தது. அம்மாவும் அக்காவும் ஒப்புமைக்காக ஏதோ வலிந்து சிரிக்க முற்படுவது தெரிகிறது.

கவிதாவின் பெற்றோர் கவிதாவையும் புவனாவையும் அழைத்துக் கொண்டு உள்ள சென்று கொண்டபோது, அக்கா மரகதம் என்னைப்பார்த்து நச்சரித்தாள். தங்கை புஸ்ப்பா மட்டும் எதுவும் புரியாமல் விழித்துக்கொண்டிருந்தாள்.

நீண்டநேரத்தின் பின் கவிதாவின் தந்தை சிரித்த முகத்தோடு வெளியே வருகிறார். அவர் சிரிப்பொன்று போதுமே கவிதா சம்மதித்துவிட்டாள். ஆம்.. என் இதயத்தைத் துளைத்துக்கொண்டிருந்த விதவைப் பெண் கவிதா சம்மதித்து விட்டாள். அலைபாயும் அவள் கூந்தல்... படபடக்கும் அந்தக் கருவிழிகள்.. இனி எனது உடமைகள் ... நினைவின் அலைகள் மோதி எழுந்து என் நெஞ்சத்தை தாலாட்டின.

கவிதா.... தன் விதவைக்கோலத்தை எங்கோ ஒரு மூலையில் வீசிவிட்டு தன் கூந்தல்நிறைய மலர்களைச் சூட்டிக்கொண்டாள். வேண்டாப்பெண்ணாக, விதவையாக இருந்த கவிதா தன் கருங்கூந்தலில் வெண்மலர்களைச் சூட்டிக்கொண்டு வருகிறாள். அந்த இனிய காட்சிகளைக் கண்டவர்கள் சும்மாவா இருப்பார்கள். கல்யாண நாளைத் தேடிக்கொண்டிருந்தனர். கவிதா சூடிய மலர் வாடை என்னை எங்கெங்கோ வலிந்து இழுத்துக்கொண்டிருந்தது.

பன்னீர்த்துளிகள்

அழகுச் சிலையொன்று அசைவற்றிருப்பது போல அமுதா சாய்வு நாற்காலியில் அழகே யுருவாகச் சாய்ந்திருந்தாள். ஆயிரமாயிரம் அர்த்த புஷ்டியான அந்த கற்பனைகள், ஆதங்கந்தரும், இனியபாவபேத உணர்ச்சிகள் அவள் மனதில் மாறி மாறிப் புரண்டு கொண்டிருந்தன. இளமையின் உச்சிப் பருவத்தின் சதிராடும் அவள் உள்ளம் இன்னுமெத்தனை காலம்தான் ஏமாற்றங்களும் பெரு மூச்சுமாகக் காலத்தை ஓட்டவேண்டும்.

"உணர்ச்சிகளின் வெறியாட்டம்....."

"ஏமாற்றங்களின் நிழலோட்டம்....."

"சமூகத்தின் வக்கணைகள்....."

இத்தனைக்கும் மத்தியில் அமுதா என்னதான் சாதித்துவிட முடியும்.?

15-8-74
ஈழநாடு

"அமுதா! உன்னைப்பார்ப்பதற்காக நாளை என் நண்பன் ஒருவன் வருவான். யார் யாரோ கூடவும் வருவார்களாம்" கடிதத்தை படித்துக்கொண்டே சுந்தரம் சொன்னார். அவரின் வார்த்தைகளில் நம்பிக்கையின் எதிரொலி சற்று ஆழமாகத்தொனித்தது.

அமுதாவின் செவிகளில் பட்ட இந்தச் செய்தி எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. ஐந்து வருடங்களாகத் தொடர்கதை போலத் தொடர்ந்து கொண்டிருக்கும் இந்தப் பெண் பார்க்கும் படலம் இந்த முப்பத்திரண்டாவது வயதிலாவது முடிவு பெறாதா?

எத்தனையெத்தனை இன்பக்கனவுகளோடு அமுதா தன் காலத்தினோட்டத்தைச் செலுத்தியிருப்பாள். ஆனால் காலம்... அது ஒரு கபட சந்நியாசி தானே. தான் நினைத்தபடி யாரையாவது வாழவிடுகிறதா? இதற்கு அமுதா மட்டும் விதிவிலக்கா?

பாவம் சித்தாப்பாவின் மனதைப் புண்படுத்தி விடக்கூடாது என்றுதானோ எழுந்து அப்பால் செல்கின்றாள். குழந்தைப்பருவத்திலிருந்தே அப்பாவை அறிந்திராத அமுதா ஐந்தாவது வயதில் அம்மாவையும் பறிகொடுத்திருந்தாள். அன்றிலிருந்து சித்தாப்பாவும் சித்தி பொன்மலரும் தான் அம்மாவும் அப்பாவுமென வளர்ந்து கொண்டாள்.

அம்மாவின் பருவத்தைச் சுவைத்துவிட்டு அப்பா என்ற அந்தஸ்தைப் பெறுவதற்கு முன்னாலே யாரோ ஊர்பேர் தெரியாதவளுடன் கூடிச்சென்றுவிட்ட அப்பாவை அவள் பார்த்திருக்க முடியுமா என்ன? ஏதோ ஊராரின் வடுக்களுக்கும் வக்கணைக்கும் பாத்திரமாக இருந்த அமுதாவின் தாய் அமுதாவின் ஐந்தாவது வயதிலேயே நிரந்தர விடிவுவேண்டி தூக்கமாத்திரைகட்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டாள்.

அதன்பின்,

சித்தப்பா சுந்தரமும் சித்தி பொன்மலரும் தான் அவள் அப்பா அம்மா, சுற்றம் சூழல் ஏன் இந்த உலகமே அமுதாவிற்கு அவர்கள்தான்.

அமுதாவின் நாதியற்ற வாழ்க்கைக்கும் ஆதாரம் வேண்டுமென்றுதானோ பொன்மலருக்கும் குழந்தைப்பேறு எதுவுமே கிடைக்கவில்லை. அமுதா செல்லப் பிள்ளையாகத்தான் வளர்ந்தாள். குறைகள் ஏதுமற்ற அவள் மனதைக் கறைபடிய வைத்தது இந்தச் சமூகம்தான்.

"ஊர்பேர் தெரியாத ஒருத்தியோடு அப்பன் ஓடிவிட்டான். சித்தப்பனோடு சேர்ந்து வாழ முடியாத ஏமாற்றத்தால் அம்மாவும் செத்துப்போனாள். இவ ஏதோ ராஜாத்தி மாதிரி நினைப்பு. பெரிய எண்ணந்தான் இடுப்புத்தான் சிறிசாப்போச்சு. இதுவும் ஆராரோடை ஓடப்போகுதோ ஆருக்குத்தெரியும". இப்படித்தான் இந்தச் சமூகம் அமுதாவிற்கு வாழ்த்துப்பா பாடியது.

உழுத்துப்போன சமுதாயத்தின் ஊதாரிப்பேச்சுக்களைக்கேட்டு அமுதா தன்னையொரு இலட்சியப் பெண்ணாகவே மாற்றிக்கொண்டாள். அவள் ஒரு புதிய சமூகமாற்றத்தை விரும்பினாள். இலட்சியப் போராட்டத்தில் வெற்றிகாண்பதென்பது சாதாரண காரியமா? இத்தனை கரடுமுரடானது தான் வாழ்க்கை என்று அவள் நினைத்திருப்பாளா?

அன்று ஒரு புதன்கிழமை எங்கிருந்தோ ஒரு கூட்டம் அமுதாவைப் பெண் பார்க்க வந்தது. பெண் பார்த்து விருந்துமுண்டது. ஆனால் முடிவு? இவளை யாருக்கோ பெத்துவிட்ட கோபத்தில் தானே தகப்பன் இவள் பிறக்கமுன்பே கூலிவேலை செய்யவதந்த ஒரு தோட்டக்காட்டாளோடை ஓடிப்போனானாம். தாயும் வெட்கம் தாளாமல் தற்கொலை செய்து கொண்டாள். இப்படித்தான் ஒரு செய்தி பெண் பார்க்க வந்தவர்களுக்கு எப்படியோ கிடைத்தது. போனவர்கள் போனதுதான் திரும்பிவரவில்லை.

முதல் நிகழ்ச்சியிலே ஏற்பட்ட இந்தச்சோக நாடகத்தின் கதை நீண்டு கொண்டுதானிருந்தது சுந்தரமும் தனது முழுத்திறமைகளையும் கூட்டி எத்தினை முறையென்று பார்த்தார். முடிவு சூனியம் தான். அமுதாவை பெண் பார்க்க வந்திராத மாப்பிள்ளைகளேயில்லை.

அமுதாவின் பெண் பார்க்கும் படலம் நீண்டுகொண்டிருந்தது. பொன் மலரின் வாழ்க்கையும் இருண்டுகொண்டே வந்தது. ஆம், பொன்மலர் காசநோயின் வாயில் விழுந்துவிட்டாள். காசநோயோடு போராடிப் போராடியே தன் வாழ்நாளின் முடிவை எண்ணிப்பார்த்துக்கொண்டிருந்தாள் பொன்மலர்.

சஞ்சலம்ஒரு புறமும்

சங்கோஷம் ஒரு புறமுமாக இவையிரண்டிற்குமிடையே சுந்தரம் சித்திரவதைப் பட்டுக்கொண்டிருந்தார். பாவம்சுமைதாங்கியாக வடிவெடுத்தபின் சுகவாழ்வு....? கிட்டுமா? சுந்தரம் நிலையிழந்து தவித்தார்.

பொன்மலர் காசநோயோடு முடங்கியதும் அமுதாவே வீட்டின் சகல பொறுப்புக்களையும் ஏற்று நடத்திக்கொண்டாள்.

இந்நிலையிலும் கூட வக்கற்றுப்போன இந்தச் சமூகம் அமுதாவைச் சும்மாவிட்டு வைத்ததா? "அவளுக்கென்ன மாப்பிள்ளை கிடைக்கவில்லையெண்டு ஏதுங்குறையே உலகத்துக்குச் சித்தப்பா.... உறவுக்கு... பொன்மலருக்குக் காசம் இவளுக்கல்லவோ தாயம்." பொல்லாங்கையே பேசிப்பேசி பார்க்குமிந்தச் சமூகம் அமுதாவைக் கழுவேற்றிப் பார்த்துக்கொண்டது.

சோதனைக்குமேல் சோதனைகள் வந்தபோதும் தாங்கிக்கொண்ட சுந்தரம் இந்தச்செய்திகேட்டபோது வேதனைப்படாமல் இந்த உலகத்தைவிட்டே போய்விடத்தான் நினைத்தார்.

ஆனால் இந்தக்கொடிய சமூகம் அமுதாவை சும்மாவிட்டுவிடாதே!.... அந்த வேதனையின் எக்காளத்துணிவோடு தான் தன்கதையைக் கதைகதையாகத் தன் நண்பன் இராமநாதனுக்கு எழுதி வைத்தார்.

இராமநாதன் எந்த முயற்சியிலும் குறிதவறாதவன். திருகோணமலையில் வேலை பார்க்கப்போய் அங்கேயே திருமணம் செய்துகொண்டு சுகமாக வாழ்பவன். இறுதிநேரத்தில் அவனாவது கைகொடுப்பான் என்ற நப்பாசையால் தான் சுந்தரம் எழுதியிருந்தான்.

காலம் ஓடிக்கொண்டிருப்பது தானே. வாழ்க்கைச்சக்கரம் துன்பம் என்ற பாதியை இப்போதுதான் சுற்றிமுடித்துக்கொண்டதோ? கடந்த காலத்தின் வடுக்களைத் தடவிப்பார்த்துக்கொண்டே அன்றைய இரவுக்கு விடைகொடுத்தான்.

பொழுதும் விடிந்தது. பெண் பார்க்கும் நாள் துவங்கிக்கொண்டது. இராமநாதன் மனைவி ஞானம் இன்னும் இருவரோடு வந்து சேர்ந்தார்.

பழைய ஞாபகங்கள் பாரிய நட்பின் நெருக்கங்கள் சிறிதுநேரம் கரை புரண்டோடியது. அமுதா எல்லோரையும் சிறப்பாக உபசரித்தாள். தேநீர்கொண்டு பரிமாறினாள்.

வந்திருந்தவரில் ஒருவன் ஆனந்தன். அவன்தான் அமுதாவைப் பார்க்க வந்திருக்கும் மாப்பிள்ளை . அமுதாவை ஆனந்தன் பார்த்துக்கொண்டான். அமுதாவும் ஆனந்தனைப் பார்த்துக்கொள்ளத்தவறவில்லை. அமுதா அப்பால்சென்று கொண்டதும் அவர்கள் எதைஎதையோ பேசிக்கொண்டனர். கல்யாணப்பேச்சும் முடிந்துவிட்டது போலத்தென்பட்டது.

அமுதாவின் மனம் ஆனந்தனைப்பற்றியே ஆராய்ந்து கொண்டிருந்தது. மதிக்கத்தக்க தோற்றம். காந்தவிழிகள் கருமேகம் போன்ற கேசம், முத்துப் பற்கள் மின்னித்தெறிக்கும் மோகனப்புன்னகை மொத்தத்தில் ஆனந்தன் ஓர் அழகன்தான்.

வான்மழை காணாப்பயிர்போல வாடிக்கிடந்த அவள் வதனம் இன்று மட்டும் மோகன ஒளிவீசும் முழுநிலவாக மாறிக்கொண்டது. இன்றோடு இந்தக் காட்சிக்கு நிறைவு கிட்டாதா? அமுதாவின் இதயம் தாபப்பெருமூச்சுவிட்டது.

சுந்தரமும் இராமநாதனும் வெளியேநின்று ஏதோ இரகசியமாகப் பேசுவது அமுதாவின் ஆழ்ந்த சிந்தனையைக் கலைத்தது. கூர்ந்து கவனித்தாள்.

ஆமப்பா... ஆனந்தனின் தந்தை ஒரு சீவல் தொழிலாளிதான். ஆனந்தன் உத்தியோகமானதிலிருந்து தான் அந்த வேலைக்கு முழுக்குப்போட்டவர்.

சுந்தரத்தின் சிந்தனை நீண்டு கொண்டிருந்தது.

ஆனால் ஒன்று சுந்தரம், ஆனந்தன் ஒரு சீர்திருத்தக்காரன். உனது கடிதம் பூராவும் ஆனந்தன் படித்துப்பார்த்தவன். பக்கம் பக்கமாக உங்கள் வாழ்க்கையைப் புரட்டிப்பார்த்தவன். அதனால்தானப்பா சீதனம் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் அவன் சம்மதித்துள்ளான்.

எப்படியென்றாலும் எனது சுற்றம்..... இந்தச்சமூகம்..... சாதியை இழுத்து வசைபாடுமே!

"சித்தப்பா!..... என்ன சித்தப்பா சொன்னீர்கள். சுற்றமும்..... சமூகமுமா? அப்படியொன்று நமக்குமிருக்கிறதா?..... சீ, பண்பாடும் ஒழுக்கமும் தெரியாது. கேடுகெட்ட செய்கையும், வசைபாடுவதும் வக்கணைகள் சொல்வதும் தொழிலாகிப்போன இந்தக் கூட்டத்தையா சுற்றமென்கிறீர்கள்.? சுயமரியாதையே தெரியாது சொந்த மகளையும் அப்பனையும் சோடி சேர்த்துப் பார்க்கும் இந்தச் சோற்றுப் பிண்டங்களையா சுற்றமென்கீறிர்கள்? சமூகமென்றிர்கள்.? அமுதா ஆக்ரோஷமாக தன்னை மறந்து உணர்ச்சிவசப்பட்டுப் பேசினாள்.

"நீ என்னம்மா சொல்கிறாய்.....?" "பண்பும் பாசமும் தெரியாது வசைபாடும் ஒரு கூட்டத்தின் நடுவே நடைப்பிணமாக வாழ்வதிலும் புத்திஜீவியான ஒரு நல்லவருடன் உணர்ச்சிகளையும் பந்தபாசங்களையும் வறுமையின் தாற்பரியங்களையும் புரிந்து கொண்ட ஒரு உத்தமருடன் வாழ்வது எவ்வளவோ மேலப்பா. அநாகரிகமான காட்டுமிராண்டிகளாகப் பேசும் இவர்களை எமது சுற்றத்தவர்களென நீங்கள் கூறியவர்களை விட ஆண்மையும் அறிவும் நிரம்பிய ஒருவருடன் வாழ்வது மேல். சாதி, குலம் ஒன்றும் என்னை இதுவரை வாழ வைக்கவில்லையே சித்தப்பா!"

என்னைமட்டுமல்ல என்னைப்போல எத்தனையெத்தனை அபலைகள் வாழ்வில் இந்தச்சாதி செய்தசதியால் அந்தப்படுகுழியில் வீழ்ந்து பிணமாகியிருக் கிறார்ளேயொழிய சாதியால் யாரும் வாழ்ந்ததாக வரலாறில்லைச் சித்தப்பா. அப்படியான வேண்டாபெண்டாட்டியான யாழ்ப்பாணச் சமூக அமைப்பிலே நாம் வாழ்கிறோம். என்பதை மறந்துவிடவா? இந்தச் சமூகம் எப்படியும் தன்னமைவான வழிகட்கு மட்டும் தான் குரல்கொடுக்குமேயொழிய, நம்மைப்போன்ற ஏழைகளுக்கு ஒருபோதும் கைகொடுக்காது. இதயத்தில் பொங்கிப்பிரவகித்த சினம் வார்த்தைகளாக வெளியேறியது. இதயத்தின் குமுறலை வார்த்தைகள் வெளிப்படுத்தியது போல அவள் விழிகளும் கண்ணீர்த்துளிகளைச் சொரிந்தன. அந்தக் கண்ணீர்த்துளிகளே ஆனந்தக் கண்ணீராகக் கூடுமோ? அமுதாவின் விழிகளிலிருந்து

துளிதுளியாகத்தெறித்த கண்ணீர்த்துளிகள் இதயத்தின் குமுறலா? அல்லது இன்பத்தேக்கத்தின் ஆனந்தக் கண்ணீரா.... கொதிப்படைந்த அவளிதயத்தைக் குளிப்பாட்டத்தான் விழிகள் ஆனந்தக் கண்ணீர் வடித்தன போலும்.

ஆம் அவள் மலர்விழிகள் சிந்திய கண்ணீர்த்துளிகள் அத்தனையும் மலரப் போகும் வாழ்விற்குத்தெளித்த பன்னீர்த்துளிகள் தான்.

சுந்தரமும் இராமநாதனனும் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டனர். வார்த்தைப் பஞ்சத்தால் ஏற்பட்ட பந்தத்தின் நெருக்கம் அது. ஓரத்தே படுத்திருந்த பொன்மலரின் விழிகள்கூட அந்த இனிய சேதியை ஆசிர்வதிப்பது போல ஆனந்தக் கண்ணீரைச் சொரிந்து கொண்டது. இந்த வீட்டிலிப்போது ஒரு புதுநிறைவு. போரானந்தம் எல்லோரும் கூடியிருந்து விருந்துண்கின்றனர். அந்த விருந்துதான் அமுதாவின் கல்யாணவிருந்து போலும்.

எங்கிருந்தோ வந்த ஆனந்தன் அமுதாவின் விழிநீரைத்துடைத்தான். விரைந்து வந்த கருமுகிற்கூட்டமொன்று அந்த இனிய காட்சியைக் கண்டு பூமழையாகச் சொரிந்தது. அந்தப் புதுமணத்தம்பதிகட்கு இயற்றை சொரிந்த இன்மழைத்துளிகள் பன்னீர்த்துளிகள் போலும்.



வேதனைப் புயல்

தேய் நிலா நீலவான் பரப்பில் அழுது கொண்டிருந்தது. விடிவை நோக்கிய பூமி தன் இறுதிக்காலத்தில் கலகலத்துக்கொள்ளத் தயாராகியது. இது வரை எங்கும் நிறைந்திருந்த அமைதிப் பிரவாகம் மெல்ல மெல்ல கரைந்து கொண்டிருந்தது. கீழ் வான் பரப்பில் எழப்போகும் கதிரவனுக்கு காக்கை குருவிகள் வரவேற்பு கூறி ஆர்ப்பரித்தன. இடையே வண்டிச் சத்தமும் எழுந்து கொண்டிருந்தது. சந்தைக்கு சமான்களை கொண்டு செல்லும் மாட்டு வண்டிகளின் ஓசையது.

சுன்னாக வானும் வரப் போகுது "எடி... பிள்ளை...தங்கம் விடிஞ்சு போச்சடி... தங்கம்... எழும்படி எழும்பித் தேத்தண்ணீவை நான் சந்தைக்கல்லோ போக வேணும்." சோம்பல் முறித்துக் கொண்ட சின்னாச்சி எழும்பினாள். மகள் தங்கத்தை சோர்ந்து துவண்டு கிடந்த தங்கம் கைகால்களை உதறித்தள்ளி எழுந்து அரைப்பானை தண்ணீரை அடுப்பில் ஏற்றித் தீயிட்டாள். தீயின் கொடு கொடுத்த சூடு நீரை தாக்க நீர் இசைமீட்டி பானையின் மேற்தட்டை உதைக்க தொடங்கியது.

"எணை அம்மா என்னண்டணை உந்த வாழைக்

25-7-1974
வீரகேசரி எனது முதல் சிறுகதை

குலையினை சந்திக்கு கொண்டு போகப் போறாய். இராத்திரியும் தேத்தண்ணீயோடை கிடந்தனி இப்பவெண்டாலும் இந்த பாண் கட்டையை தின்னணை. இராத்திரி தங்கச்சி கண்ணம்மாவும் இராசாத்தியும் விட்ட மிச்சம் கிடக்குதணை . சோர்ந்த உள்ளத்தோடு முணுமுணுத்தாள் தங்கம்.

சந்தைக்குரிய அடுக்குகளைக் கவனித்த சின்னாச்சி தங்கம் அது கிடந்தால் இராசாத்தி திண்டிட்டு பள்ளிக்கு போகும்எல்லோ அதை விட்டிட்டு வெறும் தேத்தண்ணியை கொண்டு வா, சின்னாச்சியின் பஞ்சக் குரல் ஒலித்தது.அதிலும் தாய்மை நிறைந்து சிரித்தது.

இரண்டு குவளை தேத்தண்ணீரை வாங்கி மடமடவெனக் குடித்து விட்டு குறஞ்சுருட்டை பற்ற வைத்த சின்னாச்சி மகள் இராசாத்தி சுருண்டு கிடந்த சாக்கை இழுத்தெடுத்தாள். சாக்கு இழுபட்டதோடு இராசாத்தியும் எழுந்திருந்தாள். அம்மா வாத்தியார் இண்டைக்கு வசதிக் கட்டணக் காசு இல்லாட்டி பள்ளிக்கு வர வேண்டாம் என்று சொன்னவர். எல்லாப் பிள்ளைகளும் குடுத்திட்டினம். நான் தான் இன்னும் குடுக்கேல்லை. என்னன்டாலும் செய் எனக்கு காசு வேணும் சிணுக்கத்தோடு இராசாத்தி சொல்லி முடித்தாள்.

என்ரை இராசாத்தியல்லோ..... இண்டைக்குப் பின்நேரம் தாறன் பேசாமல் போடாகண்ணு. பிள்ளைக்கு இண்டைக்கு சட்டையும் வாங்கி வாறன். செல்லமாக இராசாத்தியின் முதுகைத் தடவிக்கொண்டாள் கண்ணம்மா.

சட்டையோடு இராசாத்திக்கு ஒரு மந்திரியும் வாங்கிவானணை. வெறுப்போடு சொல்லி தீர்த்தாள் இராசாத்தி.

இராசாத்திக்கு மந்திரியென்ன ஒரு ராசாவையும் கூடவே வாங்கி வாணை அம்மா இது அடுக்களைப் பக்கமிருந்து தங்கத்தின் குரல் எல்லோருமாக கூடி "கொல்" என்று சிரிக்கையில் சுன்னாக வானும் தன் அவலக் குரலை ஒலித்துத்தன் வரவின் வேகத்தை உணர்த்தியது.

ஐயோ போக்கறப் போவான்கள் விட்டிட்டுப்போகப்போறாங்கள்.தங்கம் வாடி வெளியே அவசர அவசரமாக வெட்டி வைத்த வாழைக்குலையைத் தன் தலை மீது வைத்துக் கொண்டு மிளகாய்க்கடகத்தை கக்கத்தில் வைத்துக் கொண்டாள் சின்னாச்சி. பாரம் சற்று அதிகமாக இருந்ததால் சின்னாச்சியால் கெதியாக நடக்க முடியவில்லை. எப்படியோ வானைப்பிடித்து விடும் பரிதவிப்போடு விரைந்து கொண்டிருந்தாள்.

காலைப் பனிக்காற்று மெல்ல வீசிக்கொண்டிருந்தது. முற்றத்து வாழை மரங்களில் இலைக் கீற்றுகள் காற்றில் வேகத்துக்கு ஏற்ப ஒலி வீசிக் கொண்டிருந்தன தங்கத்தின் மனம் எதைஎதையெல்லாமோ எண்ணித் துயரடைந்து. அந்த முகத்தில் துன்பத்தின் மெல்லிய ரேகை படர்ந்த சாயல் தென்பட்டது. பாவம் மூலைக்குள் சுருண்டு முடங்கிக் கிடக்கும் தந்தை சின்னையாவை ஒரு கணம் பார்த்து நெடு மூச்சுவிட்டு கொண்டாள் தங்கம்.

என்ன செய்வது நெடு மூச்சு விடுவதைத்தவிர அவளால் வேறு எதைத்தான் செய்ய முடியும். "அவள் மட்டுமா இப்படி நெடு மூச்சு விடுகிறாள் அன்றாடங் காய்ச்சிகளான ஏழைகளின் வாழ்க்கை ஆயுள் பூராகவும் நெடுமூச்சின் விசையோடு விரைவது தானே" அந்த ஏழ்மை விசையில் தான் அந்தக் குடும்பமும் ஊர்ந்து கொண்டிருக்கின்றது.ஐந்து வருடங்களுக்கு முன்னால் பசி என்ற சொல்லையே அறியாமல் அன்போடும் ஆதரவோடும் வளர்த்து வந்த தந்தையை ஒரு புறம் குடும்பச்சுமையை போக்க வியாபாரத்தை தொடங்கிவிட்ட தாய் சின்னாச்சியை இன்னொரு புறம் எண்ணிக்கொண்ட தங்கத்தால் எப்படிப் பெரு மூச்சு விடாமல் இருக்க முடியும்.

தங்கமும் தங்கை கண்ணம்மாவும் பிறந்த போது ஏதோ ஓரளவு வசதிகளோடு நடுத்தர வாழ்க்கை வாழ்ந்து வந்த குடும்பம் தான் ராசாத்தி பிறந்த பின்னர் ஒரு வேளை சோற்றுக்கே லாட்ரி அடிக்கும் படியாகிவிட்டதே "இருக்கும் ஓரளவு வசதி கூட சில துரதிஷ்டமான விபத்துக்களாலோ சம்பவங்களாலோ இழந்து விடும் போது தான் மனிதன் விதியென்னும் திரையால் தன் மதியை மூடிக்கொள்கின்றானோ? ஊள்வினை பாவ புண்ணியம் என்பதெல்லாம் இப்படியான துயரமிகு சம்பவங்களாலும் சந்தர்ப்பங்களாலும்

உருவாக்கப்பட்டவைதானோ? இத்தகைய துன்பச் சுழற்சியில் வீழ்ந்து தத்தளிக்கும் மனிதனுக்கு துன்ப விலக்களிக்கும் தூயகளஞ்சியமாக இந்தச் சமூகம் மாறாதா? எத்தனை ஏக்கம் நிறைந்த இதயங்கள் நெஞ்சங்களோடு இப்படியே எண்ணிக் கொண்டிருக்கின்றன. அந்த ஏழைக் குடும்பத்தில் தந்தை சின்னையா தன் கண்களை இழந்து துடித்தார்.

ஆம் அன்று தீபாவழித் திருநாள் ராசாத்திக்கு பட்டாசு சுட்டுக்காட்டிக் கொண்டிருந்த சின்னையா கணப்பொழுதில் வெடிக்காத பட்டாசை எடுத்துக் கொண்ட போது தன் கண்களை இழந்து விட்டாரென்றால் அந்தக் கொடுந்துயரைத் தாங்கிக் கொள்ள முடியுமா என்ன? விபத்தில் ஏற்பட்டு விட்ட அக் கொடுமையைச் சதா எண்ணியெண்ணி அந்தக் குடும்பம் கண்ணீர் வடிக்கத்தான் செய்தது.

கண்ணிழந்த தந்தையையும் பெண்கள் மூவரையும் முற்றத்து வாழைத் தோட்டமும் தாய் சின்னாச்சியயின் வியாபாரமும் தான் காத்து வந்தது. பாண் கட்டையும் மரவள்ளிக் கிழங்கும் தான் அவர்களின் அன்றாட பத்தியமாகியது. ஒரு வேளைச் சோறு அதுவும் வாரத்தில் ஒரு சில நாட்கள் ஏதோ இலவச அரிசித்தட்டம் அளித்த வரப்பிரசாதம். சின்னாச்சியின் பெலமும் கெட்டுவிட்டால்..... அந்தக் கொடுமையை நினைத்து கொண்டாலே மனம் சுவாலையிடும் தீப்பிழம்பாக மாறிவிடும்.

கல்யாணம் பண்ணிக் குடியும் குடித்தனமாக வாழவேண்டிய தங்கம், வறுமையின் தாக்கத்தால் உணர்ச்சிகளைக் கட்டிப் போட்டுவிட்டு வீட்டோடு ஊமையாகி விட்டாள். இந்த நிலையில் கூட கடைக்குட்டி ராசாத்தியை படிப்பிக்க வேண்டுமென்ற நப்பாசை சின்னாச்சிக்கு. ஏதோ சம்பாதிக்கிறதில் மிச்சம் பிடிச்சு அவளையாவது நல்ல நிலைக்குக் கொண்டு வரவேண்டுமென்ற தவிப்பு. இவைகளையெல்லாம் எண்ணுவதும் நோவதும் தான் அன்றாட வாழ்க்கைப் புத்தகத்தில் இணைபிரியாத பக்கங்கள்.

பொழுது விடிந்து விட்டது. காலைக்கடன்களை முடித்துக்கொண்ட தங்கம் வீடுவாசலைப் பெருக்கி முடித்து ஒருவாறு ராசாத்தியை பள்ளிக்கூடம் அனுப்பி வைத்தாள். காசில்லாமல் போனால்

இண்டைக்கு செல்லத்துரை வாத்தியார் வகுப்பிலை நிற்க வைப்பார். நான் போகேல்லை என்று இதுவரை அடம்பிடித்துக் கொண்டு இருந்த ராசாத்தியும் ஒருவாறு சமாதானமாகி பள்ளிக்கூடம் புறப்பட்டுவிட்டாள்.

இன்றைக்குத் திங்கட்கிழமை யெண்டபடியால் சந்தை சூடாயிருக்கும். வாழைக்குலையும் விலையாக இருக்குமென்னக்கா? இது கண்ணம்மாவின் அங்கலாய்ப்பு நிறைந்த குரல்

இல்லையக்கா அம்மா சட்டைத்துணி எடுக்கபோறன்எண்டு கதைச்சவா வெல்லே அது தான் ..... ராசாத்திக்குப் பள்ளிக்கூடச்சாட்டிலை இரண்டு கிடக்குது வீட்டுக்கும் இரண்டு கவுண் இருக்கு. உனக்கும் எனக்கும் தானே ஒன்றுக்குமேல ..... போகுதில்லை ..... ம் என்ன செய்ய போயும் போயும் இந்தக் கடவுள் எங்களைத் தான் நல்லாச் சோதிக்கிறார். கண்ணீர் மல்க மனமுருகிப் பேசினாள் கண்ணம்மா.

"கண்ணம்மா நீ உப்பிடிக் கதைச்சதாலைதானே சுப்புமாமா முந்தி ஒரு நாள் உனக்கு சட்டை வாங்கித்தந்ததும் அம்மா வீசி எறிஞ்சு போட்டு என்னை அடிச்சதும்..... மறந்து போனியோ? எங்கடை வறுமையைப் போக்க நாங்கள் தான் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும். சொந்தக்காரிடம் கைநீட்டியோ, சும்மா இருந்து கொண்டு கடவுளிட்டை பல்லிளிச்சோ வறுமையைப் போக்கிவிடமுடியாது. சொந்தக் காரரிட்டை பெறும் உதவிகள் வெள்ளைச் சீலையில் வாழைக்கயர் பட்டமாதிரித் தான். தங்கம் தாயாரின் போதனைகளுக்கு மறுவடிவம் கொடுத்து உயிரூட்டினாள்.

கண்ணம்மா சிறு பிள்ளை தானே அதுக்கென்ன தங்கச்சியென்று சுப்பு மாமா சொல்லியும் அம்மாவின் கண்டிப்பும் பிடிவாதமும் விடாது இருந்த படியால் தானே நாங்களிருக்கும் கஷ்டத்திற்குள்ளும் செம்மையாக வாழ முடிந்தது. இல்லாட்டில் உந்தச் சனங்கள் எங்களை காறித்துப்பாதுகளோ...?. தங்கம் சட்டிபானைகளை உரசி கழுவிக் கொண்டே கூறினாள்.

கா..... கா..... காகம் ஒன்று முற்றத்து வாழையிலிருந்து தொண்டை வீங்க அலறி அடித்தது. அந்த அலறலில் சின்னையா பயந்து விட்டாரோ?

தங்கம் என்னம்மா செய்யிறாய் இஞ்சை ஒருக்கா வா பிள்ளை. இந்த காகத்தை ஒருக்கால் காய் எண்டாமல் கலைச்சுப் போட்டு வா. காலம் காத்தாலை என்னவோ கெடுதி நடக்கப் போகுதாக்கும். இது சின்னையரின் வீரக்தி நிறைந்த குரல். வாழ்விலேற்பட்ட எதிர்பாராத விரக்தியால் அவர் உடல் நன்றாகக் கெட்டுப் போய் இருந்தது. உடலென்ன உள்ளமும் கூட ஏதோ பிரமையால் பீடிக்கப்பட்டிருப்பதை அவர் கம்மியகுரல் காட்டியது.

தங்கம் காகத்தை கல்லால் எறிந்துவிட்டுத் தனது வழமையான காரியங்களைக் கவனிப்பதில் ஈடுபட்டாள்

கண்ணம்மா தனது கிழிந்து போன கவுணை உடுத்தியிருந்த படியே தைத்துக்கொண்டிருந்தாள். அந்த கிழிந்துபோன முறையைப் பார்த்தாலே அதுபேசும் கதையிலிருந்து அவர்களின் சரித்திரத்தை புரிந்துகொள்ளலாம் அந்த அளவிற்கு வறுமையின் தாக்கம் அவர்களிடம் நிழலாடியது .ஏனோ தெரியவில்லை கண்ணம்மா .இன்று ஏதோ ஒரு வகை பூரிப்புடன் காணப்பட்டாள். புதுச் சட்டை வரப்போகும் நினைப்பால் மலர்ந்த களிப்பது.

தங்கச்சி..... நாயைப்பிடி..... உது ஒரு சனியன்..... பேந்து வாயை வைச்சிடும். படலைக்கு வெளியே சுந்தரம் விடுத்த அழைப்பு இது.

கண்ணம்மா ஒருக்கால் நாயைப் பாரடி. சுப்பு மாமாவும் சுந்தரண்ணையும் வருகினம்..... ஏதோ புதினமாக்கும்..... இரண்டு பேரும் சேர்ந்து வருகினம்..... இஞ்சை அம்மாவும் இல்லை.... ஐயாவும் இல்லை... இஞ்சை சுப்பு மாமா வாறார்... தங்கம் ஆட்களுக்கு முந்தியே வரவேற்று வைத்துவிட்டாள். சின்னையரும் மெல்ல மெல்ல குடிசைக்கு வெளியே வந்துவிட்டார்.

முற்றத்தில் வந்துவிட்ட சுந்தரம் விக்கிவிக்கி அழ ஆரம்பித்துவிட்டான். சுந்தரம் சின்னாச்சியின் கூடப்பிறந்த தமக்கையின் மகன்.

சுப்பையரும் வந்ததை மறந்து விக்கி விழுங்கி கொண்டிருந்தார். என்ன மைச்சான் எதோ குழம்புமாப்போல ....

சின்னையர் இழுத்தார். அவரது குரலிலும் வேதனையின் சாயல் இழையோடு திகழ்ந்தது.


நீண்ட நொடிகள் மௌனமாகி நிலைக்கிறது.

என்ன மைச்சான் ஏதோ நடந்து போச்சா... பரதவிப்பும் கவலையும் நிறையக் கேட்டார் சின்னையா

ஓ.. மைச்சான் சுன்னாக வான் புரண்டு .... சின்னாச்சி... சின்னாச்சி செத்துப்போய் விட்டாளாம். வார்த்தைகள் தடுமாறியே நாக்குழறி ஒருவாறு வெளிவந்தன. இது வரை சூழ நின்று பரதவித்துக்கொண்டிருந்த தங்கமும் கண்ணம்மாவும் ஓவென கத்திப்புரண்டனர் மண் மீது.....

ஓ..... துன்பமே! வேதனை செய்வதற்கு இப்படி புயலாகத்தான் வரவேண்டுமா?

இப்போது அந்தச் சிறிய முற்றத்தில் ஒப்பாரி பலமாக ஒலித்துக்கொண்டிருக்கிறது.







நீதி வளவன்

டு யீ ளி வெ

வெளியீடு–1